# தமிழரசு

திங்கள்இருமுறை

செப் 16 · 1971 · 35 காசு



# அற்புதமான பொற்குவியல் அழைக்கிறது உங்களை!



# ரூ. 10 லட்சம் பெறுவீர்

| (பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்) சிறப்புப் பரிசுகள் | | (ஒவ்வொரு வரிசைக்கும) சாதாரணப் பரிசுகள் | |
|---|---|---|---|
| முதல் சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 10,00,000 | நான்காவது பரிசுகள் ஐந்து ஒவ்வொன்றும் ரூ. 10,000 | ரூ. 50,000 |
| இரண்டாவது சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 2,00,000 | ஐந்தாவது பரிசுகள் பத்து ஒவ்வொனறும் ரூ. 5,000 | ரூ. 50,000 |
| மூன்ருவது சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 1,00,000 | ஆருவது பரிசுகள ஐம்பது ஒவ்வொன்றும் ரூ. 1,000 | ரூ. 50,000 |
| | ரூ. 13,00,000 | ஏழாவது பரிசுகள் ஆயிரம் ஒவ்வொன்றும் ரூ. 100 | ரூ. 1,00,000 |
| | | | ரூ. 2,50,000 |

*இதுவரை தமிழ்நாடு பரிசுச் சீட்டால் உருவாகியுள்ள லட்சாதிபதிகள் 253*

## மொததப் பரிசுகள: 10653

## மொத்தப் பரிசுத் தொகை:

# ரூ. 38,00,000

## குலுக்கல் நாள்: 11-10-1971

ரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

## இன்றே வாங்குங்கள்

# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

செலவு ஒரு ரூபாய்



வரவோ பல லட்ச ரூபாய்

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.
10 வரிசைகள் வெளியீட்டுக்கு உட்பட்டது




# தமிழரசு

மலர் 2　　16-9-1971　　இதழ் 6

## இந்த இதழில்


ஏனோ? (கவிதை)
அண்ணலும் அண்ணாவும்
அண்ணாவின் வாழ்விலே...
மரச் சிற்பம் காப்போம்
உலகம் சுற்றும் வாலிபர்கள்
தமிழ்ச் சுரங்கம் திரு. வி. க.
நியூஜிலாந்தைக் கண்டு பிடித்தவர்கள் தமிழர்களே
தேரையும் சேயிழையும்
ஒரு பாய் விலை ஆயிரம் ரூபாய்
நமது மொழி
நாங்கு நேரிப் பகுதியில்...
வெண்பாப் போட்டி
ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)
தொழில் பல தொடங்குவோம்
—தொழிலமைச்சரின் கட்டுரை

முதல்வரின்
யாம் பெற்ற துன்பம்
பிறர் பெற வேண்டாம்

அரசுத்துறை ஒப்பந்தப் புள்ளி
வேலை வாய்ப்பு விளம்பரங்கள்
பக்கம் 29—68



# ஏன்?









அலைகடல்நீர் உப்பான கார ணத்தை
அழகான கற்பனையால் சொல்லி, நாட்டின்
நிலையதனைத் தெளிவாக்கித் தமிழ கத்தின்
நிலையுயரப் புகழோங்கத் தன்னை யீந்த
தலைமகனார் - தமிழர்களை வாழ வைத்த
தன்னேரில் பெருமகன்நம் அறிஞர் அண்ணா
நிலையான புகழ்கொண்டார் தமிழர் நெஞ்சில்;
நீடுதுயில் கொள்கின்றார் கடலோ ரத்தே!

கத்துகிற கடலோரம் துயில்கொள் கின்ற
காவியத்து நாயகனை - எவரும் நத்தும்
வித்தகனை - எவரிடத்தும் பகைகொள் ளாத
மேலான திருத்தகையை அவர்க்கு வாய்த்த
சத்தான பொன்னுடலை - அவர்நாள் தன்னைத்
தணியாத ஆவலொடு தழுவி இன்ப
முத்தமிடக் கடற்பெண்ணாள் துடிக்கின் றாளே
முத்தமிழின் சுவைகாணத் துடிக்கின் றாளோ?

தன்னிகரில் பெருந்தலைவர் அறிஞர் அண்ணா
சந்தனத்துப் பெட்டியிலே துயில்கொள் கின்றார்;
'என்றுமுள தென்தமிழை இயம்பி மிக்க
இசைகொண்ட' தமிழ்க்கம்பன் அருகே நின்று
தன்கரத்தே எழுத்தாணி ஏடு தாங்கிச்
சலியாமல் நாளெல்லாம் எழுது கின்றான்!
மன்பதைக்கு நம்அண்ணா வழங்கும் செய்தி
மகிழ்வுடனே கேட்டெழுதி நிற்கின் றானோ?

சில நாளில் சதுக்கத்தின் மறுபு றத்தே
சிலைவடிவு கொளவிருக்கும் சிலம்பு தந்த
உலகமகா நாடகநூல் ஆசா னை
ஒப்பற்ற தமிழ்த்துறவி வந்து நின்று
நலமாக எழுதுதற்குத் துவக்கம் செய்வான்;
நாடாளும் நல்லதம்பி கலைஞர் கண்ட
பலமான அரசியலின் பாங்கு பாடும்
பகுத்தறிவுப் பெரியார்போல் எழுது வானோ?

வெல்திறல்கள் பலபடைத்த அறிஞர் அண்ணா
விழிமூடித் துயில்கொள்ள எதிரில் ஆங்கே
பல்கலைகள் பயிற்றுகிற கழகம் நாளும்
பணிவுடனே நிற்பதுமேன்? அண்ணா கற்ற
பல்கலையும் பாங்குடனே முயன்று கற்றுப்
பைந்தமிழர் அனைவர்க்கும் பயிற்று கின்ற
நல்லதொரு பெருநோக்கம் கொண்டோ? அன்றி
நாமெங்கே இவர்முன்னே எனநி னைத்தோ?

# யாம் பெற்ற துன்பம் பிறர் பெற வேண்டாம்!

—டாக்டர் கலைஞர்

குடும்ப நலத் திட்டத்தைப் பற்றி அடிக்கடி பேசி வருகிறோம். குறிப்பாக, பேராசிரியர் அவர்கள் குடும்ப நலத் துறையினுக்கு அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு சிவப்பு முக்கோணம் காணாத இடமில்லை என்ற அளவுக்கு மதில் சுவர்களிலும் — மரங்களிலும் — மரக்கிளைகளிலும் நானும் பார்க்கிறேன் — நீங்களும் பார்க்கிறீர்கள்.

இப்படிச் சொல்கிறார்களே, இவர்கள் எத்தனை பெற்றிருக்கிறார்கள் என்று கூட மனத்துக்குள் கேட்கத் தோன்றும்.

எங்களில் சிலர் அளவு மீறி விட்டிருக்கலாம். அதனால் தான்-அப்படி அனுபவித்ததால் தான் இதையெல்லாம் எடுத்துச்சொல்கிறோம்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பார்கள்.

யாம் பெற்ற துன்பம் நீங்கள் பெறாமல் இருக்க வேண்டும் என்ற அனுபவத்தால் தான் இந்தப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறோம்.

இந்தத் துறையில் பயிற்சி பெறுகிறவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஏதோ அரசாங்கம் ஏழு-எட்டு லட்ச ரூபாய் செலவிடுகிறது; கட்டடம் எழுப்புகிறது; இத்தனை பேருக்குப் பயிற்சி தந்து — நகர்ப்புறங்களுக்கும் கிராமப்புறப் பகுதிகளுக்கும் அனுப்புகிறது என்று ஏட்டுக் கணக்கில் எண்ணிக்கையைக் காட்டினால் மட்டும் போதாது.

பயிற்சி பெறுபவர்களும் சரி— குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையைச் செயல்படுத்துகிறவர்களானாலும் சரி உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

பயிற்சி பெறுகிறவர்கள் தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படுகிற விதத்தில் மாதாந்திர ஊதியம் கிடைக்கிறது — வேலை கிடைக்கிறது என்று எண்ணாமல் சமுதாயக் கடமையைச் செய்கிறோம், அதற்காக நாம் பணிக்கப்பட்டு இருக்கிறோம் — ஆணையிடப் பட்டிருக்கிறோம் — அந்தக் கடமையைச் சரிவர நிறைவேற்ற வேண்டும் என்ற உள்ளத்தோடு இங்கிருந்து வெளிக் கிளம்புகிறவர்கள் பாடுபட வேண்டும்.

அப்போது தான் எடுத்த காரியத்தை இனிது நடத்த முடியும். எத்தனையோ திட்டங்கள் தீட்டப்பட்டாலும் ஒருபக்கம் திட்டங்கள் உருவாகிக் கொண்டேயிருக்கும் போது, மறுபக்கம் அதை அனுபவிப்பவர்களின்தொகையும் உயர்ந்து கொண்டே போனால் திட்டத்தின் பலன்களைப் பார்த்திடும் போது குறைகள் ஏற்படுகின்றன.

நம் மாநிலத்தில் குடும்ப நலத் திட்டம் நல்ல முறையில் வெற்றிகரமாக நடை பெற்று வருகிறது. நற்சான்றும் கிடைத்திருக்கிறது.

நமது மாநிலத்தில் மக்கள் தொகை குறைவதால் நாடாளுமன்றத்தில் நமது மாநிலப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 41 ஆகயிருந்து 39 ஆக இப்போது குறைந்திருக்கிறது. மேலும் குறைந்து விடுமோ என்ற கவலையும் ஏற்பட்டிருக்கிறது.

இருக்கிற பிரதிநிதிகளின் எண்ணிக்கை உயரவேண்டும், குறைக்கப்படக் கூடாது என்று பொறுப்புள்ள நமது உறுப்பினர்கள் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

சமூக முன்னேற்றத்தையும் இந்தியப் பொருளாதார வளர்ச்சியையும் கருத்தில் கொண்டால் தான் செம்மையான வாழ்வு— செழுமையான வாழ்வு — நிலைக்க முடியும்.

ஒரு காலத்தில் எல்லாமே பாபமாகத் தான் கருதப்பட்டது. அந்த நிலையிலிருந்தெல்லாம் நம்மை நாமே விடுவித்துக் கொண்டிருக்கிறோம்.

*1936, 37*-ல் என்னுடைய குடும்பத்தைப் புகைப் படமெடுக்க வேண்டும் என்று ஒரு கிராமத்தில் புகைப் படக்காரர் வந்தார்.

என் தகப்பனார் புகைப்படக்காரரின் முன்பு உட்காரவே மறுத்து விட்டார். ஏனென்றால் ஆயுளில் பாதி குறைந்து விடும் என்று அவர் கருதினார். எவ்வளவு பாடுபட்டு அவரை உட்காரவைத்துப் பக்கத்தில் எனது தாயாரும் நானும் நிற்க படமெடுத்தார்கள்! படமெடுத்த பிறகும் அவர் 25 ஆண்டுக் காலம் இருந்துதான் மறைந்தார்.

புகைப்படம் எடுப்பதே பாப காரியம் என்று கருதப்பட்டு நம் ஆயுளில் பாதியைப் புகைப்படம் போக்கி விடும் என்று கருதினார்கள்.

அதைப்போலத்தான் குழந்தை பிறப்பதைத் தடுப்பதும் — அதிகக் குழந்தைகள் பெறக் கூடாது என்று கூறுவதும் பாபமாகக் கருதப்பட்டது.

அன்று நாங்கள் எதிர்க் கட்சியாகக் கூட இல்லாது சமுதாய சீர்திருத்த இயக்கமாக இருந்த போதே எங்கள் இயக்கத்தின் சார்பாகப்பிள்ளைகளைக்குறைக்கவேண்டும், மனிதன் மன மகிழ்ச்சியோடு இருக்கக் குடும்பக்கட்டுப்பாடு அவசியம் என்ற அளவுக்குக் கூறி வந்தோம்.

பகுத்தறிவுக் கருத்துக்களைக் கவிதை மூலம் பரப்பி வந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம்; இதிலென்ன குற்றம்' என்று பாடினார்.

இந்தத் திட்டம்வெற்றிகரமாக நடக்க— பேசினாலோ— விளம்பரம் செய்தாலோ — தொகையை வழங்கினாலோ — பயிற்சி அளித்து வந்தாலோ மட்டும் போதாது. பயிற்சி பெறுகிறவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து, பொறுப்போடு செயல்பட வேண்டும்.

# இளைஞர் அணி

## எதிர் கால வாழ்வுக்கு வழிகாட்டும்

முதல்வர் கலைஞர் அவர்கள், சட்டப் பேரவையில் 1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை அளித்து உரையாற்றுகையில் இளைஞர் அணித்திட்டம் பற்றி அறிவித்தார்கள்.

அந்த இளைஞர் அணி செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாளிலிருந்து தொடங்கப்படுகிறது.

வேளாண்மை, கல்வி, மருத்துவவியல், பொறியியல், கால்நடையியல், உடற் பயிற்சிக் கல்வி, கலை, அறிவியல், வாணிகவியல், பத்திரிகைத் தொழில், சமுதாயப் பணி, செவிலிப் பணி, நுண்கலை, மற்றுமுள்ள கலைக் கல்வி படிப்புகள் ஆகியவற்றில் பட்டம் பெற்றவர்கள் அல்லது தகுதிச் சான்றிதழ் பெற்றவர்கள் தொழில் நுட்பக் கல்விக் கூடங்களில் படித்துத் தேறிய ஆண், பெண் இருபாலரும் இளைஞர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்பொழுது இளைஞர் அணியில் இரண்டாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இளைஞர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறவர்களுக்குச் சத்திய விஜய நகரம் (வட ஆர்க்காடு மாவட்டம்), கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்), பவானி சாகர் (கோவை மாவட்டம்), பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்), தி. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்) முதலிய இடங்களில் நான்கு வாரம் பயிற்சி அளிக்கப்படும்.




பயிற்சியளிக்கப் பெற்றவர்கள் தமிழ் நாட்டிற்குள் எந்தக் கிராமத்தை அரசு குறிப்பிடுகின்றதோ அந்தக் கிராமத்தில் தான் வசிக்க வேண்டும் • பணியாற்ற வேண்டும். மக்கள் நல்வாழ்வு வசதிகளைப் பெருக்குவது, கிராமங்களில் நற்பணி மன்றங்களை அமைப்பது, கல்வியின்மையை ஒழிப்பது போன்ற செயல்களில், இளைஞர் அணியினர் ஈடுபடுத்தப் படுவார்கள். சமுதாயச் சீர் கேடுகளைப் போக்கிப் ''புதியதோர் உலகு'' செய்ய இவர்கள் பாடுபடவேண்டும்.

இளைஞர் அணியில் தொண்டர்களாகப் பணியாற்றுவோர் பின்னர் அரசுப் பணியில் சேரச் சிறப்புச் சலுகை காட்டப்படும்.

# தொழில் பல தொடங்குவோம்

குமார்

இங்கிலாந்து அரசு, ஹங்கேரிய அரசு ஆகியவற்றின் அழைப்பின் பேரில் உலக நாடுகளின் தொழில் வளங்களைக் கண்டறியவும் அந் நாடுகளின் உதவியோடும் ஒத்துழைப்போடும் தமிழகத்தில் மேலும் பல புதிய தொழில்களைத் தொடங்கவும் தமிழக அரசின் சார்பில் நானும் தொழில் துறைச் செயலர் திரு கார்த்திகேயன், தொழில் நுணுக்க நிபுணர்கள் திரு அனந்தசாமி, திரு நல்ல பெருமாள் ஆகியோரும் 'உலகச் சுற்றுப் பயணம்' மேற்கொண்டோம்.

ஏற்கெனவே நமது மாநிலத்தில் கூட்டுறவுத் துறையில் தொடங்குவதற்குப் பூர்வாங்க அனுமதி பெறப்பட்டுள்ள மோட்டார் டயர் தொழிற்சாலை, சோடியம் ஹைட்ரோ சல்பேட் தொழிற்சாலை, பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை, சோடா ஆஷ் அமோனியம் குளோரைட் தொழிற்சாலை, குரோமிக் சல்பேட் தொழிற்சாலை ஆகியவற்றைத் தொடங்க அந்தந்த நாட்டினர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இனிமேல் இதுபற்றி மத்திய அரசின் ஒப்புதல்தான் பெற வேண்டும். சோடியம் ஹைட்ரோ சல்பேட், டயர் தொழிற்சாலைகளுக்கு எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன.

டயர் தொழிற்சாலை ஏற்படுவதுபற்றி ஜப்பான், அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளிலும் தொழில் அதிபர்களைச் சந்தித்துப் பேசினோம்.

நைலான் பிலமெண்ட், பாலிஸ்டர் பிலமெண்ட், பாலிஸ்டர் பிலிம், அலுமினியம் குளோரைடு, போரிக் அமிலம், அலுமினியம், பவுடர் பசை, சோடியம் சினமெடு, ஆக்ஸாலிக் அமிலம், பார்மிக் அமிலம், மெத்தனல் கால்சியம் கார்பைடு போன்ற ரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது பற்றியும் எந்தெந்த முறையில் உற்பத்தி செய்வது என்பது பற்றியும் பேசினோம். நமது நாட்டில் இந்தத் தொழிற்சாலைகளைத் தொடங்கினால் இதில் பங்கு சேருவதற்கும், வெளிநாட்டுக் கம்பெனிகள் சம்மதம் தெரிவித்துள்ளன. இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் கூட்டுத் துறையில் வர இருப்பவை. இவைகளைப் பற்றியும் மத்திய அரசு ஒப்புதல் பெறவேண்டியிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் உருபொருள்களைப் பயன்படுத்தக் கூடியவை. இவை தவிர மேலும் 3 புதிய தொழில்கள் தொடங்குவது பற்றி வெளி நாடுகளில் பேச்சு நடத்த வாய்ப்புக் கிடைத்தது.

தமிழ் நாட்டில் படகு இயந்திரம் கட்டும் தொழிற்சாலை அமைக்க ஜப்பானில் உள்ள ''யான்மார்'' தொழிற்சாலை பங்கு எடுத்துக் கொள்ளச் சம்மதித்திருக்கிறது.

ஜப்பானிலுள்ள டோயா என்ற காகிதத் தொழிற்சாலையில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் முறையைக் கண்டு பிடித்துள்ளார்கள். அது பற்றி ஒரு நிபுணர் தமிழகம் வந்து ஆராய்ந்து யோசனை தெரிவிக்கவும் முன்வந்திருக்கிறார்.

புதிய முறையில் கார்பன் பேப்பர் இல்லாமலேயே பிரதி எடுக்கக்கூடிய காகிதத்தை ஜப்பான் கம்பெனி ஒன்று கண்டு பிடித்துள்ளது. அத்தகைய தொரு தொழிற்சாலையைத் தமிழகத்தில் தொடங்கவும் அந்த நிறுவனத்தினர் இசைவு தெரிவித்துள்ளனர்.

மோட்டார் பிஸ்டன் வளையம் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க ''ராயல் என்பீல்டு'' கம்பெனிக்கு அனுமதி கிடைத்துள்ளது. அதுபற்றியும் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

எவர்சில்வர் பிளேட் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவது பற்றியும் நாங்கள் பேச்சு வார்த்தை நடத்தினோம்.

ஜப்பானில் டெலிவிஷனுக்கு வேண்டிய கருவிகளைச் செய்யும் மிகப்பெரிய ''தோஷிபா'' கம்பெனியிலும் பேச்சு வார்த்தை நடத்தினோம். ''தோஷிபா'' தொழிற்சாலையை நாங்கள் சுற்றிப் பார்த்துவிட்டு வெளியே வந்ததும் அதன் தலைமை நிருவாகி என்னைப் பார்த்து ''எந்தவித மேற்பார்வையாளரும் கண்காணிப்பாளரும் இல்லாமலேயே இந்தத் தொழிலாளர்கள் எப்படிக் கடமை உணர்ச்சியோடு வேலை பார்க்கிறார்கள், பார்த்தீர்களா?'' என்று கேட்டார்.

டெலிவிஷன் கருவிகள் பற்றி மிக்சூயி கம்பெனியாரிடம் ஜப்பானில் உள்ள இந்தியத் தூதுவர் அறிக்கை கொடுத்திருக்கிறார். அந்த அறிக்கையில், ''பொதுவாகச் சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் தொழில் நுணுக்கத் திறன் படைத்த தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு டெலிவிஷன் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த வாய்ப்பிருக்கிறது'' என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கும் அந்தக் கம்பெனியார் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் டெலிவிஷன் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது பற்றி மத்திய அரசிடம் ஏற்கெனவே மனு கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட இருக்கும் நுணுக்கமான எலக்ட்ரானிக் கருவிகளைத் தயாரிப்பதற்கு உதவ ஜப்பான் கம்பெனி ''தோஷிபா'' சம்மதம் தெரிவித்திருக்கிறது.

கடல்நீரைக் குடிநீராக்கும் தொழிற்சாலை ஒன்றை நாங்கள் சுற்றிப் பார்த்தோம். அங்கு ஒரு காலன் தண்ணீரைச் சுத்தம் செய்ய 8 ரூபாய் செலவாகிறது. இந்தச் செலவைக் குறைத்துத் தொழிற்சாலைக்குப் பயன்படும் தண்ணீராகத் தயாரிப்பதற்குத் தொழில் நுணுக்க உதவி கொடுக்க முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர்களும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள்.

திருவண்ணாமலையில் உள்ள இரும்பைச் சேலம் இரும்புத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்த உத்தேசித்துள்ளோம். இது பற்றி மாரா பென்னியிடா என்ற ஜப்பான் கம்பெனியாரிடம் பேச்சு வார்த்தை நடத்தினோம். திருவண்ணாமலை கனி வளம் பற்றிப் பூர்வாங்க ஆராய்ச்சி நடத்த அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.


ஜப்பானில் உள்ள நிக்ஸான் டோயாடோ மோட்டார்கார் தொழிற்சாலை அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினோம்.

காஸ் சிலிண்டர் தயாரிப்பது பற்றி இத்தாலியில் பேச்சு வார்த்தை நடத்தினோம்.

தமிழகத்தில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு என்னென்ன மருந்துகளைத் தயாரிக்கலாம், எந்த வகையான மூலிகைகள் கிடைக்கின்றன, என்பனவற்றையெல்லாம் ஆராய ஹங்கேரி நிபுணர்கள் தமிழகம் வர ஒப்புக் கொண்டுள்ளனர். தமிழ் நாட்டில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு மருந்து உற்பத்தித் தொழிற்சாலை தொடங்க முடியுமா என்பதை மேற்கு ஜெர்மனி நிறுவனம் ஒன்றும் ஆராய ஒப்புக்கொண்டுள்ளது.

மலேயாவில், நமது தமிழ் நாட்டைச்சேர்ந்தவர்கள் அங்குக் கூட்டாக 17 தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளனர். அதேபோல் பல தொழிற்சாலைகளைத் தொடங்க ஏற்பாடு செய்யுமாறு மலேசிய அதிகாரிகள் என்னிடம் கேட்டுக்கொண்டார்கள்.

பொதுவாக, வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வந்து கூட்டாகத் தொழில் தொடங்க நிறையப்பேர் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் தொழிற்சாலைகள் தொடங்க உரிமம் வாங்குவதில் உள்ள சிரமங்களையும் கூட்டாகத் தொழில் நடத்துவதற்கான ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதிலும் இந்தியாவில் இருந்து தங்களுக்குள்ள இலாபத்தைத் தங்கள் நாட்டிற்குக் கொண்டு போவதில் உள்ள சிரமங்களையும் கண்டுதான் அவர்கள் தயங்குகிறார்கள்.



## மாண்புமிகு தொழிலமைச்சர் செ.மாதவன்

நாங்கள் பார்த்த நாடுகளில் எல்லாம், தொழில் துறையில் அவர்கள் முன்னேறியதற்குக் காரணம், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் புதியன கண்டுபிடிப்பதற்காகத் தனித்தனி ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்தி இருப்பது ஒரு தனிச் சிறப்பு. அதன் காரணமாகத்தான் தொழில் நுணுக்கத்தில் அவர்கள் முன்னேறி இருக்கிறார்கள். அதே போன்று, தமிழ் நாட்டிலும் அரசாங்கச் சார்பில் பல தொழில் ஆராய்ச்சிக் கூடங்களை ஏற்படுத்துவது பற்றி யோசித்து வருகிறோம்.

சிங்கப்பூரில் குடிசைகளை அப்புறப்படுத்திய உடனேயே அவர்களுக்கு மாற்று வீடுகள் கட்டிக் கொடுத்துவிடுவதால் பிரச்சினை எதுவும் இல்லை. அப்படிப்பட்ட பல மாடிக் கட்டடங்களில் இருப்பவர்கள் தங்களுடைய குப்பை, கூளங்களை ஜன்னல் வழியே தெருவில் எறிந்து விடாமல் அதற்கு உரிய குழாயில் போட்டுவிடுவதால் எல்லா வீட்டுக் குப்பைகளும் ஒழுங்காக அந்தக் குழாய் வழியே கீழே வந்துவிடுகிறது.


இதனால்தான் அவ்வளவு நெருக்கமான சிங்கப்பூர்ப் பகுதியில் எல்லா இடங்களுமே சுத்தமாக இருக்கின்றன.

தொழிலாளர்களுடைய ஒழுக்கம், கட்டுப்பாடு, கடமை உணர்ச்சி ஆகியனவே ஒரு நாடு முன்னேறுவதற்கு வழி என்பதை ஜப்பானைப் பார்த்ததும் புரிந்து கொண்டேன்.

பொதுவாக எங்களுடைய சுற்றுப்பயணம் மிகவும் பயனுள்ளதாகவும் நல்ல பல அனுபவத்தைக் கொடுப்பதாகவும் அமைந்தது பெருமகிழ்ச்சிக் குரியதாகும்.

# விவசாயத்திற்கும், வீட்டிற்கும் கிராமகுடிநீர்த்திட்டங்களுக்கும்

## பலவித ஈசன் பம்புகள்




## ஈ·சன் இன்ஜினீயரிங் கம்பெனி லிட்

**5-7 செகண்ட் லைன் பீச், சென்னை-1. தந்தி: EASUN போன்: 29321**




மாதவனின் திடீர் வருகை, தேன்மொழியைச் சற்றுத் திகைப்பிலே ஆழ்த்தாமல் இல்லை.

அதனால் அவளதுமுகமலரிலே மிக நுண்மையான சலனத்தின் நெளிவுகள்— அசைவுகள்.

எனினும் அவளுடைய உள்ளத்திலோ 'வாங்க, வாங்க!'—என்று வரவேற்கும் வகையில் மகிழ்ச்சியும் பொங்கவில்லை; 'இங்கே ஏன் வந்தீர்கள்?' என்று விரட்டியடிக்கும் வகையில் எரிச்சலும் சீற வில்லை.

அவனுடைய வருகையால் களிப்பு என்றும் கொள்ள முடியாத—கசப்பு என்றும் தள்ள முடியாத இறுக்கமான மனநிலையே அவளுக்கு.

அந்த 'இரண்டுங் கெட்டான்' எண்ண ஓட்டத்திலும், தன்னையும் மீறிய மரியாதை உணர்வின் உந்தலால் படுக்கையை விட்டு எழுந்து நின்று விட்டாள் அவள்.

மாதவனும், 'உள்ளே வரலாமா?'—என்று கேட்டானே யொழிய, அவளுடைய மறுமொழியையோ அழைப்பையோ எதிர்பார்த்து, வெளியிலேயே காத்துக் கொண்டா நின்றிருந்தான்? அறையினுள் நுழைந்து அவளை நோக்கி விடுவிடுவென்று வந்த அவன், கட்டிலை ஒட்டிக் கிடந்த நாற்காலியிலே கூச்சமோ குழைவோ இன்றி நன்றாக உட்கார்ந்து கொண்டான் உரிமையுள்ளவனைப் போல.

முகத்தை முந்தானையால் துடைத்துக் கொண்டிருந்த தேன்மொழியைக் கனிவோடு நோக்கிய அவன்,

''கதை மிகவும் உருக்கமானதோ?''—என்று மெல்லக் கேட்டான் ஓர் இளஞ்சிரிப்போடு; அந்தச் சிரிப்பிலே ஒரு வகை எள்ளலும் துள்ளியது!

'நான் படிக்கும் பொழுதே அழுது விட்டதை இவரும் பார்த்துவிட்டார்போல் தெரிகிறதே!'--என்று புரிந்துகொண்ட அவள், 'ஆம்'—என்றோ, 'இல்லை' என்றோ விடையேதும் கூற வில்லை.

அவனை நேருக்கு நேர் நோக்கினாள்.

ஆனால் அவளுடைய பளிங்குப் பார்வையில் வெறுப்பும் இல்லை; வேட்கையும் இல்லை; வெறுமைதான் (சூனியந்தான்) படர்ந்து கிடந்தது.

ஆனால் நான் ஒன்று சொன்னால் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களே?''

—என்று கேட்டான் அவன்.

தேன்மொழியோ பழைய வெறுமை கலந்த பார்வையையே அவனை நோக்கி வீசினாள்.

அவன், தானாகவே மேலே தொடர்ந்தான்.

'' ஒன்றும் இல்லை ; நோயாளியாக இருப்பவர்கள் இப்படிப் பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பான கதைகளைப் படிப்பது அவ்வளவு உகந்தது இல்லை என்பது என் தாழ்மையான கருத்து''

—மாதவனின் அந்தக் கூற்றுக்காவது அவள் ஒட்டியோ வெட்டியோ கருத்து எதையும் கூறக் கூடாதா?

கூறவில்லை.

அவளுடைய நீள விழிகள்,

## 5. நெருங்கத் துணிந்த நெஞ்சம்

''அது என்ன புத்தகம் அப்படி?''—

மாதவனின் இந்தக் கேள்வித் துரட்டியினாலும் தேன்மொழியின் வாயிலிருந்து விடைக் கனியைக் கொய்ய முடியவில்லை.

அவள் தன் கரத்திலிருந்த புத்தகத்தை மவுனமாகவே அவனிடம் நீட்டினாள்.

அதனை வாங்கியவாறே,

''ஓ! காண்டேகரின் 'எரி நட்சத்திரமா?' மிக அருமையான புத்தகம் ஆயிற்றே ?

அ. முனிரமலையான்

அறைச் சன்னலுக்கு அப்பால், தோட்டத்திலே நெடுநெடுவென்று வளர்ந்திருக்கும் நெட்டிலிங்க மரங்களையெல்லாம் தாண்டி நீல வானத்தை நோக்கியே பறந்து சென்றன.

அங்கோ, வெண்முகிலின் பிஞ்சுகளைப் போல, இரண்டு வெள்ளைப் புறாக்கள் ஒன்றையொன்று துரத்திப் பிடித்து விளையாடிச் சிறகடித்தன. அவற்றில் ஒன்று ஆணாகவும் இன்னொன்று பெண்ணாகவும் கூட இருக்கலாமோ ?

அவற்றைக் காணக் காண—

தேன்மொழியின் நெஞ்சு விம்மிற்று; அவளால் பெருமூச்செறியாமல் இருக்க முடியவில்லை.

அதே சமயம் மாதவனோ....?

தோல்வியையே தூண்டுகோலாகவும் வீழ்ச்சியையே எழுச்சிக்குரிய எருவாக—எச்சரிக்கையாகவும்—எடுத்துக் கொண்டு தன்னைத் தானே பக்குவப்படுத்தி வளர நினைப்பவனே அவன்.

அவனே இப்போது தேன்மொழியின் போக்கைக் கண்டு—தன் உதடுகளைத் திறந்து ஒரேயொரு சொல் முத்தைக் கூட உதிர்க்காத அவளுடைய அழுத்தத்தைக் கண்டு—அப்படியே அயர்ந்து போனான்.

அவனுடைய பக்குவம் உண்மையில் இப்போது திக்குமுக்காடிற்று.

அதற்காகத் தன் உள்ளத்தை உடைய விடவும் அவன் ஆயத்தமாக இல்லை. அவளுடைய அமைதிக் குளத்திலே என்னென்ன கேள்விக் கற்களையெல்லாம் எறிந்து எப்படியெப்படியெல்லாம் அலைகளை எழுப்பலாம் என்பதிலேயே குறியாக இருந்தது அவனது குறுகுறுப்பான மனம்.

''உடம்பு இப்போது எப்படி இருக்கிறது?''—என்று பரிவோடு கேட்டான் அவன்.

''தேவலாம்''

—பல்லிடுக்கிலிருந்து மெல்ல இழைந்து வந்தது இந்த ஒரேயொரு வார்த்தை.

''மறுபடி மயக்கம் வந்ததா?''

''ஊ...கூம்''.

''டாக்டர் என்னதான் சொல்கிறார்?''

பதில் இல்லை.

''நான் கேட்பது காதில் விழவில்லையா?''

''ம்''

''டாக்டர் உங்கள் உடல்நிலை தேறுவது பற்றி என்னதான் சொல்கிறார் என்று கேட்டேன்.''

''ஒன்றும் சொல்லவில்லையே!''

''ஏன், 'சமையற்காரி சண்பகத்திடம் வேண்டுமானாலும் சளசளவென்று பேசிக்கொண்டு இருங்கள்; ஆனால், மாதவன் வந்தால் மட்டும் முகத்தைத் திருப்பிக் கொண்டு எங்காவது மரத்தையோ வானத்தையோ ஆராய்ச்சி செய்யுங்கள்'—என்று கூட அந்த டாக்டரம்மா சொல்லவில்லையா?''

—மாதவன் இப்படி வேடிக்கையாகக் கேட்டதும் தேன்மொழியின் சிவந்த இதழ்களிலே மெலிவாக நெளிந்தது ஒரு முறுவல்; எனினும் பார்வை என்னவோ தோட்டத்துப் பக்கமே பதிந்து கிடந்தது.

''..ம்..போகட்டும்; எனக்கு இப்போது ஒரே பசியாக இருக்கிறது.''

—என்று நீட்டி முழக்கிப் பெருமூச்செறிந்தான் அவன்.

வெளியிலே அலைந்து கொண்டிருந்த தேன்மொழியின் விழிகள் சட்டென்று உள்ளே திரும்பின; மாதவனையே ஏற இறங்கப் பரிவோடு பார்த்தன.

''பத்தரை—பதினொரு மணி வரை இப்படிப் பட்டினி கிடந்தால் உடம்பு என்னத்திற்கு ஆகும்?''

உரிமையோடு கடிந்து கொண்ட அவள், அறையை விட்டு வேகமாக வெளியேற முற்பட்டாள்.

''ஆமாம், எங்கே இப்போது அவசரமாகப் போகிறீர்கள்?''

—பின்னாலிருந்து கத்தினான் மாதவன்.

''சமையற்கட்டுப் பக்கம் போய் உங்களுக்கு ஏதாவது கொண்டு வர வேண்டாமா?''

''அய்யய்யோ! அதையெல்லாம் இப்போது யார் தின்பார்கள்?''

''ஏன்?''

''எனக்குப் பசி அடங்கிவிட்டது.''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''உண்மைதான், தேன்மொழி! நீங்கள் இரண்டு வார்த்தை முகங்கொடுத்து உரிமையோடு பேசினீர்களே அதிலேயே என் மனப்பசி அடங்கிவிட்டது.''

''இந்த விளையாட்டுப் பேச்செல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாம். இப்போது நான் போய் இட்டிலியோ, தோசையோ உங்களுக்குக் கொண்டுவரட்டுமா, வேண்டாமா?''

''அதுதான் வேண்டாம், என்கிறேனே! கொஞ்ச நேரத்துக்கு முந்திதான், நண்பர்களோட வேர்க்க விறுவிறுக்க 'டேபிள் டென்னிஸ்' ஆடிவிட்டு, ஓட்டலுக்குப் போய், ஆறு பூரியும் அரை டசன் இட்டிலியும் அடித்துவிட்டு வந்தேன். இனிமேலும் போட்டு அடைத்தால் வயிறு வெடித்து விடாதா?''

—மாதவன் சிரித்தான்.

''பிறகு ஏன் பசிக்கிறது என்று பொய் சொல்லணுமாம்?''

—சிணுங்கினாள் தேன்மொழி.

''நான் எங்கே பொய் சொன்னேன்? 'பசிக்கிறது'—என்றுதான் சொன்னேனே யொழிய, 'வயிற்றைப் பசிக்கிறது'—என்று சொல்லவில்லையே?''

''ஆங்..ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகப் பேசி விட்டதாக நினைப்புப் போல இருக்கு! ஆனாலும் இப்படியா திகைக்க வைக்கிறது?''

''அப்படி உங்களை நான் திகைக்க வைக்கலேன்னா இப்போ இவ்வளவு கலகலப்பாகப் பேசுவீர்களா? ஆமா; என்மேலே உங்களுக்கு அடங்காத ஆத்திரந் தானே?''

''நான் ஏன் உங்கள் மேலே ஆத்திரப்படுகிறேன்? அப்படி ஆத்திரப்பட எனக்கு என்ன உரிமை இருக்கிறது?''

''அப்படி உரிமை இல்லாத வங்க, எனக்குப் பசி என்றதும், சிற்றுண்டி கொண்டு வரமட்டும் ஓடலாமா?''

—மாதவனின் இந்தச் சுருக்குப்பிடிக் கேள்விக்கு எவ்வாறு நறுக்குத் தெறித்த மாதிரி விடை கூறுவது என்று தேன்மொழி சிந்திக்கும் பொழுதே—

வேலைக்கார வீரமுத்து மேலே ஓடிவந்தான்.

''அய்யா வந்திட்டாங்க; மாதவன் சாரை அழைச்சுக்கிட்டு வரச் சொல்றாங்க.''—என்றான்.

''சரி, போ; இதோ வருகிறேன்''—என்று அவனை அனுப்பிவிட்ட மாதவன், தேன்மொழியைத் திரும்பிப் பார்த்தான்.

என்றும் இல்லாத புதுமையாக, அவளை விழுங்கிவிடுவதைப் போல வெறிக்கவே பார்த்தான்.

அவனது முகத்திலே அச்சம், நாணம், ஆண்மை, ஆசை எல்லாங் கலந்த விந்தைச் சிரிப்பின் ஒளிச்சாயல் விழுந்தது.

தன் சட்டைப் பையிலிருந்து கடித உறை ஒன்றை எடுத்து அவளது கையிலே திணித்தான் பரபரப்போடு.

அந்த ஒரு கணத்திலேயே இருவர் கரங்களும் வெடவெடத்தன; வெப்பத்தைப் பரிமாறிக் கொண்டன.

* * *

மாதவன் அங்கிருந்து அகன்ற பின்னர், அறையினுள்ளே தன்னைத் தானே சிறைப்படுத்திக் கொண்டாள் தேன்மொழி.

கட்டில் மெத்தையில் அமர்ந்தவாறே, அவன் அவசர அவசரமாகத் தன் கையில் திணித்து விட்டுச் சென்ற கடிதத்தைப் பிரித்துப் படிக்க முற்பட்டாள்

'அன்புக்கினிய தேன்மொழி,

என் இதயக் கேணியில் பீறிட்டுப் பொங்கும் இனிய உணர்வுகளை—அமுத நினைவுகளை—எவ்வாறு எழில் சொட்டும் சொல்லோவியமாக்கி எழுதுவதென்றே எனக்குத் தெரியவில்லை.



உறுதிக்கும்
உழைப்பிற்கும்

CHETTINAD BRAND

# செட்டிநாடு சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது

தயாரிப்பாளர்கள் :

செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்

6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை–1.
தந்தி : 'BESTCEMENT' போன் : 27256.
பாக்டரி : புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி : 'CEMENT' போன் : 144.

## நீலகிரி கூட்டுறவு மைய வங்கி லிமிடெட்
நெ. ஜே. 90. ''கூட்டுறவு மத்திய வங்கி கட்டிடம்'' உதகமண்டலம்

தந்தி : நில்போபாங்க் தொலைபேசி எண் : 2420
கிளைகள் : கோத்தகிரி குன்னூர் கூடலூர்
தொலைபேசி எண் : 332 2684 24

(லட்சம்)
அனுமதிக்கப்பட்ட மூலதனம் .. 40·00
வழங்கப்பட்ட பங்கு மூலதனம் .. 29·87

வட்டி விகிதம்
(1) சேவிங்ஸ் பாங்கு கணக்கு .. 4%
(2) பிராவிடண்ட் பண்டு டெபாசிட்டு.. 5%

நிரந்தர டெபாசிட்டுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 1 மாதம் முதல் | | 3 மாதங்களுக்குள்ளாக | | $3\frac{1}{2}$% |
| (2) | 3 | ,, | 6 | ,, | $4\frac{3}{4}$% |
| (3) | 6 | ,, | 12 | ,, | $5\frac{1}{4}$% |
| (4) | 12 | ,, | 24 | ,, | $6\frac{1}{4}$% |
| (5) | 24 | ,, | 36 | ,, | $6\frac{3}{4}$% |
| (6) | 36 | ,, | 60 | ,, | $7\frac{1}{4}$% |
| (7) | 60 | ,, | 84 | ,, | $7\frac{1}{2}$% |
| (8) | 84 மாதங்களுக்குமேல் | | | | $7\frac{3}{4}$% |

36 மாதங்களுக்கும் அதற்கும் மேற்பட்ட காலத்திற்கும் போடப்படும் டெபாசிட்டுகளுக்கு (அசலுக்கும், வட்டிக்கும்) தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.


விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

ஜே. மாதா கவுடர், எம்.பி., பெருந்தலைவர்.
இரா. சு. வேலாயுதம், பி.ஏ. துணைப்பதிவாளர்-செயலாளர்.



அழகாய் கனிந்த அன்னாசிப் பழங்களை ஆடைப்பாலில் கலந்து அற்புதமாய் நான் வடித்த அமுதச்சுவை. அதுதான்...

# நியூட்ரின் பைனாப்பிள் டாபி ரோல்



குழந்தைகளே ! வாய் மணக்கும் நற்சுவை தரும் நியூட்ரின் பைனாப்பிள் டாபி ரோலை நினைக்கும்போதே நாவில் நீரூறுகிறதல்லவா ! இன்றே வாங்கிச் சுவைத்திடுங்கள் !

NCM-26 TAM

தின்னத்தின்ன திகட்டாத மிட்டாய்!

nutrine

நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட், சித்தூர் (ஆ.பி.)

அதுவும் நேற்றிரவு நான் கொண்ட இன்பத் தினவு இருக்கிறதே, அதனை எப்படி நான் விரித்துரைப்பேன்?

ஒட்டுக் கேட்பதையோ—ஒட்டுக் கேட்பவர்களையோ—எனக்கு அறவே பிடிப்பதில்லை; மிகவும் அருவருப்பாகவே கருதுவேன். ஆனால் அதே இழிந்த செயலை நானே மேற்கொள்ள நேருமென்றோ அதனால் இனிமைக் கனவுகளில் மிதக்க முடியுமென்றோ நான் கண்டேனா?

ஆம்; நேற்றுமா நீங்களும் டாக்டரும் உரையாடிக் கொண்டிருந்ததை நான் ஒட்டுக் கேட்டதைத்தான் குறிப்பிடுகிறேன்.

என்மீது உங்களுக்கு இவ்வளவு தாக வெள்ளமா? இவ்வளவு ஈடுபாடா? இவ்வளவு இதயப் பிணைப்பா?

நினைக்க நினைக்க என் நெஞ்சமெல்லாம் எப்படி இனிக்கிறது தெரியுமா? எப்படிப் புல்லரிக்கிறது தெரியுமா?

நான் மட்டும் ஓர் உமர்கயாமாக—கலீல் கிப்ரானாக—எமிலி சோலாவாக —கீட்சாக —பைரனாகப் பிறந்திருக்கக் கூடாதா?

உங்கள் இதயக் கொடியிலே பூத்துச் சிரிக்கும் காதல் மலரையே கருவாக வைத்து இந்நேரம் ஓர் இலக்கிய மாளிகையையே எழுப்பியிருக்க மாட்டேனா?

ஏன், உங்களையே என் காவிய விழிகளாக்கி அந்த ஒளி முத்துக்களின் மூலமாகவே இந்த உலகத்தைப் பார்த்திருக்க மாட்டேனா? இறைந்து சிதறிக் கிடக்கும் இயற்கை எழிலின் ஒவ்வோர் அணுவையும் தொட்டுத் துழாவிச் சுவைத்திருக்க மாட்டேனா?

ஆனால் நான் ஒன்றும் எழுத்தாளன் அல்லன்; சாதாரண மனிதப் பிறவி; உள்ளத்தின் ஆழ அகலங்களைப்பற்றி அக்கறை கொள்ளாத உடலை மட்டுமே வலிமையாக வைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு விளையாட்டு வீரன்.

அப்படித்தானே கூறாமல் கூறி நேற்று டாக்டரம்மாவிடம் என்னைப் பற்றிச் சாடாமல் சாடினீர்கள்?



உங்களைக் குறைசொல்ல முனைந்து விட்டதாகக் கருதிவிட வேண்டாம். உங்களுடைய துயரத்தின் படுபாதாளத்தை நான் உணராமல் இல்லை. உங்கள் ஆத்திரத் தணலை விசிறி விடுவதற்குப் போதுமான காரணங்கள் இருப்பதையும் நான் புரிந்து கொள்ளாமல் இல்லை. என்மீது ஓர் அவநம்பிக்கையும் எழும்படியான ஒரு சூழ்நிலைக்கு நான் இலக்காகியிருக்கிறேனே அதை நினைத்துத்தான் நான் இப்போது இரத்தக் கண்ணீர் வடிக்கிறேன்.

தேன்மொழி, இந்த உலகத்திலே —இன்றைய நடைமுறை வாழ்க்கையிலே—ஒருவன் ஒருத்தியைக் காதலிப்பதற்கே சில தகுதிகள், வசதிகள் தேவையாக இல்லையா?

நானா....? எந்தத் தகுதியும் எந்த வசதியும் இல்லாதவன். வறுமையையே வற்றாத பிணியாகவும், கொடிய பிணியையே குறையாத செல்வமாகவும் கொண்ட குடும்பத்திலே பிறந்தவன்.

குருடன், கோமேதக வைரத்திற்கு ஆசைப்படலாமா? உயர்ந்த வீட்டிலோ, பதவியிலோ இருக்கின்றவளை ஏழை ஒருவன் காதலிப்பதும் அப்படித்தான் பொருளோ பயனோ இல்லாமல் புகைந்தேதான் போய்விடும்.

அத்தகைய ஓர் அடைப்புச் சுவரை என் இதயத்தினுள் எழுப்பிக் கொண்டுதான் எத்தனையோ பெண்களை நான் சந்திக்க நேர்ந்தாலும் அவர்களைப்பற்றியெல்லாம் மறுபடியும் நான் சிந்திப்பதேயில்லை; அவர்கள் பின்னாலேயே நான் திரிவதும் இல்லை.

'ஏன் இந்தக் காதல்—கத்தரிக்காய் எல்லாம் நமக்கு?'—என்றுதான் என்னை நானே கட்டுப்படுத்திக் கொண்டு இதுகாறும் காலத்தைக் கடத்தி வந்தேன்.

ஆனால், உங்களைச் சந்தித்த பிறகு........?

தேன்மொழி, சின்ன வயது முதலே என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர்கள் யார் தெரியுமா?

ஏக்கத்திற்கும் ஏமாற்றத்திற்கும் ஆசைக்கும் ஆத்திரத்திற்கும் எளிதிலே ஆட்படுகின்ற மனிதர்களா?

அல்ல;

அதோ அந்த வானத்திலே வலம் வரும் நிலவும், இந்த வையத்தை ஏந்திக்கொண்டிருக்கும் கடலும்தான்!

முழுநிலவையும் அலைகடலையும் ஒரே நேரத்தில் பார்த்துத் திளைப்பதென்றால் எப்போதுமே எனக்குக் கொள்ளை ஆசை. அப்படிப் பார்க்கச் சென்று நான் கடலுக்கே இரையாக விருந்த காலமும் உண்டு.

தேன்மொழி, ......உங்கள் உணர்ச்சிகளிலே நான் அந்தக் கடலைக் காண்கிறேன்; உங்கள் அழகிலோ அந்த நிலவைக் காண்கிறேன்.

ஆனாலும்....

'அலுமினியச் செம்பு ஆலயக் கலசம் ஆக முடியுமா?'

—என்கிற நடைமுறைத் தெளிவு அல்லது தாழ்வு மனப்பான்மை தான் உங்களை நெருங்கவிடாமல் நெட்டித் தள்ள முயன்றது.

எனினும், நீங்களும் டாக்டரும் உரையாடியதைக் கேட்ட பிறகோ எனக்கும் ஒரு துணிச்சல் வந்துவிட்டது.

இதே நேரத்தில் நான் முன்பே ஒருத்திக்கு மணமாலை சூட்டியிருப்பேனே என்கிற உங்கள் ஐயப்பாட்டையும் நான் அகற்றிவிட வேண்டாமா?

தேன்மொழி, நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி. என் நெஞ்சங் கவர்ந்த அந்த நிலவு மீதும் கடலின் மீதுமே கூட ஆணையிட்டுச் சொல்கிறேன்.

நான் எந்தப் பெண்ணின் கழுத்திலேயும் மணமாலை சூட்டியதே இல்லை.

'அப்படியானால்' ''நாலாவது, இனிமேலும் இன்னொரு பெண்ணுக்குப் பூச்சூட்டுவதாவது?''—என்று கூறினீர்களே! அந்த அதிர்ச்சியினால்தானே எனக்கு மயக்கமே வந்தது!—என்று என்னை நீங்கள் மடக்கிக் கேட்கலாம்.

நான் அவ்வாறு கூந்தலுக்குப் பூச்சூட்டமாட்டேன் என்று மறுத்ததற்கு ஓர் அடிப்படையான—என் நெஞ்சை விட்டு அழிக்கவே முடியாத—ஒரு காரணம் உண்டு.

அதை நினைத்தாலே இப்போதும் என் இதயம் நடுநடுங்குகிறது. அதனை இந்தக் கடிதத்திலேயே வெளிப்படுத்தி, உடல்நலம் குன்றியுள்ள உங்களையும் என்னோடு சேர்ந்து அழவைக்க விரும்பவில்லை நான்.

இப்போது இந்தக் கடிதத்தை நான் எழுதத் துணிந்ததற்குக் காரணம் என்ன தெரியுமா? இந்த எளியவன் மீது உங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற காதல் செடி இனிமேல் கருகிவிடக் கூடாதே என்கிற கவலைதான்.

## சோதித்த முறை

'' ஒரு குறிப்பிட்ட சாதியைப் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கலாமா வேண்டாமா என்பதற்கான அடிப்படை; சமூகத் துறையிலும் கல்வித் துறையிலும் அச்சாதி பிற்பட்ட நிலையில் இருக்கிறதா, அச்சாதி மக்கள் பெரும்பாலானோர் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து ஈடுபட்டுவரும் தொழில் எத்தகையது, என்பதாகும். ஒரு சாதியைப் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கலாம் என்று கருதிய காலத்தில் சாதாரணமாக அச்சாதியைப்பற்றிக் கல்வித் துறைஇயக்குநரிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்தோ அல்லது இதர அலுவலர்களிடமிருந்தோ பரிந்துரைகள் அரசுக்கு வந்தன. இவ்வாறாகப் பிற்பட்ட வகுப்பினர் பட்டியல் அவ்வப்போது திருத்தப் பெற்றும் கூடிய வரையில் புதுப்பிக்கப் பெற்றும் வந்தன ''

'' நம்முடைய பட்டியலில் உள்ள வகுப்பினர்கள் பின் தங்கிய நிலையில் உள்ளவர்களா என்பதைக் கண்டறிய மற்றொரு சோதனையையும் கையாண்டோம்; பிற்பட்ட இச்சாதியினரின் பெண்கள் அன்றாடக் கூலி வேலைக்கு, தாழ்வான வேலைக்குப் போகிறார்களா, பிறர் வீட்டில் சமையல் வேலை, பணியாள் வேலை இவற்றை மேற்கொள்ளுகிறார்களா, கூலிக்காக உடலுழைப்பு வேலைக்குச் செல்கிறார்களா, மருத்துவச்சி போன்ற வேலையைச் செய்கிறார்களா, என்பவை அச்சோதனைகள் ''

—தமிழ்நாடு பிற்பட்டோர் நலக் குழு அறிக்கைப் பகுதி.

உங்களுக்கு விருப்பந்தான் என்றால், என்னோடு ஒரு முறை எங்கள் சிற்றூருக்கு வாருங்கள். என்னைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்வீர்கள்; நான் ஏன் பூச்சூட்ட மறுத்தேன் என்கிற புதிருக்குரிய விளக்கத்தையும் நீங்கள் பெறுவீர்கள்.

இன்னும் என்னென்னவோ எழுதத் துடிக்கிறது என் கை. ஆனாலும் உங்களுக்கு அலுப்புத் தட்டுமே—'போர்' அடிக்குமே—என்று இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

உங்கள் நிலா முகத்தையே நினைத்துத் தவித்துக் கொண்டிருக்கும்—

உங்கள் மாதவன்.

* * * * *

அந்தக் கடிதத்தை ஒரு முறையல்ல, இருமுறையல்ல, பலமுறை படித்துத் திளைத்தாள் தேன்மொழி.

மூட்டம் போட்டிருந்த வானம் சட்டென்று வெளிவாங்கியதைப் போல அவளுடைய நெஞ்சம் முழுவதும் பளிச்சென்று ஒரு விதக் கலகலப்பு! களிப்பின் அணைப்பு!

உடனே ஓடிப்போய் தன் மனத்துக்கு இனியவனின் முகத்தினைத் தன் விழிகளால் விழுங்கிக்கிறங்க—அவன் மார்பிலே தன் முகத்தைப் புதைத்துக் கொள்ள—அவளுக்கு எங்கிருந்து வந்ததோ அந்த வேட்கைத் துடிப்பு!

அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த அவள், தன் தந்தையின் அறையை நோக்கி நடந்தாள். மாதவன் இருக்கிறானா என்று எட்டிப் பார்த்தாள்.

அங்கோ......?

(தொடரும்)



# அண்ணலும் அண்ணாவும்

## புலவர் தமிழ்ப்பித்தன்

அண்ணல் காந்தியடிகளுக்கும் அறிஞர் அண்ணா அவர்களுக்கும் ஏராளமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அரசியல் தொண்டு, அறப்போர், தாய் மொழிக் கல்வி, பெண்கள் முன்னேற்றம், தீண்டாமை ஒழிப்பு, இன்னும் இதுபோன்ற எத்தனையோ துறைகளில் அண்ணலின் கொள்கையும் அண்ணாவின் கொள்கையும் ஒன்றாகக் காணப்படுவது மட்டுமல்ல—இருவரின் வாழ்க்கை வரலாற்றிலும் பலப் பல நிகழ்ச்சிகள் ஒன்றாகவே தென்படுகின்றன.

ஆங்கிலக் கல்வி கற்று வழக்கறிஞர் ஆன காந்தியடிகள், தமக்கு அந்தத் தொழில் தகுந்ததல்ல என்றுணர்ந்து, அதனைத் துறந்துவிட்டு, அரசியல் கடலிலே குதித்தார்.

சின்னஞ்சிறு வயது முதல், அவர், கல்வியில் பற்றுக் கொண்டிருந்திருக்கிறார். மேலை நாட்டுக்கும் சென்று கல்வி பயின்றிருக்கிறார்.

அரசியல் களத்திலே குதித்த பின், ஓய்வு ஒழிவு இன்றி நாட்டுப் பணி செய்திருக்கிறார்.

இவ்வாறு, கணமேனும் ஓய்வே இல்லாத அண்ணல் 'கர்நாடக சங்கீதத்தைப்' பற்றி நிறையத் தெரிந்து வைத்திருக்கிறார் என்ற செய்தியை அறியும்போது நமக்கு வியப்பு மேலிடுகிறது. அந்த வியப்பூட்டும் நிகழ்ச்சியைப் பார்ப்போம்.

வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் சாந்தி நிகேதனுக்கு ஒருமுறை அண்ணல் சென்றிருந்தார். சாந்தி நிகேதனத்தின் மாணவ மாணவியர், எல்லையற்ற மகிழ்ச்சியுடன் அண்ணலை வரவேற்றனர். அவரது இனிய உரையைக் கேட்கப் போகிறோம் என்பதில் அவர்கள் மிக மிகப் பெருமிதம் அடைந்தார்கள்.

இரு மாணவியர் கடவுள் வாழ்த்துப் பாடினார்கள். அவர்களின் பாடல்களைக் காந்தியடிகள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். வாழ்த்துப் பாடலுக்குப் பின், கூட்டத்தின் வழக்கமான நடைமுறைகள் நடைபெற்றன. அதன் பின்னர், அண்ணல் பேச வேண்டிய சூழ்நிலை வந்தது. அண்ணல் தமது பேச்சைத் தொடங்கினார்.

''இங்கே கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது. பாடியவர்கள் மால்கோஷ் ராகத்துடன் பீம்ப்ளாஸ் ராகத்தைக் கலந்து விட்டார்கள். எப்போதும் கடவுள் வாழ்த்துக்காகப் பாடப்படும் மால்கோஷ் ராகம் சுத்தமாகப் பாடப்பட வேண்டும்; அதிலே, மற்றொரு ராகம் வந்து கலக்க விடக் கூடாது; இவ்வாறு கலப்பதனால் அபூர்வ ராகமான மால்கோஷ் பங்கப்பட்டு விட்டது'' என்று, ராகங்களைப் பற்றிய ஆராய்ச்சி உரையுடன் தமது சொற்பொழிவைத் தொடங்கினார் அண்ணல்.

அல்லும் பகலும் அரசியலுக்கும் நாட்டுக்கும் தன்னைத் தியாகம் செய்துகொண்ட காந்தியடிகள் இன்னிசைக்கும் தமது இதயத்தில் இடம் கொடுத்திருக்கிறார் என்பது மட்டுமல்ல—அந்த இசையைத் தவறான முறையிலே இசைப்பவர்களைத் திருத்துகின்ற அளவுக்கு இசைப் புலமை பெற்றிருந்தார் என்பதையும் இந்த நிகழ்ச்சி எடுத்துரைக்கிறது.

அறிஞர் அண்ணாவும், அண்ணலைப் போன்றே ஆங்கிலக் கல்வி கற்றவர். வகுப்பில் முன்னணியில் திகழ்ந்தவர். கல்வியை முடித்தபின், பள்ளி ஆசிரியராகப் பணி புரிந்தவர். தமக்கு அந்தத் தொழில் தகுந்ததில்லை என்று முடிவு செய்து, தொழிலாளர் இயக்கத்தில் பங்கு கொண்டு, அரசியல் உலகத்திற்கு வந்தவர். கல்லூரி வாழ்க்கையின் போதும் சரி, சமுதாய வாழ்வில் ஈடுபட்ட போதும் சரி, ஓய்வே இல்லாது பணி புரிந்தவர். சமுதாய மாற்றத்திற்குக் கலை ஒரு பயனுள்ள கருவி என்பதை அறிந்து, நாடகங்களை உருவாக்கி, அவற்றின் வாயிலாகப் பிரச்சாரம் புரிந்து, சமுதாயப் புரட்சியை உருவாக்கியவர். என்றாலும், அவர், கர்நாடக சங்கீதத்தைப் பற்றி நிறையத் தெரிந்து வைத்திருந்தார்—பாடுவோரைத் திருத்தும் அளவுக்கு இசைப்புலமை கொண்டிருந்த காந்தியடிகளைப்போலவே அண்ணாவும், இசைப் புலவர்களும் வியக்கும் அளவுக்கு இசைப் புலமை பெற்றிருந்தார் என்பது வியப்புக்குரிய செய்திதான்.

பல வருடங்களுக்கு முன்!

கோவைக்குச் சுற்றுப்பயணம் சென்றிருந்த அண்ணா அவர்கள், காஞ்சியிலுள்ள தனது 'திராவிட நாடு' வார ஏட்டுக்குக் கட்டுரை ஒன்றினை எழுதி அனுப்பினார். 'மோகன முகாரி' என்பது கட்டுரையின் தலைப்பு, அண்ணா தலைப்புக் கொடுத்துவிட்டாரே தவிர, மோகன முகாரி எப்படி இருக்கும் என்ற சந்தேகம் அவருக்கே ஏற்பட்டுவிட்டது. மறுநாள், தற்செயலாக அங்கு வந்திருந்த இசைச் சித்தர் சி. எஸ்.

ஜெயராமன் அவர்களிடம் தனது சந்தேகத்தைத் தெரிவித்தார்.

''மோகன முகாரி என்று தலைப் புக் கொடுத்துவிட்டேன். அந்த ராகம் உள்ளதா? அதன் ஆரோ கணம், அவரோகணம் என்ன?'' —அண்ணா கேட்டார்.

திடீரென்று அண்ணா அவ்வாறு கேட்டதும் சி. எஸ். ஜேயினால் பதில் சொல்ல இயலவில்லை. சில வினாடிகள் அவர் சிந்திக்கத் தொடங்கினார்.

உடனே, அண்ணா,

''உனக்குத் தெரியாவிட்டால் நானே வழி சொல்கிறேன்; அப் படிச் செயல்படுத்த முடியுமா பார்! ஆரோகணத்திற்கு மோக னத்தின் சுரங்களையும், அவரோக ணத்திற்கு முகாரியின் சுரங்களை யும் செயலாற்றிக் காட்டு'' என் றார்.

அண்ணாவின் கட்டளைப்படியே சி. எஸ். ஜே. பாடிக் காட்டினார். அந்த ராகம், மோகன முகாரி யாகவே முகிழ்த்தது. மறுவினாடி, ஜெயராமன் அவர்களே வியப் படைந்துவிட்டார்.

இந்த நிகழ்ச்சி பற்றியும், அண்ணாவின் இசைப் புலமை பற் றியும் இசைச் சித்தரே வியந்து பாராட்டி எழுதியிருக்கிறார்.

''அண்ணா அவர்கள் இசைத் துறைக்குச் செயலாற்ற வந்திருந் தால் அநேக இசை அமைப்பாளர் கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள்'' —என்று கூறியுள்ள சி. எஸ். ஜே. யின் கருத்து, இங்கே குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு அரசியலிலும் தமிழ் இலக்கியங்களிலும், சமுதாயப் பணியிலும், பத்திரிகை அரங்கி லும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அண்ணா அவர்கள் எந்தக் கர்நாடக இசைக் கல்லூரியில் ''ராகம், தானம், பல்லவி'' கற் றார், ஆரோகணம், அவரோக ணம் செய்தார் என்பது வியப் பாகவே இருக்கிறது.

கவிஞர்களிடம் மாறாத அன்பு கொண்டவர் காந்தியடிகள். கவி ஞர்களும், காந்தியடிகளிடம் ஆழ்ந்த பற்று வைத்திருந்தார் கள். விடுதலைப் போராட்டத் தில், எண்ணற்ற கவிஞர்கள் காந்தியடிகளின் தலைமையில் தொண்டாற்றியிருக்கின்றார்கள்; அவரது தலைமையைப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள்; அவரது அணியில் தாங்கள் அங்கம் பெற் றதை எண்ணி எண்ணி இதயம் பூரித்திருக்கிறார்கள்.

சுப்பிரமணிய பாரதியார், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை போன்ற கவிஞர்கள், அண்ணலை அன்னைத் தமிழால் அகங் குளிரப் பாடிப் பாராட்டியிருக்கிறார்கள். தமிழ்க் கவிஞர்கள் மட்டுமல்ல. இந்தியாவின் அனைத்து மொழிக் கவிஞர்களும் காந்தியடிகளைப் பாராட்டித் தீஞ்சுவைப் பனுவல் களை உருவாக்கியிருக்கிறார்கள்.

வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர், அண்ணலைப் பாராட்டி யது மட்டுமல்ல, அவருக்கு மகாத்மா என்ற சிறப்புப் பட்டத் தையே சூட்டிச் சித்தம் மகிழ்ந் திருக்கிறார். அரசியலிலும், சமு தாயத் தொண்டிலும் வன்முறை யை ஒழித்து, அறப்போர் நாயக னாக விளங்கியதனால், அவரை மகாத்மா என்று மனங் குளிர அழைத்திருக்கிறார் வங்கக் கவி ஞர். காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தின் பதினான்காவது தொகுப்பான ''தலைவர்களுக்குக் காந்திஜியின் கடிதங்கள்'' என்ற நூலில் உள்ள ஒரு குறிப்பு— இந்த உண்மையை நமக்குத் தெரி விக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்களும், அண்ணலைப் போலவே கவிஞர் களிடம் மாறாத பற்றுக் கொண் டவர் என்பதை உலகறியும். நூற்றுக் கணக்கான தமிழ்க் கவி ஞர்கள் அண்ணாவின் அணியிலே அங்கம் பெற்றிருந்ததை வரலாறு தொகுத்துக் கூறுகிறது. அன்னைத் தமிழுக்குத் தொண்டு செய்யும் அண்ணனின் தலைமையில் பணி புரியும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி எண்ணிப் பெருமைப் பட்டு வந்தது தமிழ்க் கவிஞர் பெருங் கூட்டம். 'அண்ணாவின் புகழ் பாடாத நாவென்ன நாவே' என்று எண்ணிவந்த அருந்தமிழ்க் கவிஞர்கள், அண்ணாவைப் பல வகைப் பாக்களாலும் பாடிப் பரவசமடைந்தார்கள். அவர் களில் எல்லாம் தலைமைப் பொறுப்பேற்றிருந்தவர் புரட் சிக் கவிஞர் பாரதிதாசன் அவர் கள்தான்.

அண்ணாவின் ஆற்றலையும் பெருஞ் சிறப்பையும் உள்ளம் உருக உருகக் கவிதையாக்கி, மகிழ்ச்சி வெள்ளத்திலே நீந்தி யிருக்கிறார் பாவேந்தர். அது மட்டுமல்ல, அண்ணாவின் பெய ருக்கு முன்னால் அறிஞர் என்ற அடைமொழியை இணைத்து அள வற்ற பெருமைப்பட்டிருக்கிறார் அவர்.

பல வருடங்களுக்கு முன்பு, சென்னையில் நடைபெற்ற சிந் தனையாளர் கூட்டத்தில் சொற் பொழிவாற்ற அண்ணா சென்ற போது, சிந்தனையாளர் கழகத் தார் அண்ணாவுக்கு வரவேற்பு மடல் வாசித்தளிக்க நினைத்தார் கள். அண்ணாவுக்கு வரவேற்பு மடல் தருவதென்றால், அதனைப் பாவேந்தர் தான் எழுதவேண்டும் என்று அவர்களே முடிவெடுத்துப் பாவேந்தரை அணுகி, வாழ்த்துப் பா பெற்றனர். அந்த வாழ்த் துப் பாவிலேதான் அண்ணாவை அறிஞர் எனக் குறிப்பிட்டுள்ளார் பாரதிதாசன்.

எனவே, அண்ணலுக்கு மகாத்மா என்ற பட்டத்தை ஒரு கவிஞர்தான் கொடுத்திருக்கிறார்; அண்ணாவுக்கு அறிஞர் என்ற பட்டத்தையும் ஒரு கவிஞர்தான் கொடுத்திருக்கிறார்.

இவ்வாறு எத்தனையோ நிகழ்ச் சிகள்! அண்ணலின் வாழ்விலும், அண்ணாவின் வாழ்விலும் ஒன்று பட்டு நிற்கின்றன; நமக்கு உவகையைத் தந்து வருகின்றன.


# மரச்சிற்பம் காப்போம்

பழைய கற்காலத்திலிருந்தே மரம் பலவிதங்களில் மனிதனுக்குப் பயன்பட்டு வருகிறது. அவன் மரத்தைக் கொண்டு தனக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும் செய்து வந்துள்ளான். மரத்தால் தீ மூட்டினான்; வீடு கட்டினான், பாத்திரங்கள் படைத்தான், கருவிகள் வடித்தான்; ஆயுதங்கள் அமைத்தான்; கப்பல், பாலம், வண்டி ஆகியவற்றையும் செய்தான். இசைக்கருவிகளையும் கலைப்பொருள்களையும் கூட மரத்தால் செய்தான்.

இன்றைக்கும் நம் கோவில் தேர்களிலும் மணிக் கதவங்களிலும் அழகிய சிற்பங்களை நாம் கண்டுகளிக்கலாம். நம் நாட்டிலிருக்கும் மிகப் பழம்பெரும் மரச்சிற்பங்கள் 300, 400 ஆண்டுக் காலம் பழைமை கொண்டவை. இத்தகு மரச்சிற்பங்கள் சிலவற்றை மதுரை திருமலை நாயக்கர் மகாலிலும், மலையாள நாட்டுக் கோவில்களிலும் காணலாம்.

மனிதன் தோன்றுதொட்டு மரத்தைப் பலவகைகளில் பயன்படுத்தி வந்துள்ளதால், பொருட்காட்சிச்சாலையின் சேகரிப்பிலும் கலைக்கூடங்களின் சேகரிப்பிலும் அவன் செய்த மரப்பொருள்கள் பெருமளவில்இடம்பெறுகின்றன. இவைகளைப் பூச்சிகள், பூஞ்சைகள், உப்புக் கறைகள் முதலியன அழித்து விடாமல் பாதுகாக்க வேண்டும். மரச்சிற்பங்களைப் பாதுகாக்கப் பல புதிய சிறந்த முறைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

நமது நாட்டின் மிகச் சிறந்த மரச்சிற்பங்கள் சென்னையில் உள்ள அரசினர் பொருட்காட்சிச் சாலையில் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பொருட்காட்சிச்சாலையில் பெருமளவில் மரச்சிற்பங்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்து கொண்டுவரப் பட்டுச் சேகரிக்கப்படுகின்றன. இவ்விதமாகப் பொருட்காட்சிச் சாலையில் சேகரிக்கப்படும் மரச்சிற்பங்கள் பெரும்பாலும் தாரினால் பூசப்பட்டு இருக்கின்றன. பூச்சிகளாலும் பூஞ்சைகளாலும் மரச்சிற்பங்கள் அழியாமல் இருக்கக் கிராம மக்கள் அதன் மீது தாரைப் பூசி இருக்கிறார்கள். இப்படிச்செய்திருப்பதால் சிற்பங்களின் மேற்பரப்பு கருமையடைந்தும் நுண்ணிய வேலைப்பாடுகள்



நச்சுப் புகையூட்டும் அறை.


மறைந்தும் காணப்படுகின்றன. தாரைச் சிற்பத்திலிருந்து நீக்குவதற்கு அதை முதலில் இளக வைக்கவேண்டும். இதற்குச் சிற்பத்தின்மேல் 5 சதவீதம் சூடான வாஷிங் சோடாக் கரைசலை ஊற்றவேண்டும்; அல்லது சிற்பத்தைக் கரைசலில் ஒரு மணி நேரத்திற்கு மூழ்க வைக்க வேண்டும். தார் இளகியவுடன் அதை மிகுந்த கவனத்துடன் சிற்பத்தின் வேலைப்பாடுகளைப் பாதிக்காது சுரண்டி எடுக்கவேண்டும். பிறகு சிற்பங்கள் உலர்த்தப்பட்டு அதன் மீது உருகிய பாரபின் மெழுகு அல்லது 2 சதவீதம் அஸ்கு கரைசலைப் பாதுகாப்புப் பூச்சாகப் பூசவேண்டும். இப்படிச் செய்வதால் சிற்பங்கள் வெகு நாட்களுக்குப் பாதிக்காமல் இருக்கின்றன.

பூஞ்சைகளால் பாதிக்கப்பட்ட சிற்பங்கள் நாளடைவில் மிருதுவாகின்றன. அப்போது விரலழுத்தங்கள் கூட சிற்பத்தின் உருவைச் சிலவேளைகளில் அழித்து விடக்கூடும். சில மரங்களில் பிளவுகள் குறுக்கும் நெடுக்குமாக இருந்தால், அவைகள் சுருங்குவதற்கு ஏதுவாகின்றன. இவை, ஒருவித பூஞ்சைகள் சிற்பங்களை உளுக்கச் செய்வதால் உண்டாகின்றன. பூஞ்சைகளினால் உண்டாகும் அழிவைத்தடுக்க ஒரு காலன் தண்ணீரில் 3 முதல் 6 அவுன்ஸ் வரை வியாபார சோடியம் புளூரைட் (Commercial Sodium Fluoride) அல்லது மக்னீசியம் சிலிகோ புளூரைடைக் (Magnesium Silico-fluoride) கலந்து பூஞ்சைக் கொல்லியாகப் பயன்படுத்தலாம்.

மரத்தில் துளைகளும் இடுக்குகளும் இருந்து அவைகளின் வழியாக மரத்தூள் வெளிப்படுமாயின், புழுக்களும், பூச்சிகளும் வண்டுகளும் அழிவை உண்டாக்குகின்றன என்பதை அறியலாம். சிற்பத்திலுள்ள புழு, பூச்சி, வண்டு ஆகியவற்றை ஒழிப்பதற்கு வெப்பமுறை(130°F வெப்பத்தில், 6 மணி நேரம்) வெற்றிடமுறை, நச்சுப் புகையூட்டு முறை, பூச்சிக் கொல்லி தெளித்தல் முறை ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்.

நச்சுப் புகையூட்டும் முறையில் நன்கு மூடப்பட்டுக் காற்றுப் புகாத அறைக்குள் சிற்பத்தை

எஸ். தங்கவேலு



மரச் சிற்பம்—புதுப்பிக்கு முன்!

வைத்துப் பூச்சிக் கொல்லிகளாக ஹைட்ரோசயனிக் அமிலம் ( Hydrocyanic acid ), மெதில் புரோமைடு (Methyl bromide), எதிலின் ஆக்ஸைடு (Ethylene Oxide), கார்பன் டை சல்பைடு (Carbon di sulphide) மட்டும் அல்லது கார்பன் டெட்ராகுளோரைடும் (Carbon tetrachloride), எதிலின் டை குளோரைடும் (Ethylene di chloride) கலந்து பல நாட்களுக்கு நச்சுப் புகை யூட்டிச் சிற்பங்களில் உள்ள பூச்சிகளைக் கொல்லலாம்.


சிற்பத்தின் மேல் பரப்பில் பொருக்குகளும் படிகங்களும் (Incrustations and crystalline deposits) தூள்களாகும்படி இருந்தால் அவை கரையக்கூடிய உப்புகளால் ஏற்பட்டவை என்பதை அறியலாம். அந்த உப்புகள் சோடியம், கால்சியம், மக்னீசியம் ஆகியவற்றின் குளோரைடுகளும் சல்பேட்டுகளும் (Chlorides & Sulphates) ஆகும். இவ்வுப்புகளை நீக்க ஈரக் காகிதக் கூழைச் சிற்பத்தின் மேல் பரப்பு முழுவதும் மறையும்படித் தடவ வேண்டும். காகிதக் கூழிலுள்ள நீரை மரம் ஈர்த்துக்கொள்ளும்போது மரத்திலுள்ள உப்புகள் கரைகின்றன. காகிதக்கூழ் உலரும்போது கரைந்த உப்புகள் அதில் படிகின்றன. மூன்று வாரங்களுக்குப் பிறகு உலர்ந்த காகிதக்கூழை நீக்கி அதிலுள்ள உப்புகளைக் கழுவிய பிறகு தேவைப்பட்டால் மறுபடியும் காகிதக்கூழைப் பயன்படுத்தலாம். சிற்பத்தில் படிந்திருக்கும் உப்புகளின் அளவைப் பொறுத்துத்தேவையான காகிதக் கூழைப்பயன்படுத்த வேண்டும். இவ்வாறு உப்புகள் நீக்கப்பட்ட பிறகு, மரத்தை மெதுவாக உலர்த்த வேண்டும். முதலில் ஆல்ககாலிலும் பிறகு இரு உறிஞ்சு தாள்களுக்கிடையே வைத்தும் உலர்த்த வேண்டும்.

பூச்சிகளாலும் பூஞ்சைகளாலும் மரவேலைப்பாடுகள் மெலிவு அடைந்திருந்தால், அவைகளை வலிவூட்ட 5 சதவீதம்பாலிவினைல் அசிடேட் (Polyvinyl acetate) அல்லது 0·5 சதவீதம் மெதில் மெதாகிரிலேட் (Metyl Methacrylate) கரைசல் உபயோகிக்கலாம்.

மரத்திலுள்ள சந்துகளை லிகியூடெக்ஸ் ( Liquitex ) உபயோகித்தும், பொந்துகளைப் பூச்சிக்கொல்லி கலந்த மரப்பட்டியால் அடைத்தும் சீர்செய்யலாம். சீர் செய்யும்போது மரச்சிற்பங்களின் நிறங்களுக்கேற்ப வண்ணங்களைக் கலந்து அவற்றை உபயோகிக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசினர் பொருட்காட்சிச் சாலையிலுள்ள பாதுகாப்பு ஆய்வுக்கூடம், பொருட்காட்சிச் சாலையின் பெருங்கலைச் செல்வங்களைச் செப்பனிட்டுப் பாதுகாப்பதற்கென 1930-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந் நாட்டிலுள்ள பொருட்காட்சிச் சாலைப் பாதுகாப்பு ஆய்வுக்கூடங்களில், இதுவே முன்னேடியாக விளங்குகிறது. இது தனது மற்றப்பணிகளோடு மரச் சிற்பங்களைச்செப்பனிட்டுப் பாதுகாக்கும் பணியையும் செய்து வருகிறது. ●

மரச் சிற்பம்—புதுப்பித்த பின்!



# 1970-71ஆம் ஆண்டில் தமிழகத்தில் மின் வளர்ச்சி

**1970-71-ஆம் ஆண்டு,** மின்வாரியத்தைப் பொறுத்த வரையில், குறிப்பிடத்தக்க சாதனைகள் பல புரிந்துள்ள ஆண்டாகும்.

தமிழகத்தில் மின்வளர்ச்சி, இவ்வாண்டில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. மின் உற்பத்தி, மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல், கிராமப் புறங்களுக்கு மின்வசதி அளித்தல் ஆகிய மூன்று துறைகளிலும், இவ்வாண்டிற்கான திட்ட இலக்குகளை நாம் அடைந்து விட்டோம்.

புதிய மின் உற்பத்தி நிலையங்கள் இவ்வாண்டில் தொடங்கப்பட்டுள்ளன :—

இவ்வாண்டில் வேலை முடிக்கப்பட்டுப் புதிதாகச் செயல்படத் தொடங்கியுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் :—

* கோதையாறு மின் உற்பத்தி நிலையம்-I, ஒரே யூனிட் கொண்ட 60 மெகவாட் மின் உற்பத்தித் திறன் கொண்டது.
* சோலையாறு மின் உற்பத்தி நிலையம்-II. ஒரே யூனிட் கொண்ட 25 மெகவாட் மின் உற்பத்தித் திறன் கொண்டது.
* எண்ணூர் அனல் மின் திட்டத்தின் கீழ், 60 மெகவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட 2-வது பிரிவு.
* மத்திய அரசின் ஆளுகையில் உள்ள நெய்வேலி அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் இவ்வாண்டில் 500 மெகவாட்டிலிருந்து 600 மெகவாட்டுக்கு உயர்த்தப்பட்டது.

மொத்தத்தில், இவ்வாண்டில், தமிழகத்தின் மின் உற்பத்தித் திறனில் 145 மெகவாட் உற்பத்தித் திறன் கூடுதலாக்கப்பட்டது.

அதாவது, தமிழ்நாட்டில் தமிழ்நாடு மின் இணைப்புத் தொடரின் உற்பத்தித் திறன் 1220 மெகவாட்டிலிருந்து 1365 மெகவாட்டாக இவ்வாண்டில் உயர்ந்தது. கடந்த ஆண்டைவிட, அதாவது 1969–70-ஐ விட, 12 சதவிகிதம் இந்த உயர்வு அதிகம்.

தமிழகத்தில் முழுமைக்கும், நெய்வேலி, மைசூர், கேரளா ஆகிய இடங்களிலிருந்தும் வாங்கப்பட்ட மின் சக்தியையும் சேர்த்து, இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மின் அளவு 6189 மிலியன் யூனிட்டுகளாகும்.

தனி நபர் மின்சாரம் பயன்படுத்தும் சராசரி அளவு 1969–70-ல் 120 யூனிட்டுகளாக இருந்தது, 1970–71-ல் 123 யூனிட்டுகளாக உயர்ந்தது.

இவ்வாண்டில் மட்டும் புதிதாக 1·6 இலட்சம் பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. 1970–71 இறுதியில், வாரியத்தின் பிரதேசத்தில் உள்ள மொத்த மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை 18 இலட்சமாகும். இது தவிர, உரிமதாரர் பகுதிகளில் உள்ள மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை 1969–70 இறுதியில் 3·4 இலட்சமாகும்.

தமிழ்நாடு மின் இணைப்புத் தொடர் (Tamil Nadu Power Grid) எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ் வாண்டில், ஈரோடு மின் அமைப்பு (Erode Eletricity System) புதிதாக அமைக்கப்பட்டது. 1970–71-ஆம் ஆண்டு இறுதியில் தமிழகத்தில் மொத்தம் 13 மின் பகிர்வு அமைப்புகள் (Distribution Systems) உள்ளன.

1970–71-ல் ஐந்து மின் துணை நிலையங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுச் செயல்படத் துவங்கியுள்ளன. தீவிர உயர் அழுத்த மின் துணை நிலையங்கள், உயர் அழுத்த மின் துணை நிலையங்கள் மொத்தம் 240 தமிழகத்தில் உள்ளன.

1970–71-ல் மட்டும், தமிழகத்தில் தெரு விளக்குகள் போடுவதன் மூலம் மொத்தம் 10,016 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின் வசதி நீட்டிக்கப்பட்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டு இறுதியில் தமிழகத்தில் மின் வசதி பெற்றுள்ள கிராமங்கள், சிற்றூர்களின் மொத்த எண்ணிக்கை 42,229.

இவ்வாண்டில் மட்டும் (1970–71), மொத்தம் 57,641 விவசாய விசையேற்றங்களுக்கு மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டு இறுதி நிலவரப்படி, தமிழகத்தில் மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ள விவசாய விசையேற்றங்களின் மொத்த எண்ணிக்கை 5,30,044.

31–3–1971-ஆம் தேதி நிலவரப்படி, தமிழ்நாடு மின் இணைப்புத் தொடரில், 15 நீர் மின் உற்பத்தி நிலையங்களும், 4 அனல் மின் உற்பத்தி நிலையங்களும் உள்ளன. எல்லா மின் உற்பத்தி நிலையங்களும், தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் சொந்தமானவை. நெய்வேலி அனல் மின் நிலையம் மட்டும் நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனுக்குச் சொந்தமானது; அந்த நிறுவனத்தினால் இயக்கப்படுவது. ●


சிறுசேமிப்பு
இன்றைய சேமிப்பு
நாளைய பாதுகாப்பு!
நாட்டுக்கும் வீட்டுக்கும்
நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே
தூற்ற வேண்டும்
காசுள்ளபோதே
சேர்க்க வேண்டுமல்லவா?
சிறுசேமிப்பு
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க!
இயக்குநர்
சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9

# நாங்குநேரிப் பகுதியில் புதிதாக உருவான 3881 வேலை வாய்ப்புகள்

கே. எம். ராசு

கிராமங்களிலுள்ள மக்கள் வேலை தேடி நகரங்களுக்குச் சென்று நெரிசலை அதிகப் படுத்துவதைத் தவிர்க்கவும், கிராமங்களில் உள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கிராமங்களிலேயே தொழில்களைப் பெருக்கவும் வசதியாக, கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டம் 1962-ல் இந்திய அரசாங்கத்தால் துவக்கப்பட்டது. இந்திய நாட்டில் மொத்தம் 49 இடங்களில் இத் திட்டம் துவக்கப்பட்டது.

நாங்குநேரி வட்டம் பல துறைகளிலும் பிற்போக்கான பகுதி என்ற காரணத்தினால் நாங்குநேரியிலும் இத்திட்டம் துவக்கப்பட்டது. தொழில்கள் தொடங்குவதற்கு உள்ள வசதிகள் குறித்து முதலில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டப் பகுதியில் நாங்குநேரி, களக்காடு, வள்ளியூர், இராதாபுரம் ஆகிய நான்கு வட்டாரங்கள் உள்ளன. நீளமான கடற்கரை உள்ள பகுதி இது. இப்பகுதியில் சுண்ணாம்புக்கல், கார்னெட் மண், இலுமினைட் போன்ற தாதுப் பொருட்கள் கிடைக்கின்றன. பனைச் செல்வம் நிரம்ப உள்ளது.

இப்பொருட்களை ஆதாரமாகக் கொண்டு சிறு தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, கீழ்க் கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) பயிற்சித் திட்டம், (2) பொது வசதிப் பணி நிலையங்கள் அமைப்பு, (3) அரசினர் உற்பத்தி நிலையங்கள் அமைப்பு (4) தனிப்பட்ட சிறு தொழில்களுக்குக் கடன் உதவி (5) மற்ற துறைகளின் வளர்ச்சிப் பணிகள்.

குடிசைத் தொழில், சிறு தொழில் பொருட்கள், பழங் காலக் கருவிகளைக் கொண்டு, பழமையான முறையில் செய்யப் பட்டு வந்ததால் பொருள் உற்பத்தி குறைவாக இருந்த துடன், பொருட்கள் நல்ல பொலிவுடனும் அமையவில்லை. அதன் காரணமாக அவைகளுக்கு நல்ல விலையும் கிடைக்க வில்லை. எனவே, தொழில் திறனை வளர்க்கவும், விவசாயத் தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களையும் கைத்தொழில்களில் ஈடுபடுத்தவும் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பனை ஓலைப் பொருட்கள், பனைநார்ப் பொருட்கள், கோரைப்பாய் நெய்தல், வெண்கல வார்ப்பு, பனைநார் பிரஷ், சாக்கட்டி செய்தல், அச்சு பைண்டிங் செய்தல், தோல் கையுறைகள் செய்தல், பொறியியல் பயிற்சி, வானொலிப் பழுது பார்த்தல், தச்சு, கருமான் வேலைப் பயிற்சி, கொண்டை வலைகள் தயாரித்தல் ஆகிய 12 வகைகளில் மொத்தம் 603 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டது.

நேர்த்தியான பத்தமடைப் பாய்கள் தயார் செய்வதில் பயிற்சி பெற்ற 19 பேர்கள் ஏர்வாடி கோரைப்பாய் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து இப்போது நாள் ஒன்றுக்கு ரூ. 5 வரையில் சம்பாதிக்கிறார்கள்.

வெண்கல வார்ப்பட நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் நலனுக்காக ஒரு கூட்டுறவுத் தொழிற்சங்கம் வள்ளியூரில் அமைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் சங்கம் செயல்படும்.

## வானொலிப் பெட்டி

வானொலி பழுது செய்வதில் பயிற்சி பெற்ற 16 பேர்களில் இருவர் சிறு தொழில்களுக்குக் கடன் உதவி வழங்கும் திட்டத் தின்கீழ் கடன் பெற்றுச் சொந்த முறையில் தொழில் செய்து வருகின்றனர்.

மற்ற தொழில்களில் பயிற்சி பெற்றவர்கள் பெரும்பாலோர் தனிப்பட்ட நிறுவனங்களில் வேலை செய்கின்றனர். மேற் குறிப்பிட்ட பயிற்சித் திட்டங்களினால் 336 நபர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

கொல்லர், தச்சர் ஆகியோர் இக்காலத்துக்கு ஏற்ற வகையில் தொழில் திறனை மேம்படுத்தி, உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதியாகப் பொதுப்பணி நிலையங்கள் தொடங்கப்பட்டன. திசையன் விளை, இட்டமொழி, மூலைக்கரைப்பட்டி, கண்ணநல்லூர், மீனவன்குளம், பருத்திப் பாடு, கோயிலம்மாள்புரம்,

களக்காடு, தளபதி சமுத்திரம், தேவநல்லூர் ஆகிய நிலையங்களில் மின்சாரத்தில் இயங்கும் கடைசல் இயந்திரம், மரம் இழைக்கும் இயந்திரம், துளையிடும் இயந்திரம், மரம் அறுக்கும் இயந்திரம், இரும்பு அறுக்கும் இயந்திரம், சாணை பிடிக்கும் இயந்திரம் முதலியன பொருத்தப்பட்டுள்ளன.

## பசுமைப் புரட்சியில் பங்கு

கிராமத் தொழிலாளர்களுக்கு இந்நிலையங்களில் பணி வேலைகள் குறைந்த செலவில் செய்யப்படுகின்றன. தற்சமயம், தீவிரமாக அமல் படுத்தும் ''பசுமைப்புரட்சி''யில் இந் நிலையங்கள் பெரிதும் பங்கு கொள்கின்றன.

பம்பு செட் நிறுவுதல், பைப் மரை போடுதல், பைப்புகள் பொருத்துதல், பம்ப் செட் வயரிங் செய்தல், பழைய வயர்கள் மாற்றுதல், சுவிட்ச் பெட்டிகள் பழுதுபார்த்தல், பம்பு ஷாப்டுகள் மாற்றுதல், விவசாயக் கருவிகள் பழுது பார்த்தல், வெல்டிங் வேலைகள், கருவிகள் சாணை பிடித்தல், கட்டடங்களுக்குத் தேவையான இரும்பு கேட்டுகள், ஜன்னல்கள் முதலியன இந்நிலையங்களில் செய்யப்படுகின்றன.

## பொறியியல் தொழில் நிலையம்

வள்ளியூரில் பொது நோக்குப் பொறியியல் தொழில் நிலையம் 1966 முதல் இயங்குகிறது. இரும்பு வேலைகள், வெல்டிங் கடைசல் வேலைகள், மருத்துவ மனைகளுக்குத் தேவையான கட்டில்கள் முதலியன செய்யப் படுகின்றன. இதில் 45 பேர்கள் வேலை செய்கிறார்கள்.

சாக்கட்டி பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற 19 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு அப்பயிற்சி நிலையம் 1967 முதல் உற்பத்தி நிலையமாகச் செயல்பட்டு வருகின்றது. 1970–71-ல் இந்த சாக்கட்டிகள் உத்தரப் பிரதேசத்துக்கும் ஏற்றுமதி ஆயின. இந்த நிலையம் லாபத்தில் இயங்குகின்றது.

சிறு தொழில்கள் வளர்ச்சிக்காகத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து 3 சத விகித வட்டியில் சொத்துக்கள் மற்றும் நபர் ஜாமீன் பேரில் கடன் வழங்கப்படுகிறது. மொத்தம் 186 பேர்கள் புதுத் தொழில்கள் தொடங்கி, பயனடைந்திருக்கிறார்கள்.

சிறு தொழில்களுக்குக் கடன் வழங்கும் விதிகளைத் தளர்த்திக் கடன் வழங்க மாநில வங்கி முன் வந்துள்ளது. இத் திட்டத்தின்கீழ் திட்ட அலுவலர்க்கு மனுச் செய்தல் வேண்டும். திட்ட அலுவலரின் சிபாரிசின் பேரில் மாநில வங்கி ரூ. 5,000 வரையில் கடன் வழங்குகிறது. கடன் தொகையை மாதந்தோறும் சம தவணைகளாக 24 மாதங்களில் திருப்பிச் செலுத்தல் வேண்டும்.

ஒழுங்காகச் சிறு தொழில்கள் செய்வதற்கு சொத்து ஜாமீன் கொடுக்க இயலாத நிலையிலிருப்பவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைகிறார்கள். இத் திட்டத்தின் கீழ் 1971 மே முடிய 83 சிறு தொழில்களுக்கு ரூ. 1,43,015 கடனாக வழங்கப் பட்டுள்ளது.

## மற்ற துறைகளில் வளர்ச்சி

விவசாயிகள் முசுக்கட்டைச் செடி வளர்த்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வசதி செய்யும் முறையில் பனகுடியில் பட்டுப்பூச்சி மாதிரிப் பண்ணை தொடங்கப்பட்டது.

அம்பர் சர்க்கா நூற்கும் பெண்களுக்குப் போதிய இட வசதி அளிக்கும் பொருட்டுப் பரப்பாடி, கூட்டப்புளி ஆகிய இடங்களில் பொது வேலைக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

கருப்பட்டி செய்வோருக்குக் குறைந்த விலையில் பதனீர்த் தொட்டிகள் வழங்கும் திட்டத் தின் கீழ் ரூ. 20,000 விலை மதிப்புள்ள பதனீர்த் தொட்டிகள் பாதி விலைக்கு வழங்கப் பட்டன. 600 பனைத் தொழிலாளர்கள் இதனால் பயனடைந் னர்.

## கற்கண்டு-மருந்து

திட்டப்பகுதியில் ஏராளமான பனை மரங்கள் இருக்கின்றன. பனங்கற்கண்டு, மருந்து வகைக்கு அதிகம் பயன்படுவதால் அதற்கு நல்ல கிராக்கி உள்ளது. எனவே, திட்டப்பகுதியில் திருநெல்வேலி மாவட்ட பனைப் பொருட்கள் உற்பத்தி சம்மேளனம் பரிவிரிசூரியன் என்ற இடத்தில் பனங்கற்கண்டு தயாரிக்கும் நிலையம் ஆரம்பித்துள்ளது. இதற்குத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து 1967-ல் ரூ. 63,000 கடன் வழங்கப்பட்டது. இந் நிலையத்தில் 27 பனைத்தொழில் செய்யும் குடும்பத்தினர் பணி புரிகின்றனர்.

இவ்வாறு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதன் விளைவாகத் திட்டப்பகுதியில் 3,881 புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாயின. திட்ட அலுவலக ஊழியர்கள் திட்டப்பகுதியில் உள்ள சிறு தொழில் நிலையங்களுக்கு அடிக்கடி சென்று அங்காடி நிலவரம், மூலப் பொருட்கள் மலிவாகக் கிடைக்கும் இடங்கள் பற்றித் தகவல் கூறுகிறார்கள். தொழில் வளர்ச்சிக்கு அரசினர் வழங்கும் கடன் உதவிகள், சலுகைகள் பற்றி எடுத்துரைக்கிறார்கள். புதிய தொழில் நிலையங்களுக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கச் செய்யவும், சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கிறார்கள். இதன் மூலம் திட்டப்பகுதியில் பல்வேறு சிறு தொழில்கள் உருப்பெற்று வருகின்றன. பின்னடைந்த ஒரு பகுதியில், மக்கள் வேலையும் தொழிலும் பெற்று மேம்பாடு கண்டு வருகிறார்கள்.

# நியூசிலாந்தைக் கண்டுபிடித்தவர்கள் தமிழர்களே!

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றியவன் தமிழன்! உலகின் பிற பகுதியில் வாழ்ந்தவர்களில் பெரும்பாலோர் காட்டு மிராண்டிகளாக வாழ்ந்தபோதே, நயக்கத்தக்க நாகரிகத்தை நானிலத்திற்கும் கற்றுக் கொடுத்தவன் தமிழன். பிற நாட்டினர் கட்டு மரம் கட்ட அறியாதிருந்த காலத்திலேயே. கப்பல் கட்டி, கடல் கடந்து பிற நாடுகளை வென்றவன் தமிழன். யவனத்தோடும், கிரேக்கத்தோடும், சீனத்தோடும், சாவகத்தோடும், இலங்கையோடும், கடாரத்தோடும் வாணிகம் செய்தவன் தமிழன். ரோமாபுரிக்குத் தூதுவனை அனுப்பியவன் தமிழன். உலகப் பேரழகி 'கிளியோபாட்ரா'வுக்கு முத்துக்களை வழங்கியவன் தமிழன். தமிழனின் புகழுக்கும், திறமைக்கும் சான்றாக இப்படி எத்தனையோ கூறலாம். நினைத்தாலே நெஞ்சம் பூரிக்கிறது!

தமிழனின் சாதனைகளுக்கு எத்தனையோ ஆதாரங்கள் பழந் தமிழ்ப் பாடல்களில் பின்னிக் கிடக்கின்றன! பிற நாட்டினரும் அவைகளை ஒப்புக் கொண்டுள்ளனர்! தமிழார்வம் உள்ள தமிழறிஞர்கள் அந்த ஆதாரங்களை எல்லாம் எடுத்துக் காட்டித் தமிழ் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முயன்றபோதெல்லாம், தமிழனின் புகழை வெளியிட விரும்பாத ஆராய்ச்சியாளர்கள் என்போர், அந்த ஆதாரங்களை மறுத்தும், மறைத்தும் வந்துள்ளனர்; பழம் பெருமைகளைக் கேட்டுத் தமிழன் உணர்வு பெற்று, உயர்வுற்று முன்னுக்கு வந்து விடுவானோ என்று அச்சப்பட்டு அந்த ஆராய்ச்சியாளர்கள் பல ஆதாரங்களை அழித்துவிட்டிருக்கின்றனர். தீயின் கோரப் பசிக்குப் பல ஆதாரங்களை இரையாக்கி யிருக்கின்றனர்.

ஆனால் 'உண்மை அழிவதில்லை! ஒருநாள் உலகுக்குத் தெரிந்தே தீரும்!' என்பது உலக நியதி!

அதற்கோர் எடுத்துக்காட்டு இதோ!

''நியூசிலாந்து நாட்டை டச்சுக்காரரான தாஸ்மன் என்பவர் 1642-ஆம் ஆண்டில் கண்டு பிடித்தார் என்று கூறப்படுகிறது. ஆனால் அதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் நியூசிலாந்து நாட்டிற்குச் சென்றுள்ளார்கள். கடல் பயணத்தில் நீண்ட காலத்திற்கு முன்பே, தமிழர்கள் பெரும் சாதனை புரிந்து இருக்கிறார்கள்'' என்ற செய்தியை 'ஜ்ஞானிஸிலா' (Znaniesila) என்ற ரஷ்ய நாட்டுப் பத்திரிகை வெளியிட்டுள்ளது.



அண்மையில் கிடைத்த இச் செய்தி தமிழனின் திறமையை உலகம் உணர்வதற்கு உதவுவதாகவும், பழந் தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள வரலாறுகள் உண்மையானவைகள் என்பதை உறுதிப் படுத்துவதாகவும் உள்ளது.

'ஜ்ஞானிஸிலா' பத்திரிகை தொடர்ந்து எழுதுகையில்,

'' நியூசிலாந்து நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள 'கரியோரா' கிராமம் அருகே, ஒரு கப்பலின் உடைந்த பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன ; அவை தற்பொழுது வெலிங்டன் நகரில் உள்ள நியூசிலாந்துப் பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன; அந்த உடைந்த பகுதிகளுக்கு இடையில் செம்பினால் செய்யப்பட்ட ஒரு மணி கிடைத்துள்ளது ; அந்த மணியில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன ; எனவே அந்தக் கப்பல் தமிழ் நாட்டைச் சேர்ந்ததே என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நியூசிலாந்து நாட்டைக் கடல் வழிச் சென்று முதன் முதலில் அடைந்தவர்கள் தமிழர்களாகத்தான் இருக்க முடியும் என்று கருதப் படுகிறது.


''தேக்கு மரத்தினால் உருவாக்கப்பட்ட அந்தக் கப்பல் 15-ஆம் நூற்றாண்டில் கடலில் மூழ்கியிருக்கவேண்டும்'' என்று நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர் !

''நியூசிலாந்து நாட்டிற்கு மட்டுமல்ல, பசிபிக் பெருங் கடலில் உள்ள மற்ற பல தீவுகளுக்கும், அமெரிக்காவுக்கும் கூட தமிழர்கள் கப்பலில் போக முயன்று இருக்கலாம். 15-ஆம் நூற்றாண்டிலேயே நீண்ட தூரக் கடல் பிரயாணத்தில் தமிழர்கள் வல்லவர்களாக விளங்கினார்கள் என்பது தற்போது கிடைத்துள்ள ஆதாரங்களிலிருந்து தெளிவாகிறது'' என்று குறிப்பிட்டுள்ளது.

திரு 'பிரெட் கில்டெர்' (Bret Gilder) என்பவர் பசிபிக் பெருங் கடலில் பழங்காலத்தில் நடந்த கப்பல் போக்குவரத்துக் குறித்து ஆராய்ச்சி செய்து வருகிறார்.

நியூசிலாந்து நாட்டிற்குத் தொடக்கத்தில் சென்ற தமிழர்களின் பயணம் பற்றிய முழு விவரங்களையும் 'பிரெட் கில்டர்' சேகரித்து வருகிறார். அவரது ஆராய்ச்சி முடிவுகள் தமிழனின் பெருமையைத் தரணிக்கெல்லாம் பறை சாற்றுவதாக அமையும் என்பது திண்ணம்!

நியூசிலாந்தைக் கண்டுபிடித்தவர்கள் தமிழர்களே என்பதற்கு ஆதாரங்களைக் கண்டு பிடித்துத் தெரிவித்த திரு 'பிரெட் கில்டர்' அவர்களுக்குத் தமிழினத்தின் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் 'தமிழரசு' தெரிவித்துக் கொள்கிறது.




# மிக வலிமையான டயர்

**பயர்ஸ்டோன்**

படைத்திடும்
தனிப்பட்ட 23°
கோணமுள்ள
டிராக்ஷன்
பார்களை
உடைய
டிராக்டர்
டயர்கள்.

ஆழமாக இறங்கப் பற்றி அதிக இழுதிறனை அளிக்கும்படி ரப்பர் பரப்பை முற்றிலும் பயன்படுத்தும் திறனுள்ள வளைவும் கூம்பு முனையும் அமைந்தவை.
பயர்ஸ்டோன் டயர்கள், கடுமையான நீடித்தகால உழைப்புக்கான வலிமை படைத்திருக்கக் காரணம் மும்மடங்கு வலுவுள்ள வட்டுமணம் — டயருடன் டிரெட்டை இறுக்கப் பிணைக்கவும், பக்கவாடுகளைப் பலப்படுத்தவும், கார்டுகளை இன்சுலேட் செய்வதற்குமான முறை அது.






**பயர்ஸ்டோன்**

இந்தியாவெங்கும் வாங்கக் கிடைக்கிறது — இன்றே காண்க உங்கள் பயர்ஸ்டோன் விற்பனையாளரை.

# நமது மொழி

## டாக்டர் கி. கருணகரன் எம்.ஏ. பிஎச்.டி.

மொழி இல்லாவிட்டால் மனித நாகரிகம் இல்லை. மனிதன் வாழ்ந்ததும், வாழ்வதும், வாழப் போவதும் மொழியாலேதான். மனிதனின் பழங்காலச் சிந்தனைகளும், படைப்புக்களும் இன்று நின்று நிலவி வளங்கொழிக்கும் கருத்துக்களை வாழச்செய்வதற்கு உதவுவதும் மொழியேதான். மனித இனம், மொழியின் அடிப்படையில்தான் தனித்தனிச் சமுதாயங்களாகப் பிரிந்து இயங்குகிறது. மொழி, தன்னுடைய பேச்சுமுறையிலும் எழுத்துவடிவிலும் மனிதவாழ்வோடு இணைந்துள்ளது. மொழியின் வளர்ச்சி மனிதனின் வாழ்வோடும் நாகரிகத்தோடும் இரண்டறப் பிணைந்துள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக மொழி, மனிதனின் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த செய்திப் பரிமாற்றச் சாதனமாக அமைந்துள்ளது. ஆகவே செய்திப் பரிமாற்றமே ஒரு மொழியின் முதல் வேலையும் முக்கியமான வேலையும் ஆகும்.

மொழி ஒரு சங்கிலித் தொடர்புக் கிரியை போன்றதாகும். இச் சங்கிலித் தொடர்பில் நடுநாயகமானது பேச்சு. அந்தப் பேச்சு ஒலி வடிவமானது. ஒலிகள் இல்லையெனில் அவற்றிற்கான குறியீடுகள் இல்லை. எனவே ஒரு மொழிக்கு ஒலிகள் மிகவும் தேவை.

ஒரு மொழிக்குப் பெருமை அளிப்பது அம்மொழியின் சிறந்த இலக்கண, இலக்கியப் படைப்புக்களே. உலகத்தில் தெளிவாக-மொழியைப் பற்றிச் சிறப்பான முறையில் ஆராய்ந்த பெருமை நம் தமிழகத்திற்கு நிறைய உண்டு. நம் தமிழுக்கு இலக்கணம் முதன் முதல் தொல்காப்பியரால் எழுதப்பட்டது. இந்த இலக்கண நூல் இன்றைக்கு மிகவும் உயர்ந்த நிலையில் வைத்துப் பலநாட்டு மொழி அறிஞர்கள் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது. இலக்கணச் செல்வமே ( Grammatical Treasure ) இந் நூலில் அடங்கியுள்ளது என்று அனைவரும் போற்றுகிறார்கள்.

### மொழி இலக்கணம்

ஒருமொழியின் இலக்கணத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து அன்று மொழியை ஆராய்ந்தனர். அவையாவன, (1) எழுத்து, (2) சொல், (3) பொருள் என்பனவாகும். இதையே இன்றைய மொழியியல் வல்லுநர்கள்(Linguists) முறையே (1) ஒலியியல், ( Phonetics ), (2) ஒலியனியல் (Phonemics), (3) சொல்லியல் (Morphology), (4) சொற்றொடரியல் (Syntax), (5) பொருளியல் (Semantics) என்ற ஐந்து பிரிவுகளில் ஆராய்கிறார்கள். இலக்கணமே ஒரு மொழியைக் கற்றுத் தருவதற்கு ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுகிறது எனலாம்.

### செய்திப் பரிமாற்றம்

செய்திப் பரிமாற்றம் (Communication) என்பது ஒரு செய்தியை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அல்லது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அனுப்பும் முறையேயாகும். மொழி, சில ஒலிகள், அவற்றின் கூறுகள், சொற்கள், சொற்றொடர்கள், ஆகியவற்றின் மூலம் செய்திகளைப் பரிமாறுகிறது. செய்திப் பரிமாற்றத்திற்கெனத் தனியான—நிலையான ஒரு கொள்கையை 1941-ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டு விஞ்ஞானி C. E. ஷானன் என்பவர் வெளியிட்டார். அவர் தோற்றுவித்த செய்திப் பரிமாற்றக் கொள்கை மிக விரைவாகவும் வெற்றிகரமாகவும் வளர்ந்துள்ளது—வளர்ந்தும் வருகிறது. மனிதர்கள் தங்களுக்குள் கருத்துக்களை மொழியின் மூலம் பகிர்ந்து கொள்கிறார்கள். இதனை மொழிப் பரிமாற்றம் (Language Communication) என்று சொல்கிறோம். இந்த அமைப்பில் செய்தி அனுப்பும் பொறியின் செயலுக்குக் 'குறியீடுகளை அனுப்பும் முறை' (Encoding) என்றும் செய்தி பெறும் பொறியின் செயலுக்குக் 'குறியீடுகளை மாற்றிப் பெறும் முறை' (Decoding) என்றும் பெயர்.

### உலக மொழிகள்

உலகத்தின் பல மொழிகளில் எழுத்து மொழியின் மூலமும் (written or Literary Language) பேச்சு மொழியின் மூலமும் (Spoken Language) செய்திகள் பரிமாறப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஆங்கிலம், தமிழ் மற்றும் சில திராவிட மொழிகள் போன்றவைகளாகும். ஆனால் இன்னும் பல மொழிகளில் பேச்சு மொழியின் மூலமே, செய்திகளைப் பரிமாறமுடியும். அவை பேச்சு மொழிகளாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக திராவிட மொழிகளான துளு, தோடா, கோடா, கோண்டி, குருக், மால்டோ, பார்ஜி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இன்னும் சில மொழிகளில் எழுத்து மொழியின் மூலமே இன்று செய்திகளைப் பரிமாற முடியும். இதற்கு எடுத்துக்காட்டாக சமஸ்கிருதம், கிரீக், லத்தீன் போன்ற மொழிகளைச் சொல்லலாம். இன்னும் ஒரு மொழி பல காலம் வழக்கிழந்து இருந்து சில காலமாக மீண்டும் புத்துயிர் பெற்றுப் பேசப்பட்டு வருகிறது. அம்மொழி 'ஹிப்ரூ' (Hebrew) மொழியாகும். ஆகவே, இவ்வாறு உலகத்தின் பல மொழிகள் அவைகளின் பேச்சு வழக்காலும், எழுத்து முறையாலும் மக்களிடையே செய்திப் பரிமாற்றம் செய்து கொண்டுள்ளன என்பதை நாம் அனைவரும் அறிவோம். இதிலிருந்து நாம் அறிவது ஒரு மொழியில் இரு பெரும் பிரிவுகள் உள்ளன என்பதேயாகும்.

### பேச்சு வேற்றுமைகள்


பேச்சு வேற்றுமைகளை ஆங்கிலத்தில் (Dialect Variations) என்று சொல்வார்கள். ஒரு மொழியில் பேச்சு வேற்றுமைகள் தோன்றப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. 'தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு' என்ற கருத்தை நாம் அனைவரும் அறிவோம். அதன்படி இன்றும் ஒரு மாவட்டக்காரர் மற்றொரு மாவட்டக்காரருடன் பேசும் போதும்; ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் மற்றொரு சமூகத்தைச் சேர்ந்தவரிடம் பேசும் போதும்; படித்தவர்கள் படிக்காதவர்களிடம் பேசும் போதும்; நகரத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டுப்புறத்தைச் சேர்ந்தவர்களிடம் பேசும் போதும் அவர்களிடையே பேச்சு வேற்றுமைகள் ஏற்படுவதைக் காணமுடிகிறது. ஆகவே மொழிகளில் பேச்சுவேற்றுமைகள் பல நிலைகளில், பல இடங்களில், பல முறைகளில் நிறைந்து ஏற்படுகின்றன — ஏற்பட்டும் வருகின்றன என்பதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இப்பேச்சு வேற்றுமைகள் உலக மொழிகள் அனைத்திலுமே காணப்படுகின்றன.

பேச்சிலே மொழி வேறுபாடுகளை இன்று பல்வேறு மொழியியல் அறிஞர்கள் மிகவும் உறுதியோடும் உற்சாகத்தோடும் ஆராய்ந்து வருகிறார்கள். ஏன் எனில் பேச்சு வேற்றுமைகள் மனிதனின் உள்ளக்கிடக்கை, சமுதாயத்தில் அவன் நிலை, அவனுடைய ஆசைகள், செயல்கள், எண்ணங்கள், மற்றும் சிந்தனைகள் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுவதுடன் அவன் சார்ந்திருக்கும் சமுதாயம், குழு போன்றவைகளையும் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன என்று உறுதியாகக் கூற முடியும்.

### தமிழ் மொழி

நம்முடைய தமிழ் மொழி தமிழ் நாட்டில் மட்டுமன்றி ஈழத்திலும் ஆப்பிரிக்கா நாடுகளிலும், கீழ்த்திசை நாடுகளிலும் பேசப்பட்டு வருவதை நாம் இன்று காண்கிறோம். தமிழ் மக்கள் எல்லா விதமான பிரிவுகளுக்கும் உள்ளடங்கி வருகிறார்கள். தமிழ் மக்களின் தனித்தனிப் பேச்சு வழக்குகளை நாம் அறிந்து கொண்டால், நாம் தமிழ் மொழியின் வளர்ச்சியையும் வாழ்க்கையையும் எளிதில் நன்கு அறிந்து கொள்ள முடியும். தமிழ் மொழியில் பேச்சு வேற்றுமைகள், இடத்திற்கு இடம், சமூகத்திற்குச் சமூகம் மிகுந்து காணப்படுவதற்கு முக்கியமான இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவையானவை: (1) தமிழ் மிகவும் தொன்மையான மொழி (2) தமிழின் இலக்கண, இலக்கிய மரபுகள் மிகவும் செல்வாக்குப் பெற்றவை—அதாவது தமிழ் மிகவும் வளம் நிறைந்த ஒரு மொழி. ( Tamil is a rich language).

தொன்றுதொட்டுப் பேசப்பட்டு வருவதாலும், நாளுக்கு நாள் ஏற்படும் மாற்றங்கள், புதிய கண்டுபிடிப்புகள், படைப்புகள், விஞ்ஞான உலகின் அதிசயங்கள், சாதனைகள் போன்ற பல வகையான சூழ்நிலைகளாலும் பேச்சு வேற்றுமைகள் ஒரு மொழியில் ஏற்படுவது இயற்கையே. ஆனால் இவ்வாறு காலப்போக்கில் தமிழில் பேச்சு வேற்றுமைகள் நிறைந்து காணப்படினும் மேற்சொன்ன இரண்டு காரணங்களினால் தமிழ் மொழி தனித்தன்மையும், செம்மையும் பெற்று மிகுந்த வலிவோடும் நல்ல பொலிவோடும் செல்வாக்கு நிறைந்த ஒரு தனி மொழியாக நின்று நிலவி வருகிறது எனலாம். காலப்போக்கில் தமிழ் தன் இலக்கண இலக்கிய வளத்தை இவ்வளவு மாறுதல்களுக்கு இடையேயும் பெருக்கிக் கொண்டே வந்துள்ளது. சங்க காலம், இடைக்காலம் போன்றவைகளைக் கடந்து தற்காலத்திலும் அதன் சொல்வளம், சொற்றொடர் வளம், பொருள் வளம், சொல்லாக்கத் திறன், இலக்கண இலக்கிய மரபுகள் போன்றவைகள் செம்மையான படி நன்முறையில் காப்பாற்றப்பட்டும் இன்னும் வளர்ந்தும் வருவதை நாம் கண்கூடாகக் காணலாம். இடைக்காலத்தில் புதிய படைப்புகள் குறைந்தே தோன்றியுள்ளன. தற்காலத்திலும் இலக்கிய ஆய்வு, மொழிபற்றிய ஆராய்ச்சி ஆகியன சில ஆண்டுகளாகத்தான் தழைத்தோங்கி நிற்பதைக் காண முடிகிறது. இவ்வளர்ச்சி மேலும் நன்கு சிறக்க நாம் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம்! ஏராளம்!



நமது பணி

இங்கு நாம் நமது மொழிக்கும் நமது மொழியிலும்செய்ய வேண்டிய சில ஆக்கப்பணிகளை மட்டுமே சொல்ல விழைகிறேன்.

(1) புதிய சிந்தனைகளின் வாயிலாக நாம் நமது மொழியில் படைக்கவேண்டிய புதிய படைப்புகள் (New Creations).

(2) மற்ற மொழிகளில் இருந்து புதிய கருத்துக்கள், அறிவியல் உலகின் சாதனைகள், கண்டுபிடிப்புகள் போன்றவற்றை நம் மொழியில் மொழி பெயர்த்தல் (Translations).

(3) இதற்காகப் புதிய கலைச் சொல்லகராதிகள் (Dictionary of Technical Terms)—சொற்களஞ்சியங்கள் (Lexicon) போன்றவைகள் காலத்திற்கேற்றவாறு அமைக்கப்பெற வேண்டும்.

(4) தமிழ் மொழியையும், தமிழ் மொழியிலும் கற்பிக்க வலிவான, தெளிவான ஆனல் எளிமையான வழி முறைகளைச் சீராக, செம்மையாக வகுத்துக் கொள்ளுதல் வேண்டும்.


இவ்வாறு நாம் சில கொள்கைகளைக் கடைப்பிடித்துச் செயல்பட்டால் நாமும் உயர்வோம்—நமது தமிழ் மொழியும் உயரும். மொழி வழி நாமும், நம்வழி மொழியும் வளர, உயர சிறந்த வழிமுறைகள் பெருகும். நமக்கும் நம் தமிழுக்கும் உள்ள உறவு, முக்கியத்துவம் உறுதிப்படும். ஆகவே இனி நாம் ஒவ்வொருவரும் 'நாம் நம் மொழிக்காக—அதன் இலக்கண, இலக்கியப்படைப்புகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக என்ன செய்துள்ளோம்—என்ன செய்யவேண்டும் என்ற கேள்விகளைக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

அப்படிக் கேட்டுக் கொண்டு விரைவில் ஆக்கப் பணிகளில் நாம் அனைவரும் ஈடுபட்டால் தான் 'தமிழாலும் முடியும்' என்ற சூழ்நிலை முற்றிலும் மாறி 'தமிழ்மொழியால் முடியும்' என்ற நன்னிலையும், நம்பிக்கையும் பெருகும். அப்பொழுது தான் 'நமது மொழி' என்ற சொற்றொடரும் 'நாம்' என்ற சொல்லும் அவற்றிற்கான உரிய பொருளை—இடத்தைப் பெறும். அப்பொழுதுதான் நாமும் வாழ்வோம்—நம் தமிழும் என்றென்றும் சீரோடும் சிறப்போடும் வாழும்—வாழ முடியும்.

## முன்னேறிய வகுப்பினர் அஞ்சவேண்டாம்!

அரசுப் பணிகளில் இனி ஏற்பட இருக்கும் காலி இடங்களில் ஒரு பகுதி இதர பின்னடைந்த வகுப்பினருக்கு என்று ஒதுக்கப்பட வேண்டுமென்று பிற்பட்ட வகுப்பினர் கேட்கிறார்கள். மேல் வகுப்பினர் பெரும் எண்ணிக்கையில் ஏற்கெனவே வகித்து வரும் வேலைகளை வைத்து ஒப்பிடும் போது இனி அவ்வப்போது ஏற்படக்கூடிய காலி இடங்கள் மிக மிகக் குறைவாகவே இருக்கும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்தக் குறைந்த இடங்களில் கூட ஒரு குறிப்பிட்ட சதவீத இடங்களுக்கு நேரிடைப் போட்டிகள் மூலம் நபர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். ஏற்கெனவே பணியில் உள்ளவர்கள் ஓய்வு பெறும் காலம் வரும் வரை பதவியில் நீடிப்பார்கள். ஆகவே பரவலடைந்து வரும் பணித் துறைகளில் எல்லோரும் போட்டியிடுவதற்காக உள்ள இடங்களில் முன்னேற்றமடைந்த சாதியினர் உள்பட எல்லோருமே வாய்ப்புகளைப் பெறுகின்றனர். எனவே, முன்னேற்றமடைந்த சாதியினர் வகித்துவரும் மொத்த இடங்கள் அடுத்து வரும் ஆண்டுகளில் கணிசமான அளவில் குறைந்து விடும் என்று கவலைப்படக் காரணமே கிடையாது.

—தமிழ் நாடு பிற்பட்டோர் நலக் குழு அறிக்கைப் பகுதி.


தமிழ்நாடு
கதர்ப்பட்டு
விற்பனை
10 சதவிகிதம்
தள்ளுபடி
கொடுக்கப்படும்
உங்கள் தேவைக்கு
கதர் கிராமத்தொழில்
விற்பனை
நிலையங்களுக்கு

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## தமிழ்நாடு மின்சார வாரியம்

எண்ணூர் அனல் மின் திட்டம் ஒப்பந்த விளம்பரம்.

குறிப்பு எண் SE/ETS-3/71-72.

(1) தமிழக மின்சாரவாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் ' தமிழக மின்சார வாரியம் எண்ணூர் அனல் மின் திட்டம்—துண்டு சாமான்களை வாங்குவதற்கான ஒப்பந்தக் குறிப்பு எண் SE/ETS-3/71-72 எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு எண்ணூர் அனல் மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 17—9—1971 மாலை 3-30 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

(2) விற்பனைக்குள்ள பொருள்கள்—

துருப்பிடித்த இரும்பு ஸ்கிராப், அஸ்பெஸ்டாஸ் ஆட்டோ பி. வி. சி. கேபிள் ஸ்கிராப், துருப்பிடித்த இரும்புக் கம்பித் துண்டுகள், காலி டூல் உட் கேபிள் டிரம் முதலியன.

(3) ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 5·00 (ரூபாய் ஐந்து மட்டும்) எண்ணூர் அனல் மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தொகை யாதொரு காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டுமானால் அதிகமாக ஒரு ரூபாய் (மேற்கூறிய ஒப்பந்தப் பிரதிகள் தொகையைத் தவிர) செலுத்த வேண்டும்.

(4) இந்த வேலைக்கான முன்பணம் ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்த வேண்டும்.

(5) மின்சார வாரியத்தைச் சேர்ந்த நமூனுக்களில் இல்லாத ஒப்பந்தங்களும் இறுதித் தேதிக்குப் பின்னரும் நேரத்திற்குப் பின்னரும் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது தள்ளுபடி செய்வதற்கும் ஒப்பந்தங்களிடையே பிரித்துக்கொடுக்கவும் எண்ணூர் அனல்மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

(6) அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கும் தாமதமாக வந்து சேரும் ஒப்பந்தங்களுக்கும் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தக்கவை அல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்**

எண்ணூர் அனல் மின் திட்டம், எண்ணூர், சென்னை-57.

**தொலை பேசி எண்** 59389.

**தந்தி :** 'ENTERMAL"

(த-89)

---

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.**

பார்வை எண் 4693-டிபிசி-71.

கீழ்க்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் குறிப்பிடப்பட்டு 20-9-1971 மாலை 3-00 மணிக்குள் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் 3-05 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : கலைஞர் கருணாநிதி நகரில் 150 இணைப்பு குடியிருப்புகளைக் கட்டும் வேலைக்காக கட்டடப்பொருள்கள் செங்கல், ஜல்லி, கல் ஜல்லி, மணல் வழங்குதல்.

வேலையின் சுமார் மதிப்பு : ரூ. 42,225·00.

கட்டுத் தொகை : ரூ. 640.

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 5 இத்துடன் விற்பனைவரி (இது திருப்பித் தரப்படமாட்டாது).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மற்றும் இதர விவரங்களை நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் மத்திய கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை-35-ல் 6-9-1971லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை ரொக்கம் கொடுத்துப் பெறலாம்.

**மே. ஜார்ஜ்,**

நிர்வாகப் பொறியாளர் (மத்தியம்).

3, அண்ணா சாலை, நந்தனம்,
அஞ்சல், சென்னை-35,
3-9-1971.

(த-71)

---

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

**ஒப்பந்தப் புள்ளி தேதி நீடிப்பு அறிவிப்பு.**

வேலையின் பெயர் : ஆலந்தூர் குடிநீர்த் திட்டம்—2-வது இடம்—1-வது நிலை—2-வது பிரிவு—2எ, 2-பி, 3எ, 3பி ஆகிய மண்டலங்களுக்கு வினியோகிக்கும் திட்டம்—சி. ஐ. & ஏ. சி. குழாய்கள் போடுவது, இணைப்பது மற்றும் தனிப்பணிகள்.

மேற்படிப் பணிகளுக்கான கடைசி நாள் இதன் மூலம் 24—9—1971 வழங்கப்பட்டுள்ளது. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குப் பெறப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் பற்றிய பிற நிபந்தனைகள் மாற்றப்படமாட்டாது.

**மேற்பார்வைப் பொறியாளர்**

மக்கள்நல, வெளி இயக்குநர் வட்டம், 52, கெங்கு ரெட்டி தெரு, சென்னை-8.

நாள் : 3-9-1971.

(த-91)

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

## சிட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

எண். 4/351டி4, நாள் 1—9—1971.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்துக்காகவும் அதன்பொருட்டும், கீழ்க்கண்ட வேலைகளுக்காக, மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.பொ.) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோயம்புத்தூர்-12 அவர்களால் அவரது அலுவலகம் 25-1, மூன்றுவது தெரு டாட்டாபாத், கோயம்புத்தூர்-12ல் கீழே குறிப்பிட்ட தேதிகளில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மாலை 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு, அவை அதே நாளில் மாலை 4-00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளரால், அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| தொடர் எண். | ஒப்பந்த வடிவம். | வேலை விவரம். | கட்டுத் தொகை. | வேலையை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை. | ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்கப்படும் காலம். | ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கும் திறப்பதற்கும் ஆன நாள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | மொத்தத் தொகை. | பெருந்துறை, கே.சி. பாளையம் மற்றும் இதர ஊராட்சிகளுக்கு ஒருங்கிணைந்த நீர் வழங்கும் திட்டம் நான்காவது கட்டம். பூஸ்டர் ஸ்டேஷன் 1-க்காக உயர்ஏற்ற தூயநீர் செண்ட்ரிபியூகல் பம்பு செட்டுகள், துணை உறுப்புகள் முழுதும் வழங்குதல், டெலிவரி, நிர்மாணம். | ரூ. 3 300 (ரூபாய் மூவாயிரத்து முந்நூறு மட்டும்.) | 5 மாதங்கள். | ரூ. 10·35 (ரூபாய் பத்தும் காசுகள் மூப்பத்தி ஐந்து மட்டும்—விற்பனை வரி உள்பட) திருப்பித் தரப்பட மாட்டாது. | 15—9—1971 லிருந்து 4—10—1971 மாலை 5 மணி வரை. | 6—10—1971 |
| 2 | மொத்தத் தொகை. | பெருந்துறை, கே.சி. பாளையம் இதர ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒருங்கிணைந்த நீர்வழங்கும் திட்டம்—நான்காவது கட்டம். பூஸ்டர் ஸ்டேஷன் 2-க்காக உயர் ஏற்ற தூயநீர்செண்ட்ரிபியூகல் பம்புசெட்டுகள், துணை உறுப்புகள் முழுவதும் வழங்குதல், டெலிவரி, நிர்மாணம். | ரூ. 3 330 (ரூபாய் மூவாயிரத்து முந்நூற்று முப்பது மட்டும்). | 5 மாதங்கள். | ரூ. 10·35 (ரூபாய் பத்து, காசுகள் முப்பத்தி ஐந்து மட்டும்) விற்பனைவரி உள்பட. இது திருப்பித் தரப்பட மாட்டாது. | 15—9—1971 லிருந்து 4—10—1971 மாலை 5 மணி வரை. | 6—10—1971 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (பொ.சு.பொ.) கோட்டம், 18, சாமியப்பக் கவுண்டர் தெரு, திருநகர் காலனி, ஈரோடு 3-லிருந்து, இப்பத்திரங்களுக்குரிய தொகையை ரொக்கமாகவோ மணியார்டர் மூலமோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத்தொகை, ஷெடியூல் பாங்கி ஒன்றின் டிமாண்டு ட்ராப்ட் வடிவிலோ, அல்லது நிர்வாகப்பொறியாளர் (பொ.சு.பொ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஈரோடு-3 அவர்கள் கணக்கில் கருவூல சலான் வடிவிலோ இருக்க வேண்டும். தேச உடமை ஆக்கப்பட்ட பாங்கி ஒன்றில் பாங்கி காரண்டியும், இந்திய ரிசர்வ் பாங்கின் ஒப்புதலோடு, கட்டுத் தொகைக்காக ஏற்கப்படும்.

உறையின்மீது, வேலையின் பெயர் தெளிவாக எழுதப்பட வேண்டும். எவ்வித காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.பொ.) அவர்களுக்கு உரிமை உண்டு.

**எஸ். எம். சாஹுல் ஹமீத்**
மேற்பார்வைப் பொறியாளர்.

நாள் : 1—9—1971.

(த. 84)

---

## ஒப்பந்தப் புள்ளி

---

### தென்னார்க்காடு மாவட்ட விளையாட்டுக்குழு, கடலூர்.

ஒப்பந்த அறிக்கை.

பொதுச் செயலாளர், தென்னார்க்காடு மாவட்ட விளையாட்டுக்குழு, கடலூர்-1 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அவருடைய அலுவலகத்தில் 5—10—1971 மாலை 3 மணிவரையில் மூடிய உறையில் அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் பதிவு செய்யப்பட்ட (பொதுப்பணித்துறை அல்லது நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் இவ்வலுவலகத்தில் வழங்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் உறையின் மேல் வேலையின் பெயர் குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

"தென்னார்க்காடு மாவட்டம், கடலூர் புதுநகரில் விளையாட்டு அரங்கிற்கான முக்கிய கட்டடம் கட்டுதல்":

1 ஒப்பந்தவகை .. .. மொத்தத் தொகை ஒப்பந்தம்,

2 கட்டுத்தொகை .. ரூ. 15,000.

3 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்).

4 விற்பனை வரி .. .. 0·60 (அறுபது காசு).

5 ஒப்பந்தப்பத்திரங்கள் 20—9—1971 தேதி முதல் 3—10—1971வரை அலுவலக நேரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

6 ஒப்பந்தங்கள் 5—10—1971 அன்று மாலை 4 மணிக்கு இவ்வலுவலகத்தில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 20·60-ஐ (ரூபாய் இருபது பைசா அறுபதும்) டிமாண்டு டிராப்டு மூலம் பொதுச் செயலாளர் பெயருக்குச் செலுத்த வேண்டும். இத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

ஒப்பந்தப் பத்திரங்கள் கோரி வரும் மனுக்கள் அதன் விலைக்கான டிமாண்டு டிராப்டுடன் அனுப்பப்பட வேண்டும்.

**க. கந்தசாமி, பி.ஏ., எல்.டி.,**
பொதுச்செயலாளர்,
மாவட்ட விளையாட்டுக் குழு,
கடலூர்-1.

(த. 83)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்த அறிவிப்பு.

*1642 எஸ். டி. 2, தேதி 1—9—1971*

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம் சார்பாக கீழ் வரும் பணிக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள், 8—10—1971 மாலை 3·00 மணி முடிய, கோவை பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம் 25-1, மூன்ருவது வீதி, டாட்டாபாட், கோவை-12-ல் வரவேற்கப்படுகிறது. மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலே 4·00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளாலோ, வரப்பெற்ற ஒப்பந்தக்காரர்கள் முன்னிலேயில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் .. .. | சேலம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—இரண்டாம்நிலே—இரண்டாம் கட்டம் (பகுதி-2)—20, 24 அங்குல கிராவிட்டி மெயின் பைப்புகளேப் பதித்தலும் இணேத்தலும், மற்ற வேலேகள் செய்தலும். |
| 2 | ஒப்பந்தமுறை .. .. | மொத்தத் தொகை (L.S.) |
| 3 | பிணேப்பணம் .. .. | ரூ. 8,960 (ரூபாய் எட்டாயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபது மட்டும். |
| 4 | பணி முடிக்க வேண்டிய காலம். | ஆறு மாதங்கள். |
| 5 | ஒப்பந்தப் பத்திரங்கள் விலே | ரூ. 10·35 (விற்பனேவரி உள்பட). |
| 6 | ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் தேதி. | 10—9—1971 முதல் 6—10—1971 முடிய |

மேற்படி பணிக்கான ஒப்பந்தப் பத்திரங்களே, நிர்வாகப் பொறியாளர், 28, ஔவையார் தெரு, சுப்ரமணியம் நகர், சேலம்-5 விலாசத்துக்கு, மணியார்டர் மூலமாகவோ நேரில் பணம் செலுத்தியோ பெற்றுக் கொள்ளலாம்.

பிணேப் பணத்தை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் ''கேட்பு வரைவோலே'' சேலம் நிர்வாகப் பொறியாளரின் சார்பில் செலுத்தவோ அல்லது கஜானுவில் சேலம் நிர்வாகப் பொறியாளர் பி. டபிள்யூ. III. O.R. தலேப்பில் செலுத்தவோ செய்யலாம். அங்கீகாரம் செய்யப்பட்ட வங்கிகளின் பொறுப்புறுதிகள் பிணேப் பணத்திற்காக ஒப்புக் கொள்ளப்படும். பிணேப்பணம் இணேக்கப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளருக்கு ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது அனேத்து ஒப்பந்தத்தையோ காரணம் இல்லாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்.**

(தகு 85)

## பயிற்சி

**அறிக்கை.**

சைதாப் பேட்டை ஆசிரியர் கல்லூரி, புதுக்கோட்டை, கொமாரபாளேயம் ஆகிய பகுதிகளிலுள்ள அரசினர் பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவைகளில் தமிழ் ஆசிரியர்கள் பயிற்சி வகுப்பில் சேருவதற்காக ஆண் மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. பயிற்சிக் காலம் 1971 நவம்பர் 1 முதல் 1972 மார்ச் 31 வரை 5 மாதங்கள்.

மனுக்களேப் பெறுவதற்குக் கடைசி நாள் 18—9—1971. மனு வடிவங்களேயும் இதர குறிப்புகளேயும் முதல்வர், ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னே அலுவலருக்கு எழுதி, சுய விலாசம் எழுதிய 20 காசுகள் அஞ்சல் வில்லே ஒட்டிய உறையை உடன் வைத்தனுப்பி இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**கல்லூரிக் கல்வி இயக்குநர்.**

(த.75)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

**அறிஞர் அண்ணு நகர் திட்டம்**

**அறிக்கை நாள்** : *2—9—1971.*

அறிஞர் அண்ணு நகரில், உயர்நிலேப் பள்ளிகள், தொடக்கப்பள்ளிகள், நர்சரி பள்ளிகள், மருத்துவமனேகள், பெட்ரோல் பங்குகள் முதலியவைகளுக்கான மனேயிடங்கள், வாடகை—கிரய அடிப்படையில் அல்லது கிரயத்துக்கு ஒதுக்கப் பெறுதற்கு உள்ளன. இந்த ஒதுக்கீடு கொடுப்பதற்கான மனுக்கள் 15-10-1971 வரை வரவேற்கப்படும். மனு வடிவங்களேயும் இதர குறிப்புகளேயும், நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், அறிஞர் அண்ணு நகர், கோட்டம் சர்குலர் பில்டிங், அண்ணு நகர் சென்னே-40-ல் ரு. 10 (ரூபாய் பத்து மட்டும்) செலுத்தி 15—9—1971 லிருந்து பெற்றுக் கொள்ளலாம்

**எஸ். பி. பழனிவேல்,**
நிர்வாகப் பொறியாளர்

(த.73) (அ.அ.ந.)

# தமிழ்நாடு அரசு

## நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை

### அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும் கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1971-ஆம் வருடம் அக்டோபர் திங்கள் 20-ஆம் நாள் புதன்கிழமை மாலை 3·00 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தின சபாபதிபுரம் வெங்கட்ரமணா சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3·15 மணி அளவில் (அலுவலகக் கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | கோட்டம். | | முன்வைப்புத் தொகை. |
|---|---|---|---|---|
| | | | | ரூபாய். |
| 1 | தேசீய நெடுஞ்சாலை எண் 7ஐ மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி-சேலம் பகுதியை மேம்பாடு செய்தல்— | | | |
| | பிரிவு 1 கி.மீ. 33·015 முதல் 55·00 வரை | கிருஷ்ணகிரி | .. | 1,37,500 |
| 2 | ஷை பிரிவு 2—கி.மீ. 55·00 முதல் 80·00 வரை | ஷை | .. | 1,54,800 |
| 3 | ஷை பிரிவு 3—கி.மீ. 80·00 முதல் 94·00 வரை | ஷை | .. | 96,200 |
| 4 | ஷை பிரிவு 4—கி.மீ. 94·00 முதல் 119·00 வரை | ஷை | .. | 1,15,900 |
| 5 | ஷை பிரிவு 5—கி.மீ. 119·00 முதல் 139·00 வரை | ஷை | .. | 85,700 |
| 6 | ஷை பிரிவு 6—கி.மீ. 139·00 முதல் 160·00 வரை | ஷை | .. | 94,900 |
| 7 | ஷை பிரிவு 7—கி.மீ. 160·00 முதல் 174·00 வரை | சேலம் | .. | 91,200 |
| 8 | ஷை பிரிவு 8—கி.மீ. 174·00 முதல் 194·00 வரை | ஷை | .. | 1,01,200 |
| 9 | ஷை பிரிவு 9—கி.மீ. 194·00 முதல் 199·00 வரை (மற்றும் சேலம் மாற்று வழிப் பாதை) | ஷை | .. | 1,07,800 |
| 10 | தேசீய நெடுஞ்சாலை எண் 47-ல் பவானி மற்றும் குமாரபாளையத்தை இணைக்கும் மாற்று வழிப் பாதை அமைத்தல். | ஈரோடு | .. | 54,700 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்தக் கோட்டப் பொறியாளர்களிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 250 உடன் விற்பனை வரியும் செலுத்தி 20—9—1971 முதல் 19—10—1971 வரை பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையை அந்தந்தக் கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ '' டெபாசிட் என்ற தலைப்பின்கீழ் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன்வைப்புத் தொகையாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமேயானால், மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும். தவிர ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

பா. சேக் உமர்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.),
கோவை-2.

ரத்தினசபாபதிபுரம், கோயம்புத்தூர்,
21—8—1971.

(த.10)

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு அரசு

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்

**ஒப்பந்த அறிவிப்பு எண்–5.**

வேலையின் பெயர் :—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்குத் தளவாடங்கள் வழங்கல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க் கண்ட வேலைகளுக்காக, நிலநீர் இயக்குநர், சென்னை-4 அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 16—10—1971 அன்று மாலை 3·00 மணி வரை ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் அதே நாள் மாலை 4·00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| எண். | உள்வேலை. | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | டர்பைன் பம்புகள் வழங்கல் .. | 8,000 |
| 2 | டவுன் தி ஹோல் டூல் உடன் சேர்ந்த ரோட்ரிக்கு ஒன்று வழங்கல். | 10,000 |
| 3 | நடமாடும் டீசலால் இயங்கும் வெல்டிங் செட்டுகள் வழங்கல். | 1,500 |
| 4 | தண்ணீர்த் தொட்டி டிரெய்லர், டிரெய்லர் மற்றும் டிராக்டர், வழங்கல். | 3,400 |
| 5 | ஜியோபிசிக்கல், ஜியோகெமிக்கல், ஜியலாஜிக்கல் — தளவாடங்கள், மற்றும் ஹைடிரே மீட்டிரியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 2,000 |
| 6 | பணிமனைக் கருவிகள் வழங்கல் .. | 1,500 |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை—ரூ. 10
விற்பனை வரி—40 காசு.

ஒப்பந்த வடிவம் :—மெட்ராஸ் பைனான்சியல் கோடு, வால்யூம் 1-ன் வடிவம்-9.

மேற்கூறிய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ஒப்பந்தப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய தேதி 6—9—1971 முதல் 6—10—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittance III Other Remittance" என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் " விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், வரவினம், பொது விற்பனை வரி " எனத் தலைப்பிட்டுச் செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்பு தான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

**இயக்குநர்,**
நிலநீர்.

(த. 9)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

பரம்பிக்குளம்-ஆழியாறு
நீர் மின் திட்டம்,
மின்பாறை அஞ்சல்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

### ஒப்பந்த விவரம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் பரம்பிக்குளம்-ஆழியாறு நீர்மின் திட்டம் மத்திய பண்டகசாலையில் உள்ள நிராகரிக்கப்பட்ட லோகோ ( Loco ), கழிவு இரும்புத் துண்டுகள், பழைய டயர்கள், செம்புத் துகள்கள், மற்றும் இதர வழக்கொழிந்த பலவகைக் கழிவுப் பொருள்களையும் வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 24-9-1971 அன்று 15 மணி 30 நிமிடம் வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் 24-9-1971 அன்றே 16·00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்த சம்பந்தப்பட்ட முழு விவரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள் அனைத்தும் கோயம்புத்தூர் மாவட்டம், மின்பாறை அஞ்சல் மத்திய அலுவலகத்தில் 6-9-1971 முதல் எந்த வேலைநாட்களிலும் பணமாகவோ அல்லது பண விடைத்தாள் மூலமாகவோ ரூபாய் ஐந்து மட்டும் (ரூ. 5) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி விலையான ரூ. 5 திருப்பித்தரத் தக்கதல்ல.

நிராகரிக்கப்பட்ட கழிவுப் பொருள்களுக்கு என்ன விலை குறிக்கப்படுகிறதோ அதில் பத்து சதவீதம் (10·/·) பிணைத் தொகையாகக் கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி, அதற்கான இரசீதையோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பொள்ளாச்சி கிளையின் கேட்பு உண்டியலாகவோ (Demand Draft) ஒப்பந்த சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளோடு இணைத்து அனுப்ப வேண்டும். பிணைத் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தங்கள் காரணம் காட்டாது நிராகரிக்கப்படும்.

ஒப்பந்த நகல் விண்ணப்பதாரர்களுக்குச் சாதாரண அஞ்சலில்தான் அனுப்பப்படும். அஞ்சல் பிரயாணத்தின் பொழுது ஒப்பந்த நகல் தவறினால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்த நகல் மற்றவர் பெயருக்கு மாற்றத்தக்கதல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

பரம்பிக்குளம்-ஆழியாறு
நீர் மின் திட்டம்.

தந்தி : PARAMBY DEL/ POLLACHI,

தொலைபேசி : 39,

மலையாண்டி பட்டனம்.

(த. 1)

## தமிழ்நாடு மின்சார வாரியம்,

கே. 2 ஒப்பந்தம்.

(குறிப்பு எண். SCE. 407.)

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட தனித் தனி ஒப்பந்தங்கள் அதன் உறையின் மேல் '' குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயரும் '' எழுதப்பட்டுக் கீழ்க் கையொப்பமிட்டவரால் குறித்த முடிவுத் தேதி அன்று மாலை 3·30 மணி வரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலையே 4·00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப்படும்.

| குறிப்பு எண். | வேலையின் பெயர். | முன் வைப்புப் பணம். | ஒப்பந்தப் பிரதி விலை. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|
| SCE 407 | எண்ணூர் அனல் மின் திட்டம்—கட்டடங்களுக்கு மின்னல் இடி தாங்கிகள் பொருத்துதல். | ரூ. 1,000 | ரூ. 10 | 23–9–1971 |

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 10 செலுத்திக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

3. வேலைக்கான முன்வைப்புத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு உண்டியல் (Demand Draft) மூலம் செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும், குறித்த தேதி, காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது ஒப்பந்தங்களையோ எவ்வித காரணம் காட்டாமல் நிராகரிக்கவும் அவ் வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவார்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுக் காணுமல் போனுல் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கவை அல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
**எண்ணூர் அனல் மின் திட்டம்,**
**எண்ணூர், சென்னை–57.**

தொலைபேசி எண் : 59556 (5 கிளைகள்).

தந்தி : ''ENTERMAL''.

(த. 4)

16-9—9எ

ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு அரசு உணவுப் பொருள் வழங்கு துறை

உணவுப் பொருள் மற்றும் உணவுப் பொருள் வழங்கு துறையினல் கவனிக்கப்படும் பிற பொருள்களைச் சென்னை ரெயில் நிலையங்கள், துறைமுகம் ஆகியவற்றிலிருந்து நகரக் கிடங்குகளுக்கு (godowns) எடுத்துச் செல்லவும், ஆவடி, குரோம்பேட்டை ஆகியவைகளிலுள்ள கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லவும் அல்லது இங்கிருந்து அங்கு எடுத்துச் செல்லவும் உணவுப் பொருள்களை சென்னை, ஆவடி, குரோம்பேட்டை ஆகிய பகுதிகளிலுள்ள கிடங்குகளிலும், ரெயில் நிலையங்கள், துறைமுகம் ஆகியவற்றிலும் ஏற்ற—இறக்க கூலியாட்களை, சப்ளை செய்யவும், ஒப்பந்த ஒப்புதலிலிருந்து ஓராண்டுக் காலம் செயல்படக் கூடிய காண்டிராக்டர்களை நியமிக்க, குறிப்பிட்ட படிவத்தில் ஒப்பந்தங்களைத் தமிழ்நாடு அரசின் சார்பில், உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 வரவேற்கிறுர்.

ஒப்பந்தங்கள், உணவுப் பொருள் வழங்கு துறை துணை ஆணையாளர் (விநியோகம்) அவர்களால் 20-9-1971 மாலை 3 மணி வரை சென்னை-5, சேப்பாக்கத்திலுள்ள எழிலகத்தில் பெறப்படும்.

ஒப்பந்தப் படிவங்களும் நிபந்தனைகளும், சென்னை ரிசர்வ் வங்கியில் XXII.—Miscellaneous Department Receipts—e. Civil Supplies Department 3 (II) Miscellaneous Receipt என்றதலைப்பில் ரூ. 10-ம் (ரூபாய் பத்து மட்டும்) (திருப்பித் தரப்படமாட்டாது), விற்பனை வரிக்காக XII Sales-tax (d) Miscellaneous-Madras General Sales Tax Act, 1959 என்ற தலைப்பில் 30 காசும் (திருப்பித் தரப்படமாட்டாது) கட்டியதற்கான செலான்களைத் தந்து பெற்றுக் கொள்ளலாம்.

**துணை ஆணையாளர்,**
(விநியோகம்)
உணவுப் பொருள் வழங்கு துறை,
சென்னை-5.

(த–11)

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, சென்னை வட்டம்,

சென்னை 25.

### ஒப்பந்த விளம்பரம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியாரர் அலுவலகத்தில் 22—9—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| எண்: | வேலை விவரம். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | தேசீய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 13/6 முதல் 15/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 4,040 |
| 2 | தேசீய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 15/0 முதல் 16/8 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 5,190 |
| 3 | தேசீய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 18/4 முதல் 20/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 4,620 |
| 4 | தேசீய நெடுஞ்சாலை எண் 5, சென்னை-கல்கத்தா சாலையில் கி.மீ. 20/0 முதல் 21/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 2,910 |

ஒப்பந்தங்கள் 22—9—1971 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனக்கள், வரை படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர், வாலாஜா தனிக் கோட்டம், அவர்கள் அலுவலகத்தில் விற்பனை வரிவுட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 25·88 கட்டி 6—9—1971 முதல் 21—9—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை), வாலாஜா தனிக் கோட்டம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறை), வாலாஜா தனிக் கோட்டம் பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

**மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை)**

நாள் 16-8-1971 சென்னை வட்டம், சென்னை 25.

(தி. 2)

---

## ஏல அறிக்கை

### தமிழ்நாடு தீயணைப்புத்துறை

கண்டனம் செய்யப்பட்ட தொடர் ஊர்தி பம்ப் எம்.எஸ். ஒய். 2367 பெரிய கவன்ட்ரி க்ளைமாக்ஸ் 1955-ஆம் வருட மாடல் கடலூர் பீச் ரோடிலுள்ள கடலூர் தீயணைப்பு நிலயத்தில் 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி திங்கள் கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இந்த ஊர்தியை மேற்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**வி. ஜெயபெருமாள்,**

கோட்ட தீயணைப்பு அலுவலர்,

ஆணைக்குப்பம்,

கடலூர்-1.

(தி. 16)

கண்டனம் செய்யப்பட்ட இழுக்கும் மோட்டார் வண்டி எம்.எஸ்.ஒய். 6707 ஸ்டுடிபேக்கர்—1953 மாடல், பாளையங்கோட்டைத் தீயணைப்பு நிலயத்தில் 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் சனிக்கிழமை 25-ஆம் தேதியன்று காலை 11-00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்படி வண்டியை, பாளையங்கோட்டைத் தீயணைப்பு நிலயத்தில், அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விற்பனைக்குரிய நிபந்தனைகள் கீழே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**எம். எஸ். சுப்பிரமணியம்,**

கோட்டத் தீயணைப்பு அலுவலர்

பாளையங்கோட்டை.

(தி. 14)

## தமிழ்நாடு அரசு

## நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை.

### ஒப்பந்த அறிவிப்பு.

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சார்பாகவும், உத்திரவுப்படியும் கோயம்புத்தூர் வட்டம், நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்களை அக்டோபர் திங்கள் 6-ஆம் நாள் புதன்கிழமை மாலை 3-00 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம் வெங்கட்ரமணா சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3-15 மணி அளவில்( அலுவலகக் கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | கோட்டம். | முன் வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 தேசீய நெடுஞ்சாலை எண் 46, கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை சாலையை 1971—72-ஆம் வருடத்திய வருடாந்திரத் திட்டத்தில் அகலப்படுத்தலும், உறுதிப்படுத்தலும்—கி.மீ. 1·6 முதல் 10·0 வரை. | கிருஷ்ணகிரி. | 26,200 |
| 2 ஷை கி.மீ. 10·0 முதல் 15·0 வரை. | ,, | 17,800 |
| 3 ஷை கி.மீ. 15·0 முதல் 23·0 வரை. | ,, | 24,100 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளரிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 50 (ஐம்பது) உடன் விற்பனை வரியும் செலுத்தி, 17—9—1971 முதல் 5—10—1971 வரை பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகையை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் செலுத்தி, செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமேயானால், ஷை பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்கவேண்டும். தவிர, ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

பா. சேக்உமர்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.)
கோவை-2.

ரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2
30—8—1971.
(த-32)



## தேவை

### தச்சு, கருமார் வேலையில் பயிற்சி.

இடம்.—கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையத் தொழிற்கூடங்கள், தே. கல்லுப்பட்டி, பவானிசாகர், பட்டுக்கோட்டை, சத்திய விஜய நகரம், கிருஷ்ணகிரி,

பயிற்சிக் காலம்.—ஓராண்டு;

தகுதிகள்.—

(அ) தமிழ் பேச, படிக்க, எழுதத் தெரியவேண்டும்.

(ஆ) தச்சு அல்லது கருமார் வேலையில் குறைந்த அளவு மூன்று ஆண்டுகள் அனுபவம் இருக்கவேண்டும்.

உதவித் தொகை.—மாதம் ரூ. 45 (நாற்பத்தைந்து) மட்டும்.

விண்ணப்பித்தல்.— விண்ணப்பதாரரின் பெயர், தகப்பனார் பெயர், முழு முகவரி, பிறந்த தேதி, படிப்புத் தகுதி, தச்சு அல்லது கருமார் வேலையில் உள்ள அனுபவம் ஆகியவைகளைக் குறித்து '' கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், குறளகம் சென்னை-1 '' என்ற முகவரிக்கு செப்டம்பர் மாதம் 25-ஆம் தேதிக்குள் வந்து சேர்வது போல் அனுப்ப வேண்டும். இத்தேதிக்குப் பின்னர்வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பயிற்சி முடிந்ததும் பயிற்சியாளர்கள் தங்களுடைய கிராமத்தில் தொழிற்பட்டறை அமைத்துக் கொள்ளவேண்டும். இதற்கு உரிய உதவிகள்செய்யப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 45 உதவித் தொகையும் சீருடையும் வழங்கப்படும்.

இயக்குநர்.

(த-21)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ் நாடு அரசு

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளி, அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1, விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 6—10—1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் புள்ளி கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| தஞ்சாவூர் மாவட்டம். | | |
| தஞ்சாவூர் கோட்டம். | | |
| 1 முத்துப்பேட்டை-மீமிசல் சாலையில் கி.மீ. 49/8 (மைல் 31/1)-ல் ஒரு பாலம் கட்டுதல். | ரூ. 2,800 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) தஞ்சாவூர். |

1. ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 22—9—1971 முதல் 5—10—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், வரைபடங்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

2. மேலே குறிப்பிடப்பட்ட கட்டுத் தொகை டிபாசிட்டைமேற்கண்ட கோட்டப்பொறியாளரின் (நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானைஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர, 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

3. மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் ஒப்புதலைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

5. முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**ஆ. தேவப்பிரியம்,**
மேற்பார்வைப் பொறியாளர், (நெ.கி.ப.)
திருச்சிராப்பள்ளி

(த. 17)

---

## நீதித்துறை.

### மூன்றாவது ஸ்மால்காஸ் கோர்ட்டு, சென்னை.

S.C. No. 2137 of 1971.

விசாலம் சிட் பண்டு—வாதி.

அகமத் கபீரும் மற்றொருவரும்—பிரதிவாதிகள்.

To S. K. M. சையத் அப்பாஸ்
116—பி, பீட்டர்ஸ் ரோட்
சென்னை-14.

சீட்டு பாக்கி ரூ. 1767, வசூலுக்கான மேற்படி தாவா மேற்படி கோர்ட்டில் 20—9—1971 காலை 11 மணிக்கு மேற்படி பிரதிவாதி ஆஜராக வாய்தா போடப்பட்டிருக்கிறது. மேற்படி பிரதிவாதி ஆஜராகத் தவறினால் எக்ஸ்பார்ட்டியாகத் தீர்ப்பு செய்யப்படும்.

**ஆர். ரகுநாதன்,**
வாதி வக்கீல்.

(த.18)

---

## ஏல விற்பனை

### பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம்.

### மறு ஏல விளம்பரம்

பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான நல்லமுறையில் உள்ள மரம்அறுக்கும் சுழல் ரம்பத்தை 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ஆம் தேதி மாலை 3-00 மணிக்கு, பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆணையாளர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களாலோ பகிரங்கமாக மறு ஏலத்தில் விடப்படும். ஏலம் கோர விரும்புகிறவர்கள் கட்டுத் தொகை ரூ. 100 கட்ட வேண்டும். மற்ற ஏல நிபந்தனைகளையும், இதர தகவல்களையும் வேலை நாளில் அலுவலக நேரத்தில் பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

**எம். குமரேசன்,**
ஆணையாளர்.

(த. 19)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

#### சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

வேலையின் பெயர் : ஆம்பூர் நீர் வழங்கு திட்டம்—நான்காவது இறுதிக் கட்டம்—மேல் மட்ட ஆர். சி. சி. சர்வீஸ் ரிஸர்வ் வாயர் 18 லட்சம் லிட்டர் திறனுள்ள அல்லது ஒவ்வொன்றும் 9 லட்சம் லிட்டர் திறனுள்ள இரட்டை ரிசர்வாயர்கள் கட்டுமானம், அவசியமான குழாய் இணைப்புகள், வால்வு பிட்டுகள், பம்ப் முதலியன உள்பட முழுமையாக.

தமிழ் நாடு தண்ணீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், மேலே கண்ட வேலைக்காக துறைக்குரிய முறையான வடிவத்தில் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, இந்தத் துறையின் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனத்தின் உரிய பிரிவிலுள்ளபதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள், சென்னை-8 அவர்கள் தமது அலுவலகத்தில் (52, கெங்கு ரெட்டி சாலை, எழும்பூர், சென்னை-8-ல்) 16-10-1971 பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாளில் பிற்பகல் 3-30 மணிக்கு மேல் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள், சென்னை அவர்களால் ஒப்பந்தப் புள்ளி திறப்பின்போது ஆஜராக இருக்க விரும்புகின்ற ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்— மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 7,125 (ரூபாய் ஏழாயிரத்து நூற்று இருபத்தைந்து மட்டும்.) (அரசு கருவூல சலான் வடிவில் அல்லது ஒப்பந்தப் புள்ளி சம்பந்தப்பட்ட விதிகளில் குறிக்கப்பட்டுள்ளபடி, ஏற்கத்தக்க வேறு வடிவில் கட்டுத் தொகை கட்டப் பெறவேண்டும்.)
3. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10.35 (பத்துரூபாய் முப்பத்தைந்து காசுகள் மட்டும்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணங்கள், நிர்வாகப் பொறியாளர் பொது சுகாதார பொறியியல் டிவிஷன் வாணியம்பாடி, பி. டபிள்யூ. III, ஓ. ஆர். அவர்கள் கணக்கிலும் விற்பனை வரிக்கு XII விற்பனை டி. பல்வகை I பொது விற்பனைவரியிலும் தனி சலான்களில்சேர்க்கப்படவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் பெற—நிர்வாகப் பொறியாளர் (பொ. சு. பொ.) பொ.சு. பொறியியல் டிவிஷன் 301, ஜமாத் சாலை, வாணியம்பாடி (வ. ஆ.) அவர்களுக்கு மனுச் செய்து பெறலாம். (ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணம் ரொக்கமாகவோ, பணமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும்.)

வேலையை முடிக்க வேண்டிய கால வரை—9 மாதங்கள்.

**எம். துரைராஜன்**

மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.)

(த. 24)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு, வனத்துறை, நீலகிரிக் கோட்டம்

#### ஒப்பந்த அறிவிப்பு.

நீலகிரிக் கோட்டம் முதுமலை மற்றும் சேரம்பாடி வனச்சரக மரக்கிடங்குகளிலிருந்து கார்குடி, சேரம்பாடி மத்திய மரக் கிடங்கிற்கும் மேட்டுப்பாளையம் அரசினர் மரக்கிடங்கிற்கும் சுமார் 5,000 கன மீட்டர் மரங்களை ஏற்றிச் செல்வதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (Tenders) குறிப்பிட்ட படிவத்தில் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் படிவத்திற்காக (Tender form) ரூ. 1·04 (விற்பனை வரி உட்பட) செலுத்தி உதகமண்டலம் நீலகிரிக் கோட்ட மாவட்ட வன அலுவலரிடமோ அல்லது முதுமலை வனச்சரக அலுவலரிடமோ விண்ணபத்தின் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்த அறிவிப்புகள் மாவட்ட வன அலுவலர் அவர்களுக்கு 1—10—1971 மாலை 3-30 மணிக்கு முன்பு வந்து சேர வேண்டும். ஒப்பந்த அறிவிப்புகள் அதே தினம் 4-00 மணிக்கு மாவட்ட வன அதிகாரியாலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராலோ திறக்கப்படும்.

**எஸ். சுப்பராயலு நாயுடு,**

மாவட்ட வன அலுவலர்,
நீலகிரிக் கோட்டம்,
உதகமண்டலம்.

(த. 33)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தூத்துக்குடி துறைமுக வாரியம்

தூத்துக்குடி துறைமுகத்திலிருக்கும் இரும்புப் பாலத்தின் மேலுள்ள கட்டைகளைப் புதுப்பிப்பதற்கான வேலைக்கு (காண்டிராக்ட் மதிப்பு ரூ. 13,500) அனுபவம் வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1, அக்டோபர் 1971, அன்று பிற்பகல் 4-00 மணி வரை தலைவர், தூத்துக்குடி துறைமுக வாரியம் அவர்களால் வரவேற்கப்படுகின்றன. தூத்துக்குடி துறைமுக வாரியத்தில் பதிவாகியுள்ள ஒப்பந்ததாரர்களது ஒப்பந்தங்களைத் தவிர இதர எந்த நபர் ஒப்பந்தமாவது ஏற்கப்பட்டால், அவர் தற்காலிக உத்திரவு கிடைத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், துறைமுக சகல விதி முறைகளையும் அனுசரித்துத் தமது பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். இல்லையேல் வேலைக்கான உத்தரவு ரத்து செய்யப்படும். மற்றும் அவர், செலுத்திய முன் பிணை வைப்புத் தொகையும், பறிமுதல் செய்யப்படும். ஒப்பந்தப் பத்திரங்களை கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரிடமிருந்து 27, செப்டம்பர், 1971 தேதி வரை பிரதி ஒன்றுக்கு ரூ. 10 செலுத்திப் பெறலாம். இத் தொகை திருப்பித் தரபட மாட்டாது.

**D. T. ராமச்சந்திரன்,**

துறைமுக அதிகாரி &
செயலாளர்,

துறைமுக வாரிய
அலுவலகம்,
தூத்துக்குடி-1.

(த. 34)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### பொதுப்பணித் துறை

**சீட்டு ஒப்பந்தப் புள்ளி.**

அறிக்கை எண் 12056/T-D2/71
நாள் 25—8—71

தென் ஆர்க்காடு மாவட்டம் சேத்தியா தோப்பில் வீராணம் திட்ட முகப்புப் பணிகளில் கச்சா நீர் பம்பு நிலையம் சம்பந்தப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக, தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும், உரிய வடிவங்களில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், உரிய பணிகளுக்காகப்பதிவு செய்துகொண்டுள்ள பொதுப் பணித்துறை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து. வீராணம் திட்ட சர்க்கிள், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—மொத்தத்தொகை.

கட்டுத்தொகை—ரூ. 4,500 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.—ரூ. 20·77 (விற்பனை வரி உள்பட).

வேலையை முடிக்க வேண்டிய காலம்—3 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்.—

15—9—1971 முதல்
25—9—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளித் தேதி—30—9—1971 மாலை 3 மணி வரை.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் மற்றும் நிபந்தனைகளின் இதர விவரங்களைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
**TWS. & DB.**
வீராணம் திட்ட சர்க்கிள்,
சென்னை-5.

**(த. 22)**

## ஏல விற்பனை

### தமிழ்நாடு தீயணைப்புத்துறை ஏல விளம்பரம்.

கண்டனம் செய்யப்பட்ட தீயணைப்பு இழுக்கும் மோட்டார் வண்டி ஸ்டுடிபேக்கர், 1957-ஆம் வருட மாடல், எம்.எஸ்.ஒய். 8853, கோயம்புத்தூர் ஸ்டேட் பாங்க் சாலையிலுள்ள கோயம்புத்தூர் தீயணைப்புத் துறை காம்பவுண்டில், 1971-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு, பகிரங்கமாக ஏலம் விடப்படும். மேற்கண்ட ஊர்தியைக் கோயம்புத்தூர் தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம். ஏல நிபந்தனைகள் கீழே கையொப்பமிட்டவருடைய அலுவலகத்தில் பெறலாம்.

**ஏ. கே. இராமனுதன்.**
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
கோயம்புத்தூர் கோட்டம்.

(த.5·)

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

''சேலத்தில் உள்ள அரசினர் பிராந்திய அச்சகத்தில் 1971-72-ஆம் ஆண்டுக்குக் கழிவுக் காகிதங்களை வாங்கவும் அப்புறப்படுத்திக் கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளிகள்'' என்று குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், இயக்குநர், எழுது பொருள் அச்சகம், சென்னை-1, அவர்களால் 6-10-1971-ல் அல்லது அதற்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில், பதிவு அஞ்சல் ஒப்பந்தத்துடன், இயக்குநர், எழுதுபொருள் அச்சகம், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 என்ற முகவரிக்கு இயக்குநர் பெயரில் அனுப்ப வேண்டுமே தவிர, வேறு முறையில் அனுப்பலாகாது. மேற்கொண்டு விவரங்களுக்கு 8-9-1971 தேதியிட்ட தமிழ்நாடு அரசினர் அரசிதழைப் பார்க்க.

**ஆர். நாகராஜன்**
**கூட்டு இயக்குநர்.**
எழுதுபொருள் அச்சக இயக்குநர் அலுவலகம், சென்னை-1,
26—8—1971.

**(த. 28)**

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

**ஒப்பந்த அறிக்கை எண் 3/71**

31 வகையான புத்தகங்களையும் பாரங்களையும், பிரிண்ட் செய்து சப்ளை செய்வதற்கு இதன் அடியில் ஒப்பமிட்டுள்ளவரால் மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் செய்தித் தாளில் விளம்பரம் செய்த பதினைந்தாவது நாள் மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றது.

ஒப்பந்தங்கள் அடங்கிய ஒவ்வொரு பிரதிக்கும் ஐந்து ரூபாய் வீதம் ரொக்கமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ தலைமைக் கணக்காளர்/செலவினம்—திருநெல்வேலி மின் அமைப்பு, திருநெல்வேலி-3 அவர்களுக்கு அனுப்பியும் ஸ்பெசிபிக்கேஷன் எண்ணைக்குறிப்பிட்டும், ஒப்பந்தப் படிவப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை, எந்தக்காரணத்தைக்கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. பண அஞ்சல்கள் முடிவுத் தேதிக்கு ஐந்து தினங்களுக்கு முன்பு வரை தான் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் படிவங்கள் சாதாரண அஞ்சலில் தான் மனுதாரர்களுக்கு அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் ஏற்படும் தவறுகளுக்கு மின் வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது. ஒப்பந்தப் படிவங்களுக்கு விண்ணப்பிக்கையில் ஸ்பெசிபிக்கேஷன் எண், ஒப்பந்த விலை செலுத்தியதற்கான ரசீது முதலியவற்றைத் தவறாது அனுப்பவேண்டும். மேற்படி ஒப்பந்தப் படிவங்கள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத் தக்கதல்ல.

ஒப்பந்தங்கள் பரிசீலிக்கப்படுகையில் நேரில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்கள் 1—9—1971 லிருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் கீழே ஒப்பமிட்டுள்ளவரை குறைந்த விலை ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது வேறு ஒப்பந்தப் புள்ளியையோ அனுமதிக்கத்தான் வேண்டும் என்று கட்டுப்படுத்தாது என்பதும் அறிவிக்கப்படுகிறது.

**மேற்பார்வை**
**மின்பொறியாளர்.**

**(த. 25)**

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,

### சென்னை கிழக்கு டிவிஷன்

எண் : எம்இ 4/289/71. நாள் : 25—8—1971.

வியாசர்பாடி அருகே வடசென்னை புதூர்த் திட்டத்தில் கீழ்க்கண்ட வேலைகளுக்காக, தனித்தனியாய் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் உறையின் மேலே வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் குறிக்கப்பட்டு, 4—10—1971 பிற்பகல் 3 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் வரிசை. | வேலையின் விவரம். | சுமார் மதிப்பு ரூபாய். | கட்டுத் தொகை. ரூபாய். | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (விற்பனை வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | நடுத்தர வருமானப் பிரிவு வகை இல்லங்கள் (1-ல் 6) வாடகைக்கான அடுக்கு வீடுகள் (Flats) டிசைன் 124ஏ/70படி இரண்டு பிளாக்குகள் கட்டுதல் (தொகுதி-1). | 2,46,000 | 3,700 | ரூ. 15 |
| 2 | ஷை (தொகுதி-2). | 2,46,000 | 3,700 | ரூ. 15 |
| 3 | குறைந்த வருமானப் பிரிவு வகை இல்லங்கள் (1-ல்6) வாடகைக்கான அடுக்கு வீடுகள் டிசைன் 152/70படி இரண்டு பிளாக்குகள் கட்டுதல் (தொகுதி-1). | 1,26,000 | 1,900 | ரூ. 10 |
| 4 | ஷை (தொகுதி-2) | 1,26,000 | 1 900 | ரூ. 10 |
| 5 | ஷை (தொகுதி-3) | 1,26,000 | 1,900 | ரூ. 10 |
| 6 | ஷை (தொகுதி-4) | 1,26,000 | 1,900 | ரூ. 10 |
| 7 | கடைகள் விருந்தினர் அறைகள் (மூன்று அடுக்கு) கட்டுதல் (எண்கள் 10). | 1,51,500 | 2,275 | ரூ. 10 |

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3·05 மணிக்குப் பிரிக்கப்படும். மேற்கொண்டு விவரங்களையும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு) அவர்கள் அலுவலகத்தில் உரிய விலையைச் செலுத்தி (இது திருப்பித் தரப்படுவதற்குரியதல்ல) 20—9—1971லிருந்து அலுவல் நாட்களில் காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 2மணிவரைபெற்றுக் கொள்ளலாம். எவ்விதக் காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்கக் கீழே கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

**டி. ஜகதீசன்**
நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு).

(ரு. 29)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம்,, சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 21-9-1971 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விபரம். | முன்வைப்புத் தொகை. |
|---|---|
| 1. விருதுநகர் மாற்றுப் பாதை சாலையில் கட்டப்படவிருக்கும் மேம்பாலத்துக்கு அணுகி சாலை அமைத்தல். வடக்கு (Ch 14725-லிருந்து 15559 வரை) | 3,260 |
| 2. விருதுநகர் மாற்றுப்பாதை சாலையில் கட்டப்படவிருக்கும் மேம்பாலத்துக்கு அணுகி சாலை அமைத்தல். தெற்கு (Ch 15559-லிருந்து 16739 வரை). | 2,225 |

ஒப்பந்தப்புள்ளிகள் 21-9-1971 அன்றே மாலை 3·15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலிய வற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசியநெடுஞ்சாலை கோட்டம், ராமநாதபுரம் அலுவலகத்தில் 15-9-1971 முதல் 20-9-1971 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 5·88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேல்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் ராமநாதபுரம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் 'ரெவினியூ டெபாஸிட்' என்ற தலைப்பின் கீழ், கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், ராமநாதபுரம் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

**டி. எம். ஏ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை),
சென்னை-1.

(த. 48)

## ஏல விற்பனை

### தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு
மற்றும் பல ஜாதிகள்.

இடம் : அரசாங்க தடிமண்டி, நாகர்கோயில்.

தேதியும் நேரமும் : 17 & 18-9-1971 முற்பகல் 9·00.

அளவு : ஏறத்தாழ 1,500 கனமீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலிலுள்ள மண்டிச்சரக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

**எஸ். கொண்டாஸ்,**
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென் பிரிவு.

(த. 46)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### வேளாண்மைத் துறை ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் பொருட்டும், இனுங்கூர் அரசு விதைப் பண்ணையில் நீர் இறைப்பு வேலைகளுக்காக 20 எச். பி. மின்சார மோட்டார்கள் பம்பு செட்டுகளுடன் முழுமையாக, பல்வேறு அளவுகளில் ஜி.ஐ. டீஸ், ஏர் ரிலீஸ் வால்வுகள், ஸ்லூயிஸ் வால்வுகள், ஜி.ஐ. கேட் வால்வுகள், ஜி.ஐ. பைப்புகள், ஜி.ஐ. கப்ளிங்குகள், ஜி.ஐ. பெண்டுகள், பல்வேறு அளவுகளில் ஆர். சி. சி. பிரஷர் பைப்புகள் முதலியன சப்ளை செய்வதற்காக 15—10—71 மாலை 3-00 வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மேற்கண்ட பொருட்களின் வரையளவு விவரங்கள், ஒப்பந்தப் புள்ளி வடிவங்கள், பத்திரங்கள் முதலியவைகளை உதவி வேளாண்மைப் பொறியாளர் (மண் வளப் பாதுகாப்புத் திட்டம்), சாலை ரோடு, திருச்சி-3 அவர்களிடம் ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ ரூ. 3 (ரூபாய் மூன்று மட்டும்) அத்துடன் 3 சத விகித விற்பனை வரியும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். (இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.)

ஒப்பந்தப் புள்ளிகள் அறிவிப்பு மூலம் ஒத்தி வைக்கப்பட்டாலொழிய அதே நாளில் மாலை 4-00 மணிக்கு, கீழே கையொப்பமிட்டவரால், அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**எஸ். சவடமுத்து,**
கோட்ட வேளாண்மைப் பொறியாளர், திருச்சி.

(த56)

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு வனத்துறை

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட மைலார் ரப்பர் கூப்புகளிலிருந்து அவைகளுக்கெதிரே குறிப்பிட்டுள்ள கனமீட்டர் தடிகளை ஏற்றி நாகர்கோவிலிலுள்ள அரசு வன மண்டிக்குச் சேர்ப்பிக்க அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 30—9—1971-ஆம் நாள் மதியம் 12·00வரை பாளையங்கோட்டையிலுள்ள திருநெல்வேலி தென்பிரிவு மாவட்ட வன அலுவலரால் கோரப்படுகின்றன. இதன்பேரில் விவரங்களுக்குக் குலசேகரத்திலுள்ள மரம்வெட்டுப்பிரிவு வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

| கூப்பு எண். | | | கனமீட்டர். |
|---|---|---|---|
| மைலார் 60 | .. | .. | சுமார் 420 |
| மைலார் 61 | .. | .. | சுமார் 515 |
| மைலார் 62 | .. | .. | சுமார் 540 |

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென்பிரிவு.

(த. 39)

## பால் விற்பனை

இந்தப் பண்ணையின் தேவை போக, மீதமுள்ள எருமைப் பால் காலை, மாலை வாங்க விரும்பும் நபர்கள், லிட்டர் என்ன விலைக்கு வாங்குவார்கள் என்பதை முத்திரையிடப்பட்ட உறையில் 25-9-1971 மாலை 3·00 மணிக்குள் கண்காணிப்பாளர், ஆட்டுப்பண்ணை, காட்டுப் பாக்கத்திற்கு அனுப்பவேண்டும். பால் வாங்குபவர், வாங்கும் ஒரு மாத பால் பணத்தை, முன் பணமாகச் செலுத்த வேண்டும். தற்சமயம் காலை 30 லிட்டர், மாலை 20 லிட்டர் பால் கிடைக்கும்.

**கண்காணிப்பாளர்,**
ஆட்டுப்பண்ணை,
காட்டுப்பாக்கம்.

(த52)

## வேலை வாய்ப்பு

ஆயுதப்படை உதவி இளம் ஆய்வாளர் பதவிக்குக் கீழ்க் கண்டுள்ள தகுதி உடையவர்கள் திருச்சி காவல் துறை கண் காணிப்பாளருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும். குறிப்பிட்ட விண்ணபத்தாள் திருச்சி காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அதற்காக 25 காசு தபால்தலை ஒட்டிய அவர்களுடைய முகவரி எழுதப்பட்ட உறையுடன் திருச்சி காவல் துறை கண்காணிப்பாளருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட விண்ணபத்தாள் பூர்த்தி செய்யப்பட்டு 30–9–1971-க்குள் திருச்சி காவல் துறை கண் காணிப்பாளருக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

காலியுள்ள பதவி—2 (இரண்டு)

1. தகுதி—

எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டும். பாஸ் செய்திருக்க வேண்டுமென்று அவசியமில்லை.

2. வயது—

1–10–1971-ல் 18 வயது முடிந்திருக்க வேண்டும். 25 வயது முடிந்திருக்கக் கூடாது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் மலைச் சாதியினருக்கும் 30 வயது முடிந்திருக்கக் கூடாது.

3. உயரம்—

168 செ. மீட்டருக்குக் குறையக் கூடாது.

4. மார்பு—

சுற்றளவு மூச்சு இழுத்த நிலையில் 86 செ. மீட்டருக்குக் குறையக்கூடாது. குறைந்த அளவு மார்பு விரிவு 5 செ.மீ. இருக்கவேண்டும்.

5. மொழி—

தமிழ் தெரிந்திருக்கவேண்டும்.

6. கட்டணம்—

ரூ. 10 கஜானாவில் செலுத்தி அதற்குரிய ரசீது அனுப்ப வேண்டும்.

காவல்துறை
கண்காணிப்பாளர்
திருச்சிராப்பள்ளி.

(த-47)

## பதனிடுதல்

### தமிழ்நாடு அரசு

### மீன் துறை
### அறிவிப்பு

சென்னையை அடுத்துள்ள எண்ணூரில் அரசுக்குச் சொந்தமாயுள்ள உறைபதனச்சாலை (Freezing Plant) தற்பொழுது மீன் துறையினரால் நடத்தப்பட்டு வருகிறது. மீன்கள் மற்றும் இரால் முதலியவைகளை இச்சாலையில் பதனிட விரும்புவோர் இதன் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கட்டணம் மற்ற விவரங்களுக்குக் கீழ்க்கண்ட அதிகாரியை அணுகவும் :—

''மீன் துறை உதவி இயக்குநர், செங்கல்பட்டு இருப்பு சென்னை, நிர்வாக அலுவலகக் கட்டடங்கள், சென்னை-6.''

**மீன்துறை இயக்குநர்,**
சென்னை-6.

(த53)

குடிசைப் பகுதி மாற்று வாரியம்

## ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், புரசைவாக்கத்தில் உள்ள சாலைமாநகரில் பல அடுக்குக்கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்குமுத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 21-9-1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தப்புள்ளி வைத்து அனுப்பும் உறையின் மீது, ஒப்பந்ததாரர்களின் பெயரையும் வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு ரூ. | கட்டுத்தொகை ரூ. | ஒப்பந்தப் பத்திர விலை. |
|---|---|---|---|---|---|
| 1 | I | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி1, பி2. | 1,86,000 | L.S. 2,800 | ரூ. பதினைந்தும் மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு வகைக்கும்) |
| 2 | II | ஷை பி3, பி4 | 1,86,000 | 2,800 | |
| 3 | III | ஷை பி5, பி8, பி9. | 2,79,000 | 4,200 | |
| 4 | IV | 24 குடியிருப்புகள் கொண்ட பி6, பி7, 16 குடியிருப்புகள் கொண்ட சி. | 2,48,000 | 3,720 | |
| 5 | V | 32 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்புகள் A1, A2. | 2,47,000 | 3700 | |
| 6 | VI | 1·15 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கம் 21 மீட்டர் உயரத்தில் கட்டுதல். | 32,500 | 500 | |
| 7 | VII | 6·1 மீட்டர் விட்டம் கொண்ட கிணறு கட்டி இறக்குதல். | 25,000 | 375 | |

வரைபடங்களையும் ஒப்பந்தப் பத்திரங்களையும் கீழ்க் கண்ட அலுவலகத்திலிருந்து 14-9-1971 முதல் 20-9-1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 21-9-1971 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக் கூடிய ஒப்பந்த தாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் காரணமின்றி நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

தாண்டவராய சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
(த 43)

**நிர்வாகப் பொறியாளர்,**
கோட்டம்-3.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்.

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை
6/71-72.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான பாரங்களையும், ஏடுகளையும் அச்சடித்துக் கொடுப்பதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை 30-9 1971 ஆம் நாள் பிற்பகல் 4·00 மணியளவில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றது.

விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் பிரதிகளைப் பெற ரூ. 3 (ரூபாய் மூன்று மட்டும்) (வரிகள் உள்பட) கட்டணத்தை நேரிலோ அல்லது பணவிடைத்தாள்கள் மூலமாகவோ தலைமைக் கணக்காயர், செலவினப் பகுதி, மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பைக்காரா மின் திட்டம், கோயம்புத்தூர்-12 அவர்களுக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

காலம் கடந்து வரும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எவ்விதக் காரணமும் இல்லாமல் ஒப்பந்தப்புள்ளிகளைத் தள்ளுபடி செய்யவோ அல்லது பகிர்ந்து கொடுக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமை உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பைக்காரா மின் திட்டம்,
கோயம்புத்தூர்-12.
(த50)

## ஒப்பந்தப்புள்ளி

---

### தமிழ்நாடு அரசு தொழில் வணிகத்துறை.

தமிழ்நாடு அரசுக்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், தொழில் துறையின் கட்டுமானப் பிரிவு மற்றும் இதர துறைகளின் உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில் வணிகத் துறை அவர்களால் 6—10—71 மாலை 3-00 மணிவரை வரவேற்கப் படுகின்றன. கீழே குறிப்பிட்டுள்ளபடி ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசி நாள் அன்று மாலை 3-10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப் படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங் களின் விலை. ரூ. | வேலையை முடிக்க வேண்டிய காலம். | பத்திரங்கள் கிடைக்கும் தேதி. | ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற் குரிய கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| 1 மேட்டூரில் மேம்படுத்தப் பட்ட பிளாட்டுகளில் 34,09,500 லிட்டர் (7,50,000 காலன்) கொள்ளளவுள்ள தரைமட்ட ரிசர்வாயர் கட்டுதல். | 4,500 | 10·40 | 6 மாதம். | 20—9—1971. | 6—10—1971 |

1. ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்), வேலூர் அவர்கள் அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் 20—9—1971 முதல் விற்பனைக்குக் கிடைக்கும்.

3. விற்பனை வரியும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையும் சேர்ந்த ரூபாய் 10·40-ஐ (எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ " XXIX Industries Other Receipts " என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம், எண் 4, தியாகராஜபுரம், வேலூர், அவர்கள் கணக்கில் கட்டவேண்டும்.

4. கட்டுத் தொகையை சலான் வடிவிலும், ஷெட்யூல்டு பாங்குகளின் ' கால் ரசீது டெப்பாசிட் ' வடிவிலும் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம், வேலூர் அவர்கள் கணக்கில் செலுத்தப்பட்ட கட்டுத் தொகைக்குரிய ஷெட்யூல்டு பாங்குகளின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசின் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரிய பாண்டுகளும் விற்பனை விலையில் 5 சதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் கருத்தறிந்தே தேசிய சேமிப்புப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. வேலையை ஏற்று முடிக்க விரும்பும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள், பெரிய கட்டட வேலைகளின் கட்டுமானத்தில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**சி. பி. மேத்யூ,**

மேற்பார்வைப் பொறியாளர்
கட்டுமானம்.

சென்னை-2.
(த. 61)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்., 34, அண்ணா சாலே, சென்னே-2.

வேலேயின் பெயர் .. உதகமண்டலத்தில் பொது அறை பிளாக் கட்டுதல்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலேத்துறை, மத்தியப் பொதுப் பணித்துறை முதலியவைகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்கண்ட வேலேக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | |
|---|---|
| ஒப்பந்தப் புள்ளி நாளும், நேரமும். | 30—9—1971 மாலே 3-00 வரை. |
| ஒப்பந்தப் புள்ளிகளேத் திறக்கும் நாள். | 30—9—1971 மாலே 3-30 |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலே. | ரூ. 30 + ரூ. 1·10 வி.வ. + அஞ்சல் செலவு ரூ. 3·00. |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம். | 15—9—1971 முதல் 29—9—1971 மாலே 4-30 வரை. |
| ஒப்பந்த வடிவம் .. | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை .. | ரூ. 11,100. |

கட்டுத் தொகை, கிராஸ் செய்யப்பட்ட பாங்க் டிராப்ட் வடிவில் '' தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட் சென்னே''க்குச் சேர்ப்பிக்கப்படவேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான கட்டணத்தை ரொக்கமாகவோ, தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்டுக்கு பாங்க் டிராப்ட் ஆகவோ செலுத்தலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணம், திருப்பித் தரப்படமாட்டாது. நிறுவனத்தின் திட்டப் பொறியாளரிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களேப் பெறலாம்.

**ஏ. எஸ். அஹ்லுவாலியா,**
நிர்வாக இயக்குநர்.

(த.82)

## ஏல விற்பனே

28–9–1971-ஆம் தேதி காலே 11-00 மணிக்கு கோவை மத்தியச் சிறையில் கீழ்க்காணும் உபயோகத்தில் இல்லாத இயந்திரங்கள் ஏலத்தில் விடப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | Cloth calendering machine (Finishing plant—without Motor) complete .. | 1 |
| 2. | Rotary Oil Mill (Postle and Mortor) (without moto r) | 1 |

2. ஏலத்தில் பங்கு பெற விரும்புபவர்கள் முன்பணம் ரூ. 500 பிணேயத் தொகை செலுத்த வேண்டும்

3. இந்த ஏலத்தைப் பற்றிய இதரத் தகவல்களே கோவை மத்தியச் சிறைக் கண்காணிப்பாளரிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். வாசுதேவன்,**
கோவை மத்திய சிறை, கோவை, கண்காணிப்பாளர்.
3—9—1971.

(த.69)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்., 34, அண்ணா சாலே, சென்னே–2.

வேலேயின் பெயர் .. ' மைல்டு ரவுண்ட்ஸ், வழங்கல் குறித்து.

எம்.எஸ். ரவுண்ட்ஸ் டெஸ்ட்டட் ஐ. எஸ். 226/62–100 டன்கள் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் தர கடைசி நாள் 30—9—1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களே, திட்டப் பொறியாளர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட் அவர்களுக்கு மனுச் செய்து இலவசமாகப் பெறலாம்.

**ஏ. எஸ். அஹ்லுவாலியா**
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்.

(த.81)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை.

ஒரு லோகோ டீசல் என்ஜின் எண் 3,10,030, 30 குதிரை சக்தி கொண்டது, எப்படி, எங்கே உள்ளதோ அதே நிலேயில் 30—9—1971 காலே 11-00 மணி அளவில் கல்லணேக் கால் வாய்க் கோட்டத்தைச் சேர்ந்த முதல் சிறு கோட்ட (அரண் மனேயில் உள்ளது) பொதுப் பணித்துறை அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். வண்டியைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். பொதுப் பணித் துறையினருக்கு ஏலத்தை ரத்து செய்யவோ தள்ளி வைக்கவோ, முழு உரிமை உண்டு. இது பற்றி மேலும் தகவல் பெற விரும்புவோர் தஞ்சையில் அரண்மனேயில் உள்ள கல்லணேக் கால் வாய்க் கோட்டத்தைச் சேர்ந்த முதல் சிறு கோட்ட உதவிப் பொறியாளர் அவர்களே அணுகவும்.

**இராமலிங்கம்,**
நிர்வாகப் பொறிஞர்,
கல்லணேக்கால்வாய்க் கோட்டம்,
(த–62) தஞ்சை.

# தமிழ்நாடு மின்சார வாரியம்

## தென்னார்க்காடு மின் அமைப்பு

### குத்தகை அறிக்கை.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகப் பொருள்களைக் கொண்டுசெல்வதற்கான 1971–72 ஆண்டு குத்தகைக்கான மூடி முத்திரையிட்ட சாற்றுக் குறிப்பெண்ணும், தேதியும் குறிப்பிட்ட விலையொப்பங்கள் ( Tenders ) இவ்வலுவலகத்தில் 25—9—1971 நண்பகல் 12·00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், சாற்றுக் குறிப்பு எண்ணும். | | வேலையின் குறிப்பு. | வேலையின் உத்தேசத் தொகை. ரூ. | குத்தகைக் காலம். |
|---|---|---|---|---|
| 1 | TRPT-I/71–72 (சிமெண்ட் கம்பங்கள் கிரில்கள்தவிர்ந்தமற்ற). | 1971–72 ஆண்டுக்கான பொருள்களை ஏற்றுதல் இறக்குதல் உள்பட பல்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லுதல். | 1,00,000—00 | ஒப்பந்தத் தேதியிலிருந்து 31—3—1972 வரை. |
| 2 | TRPT-II/71–72 | 1971–72 ஆண்டுக்கான சிமெண்ட் கம்பங்கள் கிரில்கள், ஆகியவற்றை ஏற்றுதல் இறக்கிடுதல் உள்பட வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லுதல். | 1,00,000—00 | ஷை |
| 3 | TRPT-III/71–72 | 1971–72 ஆண்டுக்கான பொருள்களை விழுப்புரம் மத்திய பண்டக சாலை, விழுப்புரம் புகை வண்டி நிலையக் கிடங்கு ஆகியவற்றுக் கிடையே ஏற்றுதல் இறக்குதல் உள்படக் கொண்டு செல்லுதல். | 25,000 | ஷை |

விலைப்புள்ளிகளைக் குறித்து அனுப்புவதற்குரிய நமூனு ஒன்று அடங்கிய மேற்கண்ட ஒப்புச் சாற்றுக் குறிப்புப்பிரதிகள் ( Copies of Specifications ) வேண்டுவோர், ஒப்புச் சாற்றுக் குறிப்புப்பிரதி ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 (திருப்பித்தரப்படமாட்டாது) தலைமைக் கணக்கர், தென்னார்க்காடு மின் அமைப்பு, விழுப்புரம் என்ற முகவரிக்குப் பண அஞ்சல் மூலமாகவோ ( Money order ) அல்லது நேரிலோ செலுத்தி 15—9—1971 முதல் 24—9—1971 வரை அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்புச்சாற்றுக் குறிப்புப்பிரதிகள் வாங்குவதற்கான பணத்தைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும், தேவையான ஒப்புச் சாற்றுக் குறிப்பெண்ணையும் (Specification No.) தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்குச்சேர்ப்பிக்கப் படாவிட்டால் அதற்கு மின் வாரியம் பொறுப்பல்ல. மலிவான அல்ல வேறு எந்த விலேயொப்பத் தையும்ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லே. எந்த ஒரு விலேயொப்பத்தையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் கூருது தள்ளுபடி செய்யவோ அல்லது ஆர்டரை இரண்டு அல்லது மேற்பட்ட விலேயொப்பதாரர்களுக்கு இடையே பிரித்துக்கொடுக்கவோ கீழ்க்கண்டவருக்கு அதிகாரம் உண்டு. கட்டுத் தொகை ( Earnest money Deposit ) செலுத்தாமல் அனுப்பப்படும் விலேயொப்பங்களும் குறிப்பிட்ட உரிய தாள்களில் அனுப்பப்படாத விலே யொப்பங்களும் குறித்த தேதியும், நேரமும் தள்ளிச் சேர்ப்பிக்கப்படுபவையும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது ஒருவர் பெயரில் வாங்கப்பட்ட விலேயொப்ப நமூனுக்களும் ஒப்புச்சாற்றுக்குறிப்புப் பிரதிகளும் மற்ருெருவர் பயன்படுத்தக்கூடாது.

தவணேத் தேதியில் பிற்பகல் 3·00 மணிக்கு இவ்வலுவலகத்தில் வந்துள்ள விலேயொப்பதாரர் கள் முன்னிலேயில் கீழ்க்கண்டவரால் விலேயொப்ப நமூனுக்கள் பிரிக்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
தென்னுர்க்காடு மின் அமைப்பு,
அஞ்சல்பெட்டி-10.
விழுப்புரம்.

(த. 38)

---

## ஒப்பந்தப் புள்ளி

### விழுப்புரம் நகராட்சி

கீழ்க்குறிப்பிட்ட வேலேகளுக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27—9—1971 திங்கள்கிழமையன்று பிற்பகல் 4 மணி வரையில் நகராட்சிஅலுவலகத்தில் ஆணேயர் அவர்களால் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகளே அன்று மாலே 4-30 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலேயில் திறக்கப்படும். பொறுப்புத் தொகை செலுத்தாதவர்களின் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலேயின் பெயரும். | மதிப்பீடு தொகை. | ஒப்பந்தத் தொகை. | பொறுப்புத் தொகை. | ஒப்பந்தப் புள்ளி அட்டவணே விலே. |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 நகராட்சி உயர்நிலேப் பள்ளியின் விளேயாடுமிடத்தில் '' திறந்த வெளி அரங்கு '' கட்டுதல். | 22,000 | 16,650 | 850 | 10 |
| 2 திரு. வி. க. வீதியில் ஸ்டால்கள் கட்டுவது. | 18,500 | 15,500 | 800 | 10 |
| 3 நகராட்சி பேருந்து நிலேய விஸ்தரிப்பில் தாரிடும் வேலே. | 14,000 | 13,000 | 650 | 5 |
| 4 கீழ் அனுமார் கோயில் வீதி, கோர்ட்டு சந்து, நவாப் தோப்பு சந்து—தாரிடும் வேலே. | 6,000 | 6,000 | 300 | 2 |
| 5 நாப்பாளய தெரு, நாப்பாளய சந்து—தாரிடும் வேலே. | 5,000 | 5,000 | 250 | 2 |
| 6 அங்காளம்மன் கோயில் தெரு, ஜல்லி போட்டு தாரிடும் வேலே. | 2,900 | 2,900 | 145 | 2 |

நகராட்சி அலுவலகம், விழுப்புரம்,

**பெ. இ. பத்மநாப மேனன்,**
ஆணேயாளர்.

(த. 68)

## வேலைவாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

பொதுப் பணித் துறை, தொழில் துறை (நிர்மாணப் பிரிவு) நெடுஞ்சாலைகிராமப் பணித் துறை, ஆகியவற்றின் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வையாளர்கள், இளநிலைப் பொறியாளர்களை நிரந்தரமாக்குதல் (Regularisation).

பொதுப்பணித்துறை, தொழில் துறை (நிர்மாணப் பிரிவு), நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை, ஆகியவற்றில் ஓராண்டுக்குக் குறையாமல் அதாவது 3-4-1971-ல், ஓராண்டுக் காலம் பணியாற்றியிருக்கும், மேற்பார்வையாளர்கள், இளநிலைப்பொறியாளர்களிடமிருந்து விண்ணப்ப மனுக்கள் 2-11-1971 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

குறிப்பு.—3-4-1971 அன்று வெளியிடப்பட்ட கழகத்தின் அறிவிப்பையொட்டித் தற்காலிக வேலைகளை நிரந்தரமாக்க மனுச் செய்திருந்தவர்கள், மீண்டும், இதற்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

தகுதி I.—பொதுப்பணித்துறை தொழில் துறையின் நிர்மாணப் பிரிவிலும் மேற்பார்வையாளர்களாகவும், இளநிலைப் பொறியாளர்களாகவும் நியமிக்கப்பட வேண்டியவர்களுக்கு:—

1. பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவினரால், நிதி உதவிக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட, ஏதாவது பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிலையத்தில் பெற்றுள்ள பொறியியல் பட்டம் (சிவில், மெக்கானிக்கல் அல்லது எலக்ட்ரிகல்)

(அ) கிண்டி பொறியியல் கல்லூரியின் பொறியியல் பட்டம் (சிவில், மெக்கானிக்கல் அல்லது எலக்ட்ரிக்கல்)

அல்லது

(ஆ) கிண்டி பொறியியல் கல்லூரியின் எல்.சி.இ. டிப்ளமா அல்லது மேல்நிலை உதவியாளர் டிப்ளமா (Upper Subordinate).

அல்லது

(இ) சென்னை மாநில தொழில் நுணுக்க, கல்வி, பயிற்சி வாரியம் அளித்த எல். சி. இ. அல்லது எல்.எஸ்.இ. டிப்ளமா;

அல்லது

(ஈ) ஏ. எம். ஐ.இ. (இந்தியா) தேர்வில் (ஜியோடெசி) பாடத்தைக் கூடுதல் பாடமாகவோ, அல்லது விருப்பப் பாடமாகவோ எடுத்து, ஏ, பி பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்கள், கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மனுச் செய்யலாம்.

1. 'ஸர்வே' பயிற்சியில் ஓராண்டுக்குக் குறையாமல், பயிற்சி பெற்றதற்கு ஆதாரம் காட்டப்பட வேண்டும்; அல்லது

2. பொதுப் பணித் துறையில் ஓவர்சியராகவோ அல்லது மேற்பார்வையாளராகவோ, வேலை பார்த்திருக்க வேண்டும்; அல்லது

3. கிண்டி பொறியியல் கல்லூரியில் மேல் நிலைப் பணியாளர் (Upper Subordinate) அல்லது எல்.சி. இ. டிப்ளமா பெற்றவராகவோ, அல்லது, சென்னை மாநில தொழில் நுணுக்க, கல்வி, பயிற்சி வாரியத்தினால் அளிக்கப்பட்ட எல்.சி.இ. அல்லது எல்.எஸ்.இ. பட்டம்பெற்றவராகவோ அல்லது இதற்கு இணையான வேறு ஏதாவது ஒப்புதல் அளித்த தகுதி பெற்றவராகவோ இருக்க வேண்டும்.

குறிப்பு.—இளநிலைப் பொறியாளராக கவனிக்கப் படுவதற்கு விண்ணப்பம் செய்பவர்கள், ஏ. எம்.ஐ. இ. (இந்தியா) தேர்வில் ஏ. பி, பிரிவுகளில் தேர்ச்சி அடைந்தவர்கள் தேர்ச்சி அடைவதற்கு முன்பாகவோ அல்லது தேர்ச்சி அடைந்த பின்னரோ, மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல், வேலை பார்த்த அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

அல்லது

உ. சென்னை மாநில, தொழில் நுணுக்க, கல்வி, பயிற்சி வாரியத்தின் எல். எம். இ. அல்லது எல். ஏ. இ. டிப்ளமா பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—சென்னை மாநில, தொழில் நுணுக்க, கல்வி, பயிற்சி வாரியத்தினர் அளித்த எல். எம். இ. அல்லது எல். ஏ. இ. டிப்ளமா வைத்திருப்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் மேற்பார்வையாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் படும் போது, போதுமான அளவு வேலை அனுபவம் உள்ளவர்கள் என்று சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளர்களால் சான்றிதழ் வழங்கப்பட்டால்தான், நியமனத்திற்குக் கவனிக்கப் படுவார்கள்.

மற்றும்

டிப்ளமா பெற்றபின் குறைந்தது இரண்டு ஆண்டுக்காலமாவது பொறியியல் பணியில் வேண்டிய அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.

II. நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறையில், மேற்பார்வையாளர்கள், இளநிலைப் பொறியாளர்களை நியமித்தல்—

1. பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவினரால், நிதி உதவிக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட ஏதாவது பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிலையத்தில் பற்றுள்ள பொறியியல் பட்டம் (ஹைவேஸ், சிவில், அல்லது மெக்கானிக்கல்)

அல்லது

2. (அ) கிண்டி, பொறியியல் கல்லூரியின் பொறியியல் டிப்ளமா.

அல்லது

(ஆ) கிண்டி, பொறியியல் கல்லூரியின் மேல்நிலை உதவியாளர் அல்லது எல். சி. இ. டிப்ளமா;

அல்லது

(இ) மாநில, தொழில் நுணுக்க கல்வி, பயிற்சி வாரியம், சென்னையினால் அளிக்கப்பட்ட எல்.சி.இ; அல்லது எல்.ஏ.இ. டிப்ளமா;

அல்லது

(ஈ) கிராம உயர் நிலைக் கல்விக்கான தேசிய மன்றம் (National Council for Rural Higher Education) அளித்த சிவில் மற்றும், கிராமப் பொறியியல் டிப்ளமா.

அல்லது

(உ) சென்னை மாநில, தொழில் நுணுக்க, கல்வி, பயிற்சி வாரியத்தினால் வழங்கப்பட்ட ஆட்டொமொபைல்ஸ் அல்லது மெக்கானிக்கல் பொறியியல் பட்டம்;

அல்லது

(ஊ) ஏ. எம். ஐ. இ. (இந்தியா) தேர்வில், ஏ. பி, பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்படுவார்கள்;

1. மனுதாரர்கள் கீழ்க் கண்ட பாடங்களை எடுத்திருக்க வேண்டும். 6 (எ) தாளில், A பிரிவில்

(1) Theory of Structures and Strength of Materials.

(2) Theory of Design of Structures.

(3) Geodesy.

(iv) Roads and Hydraulics and Hydraulic Machinery.

2. ''ஸர்வே''யில் ஓராண்டுக்குக் குறையாமல் பயிற்சி பெற்றுள்ளதற்கான ஆதாரம் காட்ட வேண்டும் ; அல்லது

3. பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறையில் ஓவர்சியராகவோ அல்லது மேற்பார்வையாளராகவோ, ஓராண்டு பணியாற்றியிருக்க வேண்டும், அல்லது

4. கிண்டி பொறியியல் கல்லூரி அளித்துள்ள மேல் நிலை உதவியாளர் அல்லது எல்.சி.இ. டிப்ளமா அல்லது சென்னை, மாநில தொழில் நுணுக்க, கல்வி, பயிற்சி வாரியத்தினரால் அளிக்கப்பட்ட டிப்ளமா அல்லது கிராம உயர்நிலைக்கல்விக்கான தேசியமன்றத்தினால் அளிக்கப்பட்ட சிவில் மற்றும், கிராமப் பொறியியல் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—இளநிலைப் பொறியாளர்களாகக் கவனிக்கப்படுகிறவர்கள், மேலே 6ல் குறிப்பிட்டுள்ள தகுதியைப் பெற்றிருப்பதோடு, பல்கலைக் கழகநிதிஉதவிக் குழுவிடம் ஒப்புதல் பெற்ற ஏதாவது நிதி உதவி பல்கலைக் கழக நிறுவனத்தில், இண்டர்மீடியட் தேர்வில் தேர்ச்சி பெற்றவராகவோ அல்லது, அதற்கு இணையாக மாநில அரசினால் ஒப்புதல் பெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதோடு, ஏ. எம். ஐ. இ. (இந்தியா)தேர்வில், ஏ, பி. பிரிவுகளில்தேர்ச்சிபெற்ற பின் குறைந்தது நான்கு ஆண்டுகளாவது, அனுபவம் பெற்றிருக்க வேண்டும்

மற்றும்.

டிப்ளமா பெற்ற பின் குறைந்தது 2 ஆண்டுகளாவது, பொறியியல் பணியில் வேலை பார்த்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

இந்தப் பதவிகளின் சம்பள விவரம்—

1. மேற் பார்வையாளர்: மாதம் ரூ. 325-15-475-20-575, 25-650.

2. இளநிலைப் பொறியாளர்—மாதம் ரூ. 400-15-475-20-575-25-650.

முழுவிவரங்களுக்கும்,விண்ணப்பப் படிவங்களுக்கும், செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வுக் கழகம், அண்ணா சாலை-சென்னை-2 என்ற முகவரிக்கு வேலையின் பெயரைக்குறிப்பிட்டு, 5 காசு அஞ்சல் தலை ஒட்டப்பட்டு, குறைந்தது 23 செ. மீ. நீளமுள்ள உரையில், நூலஞ்சல் என்று குறிப்பிட்ட உறையை உடன் வைத்து எழுத வேண்டும்.

(த. 87)

---

## பயிற்சி

## லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி.

திருவல்லிக்கேணி, சென்னை-5.

**பெண்களுக்கான தமிழ் ஆசிரியர் பயிற்சி வகுப்புகளில் சேர்த்தல்.**

லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி, திருவல்லிக்கேணி, சென்னை-5-ல் தமிழ் ஆசிரியர் பயிற்சி வகுப்புகளில் சேர பெண் மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. வகுப்பு, 1971 நவம்பர் 1-ல் தொடங்கும்.

மனுக்கள், கல்லூரி முதல்வர், லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி, சென்னை, அவர்களுக்கு 1971 அக்டோபர் 1-க்குள் வந்து சேரவேண்டும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு சுய விலாசமிட்ட 20 காசு அஞ்சல் வில்லை ஒட்டிய உறையை உடன் வைத்து, முதல்வர், லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி, சென்னை அவர்களுக்கு எழுத வேண்டும்.

**கல்லூரிக் கல்வி இயக்குநர்**

(த 67)

---

## பயிற்சி

**அனைத்திந்தியப் பணிகளுக்கான**

புகுமுக—தேர்வு பயிற்சி நிலையம்

சென்னை-35.

ஐ. ஏ எஸ்., ஐ. பி. எஸ்., தேர்வுக்கான பயிற்சி அளிப்பதற்காகத்தாழ்த்தப்பட்டவர்கள், மலை சாதிப் பழங்குடியினர், அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர், நாடோடி மற்றும் ஓரளவு நாடோடிகளாக வாழும் பழங்குடியினர் ஆகியவர்களிடமிருந்து, மேற்கூறிய பயிற்சி நிலையம் மனுக்களை வரவேற்கின்றது. உணவு, உறைவிடச் செலவு, கற்பிக்கும் செலவு ஆகியவைகளை அரசே ஏற்றுக் கொள்ளும். பெண்களுக்கான தங்கும் வசதி, சேப்பாக்கத்தில் உள்ள மாநிலக் கல்லூரி பெண்கள் விடுதியில் கிடைக்கும். மனுக்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 30—9—1971.

2. பயிற்சியில் சேர்வதற்குக் கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

(1) இரண்டாம் வகுப்பில் தேர்வு பெற்ற பட்டதாரிகளாகவோ அல்லது கலை, விஞ்ஞானப் பாடங்களில் பட்ட மேல்படிப்புப் பட்டம் பெற்றவர்களாகவோ இருக்க வேண்டும். பி. எல். பட்டம் பெற்றவர்களும் மனுச் செய்யலாம்.

(2) 21 வயது அடைந்தவர்களாகவும் ஆனால் 1—8—1972 அன்று 29 வயது அடையாதவர்களாகவும் இருக்க வேணடும்.

(3) தாழ்த்தப்பட்ட மலை சாதி வகுப்பு, அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு நாடோடி மற்றும் ஓரளவு நாடோடிகளாக உள்ள வகுப்பு ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு, நாடோடி மற்றும் ஓரளவு நாடோடிகளாக வாழும் வகுப்பு ஆகியவற்றைச் சார்ந்தவர்களிடமிருந்து பயிற்சிக்கு இருவர் சேர்த்துக் கொள்ளப்படுவர். அவர்களின் உச்சவரம்பு வயது 24.

3. பயிற்சியில் சேர்வதற்கு இதற்கெனத் தனியே உள்ள வடிவம் மூலம் மனுச் செய்ய வேண்டும். இப்படிவத்தை முதல்வர் புகுமுக-தேர்வுப் பயிற்சி நிலையம் எண் 22, மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை-35 அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவர்களிடமிருந்து மனுவையும், தகவல் தொகுப்புகளையும் பெற (1) தாழ்த்தப்பட்ட வகுப்பா அல்லது மலை சாதி பழங்குடி வகுப்பா அல்லது அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பா நாடோடிவகுப்பா அல்லது ஓரளவு நாடோடிகளாக வாழும் பழங்குடி வகுப்பா என்பதையும், (2) தேர்வு பெற்றுள்ள பட்டத் தேர்வு, (3) பிறந்த தேதி, 1—8—1972-ல் வயது ஆகியவற்றையும் குறிப்பிட்டு எழுதி, ரூபாய் 1·50.க்கு அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய முகவரியுள்ள உறையையும் வைத்து அனுப்ப வேண்டும்.

**முதல்வர்,**

புகுமுக-தேர்வு பயிற்சி நிலையம்,

(த. 80) சென்னை-35.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

பொதுப் பணித் துறை,
சென்னை செங்கற்பட்டு வட்டம்

ஒப்பந்தப் புள்ளி ஒத்திவைப்பு அறிக்கை.

வேலையின் பெயர் : கிண்டி, கிங் நிலையத்தில் கூடுதல் விலங்கு விடுதி கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி தர கடைசி நாள் 28-8-1971 மாலை 3-00 மணி என்று இருந்த கெடு 24-9-1971 மாலை 3-00 மணி வரை ஒத்தி வைக்கப் படுகிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், சென்னை- செங்கற்பட்டு சர்க்கிள், பொதுப் பணித் துறை, சென்னை-5-ல் 15-9-1971 லிருந்து 22-9-1971 வரை எல்லா அலுவல் நாட்களிலும் அலுவல் நேரத்தில் கிடைக்கும்.

இதர நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கற்பட்டு வட்டம்

(த. 79)

## பயிற்சி

### அறிக்கை

நவம்பர் 1971-ல் நடைபெற விருக்கும் மருத்துவ ஆவணங்கள், தொழில் நுட்பப் பணியாளர்களின் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளல்.

நவம்பர் 1971, முதல் நாள் முதல் துவங்க விருக்கும் மருத்துவ ஆவணங்கள், தொழில் நுட்பப் பணியாளர்களின் பயிற்சியில் சேர்வதற்கு இயக்குநர்—கண்காணிப்பாளர், குழந்தைகள் நல நிலையம், குழந்தைகள் மருத்துவ மனை, எழும்பூர், சென்னை-8 அவர்களால் செப்டம்பர் 30, 1971 அன்று மாலை 5-00 மணி வரை மனுக்கள்வரவேற்கப்படுகின்றன.

தகுதி—

(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின், கலை அல்லது அறிவியல் பற்றிய புகுமுகவகுப்பு அல்லது இன்டர்மீடியட் தேர்வு அல்லது அதற்குச் சமமான தேர்வில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். மற்றும், (2) தட்டெழுத்து கீழ் நிலை (ஆங்கிலம்) தேர்வில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

மருத்துவ ஆவணப் பராமரிப்பில் அனுபவம் உள்ளவர்களுக்கும் மருத்துவப் பதிவாளர் அல்லது அறுவைச் சிகிச்சைப் பதிவாளர் அலுவலகத்திலோ அல்லது கல்வி கற்பிக்கும் மருத்துவ நிறுவனங்களின் ஆவணத் துறையிலோ பணியாற்றி யுள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது : பயிற்சி பெற விரும்புகின்றவர்கள் பயிற்சிபெற சேரும் மாதத்தின் முதல் நாள் அன்று 24 வயது முடிந்தவர்களாக இருக்கக் கூடாது. இந்த வயது வரம்பு, பணியில் உள்ளவர்களுக்குப் பொருந்தாது.

மனுத்தாள் மற்றும் இதர விவரங்கள் பெற இயக்குநர் கண்காணிப்பாளர், குழந்தைகள் நல நிலையம் குழந்தைகள் மருத்துவ மனை, எழும்பூர், சென்னை-8 அவர்களுக்குக்கடிதம்எழுதி, அத்துடன் ரூபாய் 1-00-க்கு (ரூபாய் ஒன்றும் மட்டும்) இயக்குநர், கண்காணிப்பாளர், குழந்தைகள் நல நிலையம், குழந்தைகள் மருத்துவ மனை, எழும்பூர், சென்னை-8அவர்கள் சார்பாக இந்தியபோஸ்டல் ஆர்டர் வாங்கி கிராஸ் செய்து இணைத்து அனுப்புவதுடன் தங்களது முகவரியுள்ள 9×4 அங்குலம் அளவுள்ள உறையில் அஞ்சல் தலை ஒட்டி (50 காசுக்கு) அதையும் வைத்து அனுப்பவேண்டும்.

பணியில் உள்ளவர்கள் பூர்த்தி செய்த மனுக்களை, அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் மூலமாக அனுப்ப வேண்டும்.

**டாக்டர் வி. பாலகோபால் ராஜு,**
இயக்குநர் & கண்காணிப்பாளர், குழந்தைகள் நல நிலையம்,
குழந்தைகள் மருத்துவ மனை,
எழும்பூர், சென்னை-8,

தேதி : 6-9-1971.

(த 74)

## அறங்காவலர் பதவி

### திருவலஞ்சுழி திரு. நல்ல நாயகம் பிள்ளை அறக்கட்டளை

(கும்பகோணம் உதவி நீதிமன்றம் அசல் வழக்கு எண். 79–16 ஏற்பாட்டுத் தீர்ப்பாணை)

இதனால் தெரிவிப்பது யாதெனில் திருவலஞ்சுழி திரு நல்ல நாயகம்பிள்ளை அறக்கட்டளைக்கு (TRUSTEE) அறங்காவலராக இருக்க விருப்பமுள்ளோர்கள் கும்பகோணம் உதவி நீதிமன்றத்திற்கு இந்த விளம்பரம் வெளியான தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் விண்ணப்பிக்கும்படிக் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தகுதிகள்

(1) மனுதாரர் இருபத்து ஐந்து (25) வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

(2) மனுதாரர் நல்ல வசதிகளும், சொத்துக்களும் உடையவராக இருக்க வேண்டும்.

(3) மனுதாரர் கும்பகோணம் வட்டத்தில் (Taluk) நிலையாக வாழ்பவராக இருக்க வேண்டும்.

மேலும் விவரங்கள் வேண்டுவோர் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு. என். நவநீதகிருஷ்ணன், பி.ஏ. பி.எல், வழக்கறிஞர் பாணாதுறை வடக்குவீதி, கும்பகோணம் அவர்களை அணுகவும்.

**தே. பெ. சு. பழநிசாமி,**
உதவி நீதிபதி,
கும்பகோணம்.

உதவி நீதிமன்றம்
கும்பகோணம்

(த. 23)

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

ஒப்பந்த அறிக்கை.

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் புரசவாக்கத்தில் உள்ள பங்கஜம் தெருவில் பல அடுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 28—9—71 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின்மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. ரூ. | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பிரதிகளின் விலை. |
|---|---|---|---|---|---|
| 1 | I | 32 குடியிருப்புகள் கொண்ட கட்டடம் A, 24 குடியிருப்புகள் கொண்ட B4. | 2,16,500 | 8,250 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு வகைக்கும்). |
| 2 | II | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் B1, B2, B3. | 2,79,000 | 4,200 | |
| 3 | III | 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நீர் நிலைத் தேக்கம் 21 மீட்டர் உயரத்தில் கட்டுதல். | 18,750 | 281 | |
| 4 | IV | 6.1 மீட்டர் விட்டம் கொண்ட கிணறு ஒன்று கட்டி இறக்குதல். | 25,000 | [illegible] | |

வரைபடங்களையும், ஒப்பந்தப் பிரதிகளையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 17—9—71 முதல் 27—9—71 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 28—9—71 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் காரணமின்றி நிராகரிக்கவோ ஏற்றுக்கொள்ளவோ, நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

தாண்டவராயச் சத்திரம்,
எழும்பாக்கம், சென்னை-10.
(கு. 72)

நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம் எண்-5.

---

திருத்தம்.

| தமிழரசு 1-9-71 இதழின் 51-ஆம் பக்கத்தில் வெளியிட்டிருந்தபடி. | ஓ.டி.எஸ். | | செய்யப்பெறும் திருத்தம். |
|---|---|---|---|
| இனம் (10) 11000 பியூஸ் செட்டுகள். | ஓல்ட் எச்.ஜி. | 15/71-72 | 9.15 மீ. (30.) நீளமுள்ள சிமெண்ட் கம்பங்கள் செய்வதற்கான பார்மர் பெட்டிகள் |

(கு. 77)

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு மின்சார வாரியம்.

**(பொது நிர்மாண வட்டம், திருச்சி)**

கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித் தனி விலை ஒப்பங்கள் (Seperate sealed Tenders) அடியிற் கையொப்பம் இட்டவரால் வரவேற்கப்படுகின்றன. விலை ஒப்பங்கள் கீழே குறிப்பிட்ட முடிவுத் தேதிகளில் பிற்பகல் 1 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், சாற்றுக் குறிப் பெண்ணும். | | கட்டுத் தொகை. | பொருட்களின் விபரம். | வழங்க வேண்டிய இடம். | சுமாராக தேவைப் படும் அளவு. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|---|---|
| | | | | For Destination | கி.கி. | |
| 1 | PC/2TLC/OT E.33/71-72 | 2,400 | M.S.7"X 5/8" ஸ்டெப் போல்ட் மற்றும் 2 நட்டுகளுடன். (175X16MM) | மதுரை, தாழையூத்து, திருச்சி ஸ்டோர்கள். | 15,000 | 30—9—1971. |

மேற்படிப் பொருட்களைப் பற்றிய குறிப்புகள் ஏனைய நிபந்தனைகள் அடங்கிய (Tender specimen Forms) பிரதி ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் (திரும்பப் பெறக்கூடியதல்ல) தலைமைக் கணக்காயர், பொது நிர்மாண வட்டம், திருச்சி அவர்களிடம் ரொக்கமாகவோ, அல்லது மணியார்டர் மூலமாகவோ (கூப்பனில் சாற்றுக் குறிப்பெண்ணைக் குறிப்பிட்டு) செலுத்தவும். கூப்பனில் தேவையான சாற்று எண் தெளிவாகக் குறிப்பிடாமல் இருந்தால் மணியார்டர் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தபாலில் வரும்போது பிரதிகள் தவறிவிட்டாலோ, தாமதப்பட்டாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது. பொருட்களைப் பற்றிய குறிப்புகள் வேண்டும் கடிதங்கள் முடிவு தேதிக்குக் குறைந்த பட்சம் நான்கு நாட்கள் முன்னதாக வரவேண்டும்.

விலை ஒப்பங்கள் குறிப்பிட்டுள்ள முடிவு தேதியன்று பிற்பகல் 3 மணிக்கு அவ்வமயம் வந்திருக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

மேற்கண்ட பொருள்களை வழங்குவதற்கான உத்தரவை ஒருவருக்கோ அல்லது பலருக்கோ, கொடுக்கவும், எந்த ஒருவருடைய விலை ஒப்பந்தத்தையோ அல்லது அத்தனை பேர்களுடைய விலை ஒப்பந்தங்களையோ நிராகரிக்கவும் அடியில் கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொது நிர்மாண வட்டம்,
மன்னார்புரம், திருச்சி-1.

(த. 76)

## ஒப்பந்தப் புள்ளி

### அரசினர் பொது மருத்துவ மனை, சென்னை-3.

மருந்து வகைகள் மற்றும் சர்ஜிகல் சம்பந்தப்பட்டவைகள் (Medicines Surgical Instruments and appliances etc) ஆகியவற்றை அரசினர் பொது மருத்துவமனை, சென்னை-3-க்கு 1—10—1971 முதல் 31-3-1972 முடிய சப்ளை செய்ய, குறிப்பிட்ட ஒப்பந்த பாரத்தில், நகலுடன் கூடிய முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 25—9—1971 பிற்பகல் 2 மணி வரையில் நாணயமான நிறுவனங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன: " XXIII Medical J-Miscellaneous " என்ற தலைப்பிட்டு இரண்டு ரூபாய்க்கு ஒரு சலானும் அதே தலைப்பில் (விற்பனை வரிக்காக) ஏழு காசிற்கு மற்றொரு சலானும் எழுதி அதை ரிசர்வ் பாங்கில் செலுத்தி, சலான்களை ஒரு விண்ணப்பத்துடன் அடியிற் கையொப்ப மிட்டவரிடம் கொடுத்து ஒப்பந்தப் பாரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட தலைப்பில் ரிசர்வ் பாங்கில் செலுத்திய பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

டாக்டர் பி.ஆர். பாலகிருஷ்ணன்,
முதல்வர்,
அரசினர் பொது மருத்துவமனை,
சென்னை-3.

(த. 65)

## ஏல விற்பனை

ந.க.எண்: 50629/பி2/71

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள், 1971-ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 27-ஆம் தேதி, திங்கட்கிழமை காலை 10-30 மணியளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலை 24—9—1971 வெள்ளிக்கிழமை அன்றும், 25—9—1971 சனிக்கிழமை அன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

ஆணையாளர்,
காவல் ஆணையாளர் அலுவலகம்,
எழும்பூர், சென்னை-8.

(த. 64) நாள்: 3-9-1971



### மேற்பார்வைப் பொறியாளர்களின் அலுவலகம் பொ. ப. து.

இராமநாதபுரம் வட்டம், மதுரை.
ந. க. எண் 28842—69, 143/வ2/நாள் 21-8-1971.

**ஒப்பந்தப் புள்ளி 2-வது விளம்பரம்.**

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப் பணித்துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெருவட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்டவேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள கண்மாய்ப் பாசனத்தில் உள்ள நில உரிமை பெற்றோர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 24-9-1971-ஆம் தேதி மாலை 4 மணி வரையில் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்—உப்பாற்றின் குறுக்கே அணை கட்டி, செய்களத்தூர் மற்றும் 26 கண்மாய்களுக்குப் பாசனம் வழங்கும் திட்டம்.

| | அணைக்கட்டுவேலை 0 முதல் 55 மீட்டர் வெள்ளத் தடுப்புக்கரை பைல்கட் ஆப் உள்பட. | அணைக்கட்டுவேலை 55 முதல் 76 மீட்டர் தலை மதகு மணல் போக்கி மதகு வெள்ளத்தடுப்புக் கரை பைல்கட் ஆப் உள்பட. |
|---|---|---|
| ஒப்பந்த வகை | கே-2 | கே-2 |
| கட்டுத்தொகை | ரூ. 7,100 (ரூபாய் ஏழாயிரத்து நூறு) | ரூ. 7,900 (ரூபாய் ஏழாயிரத்துத் தொள்ளாயிரம்). |
| ஒப்பந்தப் புள்ளி விலை (வரி உள்பட.) | ரூ. 20.70 | ரூ. 20.70 |
| வேலை முடிக்கவேண்டிய காலம். | 12 மாதங்கள். | 12 மாதங்கள். |

வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 24-9-1971 அன்று மாலை 4-30 மணிக்கு அலுவலகம் வந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் மேற்படியார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேற்கண்ட வேலைகளை எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தப் பத்திரத்திற்கான தொகை ரூ. 20-70ஐ அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப்பொறியாளர் (பொதுப்பணித் துறை) இராமநாதபுரம் பெருவட்டம் மதுரை-1 என்ற விலாசத்திற்கு மனுச்செய்தால் மேற்படி வேலைக்கான ஒப்பந்தப் பட்டியல் விதிகள் முதலியவைகள் ஒப்பந்தப் புள்ளியுடன் வழங்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளியின் விலையான ரூ 20-ஐ "பி.டபிள்யூ.டி. III ஓ.ஆர். என்ற கணக்குத் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, சிவகெங்கை கோட்டம், சிவகெங்கை அவர்கள் கணக்கிலும் விற்பனை

வரிக்காக ரூ 0·70 (எழுபது காசை) ''12 விற்பனை வரி'' என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கருவூலத்தில் தனித் தனியாகச் செலுத்தி ரசீதுகளை அனுப்ப வேண்டும். இத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப் படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும்பொழுது உறையின் மேல் வேலையின் பெயரும் கருவூல ரசீது எண்ணும் எழுதப் பட்டிருக்க வேண்டும். உறை மூடி அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அலுவலகத்தின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில்தான்தொகை குறிப்பிட்டுக் கொடுக்கவேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) இராமநாதபுரம் வட்டம், மதுரை அலுவலகத்தில் 14—9—1971 முதல் 22—9—1971 முடிய விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 22—9—1971 மாலை 5 மணிக்குள் வந்து சேர வேண்டும். இதற்குப் பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ இத்துறையினர் பொறுப்பாக மாட்டார்கள். இதுபோன்ற செயல் இத்துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்தக் காரர்களிடமிருந்து கட்டுத்தொகை அரசாங்கக் கருவூலத் தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெடியூல்ட் வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக் கொள்ளப் படும். மாநில அரசு செக்குரிட்டிகள், தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் பத்திரங்கள், அரசாங்க சேமிப்புப் பத்தி ரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு அல்லது தற்போதைய மதிப்பு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறுவிதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திற்கான வருமானவரி, விற்பனைவரி முதலியவைகளைச் செலுத்தியதற்கு அத்தாட்சியாகச் சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

ஆயக்கட்டுதாரர்கள் பங்கு எடுத்துக் கொண்டால் டிபுடி தாசில்தாருக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிட யிடமிருந்து, சொத்து உரிமை சர்டிபிகேட்டும், அத் திட்டத்தில் பயன்பெறும் கண்மாயில் ஆயக்கட்டுதார் என்பதற்கும் அத்தாட்சி வாங்கி ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். கட்டுத்தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில் தொகை குறிப்பிட்டுக் கொடுக்காமலோ இருந்தால் அவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப்படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை பெற்றுள்ளார்.

**ரெ. ராமசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை.

22—8—1971.

(ந. 45)

## ஒப்பந்தப் புள்ளி

### மீன் துறை

எண்ணூரில் இத்துறைக்குச் சொந்தமான உறைபனி நிலை யத்தை ( Freezing plant ) குத்தகைக்கு விடுவதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங் கள் 30—9—1971 பிற்பகல் 2–00 மணிவரை சென்னை மீன் துறை இயக்குநரால் ஏற்றுக் கொள்ளப்படும். இது குறித்த விவரங்களை மீன் துறை இயக்கு நரிடமிருந்து பெற்றுக் கொள்ள லாம்.

**மீன்துறை இயக்குநர்.**
நிர்வாக அலுவலக கட்டடங்கள்,
சென்னை-6.
8—9—1971.

(த. 68)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

செங்கல்பட்டு மின்பெரு வட்டம்
காஞ்சிபுரம்.

1—9—1971-ஆம் தேதி (தமிழ ரசு பிரதி, தமிழ் பதிப்பு, பக்கம் 33) வெளியிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி.

முடிவு தேதி : நீட்டிப்பு.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ள ஒப்பந்தச்சாற்றுக் குறிப்பு விற்கும் முடிவுத் தேதி, ஒப்பந் தங்கள் பெற்றுக் கொள்ளப் படும் முடிவுத் தேதி, ஒப்பந்தங் கள் திறக்கப்படும் தேதி கீழ்க் கண்டவாறு நீட்டிக்கப்படுகின் றன :—

(1) ஒப்பந்தச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் விற்கப்படும் முடிவுத் தேதி 12—10—1971.

(2) ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும் முடிவுத் தேதி 13—10—1971 பகல் 12 மணி வரை.

(3) ஒப்பந்தங்கள் திறக்கப் படும் தேதி 13—10—1971 பகல் 2 மணி.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
செங்கற்பட்டு மின் பெரு வட்டம்
காஞ்சிபுரம்.

(த. 88)

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், பொது சுகாதாரப் பொறியியல் துறை, தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இது போன்ற வேறு அரசு துறைகளில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) அவர்களால், எண் 17, சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2, என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 19—10—1971 (செவ்வாய்) மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலை 3·30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| வேலையின் பெயர் | .. | பழனி குடிநீர் வழங்கும் திட்டம்—நாலாம் கட்டம்—பழனியில் கோடை கால ஸ்டோரேஜ் டேங் கட்டுதல். |
| ஒப்பந்த வடிவம் | .. | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை | .. | ரூ. 37,000. |

இந்தத் தொகையை ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்ட்டாகவோ அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் காரண்டியாகவோ நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| வேலையை முடிக்கவேண்டிய காலம். | 18 மாதங்கள். |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. | ரூபாய் 25·88 (விற்பனை வரி உட்பட). |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை 14, ராமமூர்த்திசாலை சொக்கிகுளம், மதுரை-2, என்ற முகவரியில் உள்ள நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், அவர்களிடமிருந்து 12—10—1971 அன்று மாலை 5 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**கே. கோவிந்த மேனன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு.பொ.), மதுரை-2.

தேதி : 25—8—1971.
(த.63)



## தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை
## வைகைச் சீரமைப்புத் திட்டம்.

(மறு ஒப்பந்த அறிக்கை.)

மதுரை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் பொதுப் பணித்துறை கீழ்க்கண்ட வேலைக்கு கே 2. ஒப்பந்த வகையில் ஒப்பந்தங்களை தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில் 22—9—1971 அன்று மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்வார். அன்று மாலையே 4-00 மணிக்கு அந்த ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் 15—9—1971 முதல் 20—9—1971 வரை விற்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | கட்டுத் தொகை. ரூபாய். |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்டத்தில், சிவகெங்கை வட்டத்தில் வைகை நதியின் குறுக்கே கட்டப்படும் பார்த்திபனூர் ரெகுலேட்டரில் பகுதிகள் 9, 10 & 11 கட்டுதல். | 12,000 |

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்களின் விலையான ரூ. 20-ஐ நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை வைகைச் சீரமைப்பு '' ஹெட் ஒர்க்ஸ் '' கோட்டம் பரமக்குடி அவர்களின் கணக்கில் பி.டபிள்யூ.டி. III ஒ. ஆர். என்ற தலைப்பிலும் அதற்கான விற்பனை வரி மற்றும் சர் சார்ஜ் 75 காசுகளை '' XII—Sales tax (d) Miscellaneous '' என்ற தலைப்பிலும் அரசாங்கக் கருவூலங்களிலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ செலுத்தி உண்மை ரசீதை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டுத் தொகை, சலான், ஷெட்யூல்ட் வங்கிகளின் '' deposit at call '' ரசீது அல்லது '' Demand draft '' அரசாங்க செக்யூரிட்டிகள், தேசிய மயமாக்கப்பட்ட 14 வங்கிகளின் உத்திரவாதம், மேலும் தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்கள் அல்லது தேசிய சேமிப்புப் பத்திரங்கள் மார்க்கெட் மதிப்பில் 5 விழுக்காடு குறைத்துப் பெற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகை வேறு எந்த வகையிலும் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சி. தேசிகசங்கர்,**
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
மதுரை வட்டம், மதுரை-2.

(த.49)

## தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றும் வாரியம்,

ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு குடிசைமாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கிரே நகர் பள்ளத்தில் (புளியந்தோப்பு நெடுஞ்சாலை) பல அடுக்குக் கட்டடங்களைக் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 23—9—71 அன்று 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின்மீது, ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரியமுறையில் குறிப்பிட வேண்டும்.

| எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை. |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. | |
| 1 | I | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி1, பி-2, பி-3. | 2,79,000 | LS 4,200 | |
| 2 | II | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி-12, பி-13, பி-14. | 2,79,000 | 4,200 | |
| 3 | III | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி-4, பி-5 | 1,86,000 | 2,800 | |
| 4 | IV | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி-6, பி-7 | 1,86,000 | 2,800 | |
| 5 | V | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி-8, பி-9 | 1,86,000 | 2,800 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு வகைக்கும்) |
| 6 | VI | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி-10, பி-11 | 1,86,000 | 2,800 | |
| 7 | VII | 1.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நீர் நிலைத் தேக்கம் 21 மீட்டர் உயரத்தில் கட்டுதல். | 51,000 | 765 | |
| 8 | VIII | 6.1 மீட்டர் விட்டம் கொண்ட கிணறு கட்டி இறக்குதல். | 25,000 | 375 | |

வரை படங்களையும், ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களையும், கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 13—9—71 முதல் 22—9—71 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 23—9—71 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் காரணமின்றி நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ, நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

**நிர்வாகப் பொறியாளர்,**
கோட்டம்-3.

தாண்டவராய சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
**(த-44)**

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்

### ஒப்பந்த அறிவிப்பு எண் 6/71-72.

வேலையின் பெயர்.—நிமிடத்திற்கு 300 கனஅடி கொள்ளளவும் சதுர அங்குலத்திற்கு 150 பவுண்டுகள் அழுத்தமும் கொண்ட நடமாடும் டீசலால் இயங்கும் ஏர் கம்ப்ரெசர் 2 எண்ணிக்கைகள் வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறிய வேலைக்கு நிலநீர் இயக்குநர், சென்னை-4 அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் 15-10-1971 அன்று மாலை 3 மணி வரை முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் நிலநீர் இயக்குநர் அவர்களால் அதே நாள் மாலை 4 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மெட்ராஸ் பைனான்சியல் கோடு, வால்யூம் 1-ன் வடிவம் 9.

2. முன் வைப்புத் தொகை—ரூ. 4,500.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும், விற்பனை வரி ரூ. 0·40 (நாற்பது காசு மட்டும்).

4. கீழே குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் அலுவலக நேரத்தில், ஒப்பந்தப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்குஉரிய தேதி—15-9-1971 முதல் 11-10-1971 வரை.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittances III Other Remittance என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர் நிலநீர்க் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "XII Sales-tax (b) Receipts under State Sales-tax Act, General Sales-tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ செலுத்தப்படவேண்டும். சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ச. பஞ்சநதம்,
இயக்குநர்.

நில நீர் இயக்குநர் அலுவலகம்
82, இராயப்பேட்டை
நெடுஞ்சாலை, சென்னை-4.

(த51)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

எண் 1087/71 எஸ்டி 1
நாள் 4—8—1971.

கீழ்க்கண்ட வேலைக்காகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள் அவர்களால் 25-1, மூன்றாவது தெரு, டாட்டா பாத், கோயம்புத்தூர்-12-ல் அவருடைய அலுவலகத்தில் 22-9-1971 பிற்பகல் 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டு, அதே நாளில் பிற்பகல் 4-00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் : புஞ்சைப் புளியம்பட்டி நீர் வழங்கு திட்டம் 3-வது கட்டம்—7-00 லட்சம் லிட்டர் (1.5 லட்சம் காலன்) திறனுள்ள மேல்மட்ட ஆர்.சி.சி. ரிசர்வாயர், அவசியமான குழாய் இணைப்புகளுடன் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை : ரூ. 3,500 (ரூபாய் மூவாயிரத்து ஐநூறு மட்டும்).

வேலையை முடிக்க வேண்டிய காலம் : 6 மாதங்கள் (ஆறு மாதங்கள் மட்டும்) .

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 10-35 (ரூபாய் பத்து காசுகள் முப்பத்தைந்து மட்டும்-விற்பனை வரி உட்பட.)

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்காலம்: 9—8—1971 முதல் 20-9-1971 வரை நிர்வாகப் பொறியியல் பொறியாளர், பொ. சு. பொறியியல் டிவிஷன், எண் 11/8. பாஷ்ய காருலு சாலை, ஆர்.எஸ். புரம் கிழக்கு கோயம்புத்தூர்-2.

அவர்களிடம் பத்திரங்கள் விலையை ரொக்கமாகக் கொடுத்தோ பண அஞ்சலில் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். கட்டுத் தொகை, தேச உடைமையாக்கப்பட்ட, பாங்க் ஒன்றின் டிமாண்ட் டிராப்ட் வடிவிலோ அல்லது நிர்வாகப் பொறியாளர் (பொ.அ.பொ.) கோயம்புத்தூர்-2 அவர்கள் பெயரில் கருவூல சலான் வடிவிலோ கட்டவேண்டும். தேச உடைமை ஆக்கப்பட்ட பாங்க் ஒன்றின் பாங்க் காரண்டியும் ஏற்கப்படும்.

காரணம் ஏதும் கூறாமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளருக்கு (பொ.சு.பொ.) உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 13)

## தனியார் அச்சகங்களுக்கு

### எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநர் அலுவலகம், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1.

அரசினர் அச்சு வேலைகளை, தனியார் அச்சகங்களுக்குக் கொடுத்தல்

அரசினர் அச்சு வேலைகளில் சில இனங்கள், தனியார் அச்சகங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. இந்த அச்சு வேலைகளை மேற்கொள்ள விரும்புவோர், இயக்குநர், எழுதுபொருள்அச்சுத்துறை, மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 அவர்களுடன் தொடர்புகொண்டு மேல் விவரங்களைப் பெறலாம்.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.

(த40)

## தமிழ்நாடு அரசு

## தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம்

**சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.**

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்துக்காகவும் அதன் பொருட்டும் துறைக்குரிய வடிவத்தில், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, பொது சுகாதார பொறியியல் துறை (தமிழ் நாடு குடிநீர், வடிகால் வாரியம்), பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை, மற்றும் இதர அரசு நிறுவனங்களில் உரிய பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) தமது அலுவலகம் எண் 17. சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2-ல் 1—10—1971 வெள்ளிக்கிழமை மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். அவை அதே நாளில் மாலை 3-30 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்—

திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம்—லப்பை குடிக்காடு நீர் வழங்கு திட்டம்—முதல் கட்டம், மேல் கட்ட ஆர். சி. சி. சர்வீஸ் ரிசர்வாயர் 3.5 லட்சம் லிட்டர் திறன் உள்ளதாகக் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்—

மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—

ரூ. 2,600 (ரூபாய் இரண்டாயிரத்து அறுநூறு மட்டும்).

ஒப்பந்தப் புள்ளியுடன் இத்தொகை, கருவூல சலான் வடிவிலோ டிமாண்டு டிராப்ட் வடிவிலோ, தேச உடமை ஆக்கப்பட்ட பாங்கின் காரண்டி வடிவிலோ, நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதார பொறியியல் கோட்டம், திருச்சி அவர்கள் கணக்கில் சேர்ப்பிக்கப்பட்டுக் காண்பிக்கப்பெற வேண்டும்.

வேலையை முடிக்கவேண்டிய காலம்—

ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை—

ரூ. 10.35 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப்பொறியியல்கோட்டம் பி-15, தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சி-3 அவர்களிடமிருந்து 27—9—1971 மாலை 5 மணி வரை பெறலாம்.

**கே. கோவிந்தமேனன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு.பொ.)

மதுரை-2,
நாள் 31—8—1971.
(த55)

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

அக்ரானமி துறை, மத்திய பண்ணை, கோயம்புத்தூர்-3,

நாள் : 2—9—1971.

எச். 5/1738/71.

**ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு.**

கோயம்புத்தூர்-3, வேளாண்மைக் கல்லூரி & ஆராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த, கல்லூரிப் பண்ணை, கால்நடை பேணும் நிலைய மத்திய பண்ணைக்குத் தேவையான கால்நடைத் தீவனங்கள் (நிலக்கடலைப் பிண்ணாக்கு, பருத்தி விதை, உப்பு, அரிசித் தவிடு, கோதுமைத் தவிடு, தாது உப்புக் கலவை) 1—10—71-லிருந்து 31—3—72 வரை உள்ள காலத்துக்கு வழங்குவதற்காகக் கோயம்புத்தூர்-3, வேளாண்மைக் கல்லூரி & ஆராய்ச்சி நிறுவன டீன் அவர்களால், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25—9—1971 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

2. ஒப்பந்தப் புள்ளிகள் : ''1—10—71 முதல் 31—3—72 வரை உள்ள காலத்துக்கு, கால்நடைத்தீவனம் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள்'' என்று குறிப்பிடப்பட்டு டீன், வேளாண்மைக் கல்லூரி & ஆராய்ச்சி நிறுவனம், கோயம்புத்தூர்-3 அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் ஒவ்வொன்றுடனும், கீழ்க்கண்டவைகளைச் சேர்த்து அனுப்ப வேண்டும்.—

(1) ரெவின்யூ டிபாசிட் வகையில் கட்டுத் தொகையாக ரூ. 50-க்கு சலான்.

(2) உரிய அலுவலரிடமிருந்து சால்வன்சி சான்றிதழ்.

(3) வருமான வரி கிளியரன்ஸ் சான்றிதழ்.

(4) விற்பனை வரி கிளியரன்ஸ் சான்றிதழ்.

(5) கால்நடை தீவன சாம்பிள்கள் 2 கிலோ கிராம்.

3. எவ்விதக் காரணமும் கூறுமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், ஏற்கவோ நிராகரிக்கவோ கோயம்புத்தூர்-3, விவசாய கல்லூரி & ஆராய்ச்சி நிறுவன டீன் அவர்களுக்கு உரிமை உண்டு.

4. ஒப்பந்தப் புள்ளி வடிவங்களையும் இதர விவரங்களையும் பெற, மத்திய பண்ணை உதவி அக்ரானமிஸ்ட்டிடம், விற்பனை வரி உள்பட 53 காசுகள் செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

5. ஒப்பந்தப் புள்ளிகள், கோயம்புத்தூர்-3 விவசாயக் கல்லூரி & ஆராய்ச்சி நிறுவனம் மத்திய பண்ணை உதவி அக்ரானமிஸ்ட் அவர்களால் 25—9—71 மாலை 3-30 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில், கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவன கால்நடை பராமரிப்புப் பேராசிரியர்-மத்திய பண்ணை அடிஷனல் உதவி அக்ரானமிஸ்ட் அவர்களுடன் பிரிக்கப்படும்.

**கே. ராமகிருஷ்ணன்,**
டீன்.

(த. 54)

## ஏல விற்பனை

### ஏல அறிவிப்பு

அரசு தலைமைச் செயலகம் அமைந்துள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டை சென்னை 9-ல், அறிஞர் அண்ணா அரங்கம் அருகில் கீழ்க்கண்ட அரசு கார்கள் 22—9—1971 முற்பகல் 11 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

| காரின் பெயர். | மாடல். |
|---|---|
| எம்.எஸ்.ஒய். 7070 (டாட்ஜ் கிங்ஸ்வே). | 1956 மாடல் |
| எம்.எஸ்.எஸ். 8607 (அம்பாசிடர்). | 1966 மாடல் |

ஏலம் கோர விரும்புவோர் விற்பனை நிபந்தனைகளை அறிய, அரசு தலைமைச் செயலகம் மோட்டார் வண்டிகள் பிரிவு கண்காணிப்பாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

**டி. வி. வெங்கட்ராமன்,**
அரசு கூட்டுச் செயலாளர்.

(து57)

## ஒப்பந்தப் புள்ளி

### சென்னை மாநகர காவல்துறை

**சென்னை நகரில் சாலைகளில் குறியிடுவதற்காக வெள்ளை பிளாஸ்டிக் ஸ்டட்கள் வழங்குவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரல்**

1. சென்னை மாநகர காவல் துறை போக்குவரத்துத் துறைக்கு தேவைப்படுகின்ற, சாலைகளுக்கு குறியிடுவதற்கான வெள்ளை பிளாஸ்டிக் ஸ்டட்டுகள் 1971 ஆகஸ்ட் 1-லிருந்து 1971 டிசம்பர் 31 வரை உள்ள காலத்துக்கு வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

2. ஒப்பந்தப் புள்ளிகள் 30—9—71 மாலை 4-00 மணிக்குள் கீழே கையொப்பமிட்டவருக்கு வந்து சேரவேண்டும்.

3. ஒப்பந்தப் புள்ளி வடிவங்கள், நிபந்தனை விவரங்களை காவல் துறை ஆணையாளர் அலுவலகம் (ஸ்டோர்ஸ் பிரிவு) எழும்பூர், சென்னை-8ல் ரூ. 2.06 (ரூபாய் இரண்டு, காசுகள் ஆறு) மட்டும் செலுத்திப் பெற வேண்டும். இத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

**காவல்துறை ஆணையாளர்,**
மாநகர் போலீஸ் அலுவலகம்,
எழும்பூர், சென்னை-8.

(து58) நாள் 28—8—1971.

## ஏல விற்பனை

''பெட்ரோலினால் இயங்கக்கூடிய — சவர்லெட் — நோயாளியை ஏற்றிச் செல்லும் வண்டி—1950-ஆம் வருடத்திய மாடல்—125¼'' W. B. பதிவு எண்—MSZ—6658.''

மேற்கண்ட வண்டி 24-9-71 அன்று காலை 10-30 மணியளவில் தற்போது உள்ள நிலையில் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஏலம் விடப்படும். விருப்பமுள்ள ஏலம் கோருபவர்கள் மேற்கண்ட முகவரியில் அலுவலக நேரத்தில் வண்டியைப் பார்வையிடலாம். மற்ற விற்பனை விதிமுறைகளை நேர்முகமாகவோ எழுத்து மூலமாகவோ மேற்கண்ட அலுவலகத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு எழுத்து மூலமாகக் கேட்டால் அத்துடன் அவர்கள் முகவரி எழுதிய உறை ஒன்று சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

**டாக்டர் டி. நாகராஜன்,**
எம். டி., எப். ஸி. ஸி. பி.
(யு. எஸ். ஏ.)
கண்காணிப்பாளர்,
தஞ்சை மருத்துவக் கல்லூரி
மருத்துவமனை,

(து59) தஞ்சாவூர்-4.

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

9/10, மூர் தெரு, சென்னை-1.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன, நிர்வாக இயக்குநரால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு 6-10-1971 மாலை 3·00 மணி வரை ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | வேலை விவரம். | முன்வைப்புத் தொகை ரூபாய். |
|---|---|---|
| 1 | விருத்தாசலத்தில் 2,200 டன் கொள்ளளவு கொண்ட இரண்டாவது சேமிப்புக் கிடங்கு கட்டுதல் மற்றும் அதைச் சுற்றிச் சாலை அமைத்தல். | 6,250 |
| 2 | காஞ்சிபுரத்தில் 2,200 டன் கொள்ளளவு கொண்ட இரண்டாவது சேமிப்புக் கிடங்கு கட்டுதல் மற்றும் அதைச் சுற்றிச் சாலை அமைத்தல். | 5,800 |
| 3 | விருத்தாசலத்தில் கட்டவிருக்கும் இரண்டாவது சேமிப்புக் கிடங்கிற்குத் தேவையான இரும்பு உத்தரம் மற்றும் இதர சாமான்கள் வழங்குதல் Supply and erection of angle iron Trusses and other accessories. | 2,000 |
| 4 | காஞ்சிபுரத்தில் கட்டவிருக்கும் இரண்டாவது சேமிப்புக் கிடங்கிற்குத் தேவையான இரும்பு உத்தரம் மற்றும் இதர சாமான்கள் வழங்குதல் Supply and erection of angle iron Trusses and other accessories. | 2,000 |

வேலை பற்றிய முழு விவரங்களை இந்த அலுவலகத்திலிருந்து 13-9-1971-க்குப் பிறகு எல்லா வேலை நாட்களிலும் நேரிலோ, தபால் மூலமோ ரூ. 25·92 (விற்பனை வரி உட்பட) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**G. M. White, I.A.S.**
நிர்வாக இயக்குநர்.

சென்னை-1.
(து. 60)

## பயிற்சி

### கர்நாடக இசைக் கல்லூரி, சென்னை-28.

அறிவிப்பு.

இக் கல்லூரியில் *1971-72* கல்வி ஆண்டில் கீழே குறிக்கப் பட்ட வகுப்புகளில் சேருவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படு கின்றன:—

(அ) மூன்று வருட வாத்திய விசாரதா பட்ட சான்றிதழ் புல்லாங்குழல் பயிற்சி.

(ஆ) மூன்று வருட வாத்திய விசாரதா பட்ட சான்றிதழ் மிரு தங்கப் பயிற்சி.

அபேட்சகர்கள் குறைந்தது எஸ்.எஸ்.எல்.சி. பூர்த்தி செய்த பொதுப் படிப்புடையவர்களாக இருக்க வேண்டும். அந்தப் பயிற்சிகளில் விசேஷத் தகுதி யுடையவர்களுக்குப் பொதுப் படிப்பிலிருந்து விலக்களிக்கப் படும். அபேட்சகர்கள் *1971* ஜூலை *1-ஆம்* தேதியன்று *18* வயதுக்கும் *35* வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். தகுதியுடையவர் களுக்கு வயது வரம்பிலிருந்து விலக்களிக்கப்படும்.

கல்வி ஆண்டின் ஆரம்பத்தில் ஒரே தவணையாகக் கொடுப்பதா னால் இப் பயிற்சிகளுக்கான கட்ட ணம் ஒரு வருடத்திற்கு ரூ. 75 ஆகும். மூன்று தவணைகளாகக் கொடுப்பதானால் ஒரு பருவத்துக் குக் (Term) கட்டணம் ரூ. *26*. மூன்று தவணையாகக் கொடுப்ப தானால் ஒவ்வொரு பருவத்தின் ஆரம்பத்திலும் கட்டணம் செலுத்த வேண்டும்.

கல்லூரியில் சேரும்போது இரண்டு ரூபாய் பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு மாணவரும் ஒரு பருவத்துக்கு ஒரு ரூபாய் விளை யாட்டுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு மாணவரும் எச்ச ரிக்கைத் தொகை ரூ. 10 கொடுக்க வேண்டும். பயிற்சி முடிந்து கல் லூரியை விட்டுப் பிரிந்து செல்லும் போது இது திருப்பித் தரப்படும்.

கல்லூரியில் பெண்களுக்கான ஒரு விடுதி இருக்கிறது. உணவுச் செலவு விடுதியில் வசிப்போருக் குச் சமமாகப் பங்கிடப்படும்.

கல்லூரி முதல்வருக்கு 50 காசு நேரில் பணமாகக் கொடுத்தோ மணியார்டர் மூலம் செலுத் தியோ விண்ணப்ப நமூனு பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப நமூனு அனுப்புவதற்கு 20 காசு தபால் வில்லை ஒட்டப்பட்டதும் சொந்த விலாசம் எழுதப்பட்டதுமான உறை அனுப்பவேண்டும்.

பூர்த்தி செய்த விண்ணப்பங் கள் தகுதிகளைக்காட்டும் சான்றுக் கையொப்பமிட்ட சான்றிதழ்களு டனும் ஒரு ரூபாய் பதிவுக் கட்ட ணத்துடனும் கல்லூரி முதல்வ ருக்கு அனுப்பி வைக்க வேண்டும். எல்லா விண்ணப்பங்களும் கல்லூரி முதல்வருக்கு 20-9-1971தேதிக்கு முன்னால் வந்து சேர வேண்டும்.

**முதல்வர் (பொறுப்பு).**

(த. 36)

---

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்

82, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை-4.

சீட்டு ஒப்பந்தப் புள்ளி

*அறிக்கை எண் 3/71-72.*

வேலையின் பெயர்—300 எம்.எம். நடுவிட்டமுள்ள சி. ஐ. பைப்பு கள் 'எல்ஏ' வகை சாக்கெட், ஸ்பிகாட் முனைகளோடு ஸ்டாண்டர்டு நீளத்தில் வழங்கல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் பொருட்டும் மேலே குறிப் பிட்ட வேலைக்காக மேலே குறிப் பிடப்பட்டுள்ள அலுவலகத்தில் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் *30-9-1971* மாலை *3-00* வரை நிலநீர் இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படும்.ஒப்பந்தப் புள்ளிகளை நிலநீர் இயக்குநர் அவ ரது அலுவலகத்தில் அதேநாளில் மாலை 3-30 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் கள் முன்னிலையில் பிரிப்பார்.

ஒப்பந்த வடிவம்—எம். எப். சி. வடிவம் *9*, வால்யூம் *1*.

கட்டுத் தொகை—ரூ. *1,400*.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. *10* (ரூபாய் பத்து மட்டும்).

விற்பனை வரி *40* காசுகள்.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—*2* மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்களை *1-9-1971* முதல் *27-9-1971*வரை மேலே கண்ட அலுவலகத்தில் வேலை நேரத்தில் பெற்றுக்கொள் ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்க ளின் விலையை (எந்தச் சூழ்நிலையி லும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் (Public Works Remittances III Other Remittances) என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-*17* அவர்களின் கணக் கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் விற்பனைவரி (பி)மாநில விற்பனை வரிச்சட்டத்தின் கீழ், 'வரவினம், பொது விற்பனைவரி' என்ற தலைப்பிட்டுச் செலுத்தப் பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்பு தான் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப் படும்.

**இயக்குநர்,**
நிலநீர்.

(த. 30)

---

## ஏல விற்பனை

### தமிழ்நாடு அரசு
### வேளாண்மைத்துறை

ஏல அறிவிப்பு

திருவாரூர் விவசாயக் கருவி கள் ஒர்க் ஷாப்பின் பொதுக் கண்காணிப்பாளர் அலுவலகத் தில் *27-9-1971* மாலை *3* மணிக்கு ஒரு செவர்லட் லாரி (எம். எஸ். சி. *9574*) *1945* மாடல், பகி ரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

அலுவல் நாட்களில் அலுவல் நேரத்தில் அந்த வண்டியைப் பார்வையிடலாம்.

அரசின் நலன் கருதி, ஏலத்தை ரத்து செய்யவோ, ஒத்தி வைக் கவோ வேளாண்மைத் துறைக்கு உரிமை உண்டு.

விற்பனை நிபந்தனைகள் குறித்து மேல் விவரங்களைப் பொதுக் கண் காணிப்பாளர், விவசாயக் கருவி கள் ஒர்க் ஷாப், திருவாரூர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**வேளாண்மை இயக்குநர்,**
சென்னை-5.

(த.41)

## ஒப்பந்தப் புள்ளி

### சமூக நலத்துறை

**ஒப்பந்த அறிக்கை 2/71-72.**

தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம் அசீசு நகர் செட்டில்மெண்டில் உள்ள தொழில் நிலையங்கட்கு 1970-71-ஆம் ஆண்டிற்கான பலவகைப்பட்ட நூல் ரகங்களும், மரங்களும் (Yarn and Timber) வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்த விவரங்கள் (Sealed Tenders) பெயர் பெற்ற நிறுவனங்களில் இருந்தும், ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் (contractors) இதனடியில் கையொப்பமிட்டவரால் 30-9-1971-ஆம் தேதி வியாழக்கிழமை பகல் 12-00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த விவரங்கள் வந்து சேரவேண்டிய தேதியை ஒத்தி கொடுப்பதற்கான கோரிக்கை எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2. நெய்வேலி டவுன்ஷிப் கிளைக் கருவூலத்தில் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 500·00 (ஐநூறு மட்டும்) கட்டுத் தொகை கட்டிய சலானுடன் இணைந்து வராத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

3. ஒப்பந்த விவரங்கள் மேற்கூறப்பட்ட அதே தேதியில் பிற்பகல் 1-00 மணிக்குத் திறக்கப்படும். அப்போது ஒப்பந்த விவரங்கள் கொடுத்திருப்பவர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் நேரில் வந்திருக்கலாம். ஒப்பந்த விவரங்களில் கொடுக்கப்படும் விலைப்பட்டியலை அசீசுநகர் செட்டில்மெண்டில் இப் பொருள்களைக் கொண்டுவந்து கொடுப்பதற்கு உடன்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. குறைந்த பட்ச விலைப் பட்டியல் உள்ள ஒப்பந்த விவரங்களைத்தான் இதன் அடியில் கையொப்பமிட்டிருப்பவர் அங்கீகரிக்க வேண்டுமென்ற கட்டாயம் எதுவுமில்லை. காரணம் கூறாமல் எந்த ஒப்பந்த விவரத்தையும் அங்கீகரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ அவருக்கு அதிகாரம் உண்டு. இந்த நிபந்தனைகட்கு உட்படாத ஒப்பந்த விவரங்கள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் சரக்குகளை வினியோகம் செய்வதற்கு முன்னதாகவே அவைகளின் விலை மதிப்பீட்டுத் தொகையில் 10 சதவிகிதமோ அல்லது அடியிற் கையொப்ப மிட்டிருப்பவரால் நிர்ணயிக்கப்படும் மற்றெந்தத் தொகையோ வைப்புத் தொகையாக (Deposit) செலுத்துவதுடன் ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்வதற்கான உடன்படிக்கை (Agreement) ஒன்றும் எழுதிக் கொடுக்க வேண்டும். வைப்புத் தொகையைக் கட்டத் தவறினாலோ அல்லது உடன்படிக்கைப் பத்திரத்தை எழுதிக் கொடுக்காவிட்டாலோ பொருள்களை வினியோகம் செய்வதற்குக் கொடுக்கப்பட்ட உத்திரவு எந்த நேரத்திலும் ரத்து செய்யப்படும்.

6. தேவையான நூல் மற்றும் மர வகைகள் பற்றிய குறிப்பிடுகைகள் (Specifications) நிபந்தனைகள் (Conditions) ஆகியவற்றை இதன் அடியில் கையொப்பமிட்டிருப்பவரிடமிருந்து விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

**தா. திருநாராயணன்,**
மேலாளர், அசீசு நகர் செட்டில் மெண்டு, ஊமங்கலம் அஞ்சல்,
விருத்தாசலம் தாலுக்கா,
தென்னார்க்காடு மாவட்டம்.

(த. 35)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

### பொதுப்பணித் துறை

**ஈட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை**

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும் தமிழக பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர்—நீலகிரி சர்க்கிள் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 4-10-1971 மாலை 3-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான ''மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள்'' பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்—கோயம்புத்தூர் அரசினர் கலைக் கல்லூரியில் தமிழ்ப் பயிற்சி பிளாக் மீது இரண்டாவது தளம் கட்டுதல்.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 2,550.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, வரைபடங்களுடன் விற்பனை வரி உட்பட—ரூ. 10.35.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர் பொ. ப. து. கோயம்புத்தூர் டிவிஷன் அவர்களிடம் எழுத்து மூலமாகக் கேட்டும், மேலே குறிப்பிட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தியும் (இது திருப்பித்தரப் படமாட்டாது) 25-9-1971-லிருந்து அலுவல் நாட்களில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

**எம்.எஸ்.கோபாலகிருஷ்ணன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ. ப. து.
கோயம்புத்தூர், நீலகிரி சர்க்கிள்,
கோயம்புத்தூர்-1.

(த. 42)

---

## ஏல விற்பனை

### கிராம நல வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், சென்னை.

**ஏல அறிவிப்பு**

சென்னை-53, அம்பத்தூரில் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 30-9-1971 முற்பகல் 11 மணிக்கு பழைய டைப்ரைட்டர்கள், டூப்ளிகேட்டர்கள் ஆகியவை, கிராமநல வளர்ச்சி இயக்குநராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பகிரங்க ஏலம்மூலம் விற்பனைசெய்யப்படும். வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து இது சம்பந்தமான நிபந்தனை விவரங்களைப் பெறலாம். டைப்ரைட்டர்களையும் டூப்ளிகேட்டர்களையும் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரை பார்வையிடலாம்.

**எம். ரகுபதி,**
கிராம நல வளர்ச்சி இயக்குநர்.

(த. 31)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொறியியல் பணித் துறை, திருச்சி வட்டம், த.பெ. எண். 55, திருச்சிராப்பள்ளி-1.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி, அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | வேலையின் பெயர் ... | திருச்சி மாவட்டம், ஆலங்குடி வட்டம், ஆலங்குடி அரசினர் மருத்துவ மனையில் பதினாறு படுக்கைகள் கொண்ட ஒரு பகுதிக் கட்டடம் கட்டுதல். |
| 2 | ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம். | 8—10—1971 மாலை 3-00 மணி |
| 3 | பிணைப் பொறுப்புத் தொகை. | ரூ. 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்). |
| 4 | ஒப்பந்த முறை ... | மொத்தத் தொகை. |
| 5 | முடிக்க வேண்டிய காலம். | பத்து மாதங்கள். |
| 6 | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. | ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்). |
| 7 | விற்பனை வரி ... | 0·88 (எண்பத்தெட்டு காசுகள் மட்டும்). |
| 8 | ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி. | 20—9—1971. |
| 9 | விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதி, மற்றும் நேரம். | 8—10—1971 மாலை 3-30 மணி. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் "XXXVII Public Works–State Revenue–Miscellaneous" மற்றும் "XII Sales Tax (6) receipts under the State Sales Tax Act General Sales Tax" என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விபரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ந. முத்துக்கிருஷ்ணன்,

(த-27) திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

## பயிற்சி

**அனைத்திந்தியப் பணிகள், போட்டித் தேர்வுகள் முதலியவைகளுக்காகப் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குத் தனிப்பயிற்சி நிறுவனத்தில் சேர்த்தல்.**

சென்னையில் தொடங்கப்பட இருக்கும் மேற்கண்ட நிறுவனத்தில் சேருவதற்காக போஸ்ட் கிராஜுவேட் டிகிரி பெற்றவர்களிடமிருந்து மனுக்கள் 20—9—1971 தேதிக்குள் வரவேற்கப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இந்த நிறுவனத்தில் முனைப்பான பயிற்சி அளிக்கப்படும். உணவு உறைவிட வசதிகள் இலவசம்.

மனு வடிவங்களையும் இதர விவரங்களையும் '' பிற்பட்ட வகுப்பினர் துறை இயக்குநர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 '' அவர்களிடமிருந்து பெறலாம்.

டி. பி. பாரதி,

பிற்பட்ட வகுப்பினர் துறை

(த.20) இயக்குநர்.

## ஏல அறிவிப்பு

பொது (செய்தி விளம்பர)த் துறையைச் சேர்ந்த கீழ்க்கண்ட வேன்கள் 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதியன்று முற்பகல் 11மணிக்கு தமிழ்நாடு பொது (செய்தி, விளம்பர)த் துறையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வேன் எண் : எம்.எஸ்.வி. 2612 மாடல் 1962 போர்டு.

வேன் எண் : எம்.எஸ்.வி.9061 மாடல் 1962 பெட்போர்டு

வேன் எண்: எம்.எஸ். டபுள்யூ 7653 மாடல் 1961.

ஏலம் கேட்கக் கருதுபவர்கள் மேற்படித் துறையின் துணை இயக்குநரின் அனுமதி பெற்று அலுவலக வேலை நேரங்களில் மேற்படி வண்டியைப் பார்வையிடுவதுடன் விற்பனை நிபந்தனை குறித்துத் தகவலையும் பெறலாம்.

இயக்குநர்,

பொது (செய்தி, விளம்பரத்) துறை
தமிழ்நாடு அரசு,
சென்னை-9.

(த. 26)

## தமிழ்நாடு அரசு

### மீன்துறை

அரசுக்குடைமையான பறிமுதல் செய்யப்பட்ட கீழ்க்கண்ட விசைப்படகுகள் கீழ்க்கண்ட விவரப்படி ஏலத்தில் விடப்படும் :—

| வரிசை எண். | படகு எண். | அளவு. | இயந்திரம். | ஏலம் நடைபெறும் இடம். | நாள். | நேரம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | ஐ.பி. 163 .. | 30 அடி. | ரஸ்டன் 2 சிலிண்டர். | மீனவர் பயிற்சி நிலையம், குளச்சல். | 24—9—1971 | காலை 10 மணி. |
| 2 | ஐ.பி. 261 .. | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை |
| 3 | ஐ.பி. 264 .. | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை |
| 4 | ஐ.பி. 258 .. | ஷை | ஷை | வீபுரம் | 25—9—1971 | காலை 9 மணி. |
| 5 | ஐ.பி. 262 .. | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை |
| 6 | ஐ.பி. 355 .. | ஷை | ரஸ்டன் 3 சிலிண்டர். | ஷை | ஷை | ஷை |
| 7 | ஐ.பி. 214 .. | ஷை | ரஸ்டன் 2 சிலிண்டர். | குலசேகரன்பட்டினம் துறைமுக அலுவலகம் அருகில். | 30—9—1971 | காலை 10 மணி. |
| 8 | ஐ.பி. 256 .. | ஷை | ஷை | அரசினர் மீன் உணவு நிலையம், மண்டபம். | 21—9—1971 | ஷை |
| 9 | ஐ.பி. 271 .. | ஷை | ஷை | ஷை | ஷை | ஷை |
| 10 | ஐ.பி. 216 .. | ஷை | ஷை | கீழக்கரை அரசினர் பனிக் கட்டி நிலையம். | 22—9—1971 | பிற்பகல் 3 மணி. |
| 11 | ஐ.பி. 232 .. | ஷை | ஷை | இராமேசுவரம் அரசினர் பனிக்கட்டி நிலையம். | 20—9—1971 | பிற்பகல் 4 மணி. |

இதர விபரங்கள் தூத்துக்குடி மீன்துறை துணைஇயக்குநர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ச. சே. ஆரோக்கியசாமி,
மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்),
தூத்துக்குடி.

(தூ.37)

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுப் பணியில் அரசினர் அச்சகத்திற்கு 9 உதவி அலுவலர் நிர்வாகிகள் (Assistant Works Managers) நியமனத்திற்காக மனுக்கள் 1971 செப்டம்பர் 24-ஆம் நாள் மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன. தகுதிகள் :—

(1) அச்சுத் தொழில் தகுதி—அச்சு வேலைகளில் செயல்முறை அனுபவம்.

(2) 'காஸ்டிங் முறைக் (Costing System) கணக்கில்' அறிவு.

சம்பளம் : மாதமொன்றுக்கு ரூபாய் 550—25—600—35—950.

வயது : 1-7-1971-ல் 30 வயதுக்குக் கீழ். குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதிக்கு மேல் பொதுக் கல்வித் தகுதியுள்ள ஷெட்யூல்ட் வகுப்பினர், ஷெட்யூல்ட் பழங்குடியினர், பின்னடைந்த வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை. மற்ற ஷெட்யூல்ட் வகுப்பினர், ஷெட்யூல்ட் பழங்குடியினருக்கு, மேல் வயது வரம்பு 5 ஆண்டுகளும் அங்கவீனமுற்றவர்களுக்குப்பத்து ஆண்டுகள் வரையிலும் தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் அவர்தம் புதல்வர்கள், திருமணமாகாத பெண்கள், மற்றும் 1-1-1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரடர் அல்லது சார்ஜெண்டு மேஜர் இன்ஸ்ட்ரடர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசிய மாணவர் படை கேடட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—7—71-ல் 40 வயதிற்குட்பட்டவர்களாக இருப்பவர்களாயினும் 1—1—64-ல் அல்லது அதற்குப் பின்னர், கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விஷயத்திலும், இலங்கை, பர்மா ஆகியவற்றிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்புட்படத் தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விபரங்களையும் "செயலாளர், தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம்—சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ள சுய விலாசமிட்ட 0·35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி, நூல் அஞ்சல் என்று குறிப்பிட்டு உறையை உடன் வைத்தனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

(த.12)

---

கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 7-10-1971 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன :—

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு சபார்டினேட் சர்வீசில் சென்னையிலுள்ள விலங்கு மருத்துவக் கல்லூரிக்கு பயாலஜி டெமான்ஸ்ட்ரேட்டர்—ஒரு நியமனம் : கெமிஸ்ட்ரி டெமான்ஸ்ட்ரேட்டர்கள் மூன்று நியமனங்கள் ; பிசிக்ஸ் டெமான்ஸ்ட்ரேட்டர்கள்—மூன்று நியமனங்கள்.

சம்பளம் :—மாதம் ஒன்றுக்கு ரூ. 325—15—550.

வயது : 1—7—1971-ல் 27 வயதுக்குக் கீழ்.

தகுதி : (1) டெமான்ஸ்ட்ரேட்டர் (பயாலஜி), ஜுவாலஜியைப் பிரதான பாடமாகவும் பாட்டனியைத் துணைப் பாடமாகவும் கொண்டு, பல்கலைக் கழக மானிய கமிஷன் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றின் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி.எஸ்ஸி. டிகிரி.

(2) டெமான்ஸ்ட்ரேட்டர் (கெமிஸ்ட்ரி), கெமிஸ்ட்ரியை முக்கியப் பாடமாகவும்பிசிக்சைத் துணைப்பாடமாகவும் கொண்டு, பல்கலைக் கழக மானிய கமிஷன் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி. எஸ்ஸி. டிகிரி.

(3) டெமான்ஸ்ட்ரேட்டர் (பிசிக்ஸ்) பிசிக்சை முக்கியப் பாடமாகவும் கெமிஸ்ட்ரி, கணிதம் ஆகியவைகளைத் துணைப் பாடங்களாகவும் கொண்டு பல்கலைக் கழக மானிய கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றின் முதல்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பி.எஸ்ஸி.டிகிரி.

ஷெட்யூல் வகுப்பினர் ஷெட்யூல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள். அவர்களுடைய புதல்வர்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் தேசீய மாணவர் படையில் 1-1-1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசிய மாணவர் படை கேடெட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவைகளிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1-7-71-ல் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்களானாலும் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 1—1—1964ல் அல்லது அதற்குப் பின்னர் குடி பெயர்ந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை, பர்மா ஆகியவைகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உள்பட தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும் இதர விவரங்களையும் "செயலாளர், தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை—2" என்ற முகவரிக்கு, பதவிப் பெயரைக் குறிப்பிட்டு கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ளசுய விலாசமிட்ட 0.35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி நூல் அஞ்சல் என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த.7)

## சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

தமிழில் உயர்ந்த நூல்கள் வெளிவருவதை ஊக்குவிக்கும் நோக்குடன் சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தைத் தமிழக அரசு வகுத்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் 1—1—1966 முதல் 31—12—1967 வரை அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட பத்து வகைகளில் அடங்கும் நூல்கள் பரிசுக்குரிய ஆய்விற்காக ஏற்றுக்கொள்ளப் பெறும்.

(1) சிறு கதை.

(2) நாடகம்.

(3) கவின் கலைகள்.

(4) கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுய சரிதை, பயண நூல்கள்.

(5) தாவர இயல், விலங்கியல், புவியியல், உயிரியல், காட்டியல்.

(6) பௌதிகம், இரசாயனம்.

(7) கல்வி, உணவியல்.

(8) வரலாறு, தொல்பொருள் இயல்.

(9) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவம்.

(10) சிறப்பு வெளியீடுகள்.

2. மேலும் இத் திட்டத்தின்கீழ் 1—1—1968 முதல் 31—12—1970 வரை அடியிற்கண்ட இருபது வகைகளில் அடங்கும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள நூல்கள் பரிசுக்குரிய ஆய்விற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) கவிதை.

(2) நாவல்.

(3) மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்.

(4) பிற மொழிகளில் தமிழ்.

(5) மானிடவியல், சமூகவியல், பூகோளம், அரசியல், சட்டம்.

(6) பொருளாதாரம், வாணிகவியல்.

(7) கணிதம், வானவியல்.

(8) பொறியியல், தொழில் நுட்பவியல்.

(9) மருத்துவம், உடலியல், உணவியல், ஆரோக்கியம், சுகாதாரம்.

(10) தத்துவம், சமயம், அளவியல், அறவியல்.

(11) சிறு கதை.

(12) நாடகம்.

(13) கவின் கலைகள்.

(14) கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுய சரிதை, பயண நூல்கள்.

(15) தாவர இயல், விலங்கியல், புவியியல், உயிரியல், காட்டியல்.

(16) பௌதிகம், இரசாயனம்.

(17) கல்வி, உணவியல்.

(18) வரலாறு, தொல்பொருள் இயல்.

(19) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவம்.

(20) சிறப்பு வெளியீடுகள்.

3 ஒவ்வொரு தலைப்பிற்கும் முதற் பரிசு ரூ. 2,000-மும் இரண்டாவது பரிசு ரூ. 1,000-மும் அளிக்கப்படும். ஒரு தலைப்பின் கீழ்ப் பரிசுக்குத் தகுதியுள்ள நூல் அத்தலைப்பின் கீழ் அமைந்துள்ள எப் பொருளிலும் இருக்கலாம்.

4. ஒரே தலைப்பின் கீழ் இரு முறை யாதேனும் ஒரு பரிசை முன்னரே பெற்றுள்ள நூலாசிரியர் அதே தலைப்பின் கீழ் மூன்றும் முறையாகப் பரிசு பெறத் தகுதி உடையவரல்லர். மேலே சொல்லப்பட்ட தலைப்புகளில் பரிசளிப்புக்காக நூல்கள் அனுப்பும்போது எந்தத் தலைப்பில் எந்த நூல் அனுப்பப்படுகிறதோ அந்தத் தலைப்பில் இதற்கு முன் அந் நூலாசிரியர் இரு பரிசுகளைப் பெறவில்லை என்பதற்குரிய உறுதிமொழியையும் நூலுடனே அனுப்ப வேண்டும். எந்தத் தலைப்பின் கீழ் நூல் வெளியிடப்பட்டுள்ளது ; அது வெளியிடப்பட்ட தேதி ஆகிய விவரங்களையும் நூலாசிரியர் தெரிவிக்க வேண்டும்.

5. பரிசுப் போட்டிக்கு நூல்களை அனுப்ப விரும்பும் நூலாசிரியர்கள், நூலின் ஆறு படிகளைத் '' தமிழ் வளர்ச்சி இயக்குநர், குறளகம் (இரண்டாவது மாடி), சென்னை-1 '' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். நூல்களை 15—10—1971-ஆம் நாளுக்கு முன்னதாக அனுப்ப வேண்டும்.

முத்து. இராசாக்கண்ணனார்,

தமிழ் வளர்ச்சி இயக்குநர்.

(த. 3)

## ஒப்பந்தப் புள்ளி

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

## ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலே கிராமப் பணித்துறை போன்ற அரசுத் துறைகளில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்கண்ட பணிகளுக்காக, தனியாக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மதுரை வட்ட மக்கள் நல்வாழ்வுத்துறை மேற்பார்வைப் பொறியாளரால், 13, சர். பி. டி ராஜன் சாலே, மதுரை என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் 20—9—1971 பிற்பகல் 3 மணி வரை பெறப் படும்.

| வரிசை எண். | வேலேயின் பெயர். | ஒப்பந்தப் பாரம். | விலே. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|---|
| | | | ரூ. பை. | |
| 1 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2-வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களே விநியோகத் திட்டத்திற்காக இணேத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப் படி—பகுதி I. | K-2 | 5 18 | ரூ. 960 (ரூபாய் தொள்ளாயிரத்து அறுபது மட்டும்). |
| 2 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2-வது கட்டம் மற்றும் CI, AC & P. V. C. குழாய்களே விநியோகத் திட்டத்திற்காக இணேத்தல்—மேல் மட்டப்பகுதி—திட்டப்படி—பகுதி II. | K-2 | 5 18 | ரூ. 1,140 (ரூபாய் ஆயிரத்து நூற்று நாற்பது மட்டும்). |
| 3 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2-வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களே விநியோகத் திட்டத்திற்காக இணேத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி III. | K-2 | 5 18 | ரூ. 1,250 (ரூபாய் ஆயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்). |
| 4 | கோவில்பட்டி நீர்வழங்கு திட்டம் 2-வது கட்டம் மற்றும் CI, AC & P.V.C. குழாய்களே விநியோகத் திட்டத்திற்காக இணேத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி—பகுதி IV. | K-2 | 5 18 | ரூ. 1,180 (ரூபாய் ஆயிரத்து நூற்றி எண்பது மட்டும்). |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் பிரிவு, 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி அலுவலகத்திலிருந்து 18—9—1971 வரை எல்லா வேலே நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின் உறை மீது வேலேயின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

20—9—1971 மாலே 3·30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளரால் (P. H. E.) அல்லது அவரால் நியமிக்கப்படும் அலுவலரால் அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலேயில் பிரிக்கப்படும்.

முடிவுத் தேதிக்குப் பின் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்பட மாட்டாது.

கே. கோவிந்த மேனன்,
மேற்பார்வைப் பொறியாளர் (P.H.E),
மதுரை-2.

தேதி : 18—8—1971.

(த. 6)

ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு அரசு

## குடிநீர், வடிகால் வாரிய சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், சென்னை சார்பிலும் அதற்காகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்காகக் கீழே குறிப்பிட்டுள்ள முறையில், துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20-9-1971 மாலை 3-00 மணிவரை, இத்துறையில் மேற்பார்வைப் பொறியாளரால் (பொது சுகாதார பொறியியல் சர்க்கிள்) ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3-30 மணிக்கு சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.பொ. சர்க்கிள்) அவர்களால் அல்லது அவரால் அமர்த்தப்படுபவரால் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| வேலையின் விவரம். | கட்டுத் தொகை: ரூ. |
|---|---|
| 1 ராமநாதபுரம் நீர் வழங்கு திட்டம், ஒருமித்த கிணறு கட்டுமானம். (Collection well) (Cap. 6·00 Mld.) | 6,000 |
| 2 சிவகங்கா நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு. (Cap. 5·0 Mld.) | 5,000 |
| 3 திருச்சி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு. (Cap. 50 Mld.) | 45,000 |
| 4 கோயில்பட்டி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 15 Mld.) | 15,000 |

இந்த நான்கு வேலைகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் பொ. சு. பொறியியல் சர்க்கிள், மதுரை அவர்களால் பெறப்பட்டு அவரால் திறக்கப்படும்.

| | |
|---|---|
| 5 ஆம்பூர் நீர்வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 9 Mld.) | 10,000 |
| 6 வாணியம்பாடி நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 9 Mld.) | 10,000 |
| 7 திருப்பத்தூர் நீர் வழங்கு திட்டம் ஒருமித்த கிணறு கட்டுமானம். (Cap. 10 Mld.) | 12,000 |

5, 6, 7 வேலைகளுக்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொ. சு. பொறியியல் சர்க்கிள், சென்னை அவர்களால் பெறப்பட்டு, அவரால் திறக்கப்படும்.

1 முதல் 7 முடிய ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்த வடிவம் —மொத்தத் தொகை.

இந்த வேலைகள் ஒவ்வொன்றும் முடிக்கப்பட வேண்டிய கால அளவு : 6 மாதங்கள்

1 முதல் 7 முடிய ஒவ்வொரு வேலைக்கும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 10.00 (ரூபாய் பத்து மட்டும். இத்துடன் விற்பனை வரி.)

ஒப்பந்தப் பத்திரங்களுக்குரிய தொகையை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ செலுத்தி நிர்வாகப் பொறியாளர் 1/14, எட்வேர்டு எல்லியட்ஸ் சாலை, பொது சுகாதாரம் பொறியியல் டிவிஷன், சென்னை-4 அவர்களிடமிருந்து 25-8-1971 முதல் பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணம், எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிகளை வழங்க, கால நீட்டிப்பு தரப்படமாட்டாது.

எவ்விதக் காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் பகுதியாகவோ, முழுதுமாகவோ நிராகரித்துவிட ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்கும் அதிகாரமுள்ள அதிகாரிக்கு உரிமை உண்டு.

**தலைமைப் பொறியாளர்,**

பொது சுகாதாரப் பொறியியல் மற்றும் எம்.பி.எல். ஒர்க்ஸ்.

(த. 8)

ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு அரசு

## பொதுப் பணித்துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 22—9—1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்—

   மன்னார்குடியில் சப்-டிவிஷனல் மாசிஸ்ட்ரேட் கோர்ட் கட்டடங்கள் கட்டுதல்.

2. ஒப்பந்த வகை—L. S.
3. பிணைப்புப்பணம்—ரூ. 2,750. (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக்கொள்ளப்படும்.)
4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 30.

   அரசினர் கருவூலத்தில் பொ. ப செலுத்துத் தொகை 111 மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் செயற் பொறியாளர், கல்லணைக் கால்வாய், தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.

5. விற்பனை வரி: ரூ. 1.05 அரசினர் கருவூலத்தில் XII. விற்பனை வரி 'பி' பற்றுச் சீட்டு மாநில விற்பனைவரி சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி எனும் தலைப் பில் செலுத்தல் வேண்டும்.
6. கட்டடங்கள் கட்டுவதற்கான கால அளவு

   8 மாதங்கள்.

7. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள் :— 16—8—1971

**ஆர். வேணுகோபால்,**

மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.)

தஞ்சாவூர் வட்டம்.

9—7—71. தஞ்சாவூர்.

(த. 15)

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தெற்குக் கோட்டம்

### ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தென்சென்னை புறநகர்ப் பகுதித் திட்டத்திற்கான கீழ்க்கண்ட வேலைகளுக்காக வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயர் ஆகியவை உறைமீது குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட தனித் தனியான ஒப்பந்தப் புள்ளிகள் அதனதன் பெயர்களுக்கு எதிரில் குறிப்பிடப்பட்ட நாட்களில் மாலை 3 மணிக்கு முன் கிடைக்குமாறு அடியில் கையெழுத்திட்டவரால் வரவேற்கப் படுகிறது. ஒப்பந்தப் புள்ளிகள் அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| எண். | வேலையின் விவரம். | வேலையின் மதிப்பீடு. ரூ. | கட்டுந் தொகை. ரூ. | ஒப்பந்த புள்ளி விலை. ரூ. | கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| 1 | பெசந்த் நகரில் ஒன்றில் இரண்டு எண் 3 படுக்கை அறைகள் கொண்ட குடியிருப்புகள் (பிளாட்ஸ்) உள்ள 3 கட்டடங்கள் கட்டுவது—(பிளாக்குகள்) அணி-1. | 1,92,000 | 2,880 | 10·30 | 21—9—71. |
| 2 | பெசந்த் நகரில் ஒன்றில் இரண்டு எண் 3 படுக்கை அறைகள் கொண்ட குடியிருப்புகள் (பிளாட்ஸ்) உள்ள 3 கட்டடங்கள் கட்டுவது—(பிளாக்குகள்) அணி-2. | 1,92,000 | 2,880 | 10·30 | 21—9—71. |
| 3 | பெசந்த் நகரில் ஒன்றில் இரண்டு எண் 3 படுக்கை அறைகள் கொண்ட குடியிருப்புகள் (பிளாட்ஸ்) உள்ள 3 கட்டடங்கள் கட்டுவது—(பிளாக்குகள்) அணி-3. | 1,92,000 | 2,880 | 10·30 | 22—9—71. |
| 4 | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகக் கட்டட எல்லைக்குள் சிற்றுண்டி விடுதி, அரங்கம், அலுவலகம் ஆகியவற்றிற்காக 4 மாடிகள் கொண்ட ஒரு கட்டடம் கட்டுவது. | 1,90,000 | 2,850 | 10·30 | 22—9—71. |
| 5 | பெசந்த் நகரில் டி.டி. எண் 2பி/70யின்படி, ஒன்றில் 4 ஆக சிறிய இரு அறைகள் கொண்ட எல்.ஐ.சி. குடியிருப்புகள் 6 கட்டடங்கள் கட்டுவது அணி **எண் 1.** | 2,16,000 | 3,240 | 15·45 | 22—9—71. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | பெசந்த் நகரில் டி.டி. எண் 2பி/70யின்படி, ஒன்றில் 4 ஆக சிறிய இரு அறைகள் கொண்ட எல்.ஐ.சி. குடியிருப்புகள் 6 கட்டடங்கள் கட்டுவது அணி எண் 2. | 2,16,000 | 3,240 | 15·45 | 23—9—71. |
| 7 | பெசந்த் நகரில் டி.டி. எண் 2பி/70யின்படி, ஒன்றில் 4 ஆக சிறிய இரு அறைகள் கொண்ட எல்.ஐ.சி. குடியிருப்புகள் 6 கட்டடங்கள் கட்டுவது அணி எண் 3. | 2,16,000 | 3,240 | 15·45 | 23—9—71 |
| 8 | பெசந்த் நகரில் டி.டி. எண் 2பி/70யின்படி, ஒன்றில் 4 ஆக சிறிய இரு அறைகள் கொண்ட எல்.ஐ.சி. குடியிருப்புகள் 6 கட்டடங்கள் கட்டுவது அணி எண் 4. | 2,16,000 | 3,240 | 15·45 | 23—9—71. |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மற்றும் பிறதகவல்களை நிர்வாகப் பொறியாளர், தெற்குக் கோட்டம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை-35-ல் உள்ள அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 2 மணி வரை பணம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். குமரேசன்,
நிருவாகப் பொறியாளர் (தெற்கு).

(தூ. 94)

---

## ஒப்பந்தப் புள்ளி

## தமிழ்நாடு அரசு

### அரிசன நலத்துறை

கீழ்க்கண்டவற்றை வழங்குவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இந்த ஒப்பந்தப் புள்ளிகள் ஒவ்வொன்றும் தனித் தனியாக அரிசன நலத்துறைஇயக்குநரிடம் 16—10—1971 மாலை 4 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பி வைக்கப் பட வேண்டும். இலவசமாகப் புகை வண்டி மூலமாக, சம்பந்தப்பட்ட மாவட்ட நல அலுவலரின் தலைமை அலுவலகத்தில் இந்தப் பொருள்கள் கிடைக்கவேண்டும். பழுது பார்க்கும் வசதிகள் பற்றியும் இந்த ஒப்பந்தப் புள்ளியில் விவரங்கள் தரப்படவேண்டும்.

எந்தப் பொருளுக்காக ஒப்பந்தப் புள்ளி அனுப்பப் படுகிறதோ, அதன் பெயர் உறை மீது தெளிவாகப் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எந்த விதக் காரணமும் காட்டாமல், ஒப்பந்தப் புள்ளியை ஏற்றுக் கொள்ளவோ, தள்ளிவிடவோ, முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ளவர், அரிசன நல இயக்குநர்.

ஒப்பந்த நிபந்தனைகள் நிறைவேற்றப் பட்டபின் ஒப்புதல் பெற்ற வீதத்தில் மாவட்ட நல அலுவலர் பணத்தினைப் பட்டுவாடா செய்வார்.

பொருள்களுக்கான வரைக் குறிப்புகளை அரிசன நல இயக்குநர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 இடமிருந்து 11—10—71-க்கு முன் எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 3 வரை பெற்றுக் கொள்ளலாம்.

மாதிரிக் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவற்றை 23—10—71 அன்று பார்வையிடுவதற்காக அரிசன நல இயக்குநர் அலுவலகத்திற்கு ஒப்பந்தப் புள்ளி தாரரின் செலவில் கொண்டு வர வேண்டும்.

சென்னையில் பார்வையிடும் போது காட்டப்பட்டது போன்ற அதே தரத்திலுள்ள பொருட்களையே மாவட்ட நல அலுவலர்களுக்கு வழங்க வேண்டும். மற்றப்படி அவை தகுந்த தொழில் நுணுக்க அதிகாரியினால் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வழங்க வேண்டிய பொருட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது பற்றித் தெரிவிக்கப்படும். அவர் அதற்கான ஒப்பந்தத்தை ஸ்டாம்ப் தாளில் கையெழுத்திட்டுத் தருவதோடு மொத்த மதிப்பீட்டில் 10 சத வீதத்தைக் காப்புத் தொகையாக ஒழுங்காகவும் விரைவாகவும் பொருட்களை வழங்குவதன் பொருட்டுக் கட்ட வேண்டும்.

வழங்க வேண்டிய பொருள்கள்.

1. கொல்லன் வேலைக் கருவிகள்.
2. தச்சு வேலைக்கான கருவிகள்.
3. வெட்டுக் கருவிகள் (Loggings)

இயக்குநர்,
அரிசன நலத்துறை,
எழிலகம், சென்னை-5.

(தூ.92)

# தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

## ஒப்பந்தப் புள்ளி

கடித எண் 101/71/எச்.டி./தேதி 1—9—71.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், கீழ்க்கண்ட பணிகளுக்காக உறையின்மீது வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயர் எழுதப் பெற்ற மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து நிர்வாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியம், 1-வது கோட்டம், 35/37, ஜெகாங்கீர் தெரு, 2-வது கடற்கரை சாலை, சென்னை-1ல் 1—10—71 மாலை 3 மணி வரை வரவேற்கப் படுகிறது. ஒப்பந்தப் புள்ளிகள் அடியில் கையெழுத்திட்டவரால் அன்றே மாலை 3-05 மணிக்கு, அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | ஒப்பந்த விவரம். | வேலையின் தோராய மதிப்பீடு. ரூ. | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (திருப்பித்தரப் படமாட்டாது). |
|---|---|---|---|---|---|
| 1 | இராயபுரம் டென்ஸ் வேரிட்டர்ஸ் எல்லைக்குள் ஆர். எஸ். எண் 499-ல் டி.டி. 7/71-ன்படி 4 மாடிக் கட்டடங்கள் (32 குடியிருப்புகள் கொண்ட பிளாக்-1, 24 கொண்ட பிளாக்-1) கட்டுவது—அணி எண்-1 (பிளாக் 1 & 2). | முழுத் தொகை. | 3,08,000 | 4,620 | ரூ. 20 + விற்பனை வரி. |
| 2 | இராயபுரம் டென்ஸ் குவார்ட்டர்ஸ் எல்லைக்குள் ஆர். எஸ். எண் 499-ல் டி.டி. 7/71-ன்படி 4 மாடிகள் கொண்ட குடியிருப்புகள் (1 பிளாக்கில் 32 குடியிருப்புகள் கொண்ட 2 பிளாக்குகள் 24 கொண்ட 2 பிளாக்குகள் கட்டுவது. அணி-2(பிளாக் 1 முதல் 6). | முழுத் தொகை. | 6,16,000 | 9,240 | ரூ. 20-ம்+விற்பனை வரியும். |
| 3 | அணி-3 (பிளாக்குகள் 7 முதல் 10). | முழுத் தொகை. | 6,16,000 | 9,240 | ரூ. 20-ம்+விற்பனை வரியும். |
| 4 | (ஒரு பிளாக்கில் 32 குடியிருப்புகள் கொண்டது ஒன்று) அணி-4 (பிளாக் எண் 12). | முழுத் தொகை. | 1,76,000 | 2,640 | ரூ. 15-ம்+விற்பனை வரியும். |
| 5 | (ஒரு பிளாக்கில் 24 குடியிருப்புகள் கொண்ட பிளாக்-1) அணி-5 (பிளாக் எண் 11). | முழுத் தொகை. | 1,32,000 | 1,980 | ரூ. 15-ம்+விற்பனை வரியும். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம்-1, 35/37, ஜெகாங்கீர் தெரு, 2-வது கடற்கரை சாலை, சென்னை-1 அலுவலகத்திலிருந்து 15—9—71 முதல் 29—9—71 வரை எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11 மணியிலிருந்து மாலை 3 மணி வரை, விற்பனை வரியுடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்குப் பணம் கட்டிய செலானைத் தந்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்கான விலையினை சென்னை சைதாப்பேட்டையிலுள்ள ஸ்டேட் பாங்கில் "Personal Deposit Account (P.D. A/c) of the Executive Engineer, Slum Clearance Board Division I" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். விற்பனை வரி "XII—Sales tax B receipt under Sales tax Act" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். பொது விற்பனை வரியும், இரு செலான்களும் தரப்பட வேண்டும்.

ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லாவற்றையுமோ எந்தவிதக் காரணமும் காட்டாமல் தள்ளிவிடும் உரிமை உண்டு.

**எம். ஆத்மநாதன்,**
நிருவாகப் பொறியாளர்,
குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
(கோட்டம்-I).

(த, 93)

---

## பயிற்சி

### தமிழ்நாடு அரசு

**தொழில் நுட்பக் கல்வித் துறை, சென்னை—25.**

**அறிக்கை**

மைய பன்னுட்பத் தொழில் பள்ளியில் (மத்திய பாலிடெக்னிக்), அடையார், சென்னை 20-ல் (1) உலோகவியல் (மெட்டலார்ஜி), (2) மருத்துவ தளவாட தொழில் நுட்பவியல் ஆகியவற்றில் உயர் டிப்ளமா வகுப்புக்குச் சேர்த்துக் கொள்ளல்.

தகுதியுள்ளவர்களிட மிருந்து இந்த வகுப்பில் சேர்வதற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

சேருவதற்குரிய தகுதி :

**(1) உலோகவியலில் உயர் டிப்ளமா வகுப்பு —**

இந்த வகுப்பில் சேர விரும்புகின்றவர்கள் இயந்திரப் பொறியியலில் அங்கிகரிக்கப் பட்ட பட்டமோ அல்லது டிப்ளமாவோ பெற்றிருக்க வேண்டும்.

**(2) மருத்துவத் தளவாடத் தொழில் நுட்பவியலில் உயர் டிப்ளமா வகுப்பு.**

இந்த வகுப்பில் சேர விரும்புகின்றவர்கள் மின்சாரப் பொறியியல் அல்லது எலக்ட்ரானிக்ஸ்ஸில் அங்கீகரிக்கப்பட்ட பட்டமோ அல்லது எலக்ட்ரானிக்ஸ் அல்லது எலக்ட்ரானிக் விருப்பப் பாடமாக அமைந்த மின்சாரப் பொறியியலில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளமாவோ பெற்றிருக்கவேண்டும்.

**வகுப்பு விவரம்**

**உலோகவியலில் உயர் டிப்ளமா வகுப்பு**

இந்த வகுப்பு, படிப்புடன் தொழிற்சாலைகளில் நேரடிப் பயிற்சி முறையில் (Sandwich Pattern), ஆறுமாதக் காலம் கொண்ட 3 பருவத்திற்கு (Three Semesters) நடைபெறும்.

**வகுப்பின் நோக்கம்**

இந்த வகுப்பின் நோக்கம் இந்த வகுப்பில் வெற்றி பெற்றவர்கள் உலோகவியல் வல்லுநர்களாகப் பணியாற்றக் கூடிய அளவுக்கு, உலோகவியல் அடிப்படை மற்றும் நவீன மேம்பாடு முறைகளைப் பரிசோதனை வேலைகளுடன் தொடர்புபடுத்திக் கற்பிப்பதேயாகும். இதனல் தொறிற்சாலைகளில், மேற்கொள்ளப்படும் பல்வேறு உலோகவியல் முறைகளில் மாணவர்களுக்குப் பழக்கம் ஏற்படுத்துவதற்காக அவர்களுக்குப் படிப்புடன் நேரடிப் பயிற்சியும் இணைந்த (Sandwich Type) முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**மருத்துவத் தளவாடத் தொழில் நுட்ப வியலில் உயர் டிப்ளமா வகுப்பு**

இவ்வகுப்பு ஒவ்வொன்றும் 6 மாதக் காலம் கொண்ட 3 பருவத்திற்கு (Three Semesters) நடைபெறும்.

**வகுப்பின் நோக்கம்**

இவ்வகுப்பின் நோக்கம், மருத்துவ மனைகளில் பயன்படுத்தப்படும் மின்சார—மருத்துவ, இயந்திர தளவாடங்களைப் பராமரிப்பது, பழுது பார்ப்பது ஆகியவற்றில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதேயாகும்.

ஒவ்வொரு பருவத்திற்கும் படிப்புக் கட்டணமாக ரூபாய் 90-ம், சிறப்புக் கட்டணமாக ரூபாய் 20-ம் இவ்வகுப்புகளுக்கு வசூலிக்கப்படும். வகுப்பில் சேரும் போது, கருவிகள், தளவாடங்கள் தொலைந்து போதல் அல்லது பழுதுபட்டு விடுதல் வகையில் ஒவ்வொருவரும் கட்டுத் தொகையாக ரூபாய் 25-00செலுத்தவேண்டும்.

மேற் கூறிய வகுப்புகளில் சேர விரும்புகின்றவர்கள், இதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள மனுவைப் பூர்த்தி செய்து, பதிவுக் கட்டணமாக ரூபாய் 5·00 க்கு கிராஸ் செய்யப்பட்ட போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும். முதல்வர் மைய பன்னுட்பத் தொழிற் பள்ளி (மத்திய பாலிடெக்னிக்), அடையார், சென்னை-20 அவர்கள் அலுவலகத்தில் கிராஸ் செய்யப்பட்ட ஒரு ரூபாய் போஸ்டல் ஆர்டர் செலுத்தி மனுத்தாள்களை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள், முதல்வர், மைய பன்னுட்ப தொழிற் பள்ளி, அடையார் சென்னை-20 அவர்களுக்கு 20—9—1971 அன்றோ அல்லது அதற்கு முன்போ வந்து சேர வேண்டும்.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25.**

(த. 66)




“உரம் செய்வதை உற்றார் செய்யமாட்டார்'' என்பது பழமொழி. இது பழமொழியாயினும், வாய்மை மொழியென நிரூபித்துள்ளார் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த காரமடையிலுள்ள திரு ஏ. ஜி. ரெங்கநாதன் அவர்கள். இவர் கடந்த சம்பா பட்டத்தில் ஐ.ஆர். 20 நெல்லைப் பயிர் செய்து ஏக்கருக்கு 3,553 கிலோ மகசூல் எடுத்துள்ளார். இதனால் இவருக்கு ஏக்கருக்கு ரூ. 1,300 நிகர லாபமும் கிடைத்துள்ளது.

'' எனக்கு ஐ.ஆர். 20 நெல் சாகுபடியில் அமோக விளைச்சல் கிடைத்ததற்கும், அதிக லாபத்திற்கும் காரணம், நான், தழை, மணி, சாம்பல் சத்துக்கள் நிறைந்த என். பி. கே. MF காம்ப்ளக்ஸ் உரங்களை மண் பரிசோதனைச் சிபாரிசுப்படி இட்டேன்; இதனால் நல்ல பலன் கண்டேன்.'' இவ்வாறு திரு ஏ. ஜி. ரெங்கநாதன் கூறுகிறார்.

ஐ.ஆர். 20 நெல்லைப்பயிர்செய்ததில் இவருக்குக் கிடைத்துள்ள மகசூல், மற்ற எவரும் பெறாத மகசூலாகும். ஏன், வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் கூட அதிகபட்சம் ஏக்கருக்கு இரண்டே முக்கால் டன் அளவே விளைந்துள்ளது. ஆகவே தான், காரமடை திரு ஏ. ஜி. ரெங்கநாதன் ஏக்கருக்கு மூன்றரை டன் அளவு, பெற்றுள்ள மகசூல் அமோகமானது, ஆச்சரியப்படக்கூடியது, பாராட்டக் கூடியது என்று பலர் கருதுகின்றனர்.

'' இச் சாதனையைப் புரியத் தூண்டுகோலாய் அமைந்தது மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனம் ஆகும். அந்த நிறுவனத்திற்கு எனது நன்றி'' என்கிறார் திரு ஏ. ஜி. ரெங்கநாதன். சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை. ஆகவே, சுடர் விளக்கான உழவர் குழாத்திற்கு, மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் தூண்டுகோலாய் உதவுகிறது. மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தும் ''விஞ்ஞான விஸ்தரிப்புத் திட்டத்தின்'' கீழ் உழவர்களின் கழனிகளிலேயே நிரூபணங்களை அமைத்து உயர் விளைச்சல் ரகங்கள், சமச்சீர் உரமிடுதல், பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக்கடைப்பிடித்தல், பல பயிர் சாகுபடி செய்தல் ஆகியவை, செயல்முறையில் செய்து காண்பிக்கப்படுகின்றன. இம்மாதிரியான நிரூபணத்திற்காகவே, திரு ஏ. ஜி. ரெங்கநாதன் அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவரது தோட்டத்தில் இரண்டு ஏக்கர் பரப்பளவு, நிரூபணத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த நிரூபண வயலில்தான் ஐ. ஆர். 20 நெல் பயிரை மதராஸ் பெர்டிலைசர்ஸ் நிறுவனத்தாரின் சிபாரிசுப்படி பயிர் செய்து அவர் அமோக விளைச்சலைப் பெற்றார்.

ஐ.ஆர். 20 நெல் பயிரிடுவதற்கு முன், ''உழவர்கள் தங்கள் மண்ணைப் பரிசோதனை செய்து மண் வளத்திற்கு ஏற்ப உரமிடுவது லாபகரமானது'' என்பதை அறிந்த மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனத்தார், திரு ரெங்கநாதன் தோட்டத்து மண்ணையும் தங்களது மண் பரிசோதனை நிலையத்திலேயே பரிசோதனை செய்தனர். சென்ற ஆகஸ்டு, முதல் வாரத்தில் இரண்டு ஏக்கரிலும் நடவு செய்யத் தேவையான 20 சென்ட் நாற்றங்காலில், 30 கிலோ விதை நாற்றுவிடப்பட்டது. நாற்றங்காலை நல்ல முறையில் உழுது, புழுதி ஆன பின் நாற்றங்காலுக்கு ஏக்கருக்கு 50 வண்டி வீதம் தொழு உரம் போட்டு, நெல் விதைகளை அக்ர சான் மருந்தில் கலந்து பின் தெளிக்கப்பட்டது. நாற்றுப் பறிக்கப் பத்து நாட்களுக்கு முன்பு நாற்றங்காலில் என்டிரின், டைத்தேன் மருந்துகள் கலந்து தெளிக்கப்பட்டது.

நடவு வயலை நன்றாக உழுது ஏக்கருக்கு இருபது வண்டி வீதம் தொழு எரு போடப்பட்டது. பிறகு, நடுவதற்கு முன், ஏக்கருக்கு 15 : 15 : 15 MF காம்ப்ளக்ஸ் உரம் 120 கிலோவை இட்டு, உழுது, பின் பரம்பு அடித்து, நடவு செய்யப்பட்டது. செழுமையாக இருந்த நாற்றங்காலிலிருந்து 24 நாட்கள் வயதான நாற்றுகளைப்பறித்து நடவு செய்யப்பட்டன. 20 செ.மீ.க்கு 10 செ.மீ. இடைவெளிவிட்டு நடப்பட்டது.

நட்டபின், சீக்கிரமே பயிர் பச்சை கொண்டு, நல்ல முறையில் வளர்ந்தது. நெற்பயிருக்கு நடவு செய்யும்போது சமச்சீர் அளவில் அடியுரமாக காம்ப்ளக்ஸ் உரமிடுவது மிகவும் முக்கியம். அதனால் பயிருக்கு உடனடியாக உணவு கிடைத்து அதிக தூர் வெடித்து, பயிர் செழுமையாக வளரும். அவ்வாறே, நட்டபின், கதிர் வாளிப்பாகப் பெருகுவதற்கும், மணிகள் எல்லாமே முற்றுவதற்கும் நட்ட 22-ஆம் நாளும், 45-ஆம் நாளும் மேலுரமாக யூரியா ஏக்கருக்கு 50 கிலோ வீதம் ஒவ்வொரு தடவையும் இடப்பட்டது. அதாவது மொத்தமாக ஏக்கருக்கு 100 கிலோ யூரியா

இரண்டு தடவைகளில் மேலுரமாகத் தூவப்பட்டது. இவ்வாறு, அடியுரமாக ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்தும், 18 கிலோ மணிச்சத்தும், 18 கிலோ சாம்பல் சத்தும், மேலுரமாக ஏக்கருக்கு 46 கிலோ தழைச் சத்தும் இடப்பட்டன. ஆகவே, மொத்தமாக 64 : 18 : 18 கிலோ என்ற அளவில் ஐ.ஆர். 20 நெல் பயிருக்கு உரமிடப்பட்டது. ஆனால் மண் பரிசோதனை சிபாரிசு இல்லாத நிலங்களுக்கு 75 : 35 : 35 என்ற அளவில் உரச்சத்துக்களை இடவேண்டும். இது பொதுவான சிபாரிசு ஆகும். மண் பரிசோதனை செய்வதால், சரியான அளவு உரமிட்டு, அதிக லாபம் பெற முடியும்.

''ஏரினும் நன்றால் எருவிடுதல்;
கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு''

என்பதற்கு ஏற்ப, ஐ.ஆர். 20 பயிர் சாகுபடியில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதும் அவசியமாகும். திரு ரெங்கநாதன் அவர்கள் ஐ.ஆர். 20 நெல் பயிருக்கு நட்டதிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை என்ட்ரின், டைத்தேன், ஹீலியோடோக்ஸ், பாலிடால் ஆகிய மருந்துகளை மாற்றி மாற்றி மொத்தத்தில் ஐந்து முறைகளும் குருத்துப் பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பயிரைக் காக்கச் செவின் குருணைகளை இரண்டு முறைகளும் பயன்படுத்தினர். கோவை மாவட்ட உழவர்கள் பொதுவாகப் பயிர்களுக்கு மருந்தடிப்பதில் சலிப்பே பெறுதவர்கள். ஆகவே திரு ரெங்கநாதன் ஐ.ஆர். 20 நெற் பயிருக்குத் தொடர்ந்து மருந்து தெளித்ததில் ஆச்சரியமே இல்லை. இப்பயிர்ச் சாகுபடியில் திரு ரெங்கநாதன் அவர்களுக்கு எலித்தொல்லை தான் அதிகம். ஆகவே, எலிகள் பயிர்களை அழிக்காமல் இருக்கப் பயிரைச் சுற்றிலும் மின் வேலி கூட அமைத்தார். ஐ.ஆர். 20 பயிர் நன்றாக வளர்ந்து குலுங்கியதால், யாவரின் கவனத்தையும் ஈர்த்தது. இந்த வயல், கோவையிலிருந்து உதகை செல்லும் நெடுஞ்சாலையின் அருகில் இருந்ததால், சாலை வழியே செல்லும் எல்லோரின் கவனத்தையும் கவர்ந்தது. விதைத்த 135 நாட்களில் பயிர் அறுவடை செய்யப்பட்டது. திரு ரெங்கநாதனுக்கு ஐ.ஆர். 20 நெல் சாகுபடி செய்ய மொத்தம் ஏக்கருக்கு ரூ. 840 செலவாயிற்று. ஏக்கருக்கு $3\frac{1}{2}$ டன் விளைச்சலிலிருந்து ரூ. 2,100 வருமானம் கிடைத்தது. ஆகவே, செலவு போக ஏக்கருக்கு ரூ. 1,300 நிகர லாபத்தை அவர் பெற்றார். ஐ. ஆர். 20 நெல் சன்ன ரகத்தைச் சேர்ந்ததால், விற்பதில் சிரமம் இல்லை. அதே சமயத்தில் மூட்டைக்கு ரூ. 4 அதிகமாகவும் விலை கிடைத்தது.




ஐ.ஆர். 20 நெல்லைப் பயிரிட்டு திரு ரெங்கநாதன் செய்த சாதனையை மற்ற உழவர்களும் செய்து காட்டமுடியும். ஆகவே, அவரைப் போன்றே, ஐ.ஆர்.20 நெல் பயிர் செய்வோர், சமச்சீர் அளவில் மண் பரிசோதனை செய்து என்.பி.கே. MF காம்ப்ளக்ஸ் உரமிட்டுப், பயிர்ப் பாது காப்புச் செய்து, திருந்திய சாகுபடி முறைகளைக் கடைப்பிடித்தால் அமோக விளைச்சல் பெற முடியும்.

டி. கணபதி,
பயிற்சி, விளம்பர அலுவலர்,
மெட்ராஸ் பெர்ட்டிலைசர் லிமிடெட்



பேச்சு, கருத்தின் தொகுப்பு. ஆகையால், பேச்சு பயனும் சுவையும் தருவதாக இருக்க, கருத்துக்களைக் கவனித்தாக வேண்டும். கருத்து சிந்தனையின் விளைவு. சிந்தனை, காண்பன கேட்பனவற்றிலே தொடர்ந்து ஏற்படும் ஆர்வம். ஒரே பொருள், காண்போருக்கு வெவ்வேறு சிந்தனையைக் கிளறி வெவ்வேறு கருத்தை அண்டி, அதற்கேற்ற முறையிலே, பேச்சு பிறக்கச் செய்யும். வேப்பிலை, வைத்தியர், பூசாரி எனும் இருவருக்கும் வேறு வேறான எண்ணம் தருவது போல.


குறளகம்
சென்னை.1
உங்களுக்கு வேண்டிய
எல்லாமே
இங்கே கிடைக்கும்
20461
20462
20463
20464, 20465
கதர்-
கைத்தொழில்
அங்காடி
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்



# தேரையும் சேயிழையும்



**இலக்கியமித்தன்**

தேரை—என்பது தவளைக் குடும்பத்தில் தோன்றிய ஒன்று; இந்தத் தேரை குழந்தையின் மேல் விழுந்தால் குழந்தை மெலிந்துவிடும் என்கிற மூட நம்பிக்கை இன்னும் மக்களிடமிருந்து முழுதுமாக மறைந்தபாடில்லை. தேரைக்கும் குழந்தையின் மெலிவுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. இதுபோலவே,

தேரை—விழுந்த தேங்காயைப் பலர் பயன்படுத்துவதில்லை. தேரைவிழுந்த தேங்காயின் உள்ளீடான பருப்பு வளர்ச்சியின்றித் திரைத்துப் போயிருக்கும். இது, தென்னையில் தோன்றும் ஒரு வகை நோய். இதற்கும் தேரை என்று பெயரிட்டு வழங்குகிறோமே தவிர, தவளைக் குடும்பத்தில் தோன்றிய தேரைக்கும், தேங்காயின் உள்ளீடான பருப்பைத் திரைத்து மெலிய வைக்கும் தேரை நோய்க்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. 'தேரையார் தெங்கிளநீர் உண்ணார் பழிசுமப்பர்' என்னும் தமிழ் நாவலர் சரிதம் இதனையுணர்த்தும்.

தேரை— நாம் முன்னர்க் குறிப்பிட்டது போல் தவளைக் குடும்பத்தில் தோன்றி மரத்தில் வாழும் வாழ்க்கையை மேற்கொண்டன; இவற்றில், மரத்தில் வாழ்வதைவிட்டு, மண்ணுக்கே திரும்பி வந்துவிடுவனவும் உண்டு.

தேரை—கல்லுக்குள் உயிர் வாழ்வதைச் சிற்பிகள் கண்டாய்ந்து தெளிவுறுத்துகின்றனர். 'கல்லினுள் தேரைக்கும்' என்னும் கவிஞர் வாக்கும் இதனை உறுதிப்படுத்தும். இது தவிர,

தேரையார்—என்னும் சித்தர் ஒருவர் பண்டைத் தமிழகத்தில் மருத்துவத் துறையில் சிறந்து விளங்கினார். இவரைத் தரு சௌமியரின் மாணவர் என சிலரும் ;கத்தியரின் மாணவர் எனச் சிலரும் கூறுவர்.

தேரையார்—தாம் வாழ்ந்த காலத்தில், அரிதின் முயன்றும் நீக்கமுடியாத அரசன் ஒருவனின் தலைவலியைப் போக்கினார் என்பர். அதாவது, தேரையார், அரசனின் கபாலத்திற்குள் ஒரு தேரை இருப்பதைக் கண்டறிந்தார். பின், சம்மோகினி என்னும் ஒரு பச்சிலையின் உதவியால் அரசனுக்கு மயக்கத்தை உண்டாக்கி, அவனுடைய கபாலத்தைத்திறந்து, அங்கிருந்த தேரைக்கு ஒரு நீர்க்கிண்ணத்தைக் காட்டினார். அதைக் கண்டதும் அந்தத் தேரை நீர்க்கிண்ணத்திற்குள் பாய்ந்தது. உடனே, சந்தான கரணி என்னும் மற்றொரு பச்சிலையின் உதவியால், திறந்த கபாலத்தை முன்போல் பொருத்தித் தலை வலியைப் போக்கினார். இப்படி ஒரு கதை வழங்கி வருகிறது. வடமொழி நூலான போஜப் பிரபந்தத்திலும் இத்தகையதொரு கதை வழங்குகிறது. இவ்வாறு மருத்துவத் துறை வல்லுநராக விளங்கிய தேரையார் பதார்த்த குண சிந்தாமணி, நீர்க்குறி நெய்க்குறி சாத்திரம், தைல வருக்கச் சுருக்கம், வைத்திய மகவெண்பா, மணிவெண்பா முதலிய பல நூல்களையும் இயற்றி இலக்கியத் தொண்டும் புரிந்திருக்கிறார். அடுத்து,

தேரை—பழிச் சொல் பெற்றது போல் பழிக்கு ஆளான சேயிழை ஒருத்தியை நமக்கு முத்தொள்ளாயிரம் என்னும் சத்தான நூல் படம்பிடித்துக் காட்டுகிறது. முத்தொள்ளாயிரம், முடியுடையரசர் மூவரையும் பற்றிப் பாடப்பெற்ற இனிய-எளிய பாடல்களின் - வெண்பாக்களின் தொகுப்பு. இவற்றுள் ஒன்றே தேரையையும், அந்தத் தேரையைப்போல் பழியினைப் பெற்ற சேல்விழியாளையும் நமக்குக் காட்டுகின்றது. சேயிழையாளே பேசுவதாக அமைந்துள்ளது அந்தப் பாடல்!

'தேரை' பழிச்சொல் பெற்றது போல நானும் பழிச்சொல் பெற்றேன். ஆம்! தேங்காயைத் தேரை தின்னவில்லை; தேரை விழுந்ததாகக் கூறப்பெறும் தேங்காயினுள் தேரையும் காணப்பெறவில்லை! அது போலவே, திரண்ட-திண்ணிய தோள்களையுடைய— தோள்வலிவுடைய சோழ மன்னனுக்கும் எனக்கும் எத்தகைய தொடர்புமில்லை. எனினும், நான் சோழ மன்னனைக் காதலிப்பதாக — சோழமன்னனிடத்துக் காதல் கொண்டிருப்பதாகக் கருதி என் தாயும் என்னைக் கோல்கொண்டடித்துக் கடிந்து கொள்கிறாள். சோழ மன்னனை நான் கண்டது தவிர வேறு எத்தொடர்பும் கொண்டதில்லை. தேரையைப் போல் பழிசுமத்தப்படுகிறேன்!

''தேரை மீது பழிசுமத்தித் தூற்றுவது போல இந்த ஊர் மக்களும் என்மீது பழிசுமத்தி, என்னையும் சோழமன்னனையும் தொடர்பு படுத்தித் தூற்றுகின்றனர். உண்மையில் எனக்கும் சோழமன்னனுக்கும் எத்தகைய தொடர்புமில்லை! நான் மன்னனைப் பார்த்தது தவிர வேறு ஒரு பாவமும் செய்தறியேன். ஐயகோ! பழியோரிடம்! பாவம் ஓரிடமா? அப்படித்தானே இருக்கிறது என் நிலை'' என்று வேதனை கலந்த குரலில் அந்தச் சேல்விழியாள் பேசுவதை அப்படியே நமக்குப் படம்பிடித்துக் காட்டும் முத்தொள்ளாயிரப்பாடலைப் பாருங்கள்.

அன்னையும் கோல்கொண்டு
அலைக்கும் அயலாரும்
என்னை அழியுஞ்சொல்
சொல்லுவர்— நுண்ணிலைய
தெங்குண்ட தேரைப்
படுவழிப் பட்டேன்யான்
திண்தோள் வளவன்
திறத்து!

எதிர்பாராத
விருந்தினர்களா?



மகிழ்ச்சியூட்டும்
நெஸ்கா:பே வழங்கி
அவர்களை இனிய முகத்துடன்
உபசரியுங்கள்–5 செகண்டில்
ஒருகப் தயார்!




முற்றிலும் சுத்தமான காப்பி—தென்னிந்திய
காப்பி விதைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது

# நெஸ்கா:பே




உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே
ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!

ஒரு நெஸ்லெ தயாரிப்பு

"கண்கவர் கலைப்பொருட்களின் களஞ்சியம்" நமது தமிழகம். இதன் அரிய பொருட்களில் பத்தமடைப் பட்டுப்பாயும் ஒன்றாகும். அயல் நாடுகளிலிருந்து வருகை தருவோருக்குத் தமிழ் நாட்டிலிருந்து வழங்கப்படும் கலைப் பொருட்களில் ஒன்று பத்தமடைப்பாய் என்பது ஒரு மரபாகவே அமைந்துவிட்டது. ருஷ்ய நாட்டு முன்னாள் அதிபர் குருசேவ், திபெத் நாட்டு தலாய்லாமா, பஞ்சன்லாமா, இங்கிலாந்து ராணி எலிசபெத், மார்ஷல் டிட்டோ போன்ற உலகப் பெருமக்களுக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட பெருமை பத்தமடைப் பட்டுப் பாய்க்குரியது. மேலும் கவர்ச்சி தரும் கலைப் பொருளாக மட்டுமின்றி அன்றாடத் தேவைக்குப் பயன்படும் பொருளாகவும் இது பயன்படுகிறது.

சிறந்த பொருட்கள் எல்லாம் அது பிறந்த இடத்தின் பெயரைத் தாங்கி நிற்பது இயற்கையே. "கும்பகோணம் கொழுந்து வெற்றிலை", "விருதுநகர் வெள்ளரிப் பிஞ்சு" என்பது போலத்தான் பத்தமடைப் பட்டுப்பாய் தான் பிறந்த ஊரைப் பெற்று நிற்கிறது. பத்தமடை கிராமத்தில் உலகத்திலேயே எங்குமே நெய்யாத மிக நேர்த்தியான துணி போன்ற பட்டுக் கோரைப் பாய்களைத் தயார் செய்கிறார்கள். இதனைப் பெரும்பாலும் முஸ்லீம் பெருமக்களே நெசவு நெய்து, இங்குள்ள கூட்டுறவுச் சங்கத்திலே கொடுத்து வருகிறார்கள். 1954-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இச்சங்கம் 111 உறுப்பினர்களைக் கொண்டதாக அரசின் பார்வையில் நடைபெற்று வருகிறது.

## கோரை பதனமாகும் முறை

இந்தச் சங்கத்தில் 140, 120, 100, 50, 40, 30 என்னும் தரமுள்ள பாய்களை உறுப்பினர்கள் நெசவு செய்து கொடுத்து அதற்குரிய விலையைப் பெற்றுக் கொள்கிறார்கள். பொதுவாக, இந்தத் தரப் பாய்கள் இம் மாவட்டத்தில் ஓடிவரும் தாமிரபரணி நதிக் கரையின் ஓரத்திலுள்ள ஓடைகளில் வளரும் தாமிரபரணிச் சத்து மிகுந்த கோரைகளைக்கொண்டே நெய்யப்படுகின்றன. தமிழக அரசு இந்தச் சங்கத்திற்கு மருதூர் அணை கோரைக் காட்டின் ஒரு பகுதியையும், கருங்காடு கோரைக்காட்டையும் வெகுமதி அளித்துள்ளனர். இப்படிப்பட்ட கோரைகளை அறுவடை செய்து கொண்டு வந்து இந்தச் சங்கத்தின் மூலம் உறுப்பினர்களுக்குக் கட்டுக் கட்டாக ஒரு குறிப்பிட்ட விலையில் விற்கிறார்கள். இதனைப் பெற்ற உறுப்பினர்கள் வெய்யிலில் சில நாட்கள் காயப் போட்டு அவைகளைச் சிறு சிறு கட்டுகளாகக் கட்டித் தாம்பிரபரணி நதியின் கிளையான கன்னடியன் கால்வாயில் நன்றாக ஓடும் நீரில் சுமார் 7 அல்லது 8 நாட்கள் ஊற வைத்துத் தினமும் சென்று சுத்தம் செய்துவருவார்கள். கோரைகள் ஊறி ஊறி மேல் தோல் வெளியே வரும் பக்குவத்தில் அந்தக் கட்டுக்களை இல்லத்திற்கு எடுத்து வருவார்கள்.




இங்கிலாந்து ராணி எலிசபெத் சென்னை மாநகருக்கு வருகை தந்தபோது அவருக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களில் பத்தமடைப் பட்டுப் பாயும் ஒன்று. ஆயிரம் ரூபாய் வரை விலையுள்ள பட்டுப் பாய்களை எவ்வாறு நெய்கிறார்கள், பத்தமடைப் பட்டுத்தொழில் எந்த நிலையில் உள்ளது என்னும் விவரங்களைத் தருகிறது இந்தக் கட்டுரை.

## மயிரிழைபோல

ஊறிய கோரையை எண். 140, 120, 100 போன்ற பாய்களுக்குத் தரம் வாரியாக மேல் தோலை மட்டும் வெளியே எடுத்துக் கத்தியின் நுனி கொண்டு கீறுவார்கள். 100-ஆம் நெம்பர் பாய்க்கு ஒரு கோரையை ஐந்து கால்களாகக் கீறுகிறார்கள் என்றால் 120-க்கு 8 ஆகவும், 140-க்கு 10 ஆகவும் கீறி எடுப்பார்கள்.

இவ்வாறு கோரையானது மயிரிழைபோல வந்துவிடும். இப்படிப்பட்ட நிலையில் சாயம் பிடிப்பார்கள். சாயங்களைச் சங்கம் வாங்கிவந்து உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்கிறது. கொதிக்கும் நீரில் போட்டுக் கீறி எடுத்த கோரைகளைக் கட்டி வைத்துச் சாயம் பிடிப்பார்கள். இந்தச் சாயம் உறுதி வாய்ந்தது.

பின்பு, இந்தச் சங்கத்தில் இருக்கும் 100-ஆம் நிர் 80-ஆம் நிர் நூல்களை உறுப்பினர்கள் வாங்கிச் சென்று நூற்று, பசையிட்டு பாவுகளில் போட்டுத் தறியைத் தொடக்கம் செய்வார்கள். பின்பு பாவினில் மேற்சொன்ன கீறிய கோரைகளைத் தறியின் ஊடே கொடுத்து முறுக்கேற்றி நெசவு செய்வார்கள். இப்படிப்

பட்ட பாய் நாள் ஒன்றுக்கு நிர் 100-ல் $3\frac{1}{2}$ சாண் 120-ல் 3 சாண் 140-ல் 2 சாண் வரையும் நெசவு செய்வார்கள். பின்பு அதனை இருகரத்தினாலும், இறுக்கமாக நெருக்குவார்கள். அதனை தொழிலாளர்கள் கடத்துதல் என்று சொல்வார்கள். இதனால் பாதிப்பாய் இறுகும். இப்படியாக ஒரு முழுப்பாயினைத் தயார் செய்யக் கிட்டத்தட்ட நிர் 140-க்கு பாய்க்கு 15 நாட்களும் நிர் 120-க்கு 13 நாட்களும், 100-க்கு 10 நாட்களும் ஆகும். இப்படிப் பட்ட பாய்களைத் தறியிலிருந்து அறுத்து ஓரத்தைக் கட்டியும் தேய்த்தும் வழவழப்புச் செய்து, பூர்த்தியாக்கிச் சங்கத்தில் கொடுத்து அதற்குரிய விலையைப் பெற்றுக் கொள்வார்கள்.

சங்க உறுப்பினர்களில் சுமார் 30 பேர்கள் மட்டுமே இதனை நெய்கிறார்கள். குடும்பத்தினரும் உதவுகிறார்கள். இவர்களுக்கு நாள் ஒன்றுக்குச் சராசரியாக ஒரு நபருக்கு ரூ. 1 வரை தான் மொத்தக் கூலியாகக் கிடைக்கும் நிலை இருக்கிறது.

## ஒரு பாய் விலை ஆயிரம் ரூபாய்

நெம்பர் 140, 120, 100 கொண்ட பாய்களாலேதான் இப் பாய்க்குப் பெயரும் புகழும் வந்தது. இந்தத் தரத்தினை 9 அங்குலத்திற்குப் பாயின் இடையே வைத்துப் பார்த்தால் அந்தப் பாயானது 140 நூல்களை கொண்டதாக இருந்தால் அதனை 140 பாய் என்றும் 120 நூல்களைக் கொண்டதாக இருந்தால் அதனை 120 பாயென்றும் கூறுவார்கள். இங்கே உயர்தரப் பாய்களாக நிர் 140 தரப் பாய்களுக்கு மேலே நெய்வது இல்லை. இங்கிலாந்து ராணி எலிசபெத் அம்மையாருக்குச் சென்னை ராயல் இன்சூரன்ஸ் கம்பெனியாரால் 1953-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2-ஆம் தேதி வழங்கிய பாயை (சுமார் மதிப்பு ரூ. 1,000) பத்தமடை உயர்ரகப் பாய் நெசவாளர்களே 140 தரத்தில் நெய்து கொடுத்தார்கள்.



இதுவரை விஞ்ஞானத்தின் விருந்தை நாம் சுவைத்தவர்களே தவிர, சமைத்தவர்களில்லை. விருந்தை வெளிநாட்டார் படைத்து அழைத்தால் போய் அருந்திவிட்டு, பிறகு குறையும் கூறியிருக்கிறோமே தவிர நாம் அதிகமாக எதையும் கண்டுபிடிக்கவில்லை.

## உற்பத்திக் குறைவு

மேலும் 140, 120, 100 எண் பாய்கள் அதிக விலையில் இருப்பதால் எல்லோருமே வாங்க முடிவதில்லை. மேற்சொன்ன 30, 40, 50 தரமுள்ள பாய்களையே சங்கம் உறுப்பினர்களை நெசவு செய்து வரச் சொல்லுகிறது. இதற்குக் காரணம் இந்தப் பாய்கள் ரூ. 7 முதல் 20 வரை மதிப்புள்ளவைகளாக இருக்கின்றன. மேலும் இந்தப் பாய்களில் வேலைப்பாடுகளும், பெயர் பதிப்பதாலும், இந்தப் பாய்களும் விலை ஏற்றத்துடன் காணப்படுகின்றன. இந்தப் பத்தமடையிலே உறுப்பினர்கள் அல்லாதவர்கள் இந்த 30,40 எண் கோரைப் பாய்களையே நெய்கிறார்களே தவிரப் பட்டுப்பாயை நெய்வதில்லை. இவர்களும் சுமார் 20 குடும்பத்தினர் வரை நெசவு நெய்து இவ்வூர் வியாபாரிகளிடமே கொடுத்து விடுகிறார்கள். உறுப்பினர்களால் நெய்யப்பட்டு வரும் நடுத்தரப் பாயை இந்தச் சங்கமானது இந்தியாவிலும், தமிழகத்தினுள்ளும், வியாபாரிகளின் மூலம் அரசு விற்பனை நிலையத்தின் மூலமும் விற்பனை செய்து வருகிறது. ஆனால் பட்டுப்பாய்கள் அதிகம் விற்பனையாவதும் இல்லை. அதிகம் தயார் செய்யவும் முடிவதில்லை. மேலை நாடுகளின் வியாபாரத்திற்கு அனுப்பினால் அவர்கள் ரூ. 100-க்கு மேலும் ரூ. 1,000 வரையும் கேட்கிறார்கள்; அவர்களுக்கு உற்பத்தி செய்து அனுப்ப முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

மேலும் இந்தச் சங்க விளம்பரத்திற்காகவும், வியாபாரத்திற்காகவும், குற்றாலக் கிளை விற்பனையகத்தை இது உருவாக்கியுள்ளது. ஆனால் இந்தக் கிளை விற்பனை நிலையமானது குற்றால பருவக்காலத்தில் மட்டுமே விற்பனையை அதிகரித்துக் கொடுக்கிறது. மற்றைய மாதங்களில் இந்த கிளை, விற்பனை நிலையத்தை அமைப்பதில்லை.

பத்தமடை கூட்டுறவு பட்டுப் பாய்ச் சங்கம் ஆண்டுக்குச் சுமார் ரூபாய் 70,000 பெறுமானமுள்ள பாய்களை விற்பனை செய்து வருகிறது. அண்மையில் பொதுப் பணி அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்களும் கூட்டுறவு அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார் அவர்களும் பத்தமடைப் பட்டுப் பாய் கூட்டுறவுச்சங்கத்துக்கு வருகை தந்திருந்தார்கள்.




# நெய்வேலியும்... நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டி ஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

**சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ**
வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திரம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.





**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினல், பாலிவாலென்ட் பினல் கலவை.

**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தர வல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி-1**

FDSNLC946TM



---


# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



**தி என்பீல்டு இந்தியா லிமிடெட்**
சென்னை-19

# உலகம் சுற்றும் வாலிபர்கள்!



எட்டு வாலிபர்கள் 80 நாட்களில் 80 நகர்களைச் சுற்றிப் பார்க்கத் திட்டமிட்டு உலகைச் சுற்றிக் காரில் வலம் வந்தனர்.

ஜூன் 17-ஆம் நாள் லண்டனில் இரு சுற்றுப் பயணக் குழுவினர் காரில் உலகைச் சுற்றி வலம் வரப் புறப்பட்டார்கள். ஒன்று அமெரிக்கக் குழு. அடுத்தது ஆசியக் குழு. வெவ்வேறு வழியில் பயணமாகும் இந்த இரு குழுக்களும் இறுதியில் சந்திக்கவிருக்கும் இடம் மணிலா நகரமாகும். எனவே, இந்தச் சுற்றுப் பயணத்திற்கு லண்டன்-மணிலா ஜீப்னி எக்ஸ்பிரஸ் என்று பெயர் சூட்டியுள்ளனர்.

இதில் ஆசியக் குழுவைச் சேர்ந்தவர்கள் 8 பேர், பல ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிவிட்டுப் பாகிஸ்தான் வழியாக இந்தியா வந்துள்ளனர். இவர்கள், டெல்லி, ஆக்ரா, பம்பாய், பூனா, பெங்களூர் ஆகிய நகரங்கள் வழியாக ஆகஸ்டு 2-ஆம் தேதியன்று சென்னை மாநகர் வந்து சேர்ந்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த இந்தக் குழுவின் தலைவர் பெயர் பசோலா. குழுவில் ஒரு புகைப்படக்காரரும், டெலிவிஷன் படப் பிடிப்பாளரும், கார் மெக்கானிக்கும் இடம் பெற்றிருந்தனர்.

இதுவரை இவர்கள் கடந்து வந்துள்ள நாடுகள் 17. நகரங்கள் 50. சுற்றிய தூரம் 16,000 கிலோ மீட்டர்கள்.

இப் பயணத்திற்கு இவர்கள் எடுத்து வந்த ஊர்திகள் 3. ஸ்டாண்டர்டு கார் போன்ற சாயலிருந்தாலும், ஜீப் போன்று எந்தச் சாலையிலும் ஓடத்தக்க விதமாகக் காரை அமைத்திருக்கிறார்கள். வெளிநாட்டு இஞ்சினைப் பயன்படுத்தி, முழுக்க முழுக்க மணிலாவில் செய்யப்பட்டவை இந்தக் கார்கள்.

எனவே இந்தச் சுற்றுப் பயணத்தின் முக்கிய நோக்கம் எல்லா விதமான சாலைகளிலும் செல்ல உறுதியானதுதானா இந்த ஊர்தி என்று சோதனை செய்வதும், அதன் மூலம் பல்வேறு வெளி நாடுகளில் இந்த ஊர்திகளின் புகழைப் பரப்புவதுமாகும்.

பார்ப்பதற்குச் சற்றுப் புதுமையாக — வேடிக்கையாகக் காட்சியளிக்கும் இந்தக் கார்கள் பாலைவனங்களிலும், கடும் புயல் வீசும் பகுதிகளிலும், மழை, வெய்யில் எந்தப் பருவ நிலையிலும், ஓடத்தக்க விதமாக அமைக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எனவே இந்தப் பயணத்திற்கு, பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த கார் நிறுவனங்கள், விளையாட்டுச் சங்கங்கள், ஊர்திகள் ஓட்டுநர், பழுது பார்ப்போர் சங்கத்தார் ஆகியோர் உதவி புரிந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

பல நாடுகளைச் சுற்றிப் பார்த்ததில் பலவிதமான அனுபவம் பெற்றுள்ளனர் இந்தக் குழுவினர். இந்தியச் சாலைகள், கார் ஓட்டுவதற்குப் பிற நாடுகளை விட வசதியாக உள்ளன என்பது இவர்களின் கருத்து.

இவர்கள் அதிகச் சிரமப்பட்டது, ஈரான் நாட்டுப் பாலைவனங்கள் — ஆப்கானிஸ்தானத்திலுள்ள குறுகிய சாலைகள் ஆகியவற்றைக் கடக்கும்போது! பல நாடுகளில் இவர்களுக்குத் தொல்லை தந்தவை குறுக்கே பறக்கும் பறவைகளும், சாலையில் திரியும் விலங்கினங்களுமே!

இந்தியாவில் ஒரு புதிய அனுபவம்—டெல்லி அருகே இவர்கள் வந்த கார்களில் ஒன்று தலைகுப்புறக் கவிழ்ந்து விட்டது. ஆனால் நல்லவேளை, யாருக்கும் ஆபத்து இல்லாமல் அனைவரும் தப்பிவிட்டனர். கவிழ்ந்து விட்ட காரை அக்கம் பக்கக்


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி

தமிழரசு அலுவலகம்,

அரசினர் தோட்டம்,

சென்னை-2

கிராம வாசிகளின் துணையோடு அரும்பாடுபட்டுத் தூக்கி நிறுத்தி ஓட வைத்தனர்.

சென்னைக்கு வந்த இந்தக் குழுவினருக்குத் தமிழக-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கே. இராசாராம் அவர்கள் தலைமையில் பொதுப்பணி அமைச்சர் திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள் முன்னிலையில் ஒரு வரவேற்பு, கன்னிமாரா உணவு விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிலிப்பைன்ஸ் நாட்டின் கவுரவத் தூதர் திரு எம். ஏ. சிதம்பரமும், ஏர்பிரான்ஸ் நிருவாகி கே. ஆர். கோபாலனும் முன்னின்று இந்த வரவேற்பை நடத்தினர். வரவேற்பில் தமது குழுவினரை அறிமுகப்படுத்திய இந்த லண்டன்—மணிலா ஜீப்னி குழுத் தலைவர் திரு ரோனி பசோலா குழுவின் இளைஞரான புகைப் படக்காரரை (திரு வில்லி) அறிமுகப்படுத்தும்போது விபத்தில் ஏதாவது நேர்ந்திருந்தால் இந்த இளைஞரை இப்போது பார்த்திருக்க முடியாது என்று உருக்கமாகத் தெரிவித்தார். இவரை இளைஞர் என்று குறிப்பிட்டுத் தெரிவித்த போதிலும் குழுவினர் அனைவருமே இளைஞர்கள் தாம். கிருதாவும், ஹிப்பி கிராப்புமாக அவர்கள் ''தற்கால நாகரிகத்தில்'' மூழ்கியவர்களாகவே காணப்பட்டனர். துணிச்சல், உலகம் முழுவதும் சுற்ற வேண்டுமென்ற ஆவல், அவர்களது சுறுசுறுப்பில் தெரிந்தன.

அவர்களது துணிச்சலைப்பாராட்டிய அமைச்சர் திரு இராசாராம் அவர்கள், அந்த நாட்களில் (1957) அண்ணாவுடன் பம்பாய் வரை சிறிய காரிலேயே பயணம் செய்து திரும்பியதைச் (சுமார் 1,800 மைல்கள்) சுவைபடத் தெரிவித்தார்கள். விரைவில் சென்னைக்கு வரவேண்டும் என்பதற்காகக் காரில் வந்த மூவரும், ஒருவர் மாற்றி ஒருவராக இரவு பகலாக விடாது காரை ஓட்டிவந்ததை எடுத்துக் கூறினார்கள்.



உலகம் சுற்றும் வாலிபர்களின் ஊர்தியை சுற்றுலாத்துறை அமைச்சரும், பொதுப்பணித்துறை அமைச்சரும் பார்வையிடுகிறார்கள்.

1956-ல் இந்தியா முழுவதும் காரிலே சென்று சுற்றிப் பார்த்து வந்துள்ளதாகவும், அமெரிக்காவில் நியூயார்க் நகரிலிருந்து நயாகரா நீர்வீழ்ச்சியைக் காணக் காரில் சென்று வந்ததாகவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பொதுப்பணி அமைச்சர் பேசும் போது, தமிழ் நாட்டில் போக்குவரத்துக்கேற்ற நல்ல சாலைகள் உள்ளன என்றும், இதுபோன்று காரில் வலம்வரும் போட்டியைச் சென்னையிலும் நடத்த இவர்கள் முன் வரலாமென்றும் குறிப்பிட்டார்கள்.

சென்னையிலிருந்து இந்தக் குழுவினர் சிங்கப்பூருக்குச் சென்றனர். சிங்கப்பூருக்குக் கார் எப்படிச் சென்றது என்று கேட்கிறீர்களா? கடலில் தான்! கப்பல் ஏறிச் சென்றன கார்கள். நீர்ப்பகுதிகள் தவிர பிற நிலப் பரப்புகளில் இந்தக் கார்கள் மூலம் பல இன்னல்களையும் பொருட்படுத்தாது, தங்கள் நாட்டிலிருந்திருந்தால் தாங்கள் பெறக்கூடிய—மூன்று மாத ஊதியத்தையும் தியாகம் செய்து, உலகம் சுற்றும் இந்த இளைஞர்களின் முயற்சி பாராட்டத்தக்கதே! ●



# தமிழ்ச் சுரங்கம் திரு.வி.க.

## அ. நாகலிங்கம்

"எனக்குப் பிறப்பு
வேண்டும்; பிறப்புப் பயன்
கருதாத் தொண்டுக்குப்
பயன்படுதல் வேண்டும்.''

—திரு. வி. க.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தேசிய விடுதலைக்காகப் போராடியவர்கள் பலர். அவர்களுள் ஒருவராய் இலங்குகின்றார் திருவாரூர் விருத்தாசல முதலியார் மகன் கலியாண சுந்தரனார்.

திரு. வி. க. என்ற நான்கு எழுத்தினுள் ஓர் உலகமே அடங்கியுள்ளது. அவ்வுலகத்தில் தமிழாசிரியர், பத்திரிகையாசிரியர், விடுதலை வீரர், சமய ஞானி, தொழிலாளர் தலைவர். சமூகச் சீர்திருத்தக்காரர் எனப் பல்வேறு அறிஞர்கள் நடமாடுகின்றனர். இவ்வறிஞர்களையெல்லாம் தன்னகத்தே கொண்டு விளங்கும் உலகமான தமிழ் நாட்டின் 'திருவடிவு' ஆன திரு. வி. க. அவர்கள் 26-8-1883-ல் பிறந்தார். இந்த ஆண்டு அவரது 89-ஆவது பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது.

சென்னைக்கு அருகிலுள்ள பூந்தமல்லியை அடுத்த துள்ளம் என்ற ஊரில் பிறந்தவர் திரு.வி.க. சோழிய வேளாளர் மரபில் பிறந்த திரு.வி.க. இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் மெட்ரிகுலேஷன் வரை பயின்றார். அப்பொழுது யாழ்ப்பாணம் மேலைப்புலோலி நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள் தொடர்பால் நடந்த வழக்கொன்றின் காரணமாக மெட்ரிகுலேஷன் தேர்வு எழுதவில்லை. பள்ளிப் படிப்பு 'வெம்பி வீழ்ந்தது.'

தமக்குக் கல்விக் கண்ணைத் திறந்த தம்மாசிரியர் கதிரைவேற்பிள்ளை அவர்கள் தொடர்பால் தமிழ் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்டார். சமயநூல்களையெல்லாம் கற்க வேண்டும் என்ற ஆர்வம் திரு. வி. கவுக்கு ஏற்பட்டது. அவ்வார்வத்தை மயிலை தணிகாசல முதலியார் போன்றோர் வாயிலாகத் தீர்த்துக் கொண்டார்.

பின்னர், ஸ்பென்சர் கம்பெனியில் கணக்கர் வேலை செய்து வந்தார். அப்பொழுது விடுதலைப் போராட்டம் வீறிட்டெழுந்தது. லாலா லஜபதிராயின் நாடு கடத்தலும், வங்காளப் பிரிவினை ஒட்டி எழுந்த சுதேசி இயக்கமும், விபின் சந்திரபாலரின் சென்னைப் பேச்சும், இங்கிலாந்து பார்லிமெண்டு உறுப்பினரான கீர்ஹார்டியின் ஸ்பென்சர் வருகையும், அவரது வரலாறும், திரு. வி.க. உள்ளத்தில் புதைந்து கிடந்த விடுதலை உணர்ச்சியையும் நாட்டுப்பற்றையும் வீறிட்டு எழச் செய்தன. அன்று முதல் அரவிந்த கோஷால் நடத்தப்பெற்ற 'பந்தே மாதர'ப் பத்திரிகையின் வாசகரானார். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் மணிமொழிக்கிணங்கத் தாம் அறிந்துகொண்ட பத்திரிகைச் செய்திகளைக் கம்பெனியில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு எடுத்துரைத்தார். இதனைக் கண்ட கம்பெனியாரின் மிரட்டல் காரணமாக வேலையிலிருந்து பதவி விலகல் செய்தார்.

நண்பர் ஒருவரின் முயற்சியினால் ஆயிரம்விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளியில் அவருக்குத் தமிழாசிரியர் வேலை கிடைத்தது. தலைமை ஆசிரியர் ஜான் ரத்தினம் பிள்ளையின் தொடர்பினால் கிறித்துவ சமயம் பற்றித் தெரிந்து கொண்டார். இடையே சச்சிதானந்தம் பிள்ளை போன்றோர் முயற்சியினால் தாம் படித்த வெஸ்லி கல்லூரியிலே தலைமைத் தமிழாசிரியரானார். அவரால் அப் பள்ளியில் பணியாற்றிய பண்டிதர்களின் சம்பளமும் உயர்த்தப்பட்டது. மேலும், சில வசதிகள் செய்து கொடுக்கப் பட்டன.

நாட்டின் நிலைமையை நன்கு கவனித்து வந்த திரு.வி.க.வுக்கு அரசியலில் நாட்டு விடுதலைக்காகத் தொண்டு செய்தல் வேண்டும் என்ற வேட்கை எழுந்தது. அதனால் தலைமைத் தமிழாசிரியர் வேலையை விடுத்து 7-12-1917-ல் 'தேச பக்தன்' என்னும் நாளிதழுக்கு ஆசிரியரானார்.

தேச பக்தன் ஆசிரியராக இரண்டரை ஆண்டுக் காலம் திகழ்ந்தார். அக் குறுகிய காலத்தில் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் இந்தியாவிற்கும் —சுதந்திரப் போராட்டத்திற்கும் சிறந்த முறையில் தொண்டாற்றினார். பின்னர் 'நவ சக்தி' என்னும் இதழுக்கு ஆசிரியராகச் சுமார் இருபதாண்டுக் காலம் விளங்கினார். இக் காலங்களில் காங்கிரசில் இருந்து சிறந்த முறையில் பணி புரிந்தார். தொழிலாளர்க்கென இந்தியாவில் முதன் முதலில் 'சென்னைத் தொழிலாளர் சங்கத்தைச்' சில நண்பர்களின் துணையோடு 27-4-1918-ல் தோற்றுவித்தார். அன்று முதல் சுமார் 30 ஆண்டுக் காலமாகத் தொழிலாளர்க்கெனப் போராடினார்.

முப்பத்தோராவது தமிழ் நாடு காங்கிரஸ் மாநாட்டின் தலைவராகக் காஞ்சியில் நியமிக்கப்பட்டார். இங்ஙனம் தலைவராக மட்டுமின்றி, அவ்வப்பொழுது நடக்கும் ஒத்துழையாமை இயக்கம், உப்பு சத்தியாக்கிரகம் முதலிய பல நிகழ்ச்சிகளிலும் சட்ட சபைத் தேர்தலிலும் பெருந் தொண்டாற்றினார். இதில் என்ன வியப்பு என்றால், பலரையும் சிறையில் அடைத்த ஆங்கில அரசாங்கம் இவருக்கு மட்டும் சிறை வாழ்வு அளிக்க

வில்லை. 1921-ஆம் ஆண்டு இவரை நாடு கடத்த முயன்ற வெலிங்டன் பிரபு, சர். பி. தியாகராயச் செட்டியார், தலைமை அமைச்சர் பனகல் ராஜா ஆகியவர்களின் அறிவுரையின் பேரில், அம் முயற்சியைக் கைவிட்டார். இங்ஙனம் அரசியலில் போராடிய திரு. வி. க. பின்னர் காங்கிரஸ் உறுப்பினராக மட்டும் இருந்து கொண்டு தொண்டாற்றினார்.

ஆங்காங்கே தொழிற்சங்கங்கள் அமைத்தார். சமய மாநாடுகளில் தலைமை வகித்துச் சமயங்களின் சீரிய கொள்கைகளைச் செவ்வனே விளக்கிச் சமயத்தின் உள்ளக் கிடக்கையை மக்களுக்கு அறிவுறுத்தி வந்தார். இவர் தலைமை தாங்கிய தொழிற்சங்கங்களும், சமய மேடைகளும் பலப் பல. இலங்கைக்கு இரு முறை சென்று, மாணுக்கர் மாநாடுகளில் தலைமை வகித்தார். இங்ஙனம், தமிழ் நாட்டிலன்றி இலங்கையிலும் இவருடைய தொண்டு பயன்பட்டது.

சமயம் மட்டுமன்றிப் பெண்கள் நலனுக்கென உழைத்தார். கலப்புத் திருமணம் பல நடத்தி வைத்தார். இருளில் மூழ்கிக் கிடக்கும் பெண்களை ஒளி பெறச் செய்தார். கைம்மை அடைந்த பெண்களுக்கு மறு மணமும் அமைதியான வாழ்க்கை நடத்தவும் தம்மாலான உதவிகளைச் செய்தார். ஒரு நாட்டில் பெண்கள் முன்னேறினுலன்றி அந்நாடு சிறந்து விளங்க முடியாது என்பதை உள்ளத்தில் கொண்டு, பெண்களுக்குக் கல்வி முதலியன கொடுத்துப் பெண்களை அடுக்களையிலிருந்து வெளி வந்து உலகைக் காணச் செய்தார்.

இங்ஙனம் பல துறையிலும் நுழைந்து அவற்றையெல்லாம் ஒளி பெறச் செய்த திரு. வி. க. தம் 70-ஆவது வயதில் (17-9-1953) இயற்கையோடு இரண்டறக் கலந்தார்.

எழுபதாண்டுக் காலம் உயிர் வாழ்ந்த திரு. வி. க. ஐம்பது (50)க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். அவர் நடத்திய 'தேச பக்தன்', 'நவசக்தி' பத்திரிகைகளும் அக்கால அரசியல், சமூக நிலைகளைச் செவ்வனே விளக்கும் கருவூலமாக விளங்குகின்றன.

இவர் காங்கிரசில் தொண்டாற்றியபொழுது காங்கிரஸ் மாநாடுகளெல்லாம் ஆங்கிலத்திலேயே நடைபெற்றன. அதைக் கண்ட இவர் மாநாடுகள் யாவும் தாய் மொழியிலேயே நடத்தல் வேண்டும் என்று வலியுறுத்தினார். தேசபக்தன், நவசக்தி இதழ்களையும் தமிழிலேயே நடத்தி அரசியல் முதலிய பலவற்றையும் மக்களுக்குப் புரியும் அழகிய தமிழில் எடுத்துரைத்தார்.

அரசியலில் காந்தீயக் கருத்துக்களைப் பின்பற்றி காந்தீயம் எப்படி மனித வாழ்க்கைக்குத் துணையாக வல்லது என்பதை 'மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்' என்னும் அரிய நூலில் 1927-ஆம் ஆண்டிலேயே எழுதினார். 'இந்தியாவும் விடுதலையும்' என்ற நூலில் விடுதலைப் போராட்டத்தைப் பற்றி எழுதியுள்ளார்.

சமய வாழ்க்கையில் தம் சமயமான சைவத்தை நன்குணர்ந்ததன்றிப் பிற சமயங்களான வைணவம், சமணம், கிறித்துவம், பௌத்தம் பற்றிய நூல்களையும் படித்து உண்மைப் பொருளை அறிந்துகொண்டார். அதனுல் சமயங்களின் உட்பொருள் 'சன்மார்க்கம்' என்பதை உணர்ந்தார். தாம் உணர்ந்ததைச் 'சைவத்தின் சமரசம்' 'தமிழ்நாடும், நம்மாழ்வாரும்' 'தமிழ் நூல்களில் பௌத்தம்' 'அருகன் அருகே அல்லது விடுதலை வழி' 'கிறித்துவின் அருள் வேட்டல்' 'கிறிஸ்து மொழிக் குறள்' போன்ற நூல்களில் பிற சமயங்களின் உண்மைகளைக் கொண்டு தெளிவுறுத்துகிறார்.

சமய நூல்கள் மட்டுமின்றிப் பொருளாதார—சமத்துவம் பற்றியும் நூல் எழுதியுள்ளார். மேனுட்டு கார்ல் மார்க்ஸின் கருத்துக்களை காந்தீயக் கருத்துக்களோடு இணைக்கிறார். காந்தீயம் உயிர் என்றும் மார்க்சியம் உடல் என்றும் அவ்விரண்டும் இணைந்தாலன்றிப்பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நீங்கா என்பதனைப் 'பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தீயமும்' என்னும் நூலில் விளக்குகிறார்.

பெண்கள் நாட்டின் உயிர்நாடி என்பதனை உணர்ந்த திரு. வி. க. பெண்களுக்காகப் 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' என்னும் அரிய நூல் எழுதிப் பெண்ணின் பெருமையை ஆண்கள்-பெண்கள் அனைவரும் உணரச் செய்தார்.

இவருக்கு முன்பு மக்கள் தமிழில் வெளிவரும் கருத்துக்களையும் புரிந்துகொள்ள இயலாததாயிருந்தது. இவர் பத்திரிகையுலகில் புகுந்த பின்னர் பாமர மக்களுக்கு அழகிய எளிய இனிமைத் தமிழில் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும்படிச் செய்தார். கருத்துக்களைச் சிறு சிறு சொற்களிலும் சொற்றொடர்களிலும் எளிய முறையில் உணர்த்தினார். இதனுல் 'தமிழ்த் தென்றல் திரு. வி. க.' என்று மக்களால் பாராட்டப் பெற்ருர்.

இவருடைய 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை', 'சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து', 'என் கடன் பணி செய்து கிடப்பதே', 'முருகன் அல்லது அழகு', 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்', 'உள்ளொளி' போன்ற பல நூல்கள் தமிழ் மக்களால் என்றும் நினைவில் வைத்துப் போற்றப் பெறுபவை.

தாம் நூல்கள் இயற்றியதோடல்லாமல் பிறரையும் நூல்கள் எழுதத் தூண்டினார். இவர் நண்பர்கள் எழுதிய நூல்களுக்கும் வெளி நாட்டிலுள்ள தமிழர் எழுதிய நூல்களுக்கும் தமக்கே உரிய அழகிய தமிழில் அணிந்துரை, முன்னுரை முதலியன அளித்துள்ளார். ராஜாஜியின் 'ஸோக்ரதர்', பண்டிதை அசலாம்பிகை அம்மையாரின் 'காந்தி புராணம்', 'திலகம் புராணம்', பேராசிரியை ஈ. த. இராஜேசுவரி அம்மையாரின் 'குழவி உள்ளம்', தென்னுப்பிரிக்கத் தமிழர் இராமசாமியின் 'தமிழ் மதம்', பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் 'ஊரும், பேரும்', டாக்டர் மு. வ. வின் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' போன்ற பலர் இயற்றிய நூல்கள் இவர் அணிந்துரைகளைப் பெற்றுள்ளன.

எளிய குடும்பத்தில் பிறந்து இளமையிலேயே மக்களையும் மனைவியையும் இழந்து தம் தமையனுர் திரு. வி. உலகநாதர் குடும்பத்தோடு ஒன்றி 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் கொள்கையின்படி வாழ்ந்து இன்று தமிழ் நாட்டு மக்கள் உள்ளத்தில் தமிழ் மறுமலர்ச்சித் தந்தையாக இடம் பெற்றுத் திகழ்கின்ருர் நம் திரு. வி. க. ●




# வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | பை |
|---|---|---|
| முந்திய இதழ்களின்படி தொகை | 13,18,473 | 30 |
| டிரில்லிங் டிவிஷன் வேலையாட்கள் சங்கம், சிவகங்கை எம் (சி) மூலமாக. | 51 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கொடைக்கானல் (காசோலை). | 100 | 00 |
| சாகுபுரம், தாரங்கதாரா கெமிகல் தொழிலாளர் சங்கம். | 27 | 00 |
| ஏ. ராமசாமி, அரசாங்க பொது மருத்துவமனை, சென்னை-3. | 20 | 00 |
| கரோலின், ஆசிரியர், 2/4, மலையப்பன் தெரு, சென்னை-1. | 10 | 00 |
| வி. ராஜாராம் பிள்ளை, ... 41, கதீட்ரல் ரோடு. | 10 | 00 |
| அழகு, (கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கார் ஓட்டுநர்). | 10 | 00 |
| இந்தியா மீடர்ஸ் லிமிடெட், அம்பத்தூர் சென்னை-53 (காசோலை) | 10,000 | 00 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியாளர். | 69,869 | 29 |
| தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் .. | 13,739 | 00 |
| திருச்சி மாவட்ட ஆட்சியாளர் .. | 90,056 | 82 |
| நெல்லை மாவட்ட ஆட்சியாளர் ... | 2,529 | 30 |
| கோவை மாவட்ட ஆட்சியாளர் — | 65,969 | 07 |
| மதுரை மாவட்ட ஆட்சியாளர் — | 83,460 | 00 |
| நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் — | 9,735 | 15 |
| தலைமையாசிரியர், அரசினர் உயர் நிலைப்பள்ளி, பெருமங்கலம். | 15 | 00 |
| உதவி ஆணையர், திருநெல்வேலி அறநிலையப் பாதுகாப்புத்துறை. | 800 | 00 |
| துணைப்பதிவாளர், மதுராந்தகம் — | 25 | 00 |
| மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், நெல்லை. | 336 | 00 |
| வருவாய்த்துறை அலுவலர், காஞ்சிபுரம். | 690 | 00 |
| ஊராட்சி ஒன்றிய ஆணையர், எல்லாபுரம், | 100 | 00 |
| கோட்ட அலுவலர், என்.சி.எம்.பி பாளையங்கோட்டை. | 32 | 00 |
| இந்தியன் டெக்ஸ்டைல் பேப்பர், டியூப் கம்பெனி லிமிடெட், விருதுநகர். | 100 | 00 |
| குமுதம் எண்டோமெண்ட்ஸ், சென்னை-10. | 1,000 | 00 |
| கோட்டாட்சித் தலைவர், கோவில்பட்டி. | 5,147 | 00 |
| நிலவளத் துணைப்பதிவாளர், காஞ்சிபுரம். | 495 | 00 |
| தாசில்தார் தென்காசி ... — | 689 | 92 |
| மாவட்டக் கல்வி அலுவலர், திருவள்ளூர். | 100 | 00 |
| பிராந்தியப் போக்குவரத்து அலுவலர், வேலூர். | 3,270 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலர், வாலாஜாபாத், செங்கற்பட்டு மாவட்டம். | 329 | 00 |

| | | |
|---|---|---|
| நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் ... | 261 | 65 |
| நகரமன்ற ஆணையர், பாளையங் கோட்டை. | 612 | 00 |
| ஊராட்சி ஒன்றிய ஆணையர், தாத்தையங்கார்பேட்டை. | 175 | 00 |
| ஆணையர். (பொறுப்பு) கீழப்பாவூர். | 302 | 00 |
| உதவிப்பதிவாளர், உடங்குடி .. | 33 | 00 |
| தாசில்தார், திருச்செந்தூர். | 2,625 | 28 |
| வனச்சரக அலுவலர், திருநெல்வேலி. | 225 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கடம்பத்தூர். | 531 | 50 |
| இணைத் துணைப்பதிவாளர், காஞ்சி புரம். | 50 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பூந்தமல்லி. | 170 | 00 |
| துணைப்பதிவாளர், குறும்பூர், நெல்லை மாவட்டம். | 74 | 00 |
| மருத்துவ அலுவலர், பி.எய்ச்.சி., பத்தமடை. | 20 | 00 |
| உதவி மாவட்ட ஆட்சியாளர், செங்கற்பட்டு. | 800 | 00 |
| திரு சித்தையன், சூரமங்கலம், (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் மூலம்.) | 5 | 00 |
| மாவட்ட வனத்துறை அலுவலர், நெல்லை. | 225 | 00 |
| கோட்டாட்சித் தலைவர், காஞ்சி புரம். | 250 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், வேப்பந்தட்டை. | 150 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், உப்பிலியாபுரம். | 120 | 00 |
| தாசில்தார், தூத்துக்குடி .. | 2,280 | 95 |
| சீனியர் எண்டோமாலஜிஸ்ட், கோட்டஅலுவலர், என்.இ.எம்.பி. தென்காசி. | 60 | 00 |
| வேலைவாய்ப்பு அலுவலர், துணை வேலைவாய்ப்பு அலுவலகம், காஞ்சிபுரம். | 61 | 50 |
| தாசில்தார் (பொறுப்பு), மேலூர் .. | 1,350 | 00 |
| கோட்டாட்சி அலுவலர், கோவில் பட்டி. | 4,339 | 73 |
| துணைத் தாசில்தார், பாளையங் கோட்டை. | 1,333 | 00 |
| வேளாண்மை வருமான வரி உதவி ஆணையர், திருநெல்வேலி-2. | 1,102 | 00 |
| திரு எஸ். வீரமகராஜு, நியூ அக்கெயிங்கு, மேற்கு வங்காளம். | 10 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கொடைக்கானல்-2. | 600 | 00 |
| தலைமையாசிரியர், அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பாபநாசம். | 25 | 00 |
| தலைமையாசிரியர், பி.எம். உயர் நிலைப்பள்ளி, கரூர். | 173 | 50 |
| நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, தூத்துக்குடி டிவிஷன். | 130 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், செம்பொனார்கோவில். | 597 | 50 |
| அறங்காவலர், ஸ்ரீ நீர்த்தபுரீசுவரர் கோவில், கெ.ஆடூர், சிதம்பரம். | 150 | 00 |
| துணைப்பதிவாளர், உத்தரமேரூர் .. | 25 | 00 |
| திரு என்.வி. சீனிவாசன், துணைப் பதிவாளர், திருக்கழுக்குன்றம். | 25 | 00 |
| பிராந்திய போக்குவரத்து அலுவலர், திருநெல்வேலி. | 6,322 | 00 |
| கோட்டாட்சித் தலைவர், சைதாப் பேட்டை. | 2,349 | 00 |
| கோட்டப்பொறியாளர், எய்ச் அண்டு ஆர் டப்ளியூ. | 865 | 00 |
| துணைத்தாசில்தார், பாளையங் கோட்டை. | 450 | 00 |
| உதவி மாவட்ட ஆட்சியாளர், செங்கற்பட்டு. | 950 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலர், பாளையங்கோட்டை. | 550 | 00 |
| திரு பாலன், இராயபுரம் .. | 48 | 00 |
| திரு பாண்டியன் (முதல்வர் அலுவலகம் வாயிலாக). | 40 | 00 |
| அண்ணா மன்றம். (முதல்வர் அலுவலகம் வாயிலாக). | 10 | 00 |
| எம்.ஜி.ஆர் மன்றம் (முதல்வர் அலுவலகம் வாயிலாக). | 10 | 00 |
| திரு முரசொலி மாறன் (முதல்வர் அலுவலகம் வாயிலாக). | 10 | 00 |
| திரு குப்புராஜ், மீனவர் குடியிருப்பு இராயபுரம். | 101 | 00 |
| திரு எம். தேசி (முதல்வர் அலுவலகம் வாயிலாக). | 101 | 00 |
| மொத்தத் தொகை | 16,98,286 | 86 |

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

### வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்படவேண்டும்

வினா : 1971-ஆம் ஆண்டு ஜூன் மாத 'தமிழரசு' இதழ் பார்த்தேன். அதில் வெளியாகி இருந்த கேள்வி பதிலைக் கண்டு மகிழ்ந்தே இக்கேள்வியைக் கேட்கின்றேன். என் நிலத்தில் தீவிர சாகுபடி செய்ததில் என்னிடம் எச்.பி. 1 கம்பும், எம்.சி.யு. 5 பருத்தியும் கைவசமிருக்கிறது. அவற்றை நல்ல விலைக்கு எங்கே விற்கலாம்? நான் என்ன செய்ய வேண்டும்? இங்குள்ள அரசு விவசாயக் கிடங்கிலும், பருத்தி அபிவிருத்தி அதிகாரியிடமும் கேட்டால் அவர்கள் விதை வாங்கியாகிவிட்டது என்று சொல்கிறார்கள். எனவே நான் அவைகளை எப்படி விற்பது? தயவுசெய்து பதில் கொடுக்கும்படித் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

— எஸ். கே. இராமசாமி,
திருநெல்வேலி-2.

விடை : வேளாண்மைத் துறையினரின் மேற்பார்வையுடன் சாகுபடி செய்யும் பதிவு செய்து கொண்ட விதைப் பண்ணை உழவர்களிடமிருந்து மட்டுமே, அதுவும் விதைப்பதற்குத் தகுந்த விதைகள் மட்டுமே, வாங்கப்படுகின்றன. உங்களிடம் உள்ள எச். பி. 1 கம்பு தானியத்தை விதைக்காகப் பயன்படுத்தக் கூடாது. எனவே, வேளாண்மைத் துறை அலுவலர்கள் உங்களிடம் உள்ள எச். பி. 1 கம்பு தானியத்தை வாங்கிக்கொள்ள மாட்டார்கள். உங்களிடம் உள்ள எம்.சி.யு. 5 பருத்தியைப் பருத்தி அபிவிருத்தி அலுவலரும் வாங்கிக் கொள்ள முடியாது.

நீங்கள் அவைகளை விற்பனை செய்ய வேண்டுமானால் உங்கள் அருகாமையில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை (Regulated Market) நாடுவதே நல்லது. திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டி, சங்கரன்கோவில், தூத்துக்குடி, புதூர், கழுகுமலை, கடம்பூர், தென்காசி, அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் உள்ளன. உங்கள் ஊருக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்குச் சென்று, அதன் கண்காணிப்பாளர் அவர்களைச் சந்தித்துக் கலந்தாலோசியுங்கள். அவர் உங்களிடம் உள்ள எச். பி. 1 கம்பு, எம்.சி.யு. 5 பருத்தி ஆகியவைகளை விற்பனை செய்ய ஆவன செய்வார்; அல்லது என்ன செய்ய வேண்டும் என்பதற்குரிய வழிவகைகளைக் கூறிடுவார்.

* * *

வினா : தேக்குமர விதை எங்கு கிடைக்கும்? மணல் பூமியில் விளையுமா? எப்படிப் பயிரிட வேண்டும்? அதற்குத் தண்ணீர் எப்போதும் தேவையா? விளக்கம் தேவை.

—எஸ். மஹபூப் பாஷா,
சுங்குவார்சத்திரம்.

விடை : மிகுந்த சத்துள்ள மண்ணும் அதிக மழையும் உள்ள இடங்களே தேக்கு மரம் வளர்க்க ஏற்றதாகும். வறட்சியையும், பனியையும் தாங்கிக் கொள்ளும் சக்தியற்றது தேக்கு. எனவே, வறட்சியும், பனியும் இல்லாத இடங்களே தேக்கு மரம் வளர்க்க ஏற்றதாகும்.

கோ—25 நெல்



பொதுவாக, தேக்குமர விதைகள் விற்கப்படுவதில்லை. ஆனல் நாற்று விட்டு வளர்ந்த கன்றுகளே விற்பனைக்குக் கிடைக்கின்றன. உங்களுக்குத் தேவைப்படும் தேக்குக் கன்றுகளை வனத்துறையின் (Forest Department) நாற்றங்கால்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அல்லது தனிப்பட்டவர்கள் நடத்தும் நர்சரிகளிலிருந்தும், பெற்றுக்கொள்ளலாம். மணல் பூமியிலும் தண்ணீர் வசதி இருக்குமானல் தேக்கு வளர்க்கலாம். ஆனல் தேக்கு மரம் குறுக்களவில் மிகவும் பெரியதாக வளராமல், நீண்டு வளர்ந்து விடுகின்றன. தேக்குக் கன்று நன்கு வளரும் வரை, மண் காய்ந்துவிடாமல் தண்ணீர் விடுதல் வேண்டும். தேக்குக் கன்றுகள் வளர்ப்பது பற்றிய மேலும் விவரம் அறியத் தங்கள் பகுதியில் உள்ள வனச்சரக அலுவலர் அவர்களையோ அல்லது வன உதவிப் பாதுகாவலர் அவர்களையோ கலந்தாலோசியுங்கள்.

*          *          *

**வினு:** கோ, 25 நெல் பற்றி கீழ்க்கண்ட விவரங்களைத் தெளிவாய்த் தெரிவிக்கவும்.

1. நாற்று தயார் செய்தல்.
2. நடவு வயல் தயார் செய்தல்.
3. கீழ் உரம், மேலுரமிடுதல்.
4. பயிர்ப்பாதுகாப்பு.
5. வயது.
6. மகசூல்.

— நா. சாத்தூரப்பன்,
காளாம்பட்டி.

**விடை:** ஒரு ஏக்கரில் கோ-25 நெல் சாகுபடி செய்ய, 18 கிலோ விதையை 12 சென்ட் நாற்றங்காலில் நாற்று விடவேண்டும். விதைகளுடன் அக்ரசான் அல்லது செரசான் அல்லது டீ.எம்.டீ.டி. மருந்தை, ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கலந்து 6 மணி நேரம் வைத்திருந்த பின்பு, முளைகட்டுவதற்குத் தண்ணீரில் ஊறப் போட வேண்டும். நாற்றங்காலுக்கு $1\frac{1}{2}$ அல்லது 2 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது ஒரு வண்டி தழை எரு போட வேண்டும். நாற்றங்காலை 54 அடி நீளம்×8 அடி அகலம் உள்ள, மேடைப் பாத்திகளாக அமைத்துக்கொண்டு ஒவ்வொரு பாத்தியிலும், $1\frac{1}{2}$ கிலோ முளைகட்டிய விதைகளைத் தூவ வேண்டும். நாற்றுகள் நன்கு வளரவில்லையானல் நாற்றுப் பறிப்பதற்கு 10 நாட்கள் முன்னதாகப் பாத்திக்கு $\frac{1}{2}$ கிலோ வீதம் அமோனியம் சல்பேட் போடவும். நாற்றுப்பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக 12 சென்ட் நாற்றங்காலுக்கு 25 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 50 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தை 25 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். நாற்று விட்ட 40 முதல் 45 நாட்களுக்குள் நாற்றைப் பறித்து நடவு செய்து விடவேண்டும். நாற்றுகளை வரிசைக்கு வரிசை 10 அங்குல இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 6 அங்குல இடைவெளியும் விட்டு நடுவதே சிறந்தது.

நடவு வயல் தயார் செய்ய நிலத்தை இரும்புக் கலப்பையால் அல்லது டிராக்டரால் நன்கு உழுது சேருக்க வேண்டும். ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் அல்லது 5 வண்டி தழை எரு ஆகியவைகளைப் போட வேண்டும்.

கடைசி உழவில் 17 கிலோ தழைச்சத்து(85 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 37 கிலோ யூரியா), 21 கிலோ மணிச்சத்து (130 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 14 கிலோ சாம்பல் சத்து (23 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்) ஆகியவைகளை அடி உரமாகப் போட வேண்டும்.

நாற்றுவிட்ட 21-ஆம் நாளும், கதிர் உருவாகும் சமயத்திலும் ஆக இருமுறை மேலுரமிடுதல் சிறந்தது. ஒவ்வொரு தடவைக்கும் $5\frac{1}{2}$ கிலோ தழைச்சத்து (27.5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 12 கிலோ யூரியா) மேலுரமாக இடப்பட வேண்டும்.

நாற்று நட்ட 21-வது, 42-வது, 63-வது நாட்களிலும் தொண்டைப்பூ பருவத்திலும் 0·05 சத பாரத்தியான் அல்லது 0·04 சத என்ட்ரின் மருந்தோடு 0·6 கிலோ தாமிர பூஞ்சானக் கொல்லி கலந்து தெளிக்கவும். நெற்பூவில் பால் பிடிக்கும் சமயத்தில் நாவாய்ப் பூச்சி தோன்றிப் பாலை உறிஞ்சிப் பதராக்கிவிடுவதைத் தடுக்க ஏக்கருக்கு 10 கிலோ பி.எச்.சி. 16 சதத்தூளைத் தூவ வேண்டும். சம்பாப் பட்டத்தில் (ஜூலை—ஜனவரி) கோ-25 நெல்லின் வயது 180 நாட்கள். ஆனல் தாளடி அல்லது பிசானம் பட்டத்தில் (செப்டம்பர்—மார்ச்சு) இதன் வயது 165 நாட்களாகக் குறைந்து விடுகிறது. இது வரை ஏக்கருக்கு 4,544 கிலோ வரைக்கும் மகசூல் கொடுத்துள்ளது.

*          *          *

**வினு:** அக்ரசான் அல்லது செரசான் மருந்தை விதைப்பதற்கு முன்பு நெல் விதையுடன் எப்படிக் கலக்க வேண்டும்? கருவியின் மூலம் என்றல் அது கிடைக்கும் இடம், அதனைப் பயன் படுத்தும் முறை ஆகியவைகளைத் தெரிவியுங்கள்.

— கா. பாலசுப்ரமணியன்,
விருதுநகர்.

**விடை:** ஒரு கிலோ நெல் விதைக்கு 2 கிராம் அக்ரசான் அல்லது செரசான் மருந்து வீதம் கலக்க வேண்டும். விதைகளையும் மருந்தையும் விதை கலக்கும் கருவியில் இட்டு நன்கு சுற்ற வேண்டும். விதை கலக்கும் கருவி (Seed Treating Drum) உங்கள் ஊர் நல ஊழியரிடம் (கிராம சேவக்) இருக்கும். அல்லது ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலரிடம் கிடைக்கும். அவர்களைச் சந்தித்துக் கேட்டு வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். விதை கலக்கும் கருவியைப் பாதி விலையில் நீங்களே பெற்றுக் கொள்ளலாம். விதை கலக்கும் கருவி உடனடியாகக் கிடைக்காவிட்டால், விதைகளைத் தரையின் மேல் குவித்து, அதன்மேல் மருந்தைப் பரவலாகத் தூவி, உங்கள் கைகளினலேயே நன்கு கலக்குமாறு செய்துவிடலாம். விதையுடன் மருந்து கலந்த 6 மணி நேரத்திற்குப் பின்புதான் தண்ணீரில் ஊறப்போட வேண்டும்.




## 16. இனிக்குமே நெஞ்சம் எமக்கு

கட்டித் தழுவிக் கனிஇதழில் முத்தமிட்டே
ஒட்டி உறவாடி உண்மையிலே—தொட்டில்
தனிலிட்டு நாளெல்லாம் தாலாட்டுப் பாட
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வித்துவான் ஆ. சுப்புலட்சுமி, எழும்பூர்.

இன்ப மணத்தில் இசையரங்கில், எம்பெருமான்
அன்பு வழிபாட்டில், ஆட்சிதனில்,—பண்பார்
தனித்தமிழைக் கேட்டுத் தழைக்கும்போ தெல்லாம்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் மா. கணபதி, திருச்செங்கோடு.

ஆற்றங் கரையோரம் அந்தி நிலவொளியில்
காற்றுக் குளிர்ந்தடிக்கும் காவினிலே—நேற்றுத்
தனிமையினில் என்னன்பர் தந்தசுகம் எண்ணில்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—குழ. அண்ணாமலை, கோவை.

பள்ளியில் கற்கின்ற பாலர்கள் யாவருமே
தெள்ளிதாய்த் தேர்வினிலே தேர்ச்சிபெற்றால்—உள்ளம்
இனிக்குமே மாந்தர் எவருக்கும்; சால
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—மு. ப. சங்கரலிங்கம், உடுமலைவடுகபாளையம்.

தென்றல் அணைக்கத்தான் தேன்சிந்தும் பூஞ்சோலை!
குன்றில் முகில்தழுவின் கொண்டாட்டம்—குன்றா
தனித்தநறுஞ் செந்தமிழைச் சற்றே நினைக்க
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—கே. டி. அரசு, மணமேடு.

தொடுத்த வழக்கதனில் தொல்லைநாள் மைசூர்
கொடுத்தவவ் வாக்குறுதிக் கூற்றை—எடுத்துக்
கனிவாக வாதாடிக் காவிரியைப் பெற்றால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ஐ. மகபூப்ஜான், எருமைப்பட்டி.

அன்றிரவில் என்னை அவரணைத்த போதில்வான்
நின்றெம்மைக் கண்டாய் நிலவே! யாம்—இன்று
தனிக்கிளிகள் ஆயினும்நின் தண்முகத்தைக் காணில்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ந. மங்கையர்க்கரசி, சென்னை-7.

மேனாட்டார் போலநாம் மேன்மையுற அம்புலிக்குத்
தானாகச் சென்று தமிழ்மணத்தைத்—தேனாய்த்
தனியோங்கச் செய்யும்நாள் நன்னாளா மந்நாள்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் பா. இராமநாதன், பேரையூர்.

வற்றாத காவிரியாள் வாழ்வளிக்க வொட்டாமல்
முற்றாத கன்னடர்கள் மூடுகின்றார்—பெற்ற
கனிவோடு மீண்டுமிங்கே காவிரியைத் தந்தால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சிறுமதுரைச்செல்வி, மதுரை-1.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
வித்துவான் ஆ. சுப்புலட்சுமி,
மாநிலப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
எழும்பூர்,
சென்னை-8.

கண்ணென்றும் முத்தென்றும் கட்டிலிலும் தொட்டிலிலும்
எண்ணிலாப் பிள்ளையரை யீன்றுவிட்டு—மண்ணில்
குனிந்து நடப்போர் குடும்பநலம் கண்டால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சிவ. சிவாநந்தன், அறந்தாங்கி.

மேட்டுக் குடியினரே மேதினியை ஆள்வரெனும்
காட்டுக் குரல்தந்தோர் கண்பிதுங்க—நாட்டைத்
துணிவாய் அரசாளும் தூயோர் திறத்தால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வி. மாணிக்கராஜ், எம்.ஏ., கொட்டாரம்.

அறமும் பொருளுடனே ஆர்ந்துள்ள இன்பத்
திறனெல்லாம் தீஞ்சுவையாய்த் தேர்ந்து—பெறவே
நனிசிறந்த முப்பாலை நன்காய்ந்து பார்க்கின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

மண்குடிசை நீங்கி மாண்புறு சென்னையினில்
எண்டிசையு மோங்கும் எழில்மனைகள்—கண்ட
கனவதுதான் முற்றும் நனவானல், கண்ணே
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—அ. இரத்தினசாமி, ஆல்வேலிப்பட்டி.

அன்னைத் தமிழில் அறிவியல் நூல்பலவும்
இந்நாட்டில் தோன்றி எழுச்சிபெறத்—தொன்மைக்
கனியாம் கலைமுழுதும் கல்வியினில் நின்ருல்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் ந. ஆ. அண்ணாமலை, நத்தம்.

உண்ண உணவும் உடுக்க உடையுமாய்
நண்ணவோர் நல்லிடமும் யாவர்க்கும்—எண்ண
நினைக்கும் விருப்பம் நிறைவேறும் நாளில்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வி. வி. நடராசன், சென்னை-34.

குடிசையை வீடாக்கிக் கூவம் திருத்திப்
படியரிசி பாங்குடனே இட்டு—மிடியை
நனிபோக்கும் நம்கலைஞர் நல்லாட்சி எண்ணி
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—அரிமார்த்தாண்டன், அகஸ்தீஸ்புரம்.

பெரியர் சிறியரென்று பேதமெது மின்றி
உரியதனை சீருடைய ஒண்பாப்—பரிசைத்
தனித்தன்மை காக்கும் தமிழ்க்கவிஞர் பெற்ருல்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சி. ரா. கோபாலன், கோவை-18.

அன்னை மொழிநோய் அழிப்பாரை 'வைத்தியரென்'(று)
அண்ணா மலைக்கழகம் ஆக்கியதை—எண்ணின்
கனியின் நறுஞ்சுவையாய்க் கற்கண்டின் பாகாய்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—பொ. வேலம்மாள், கொட்டாரம்.

எந்தமிழர் ஆட்சியைப்போல் இந்திய மாநிலங்கள்
சிந்தித்துச் சீராய்ச் செயல்பட்டால்—எந்தாய்
இனிதே மகிழ்ந்தின்பம் எய்திடுவாள், அந்நாள்,
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—செ. இராமலிங்கன், புதுச்சேரி-4.

நாட்டினிலே நல்லமைதி நாளும் தொழில்வளர்ச்சி
வீட்டினிலே இன்ப விளக்கமே—காட்டும்
தனித்தமிழின் ஆட்சி தழைத்தலால் தேனாய்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு

—புலவர் துரை முருகு, திண்டுக்கல்-1.

பிச்சை எடுப்பாரைப் பேணிப் பிழைப்பளிக்க
இச்சையுடன் செய்தார் எழில்திட்டம்—மெச்சக்
கனிந்திடும் காலம்; கலைஞரின் தொண்டால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சண்முகதாயுமானவன், பொன்மலை.

நாநலத்தில் அண்ணா; நடுநிலையில் வள்ளுவனார்
பாநலத்தில் பாவேந்தர்; பைந்தமிழர்—மானம்
தனித்திலங்கச் செய்கலைஞர் தன்னாட்சி எண்ண
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் நெறிமுடியார், சமத்தூர்.

வருத்தம் ஒருபால்; மகிழ்ச்சி மறுபால்
இருத்தல் சமூக இழிவே—திருத்தி
புனிதச் சமத்துவம் பூத்திடச் செய்தால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வ. ராசசேகரன், சென்னை-7.

அண்ணா வழிநடக்கும் ஆற்றலுள்ள தம்பியர்கள்
கண்ணாய்த் தமிழ்நாட்டைக் காத்திடுவர்-திண்ணம்
இனிப்பிரிந்து நில்லோம் எனத்தமிழர் சேர்ந்தால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ப. பாலசுப்பிரமணியம், சென்னை-17.

கல்லூரிப் பாடமொழி கச்சேரி ஆற்றுமொழி
எல்லாரும் கோயிலினில் ஏத்துமொழி—எல்லாம்
இனியிங்(கு) எமதுயிர் இன்றமிழ் என்ருல்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் சி. வெ. இராமசாமி, பி.ஏ., பொள்ளாச்சி.

செந்தேன் மலரிதழா சித்திரமுன் செவ்விதழா,
எந்தஇதழ் தித்திக்கும் என்றுணரா—இந்தத்
தனிக்கோட்டை வாழ்வைத் தளிர்க்கொடி நீமாற்றின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சி. சௌ.கருப்பன் செட்டி, திருச்சி-15.

ஆலைக் கரும்பாய் அனல்மேல் மெழுகாக
ஓலைக் குடிசைக்குள் உய்ந்துவரும்—கூலி
இனம்வாழத் திட்டமிடும் இவ்வரசை வாழ்த்த
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

ஏற்றநிலம், வீடுநல்கி ஏழைகட்கு வாழ்வளித்து
நாற்றிசையும் பேறுபெற்ற நம்கலைஞர்—ஆற்றல்
நினைக்கும்போ தெல்லாம் நினைக்கும்போ தெல்லாம்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—போ. நிராவிப்பாண்டியன், சிவகாசி.

நல்லவரைக் கொன்றுவிட்டு நாட்டை அழித்துவிட்டு
வல்லவரை வாட்டிவரும் வல்லூறே—பொல்லா !
மனிதனே ! நின்கொடுமை மாண்டதென்று கேட்டால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—காரை கணேசன், சென்னை-4.

இல்லாமை நீங்கி இரக்கும் நிலையொழிந்து
கல்லாமை மாறிக் கலைவளர்ந்தால்—நல்லாய் !
இனித்தழைக்கும் இச்சமூகம் என்னுமே மாப்பில்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன்கோட்டை.

வீட்டுக்(கு) இருபிள்ளை ; வீதியெல்லாம் பள்ளிகள் ;
நாட்டுக்கோர் நல்ல அரசாட்சி ; காட்டும்
தனித்துணிவில் தன்னிகரில் மக்களென வாய்த்தால்
இனிக்குமே நெஞ்சல் எமக்கு.

—கே. எஸ். பைரோஸா, கம்பம்.

இன்றமிழே ஆட்சியில் வீற்றிருக்க எம்கலைஞர்
நன்முறையில் காத்து நலமளித்(து)—என்றும்
மனிதகுலம் போற்றவே மாட்சியுறச் செய்தல்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வித்துவான் பெ. அண்ணாமலை, சென்னை-1.

மூடப் பழக்கமெனும் மொய்த்துள்ள பேய்க்கூட்டம்
ஓடப் பகுத்தறிவு ஓங்கிடவே—நாடக்
கனிக்குநிகர் நற்கருத்து காசினியிற் சூழின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—புலவர் நா. கோபாலகிருட்டினன், அம்பிகாபுரம்.

சாவிழந்து மன்னவன் சாக்காட்டில் சாய்ந்தொழியப்
பூவிழந்து குங்குமப் பொட்டிழந்து—கூவும்
தனிவிதவைத் தையலர்தம் கைப்பிடிப்பார் காண
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—மு. ஜெய்ராணி, சின்னதாராபுரம்.

பண்ணார் தமிழைப் பரம்பொருட்கும் ஏற்பித்த
தண்ணார் செயலைத் தனித்தோழி—எண்ணின்
தனிக்காதல் நல்லிரவு தன்னைவிட மேலும்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ச. தமிழ்வேலன், கோட்டூர்.

அறம்வளர்த்தோன் ; செந்தமிழை ஆராய்ந்தோன் ; வாழ்வின்
திறம்உரைத்தோன் ; நாகரிக, சீர்மை—சிறக்க
இனிதாண்டோன் தாழ்ந்த இழிவகற்றும் தொண்டால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—லீலா கணேசன், நரிக்கல்பட்டி.

நில்லென்று சொன்னாலும் நில்லாத வெண்ணிலவில்
சில்லென்று பூத்த திருமலர்—வல்லி
பனியிதழ் தோய்ந்தூறிப் பாலெடுத்த தெண்ணின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—கி. கா. இராசேந்திரன், சென்னை-7.

புரப்பாரைத் தேடிப் புறப்பட்ட நாள்போய்
இரப்பாரைத் தேடுநாள் இந்நாள்—வரப்பார் !
இனித்தமிழன் ஆட்சி இருளழிக்கும் ஆட்சி !
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—தமிழாலயன், குளமங்கலம்.

ஆண்டுவரும் மாநிலங்கள் அத்தனையும் சீர்தூக்கின்
ஈண்டு தமிழ்நாட்டுக் கிடாமோ ?—வேண்டித்
தனியரசு பெற்றுத் தமிழரே ஆண்டால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டாம்பாக்கம்.

அனைத்தும் தமிழால் அரசாளச் செய்தெம்
மனத்தில் வதிவீரன் செய்கை—நினைத்தால்
பனிக்குமே கண்கள் ; பரவுமே கைகள் ;
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—இரா. பூமா. அருப்புக்கோட்டை.

கங்கைத்தாய் தெற்குவந்து காவிரியாம் தங்கையுடன்
இங்குதவும் நாள்தொட்டே இந்நாடு—தங்கத்
தனிச்சுரங்கம் ; தாரணிக்கே சொர்க்கந்தான் ; அந்நாள்,
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வித்துவான் ச. சீத்தாராம், கோம்பை.

கற்கண்டு போலிலங்கும் கன்னித் தமிழினிலே
நற்கவிதை கற்குங்கால் நானிலத்தில்—உற்ற
துணிவுடனே பொல்லாத சோம்பலெல்லாம் நீங்கி
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

பைந்தமிழ் நாட்டின் பசுமைப் புரட்சியினல்
நைந்தோர்கள் வாழ நனிவிளையும்—செந்நெற்
கனிநற் ' கருணை ' நெற்கண்டால் கற்கண்டாய்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—கோ. கலியாணசுந்தரன், திருமணமங்கலம்.

அனைத்துயிரும் ஆக்கி அருள்வோனின் கோயில்
தனைச்சுற்றி வாழ்மக்கள் தாய்மொழியில்—தேனின்
இனிய தமிழில் இறைவாழ்த்தா ! ஆகா !!
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ந. தமிழரசன், ஆண்டிமடம்.

உள்ளபல தொல்லைகளால் உள்ளமிகச் சோர்ந்திருப்பேன்;
துள்ளுநடை போடுமென்றன் தூய்மழலை—மெல்ல
மணிக்குவளைக் கண்ணுருட்டி அம்மா எனுங்கால்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

இலகும் தமிழசைக்கே ஈடேது மில்லை
அழகுத் தமிழினிமை யாரறியார் ?—பழைமைக்
கனித்தமிழ்த் தீங்கவிதை கற்கும்போ தெல்லாம்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

அண்ணு வழிவந்தோர் ஆளும் தமிழ்நாட்டில்
கண்ணய் இரவலரைக் காத்தளிக்கும்—எண்ணம்
இனிதாய் நிறைவேறி ஏற்றம் பெறுமேல்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—அ. கணபதி, பி.ஏ., பி.டி., பைம்பொழில்.

கன்னம் குழிவிழவே கண்ணிரண்டும் பூவிரிய
இன்னல் தொலைக்கும் இலக்கியமாய்—மின்னும்
பனியொளியாய் மென்மழலைப் பாவலரின் பாட்டாய்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

மாநிலத்தில் தன்னுட்சி மையத்தில் கூட்டாட்சி
நாநிலத்தில் நம்மவர்க்கு நல்லுறவும்—வானில்
தனிக்கொடியும் நம்நாடு தன்னகம் கொள்ளின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—ப. சினிப்பாண்டியன், நெடுவயல்.

எல்லாத் துறைகளிலும் இன்பத் தமிழ்மொழியை,
வல்லாங்கு கண்டே மகிழ்தலுறும்—நல்லார்
தனிக்கவிதை போற்றும் தமிழரசின் தொண்டால்,
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வித்துவான் சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

சங்கத் தமிழ்மொழியைச் சாற்றும் திறன்கண்டு
சிங்கத் தமிழ்நெஞ்சம் தித்திக்கும்—எங்கும்
கனித்தமிழே வீற்றிருக்கக் காணும்நாள் வாழ்வில்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—கொன்றை, இளம்பரிதி.

சித்திரத்துச் சீரவளை, சிந்தை நிறைந்தவளை
முத்துத் தமிழவளை, மூத்தோர்தம்—சொத்தை ;
தனிக்கலையை ஈன்றவளைத், தாயை, நினைக்க
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—வெ. செகநாதன், பி.எஸ்ஸி., பி.டி., கோவை.

குங்குமச் செவ்வாய்க் குமிண்சிரிப்பும், நெஞ்சினிலே
தங்கும் அழகுமயில் தன்நடையும்,—பொங்கிக்
கனிந்திருக்கும் பெண்ணவளின் கண்ணுேக்கும் கண்டால்
இனிக்குமே நெஞ்சம் எமககு.

—ந. தமிழ்நேசன், செயங்கொண்டசோழபுரம்.

முக்கனியும் சர்க்கரையும் முற்றல் கழைக்கரும்பும்
செக்கச் சிவந்தயிதழ் சேல்விழியாள்—நோக்கும்
இனியமணத் தென்றலுமே ஒவ்வாத் தமிழ்கண்
டினிக்குமே நெஞ்சம் எமக்கு.

—தேவராசன், கூடன்குளம்.

வண்டமிழ் நாட்டின் வளமார் தெருவெங்குந்
தண்டமிழ்ச் சொற்பலகை தான்கண்டால்—தொண்டர்
தனிப்புகழைப் பாடிமகிழ் சான்ருேர் கனிபோல்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—சி. வடிவேல்முருகன், தேனி.

மக்களுக்குச் சட்டத்தால் மாண்பெல்லாம் ஆக்கிவிட
எக்கால மாறுேம் ஏலாதே—தக்க
தனிமுயற்சி தன்னுல் மதுக்குடியை மாய்ப்பின்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—பொ. முனியப்பன், கூகலூர்.

திங்கள் முகங்கனிந்து செவ்வாய் இதழ்திறந்து
மங்களமாய் வார்த்தைசொல் மாமயிலே—பொங்கும்
பனிபோலும் மென்கரங்கள் பட்டாலே போதும்
இனிக்குமே நெஞ்சம் எமக்கு.

—காங்கேயன், வெங்கல்பாளையம்.

# திருவாளர் பொன்மொழியார்

இடைவேளைவரை விறுவிறுப்பாகச் செல்லும் திரைப்படம், அதற்குப் பிறகு வழக்கமான சினிமா பாணியில் முடிவது போல-பழைய துப்பறியும் சாம்புவின் கதையாக திருவாளர் பொன்மொழியாரின் புகழ் வாய்ந்த சரிதத்தின் ஒருபாகம் 'பொக்'கென்று முடிந்தது.

அதாவது-காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாகியது.

அதன் விளைவு—

''பகிர்ந்த துன்பம் பாதியாகிறது; பகிர்ந்த இன்பம் இரட்டிப்பாகிறது'' என்று ஜெர்மன் நாட்டிலே சொல்வார்களாம்.

திருவாளர் பொன்மொழியாருக்கும் அருந்ததிக்கும் இன்பம் இரட்டிப்பு இல்லை-ஏழுமடங்கு அதிகமாகியது. எட்டாவது அதிசயமாக இருவரும் நெருக்கமாகப் புன்னகை தவழ வீற்றிருந்த கோலம்தான் என்னே?

'திருடின விறகும் எரியும்' என்பார்கள். எப்படியோ நடந்து முடிந்துவிட்ட நிகழ்ச்சிகளும் பொன்மொழியாருக்கும் அருந்ததிக்கும் பெரும் புகழைத் தேடிக் கொடுத்துவிட்டன.

வரிசை வரிசையாக வந்து நின்று மாலை அணிவித்து வாழ்த்திச் செல்வோர் கூட்டம் ஏராளம்! ஏராளம்!

இந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்கும் பொழுது நிச்சயமாக பொன் மொழியாருக்கும் அருந்ததிக்கும் தங்களின் திருமண நாள் நினைவுக்கு வந்திருக்காது. அன்று வாழ்த்துவதற்கு இவ்வளவு பேர் வரவில்லை.

இங்கிலாந்து நாட்டிலே ஒரு பழமொழி வழக்கில் உண்டாம்: ''தருமம் ஒருபோதும் ஏழையாக்கினதில்லை; களவு ஒருபோதும் பணக்காரனுக்கியதில்லை; செழுமை ஒருபோதும் அறிவாளியாக்கினதில்லை'' என்று.

அதுபோல, 'புத்திசாலித்தனமும் இவ்வளவு புகழை வாங்கித்தராது' என்று சொல்லும் வகையில் பெரும் புகழெய்தி விட்டார்கள் பொன்மொழியார் தம்பதிகள்.

அது எப்படி?

## 6

ஓடும் ரயிலில், 'இன்ஸ்டண்ட் குருவுடன்' பொன்மொழியார் ஏறினர் அல்லவா ?

அந்த வண்டியில் போலீசார் சிலர் சாதாரண உடுப்பில் இருந்தார்கள். ஒரு பயங்கரத் திருட்டுக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் அந்த வண்டியில் பிரயாணம் செய்வதாகத் தகவல் கிடைத்து இருந்தது போலீசாருக்கு வெகு நாட்களாக அந்தக் கூட்டத்தை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு இருந்த போலீசார் அந்த வண்டியில் பிரயாணம் செய்த சந்தேகத்துக்குரியவர்களை எல்லாம் கவனித்து வந்தார்கள்.

ஆனால், அந்தத் திருட்டுக் கூட்டத்தின் தலைவனை மட்டும் கண்டுபிடிக்கவே முடியாதாம். அவன் எப்பொழுதும் தனித்து வருவானாம். அவனுடைய கூட்டத்தில் யாரைக் கேட்டாலும் அவனைப்பற்றி எந்தவிதத் தகவலும் தரமாட்டார்களாம்.

போலீசாரில் சிலர், முதலில் திருவாளர் பொன்மொழியார் தான் அந்தத் திருட்டுக் கூட்டத் தலைவன் என்று முடிவு கட்டியிருந்தார்களாம்.

ஆனால், சென்னையிலிருந்து வந்த ஒரு தகவல் அவர் பெரிய துப்பறியும் நிபுணர் என்று சொல்லிற்றும். அதனால் அவரைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தார்களாம்.

குருவுடன் பொன்மொழியார் அந்த வண்டியில் ஏறவே, திருட்டுக்கூட்டத்தினர், தங்கள் தலைவர், துறவி வேடத்தில் வரவே வழக்கம் போல எழுந்து நின்று கைகூப்பி வணங்கினர்களாம்.

குரு-அதாவது திருட்டுக் கூட்டத்தின் தலைவன் வெளியில் எங்குச் சென்றாலும் தன் கூட்டத்தார் பக்கமே வரமாட்டாராம். எதிர்பாராத வகையில் இன்று தன் கூட்டத்தார் இருந்த பக்கம் சென்றுவிட்டார். அதற்குக் காரணம் பொன்மொழியார்தான். ஓடும் ரயிலில் ஏற, அந்தப் பெட்டிக்கு அவரை இழுத்துச் சென்றது பொன்மொழியார்தானே!

பெரிய துப்பறியும் நிபுணர் என்பதால் பொன்மொழியார் திருடர் கூட்டத் தலைவனை அங்கே சாமர்த்தியமாக அழைத்து வந்து விட்டார் என்று போலீசார் நினைத்தார்கள். திருட்டுக் கூட்டம் அகப்பட்டுக் கொண்டது. அந்தச் சாதனையைச் செய்தவர் பொன்மொழியார்.

'கேழ்வரகில் நெய்வடிந்த' இந்தச் செய்தியைப் பொன் மொழியாரின் மனைவி அருந்ததியே நம்பவில்லை. நம் தலையெழுத்து, நாம் நம்புவோம்.

"இளவல்"

ஆமாம், பொன்மொழியாரைப் பெரும் துப்பறியும் நிபுணராக்கியது யார்?

தட்டுத் தூக்கி தாமோதரன் தான்!

* * *

தன்னுடைய பழைய புத்தகங்களைத் தேடிக்கொண்டு பூகம்பசாமியுடன் தாமோதரன் கடைக்குச் சென்ற பொழுது பரபரப்படைந்ததைக் கண்டும் காணுமலும், இருந்த தாமோதரன், அன்று இரவு எழும்பூர் ரயில் நிலையத்தில், 'எப்படியும் கண்டுபிடித்து விடுவேன், எப்படியும் கண்டு பிடித்துவிடுவேன்' என்று பொன்மொழியார் முணகிக்கொண்டு சென்றதையும் கண்டார்.

அவருடைய முணகலைக் கேட்ட மற்றவர்கள் ஏதோ ஒரு பைத்தியம் என்று முடிவு கட்டியிருப்பார்கள். ஆனுல், அன்று காலையில் அமெரிக்காவில் பழைய பேப்பரில் உள்ள வாசனையை வைத்து ஒரு திருட்டுக் கூட்டத்தைக் கண்டுபிடித்ததைத் தாமோதரன் படித்ததால் தன்னுடைய 'மசால்வடை நண்பன்' பெரும் துப்பறியும் நிபுணனுகிவிட்டதாக நினைத்தார். அந்தச் சமயத்தில் அங்கே வந்திருந்த தன் நண்பரான போலீஸ் அதிகாரியிடம் விவரத்தைத் தெரிவித்தார்.

அதன் விளைவுதான் திருவாளர் பொன்மொழியார் துப்பறியும் நிபுணராகிவிட்டார். அடித்தது யோகம். அவருக்கு மட்டுமா, அருந்ததிக்கும்தான்!

* * *

''உன் வாழ்நாள் முழுவதும் நீ உன் மனைவியை உன் முதுகின் மேல் சுமந்து செல்லலாம். ஆனுல், நீ ஒருதடவை அவளைக் கீழே இறக்கிவிட்டால் 'எனக்குக் களைப்பாக இருக்கிறது' என்று அவள் சொல்வாள்'' என்பது இத்தாலி நாட்டுப் பழமொழியாகும்.

அதுபோல இத்தனை நாள் அடங்கிச் சென்ற தன் கணவர் இன்று வரம்பு மீறி அதுவும் பூகம்பசாமி எதிரில் பேசியது அருந்ததிக்குப் பெருத்த அவமானமாகி விட்டது.

அடங்கிக் கிடந்தவர் அடக்க நினைக்கலாமா?

''இன்று வரட்டும் வீட்டுக்குப் பார்த்துக் கொள்கிறேன்'' என்ற முடிவோடு அமர்ந்திருந்தாள். அரேபிய நாட்டில் ஒரு பழமொழி உண்டாம், ''கோபத்தோடு எழுகிறவன் நட்டத்தோடு உட்காருவான்'' என்று! அந்தக் கதையாகிவிட்டது, அருந்ததியின் நிலை—

பழைய புத்தகங்களை வாங்கிச் சென்ற ஆள், அந்தப் புத்தகங்



களின் நிறத்தையும் அதிலிருந்து வீசும் நாற்றத்தையும் கண்டு ''யாரும் வாங்க மாட்டேன் என்கிறார்கள். நீங்கள் திரும்ப எடுத்துக் கொண்டு பணத்தைத் தந்தாலும் தாருங்கள், தராவிட்டாலும் கவலையில்லை. இந்தப் புத்தகங்களை என் வீட்டில் வைத்திருக்க முடியவில்லை! அவ்வளவு நாற்றம்'' என்று கைவண்டியிலிருந்து புத்தகங்களை இறக்கி வாசலிலேயே கொட்டிவிட்டுச்சென்றான்.

அருந்ததிக்குக் கோபம் கோபமாக வந்தது. பழைய புத்தகங்களுக்கு எடைக்கு எடுத்து அவன் கொடுத்த ரூபாய்களைத் திருப்பி எறிந்தாள்.

அந்த நேரத்தில், அகில உலக நுண்கிருமிகள் வளர்ச்சி பற்றிய செமினாரில் கலந்து கொள்ள வெளிநாட்டிலிருந்து வந்திருந்த சிலர் அவ்வழியே சென்றனர்.

பொன்மொழியார் வீட்டின் பக்கம் இருந்து வீசிய நாற்றத்திலிருந்து கண்ணுக்குத் தெரியாத கிருமிகளின் நாற்றம் என்று கண்டு கொண்டனர். நீண்ட நெடுநாட்களாக இந்தக் கிருமிகளை ஆராய்ச்சிக்காக எப்படி வளர்ப்பது என்று தெரியாமல் தவித்துக் கொண்டார்கள்.

பொன்மொழியார் மனைவி அருந்ததி புத்தகங்களின் மூலம் நுண்கிருமிகளை வளர்த்ததை அந்தக் கருத்தரங்குக்கு வந்திருந்த அத்தனை பேரும் ''ஆகா' ஓகோ'' என்று—பாராட்டியுரைத்தார்கள்.

மறுநாள் மாலை பத்திரிகைகள் எல்லாம், ''அருந்ததி அந்தாதி''யைப் பாடியிருந்தன.

பொன்மொழியார் சொல்லியிருந்த ரஷ்யநாட்டு முதுமொழி ஒன்றை அருந்ததி நினைத்துப் பார்த்தாள். 'காதலும், குருட்டுத்தனமும் இரட்டைச் சகோதரிகள்' என்ற முதுமொழியை, 'புகழும் முட்டாள்தனமும் இரட்டைப் பிறவிகள்' என்று திருத்தலாம் என்று முடிவு கட்டினாள்.

மறுநாள், காலையில் அருந்ததியின் தோழியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. பொன்மொழியார் போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டதாகவும் தானே நேரில் பார்த்ததாகவும் எழுதியிருந்தாள்.



## போனால் வராது!

அண்ணா அவர்கள் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த வழியாகக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஓர் ஊரில் நாடகத்தில் கலந்து கொள்வதற்காக உந்து வண்டியில் சென்று கொண்டிருந்தார்.

அண்ணா பேசுவதை அறிந்த கலைவாணர் காரோட்டியை நிறுத்தும்படியாகக் கூறினார். கலைவாணருடன் வந்த ஒருவர் ஏன் நிறுத்தச் சொல்கிறீர்கள் என்றார். அதற்குக் கலைவாணர் அண்ணா 'பேசிக் கொண்டிருக்கிறார்; கேட்டுவிட்டுப் போவோம்' என்றார்.

உடனே அந்த ஆள் சொன்னார் ''அண்ணா பேச்சைத்தான் பல தடவை கேட்டிருக்கிறீர்களே! அதுவும் சென்னையிலே அடிக்கடி கேட்டுக் கொள்ளலாமே, நமக்கு நாடகத்திற்கு நேரமாகிறது. ஆகவே புறப்படுவோமே'' என்றார்.

அப்போது கலைவாணர் சட்டென்று சொன்னார்.

''அண்ணாபேச்சு ஒவ்வொரு கூட்டத்திலும் புதுமையாகஇருக்கும்; ஆகவே இப்போது கேட்காவிட்டால் இனிமேல் வேறு பேச்சுதான் கேட்க முடியும், போனால் வராத சரக்கு—புதுச்சரக்கு அண்ணாவின் பேச்சு!'' என்று கூறி, அண்ணாவின் பேச்சைக் கேட்ட பிறகே நாடகத்திற்குச் சென்றார்.

அருந்ததி துடித்தாள். தன் கணவர் போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டார் என்பதற்காக அல்ல.

ஊரெங்கும் தன்புகழ் கொடி கட்டிப் பறக்கத் தொடங்கிய நேரத்தில் இப்படிப் போய் தன் அப்பாவிக் கணவர் அகப்பட்டுக் கொண்டு தன் புகழுக்கு மாசு படரவிட்டு விட்டாரே என்று.

தன்னைப் பாராட்ட வந்த ஒரு போலீஸ் அதிகாரியிடம் பொன்மொழியாருக்குப் புத்தி சரியில்லை என்பதைச் சொல்லிவிடலாம் என்று பேசத் தொடங்கினாள்.

பொன்மொழியார் பெயரைக் கேட்டவுடன் போலீஸ் அதிகாரி, தான் வந்த விவரத்தைச் சொன்னார். அவர் அருந்ததியைப் பாராட்ட வரவில்லையாம். பொன்மொழியார் பற்றிச் சொல்ல வந்தாராம்.

பொன்மொழியாரின்சாமர்த்தியத்தையும் திறமையையும் புகழ்ந்தார். இரண்டு நாட்களாக போலீசாருடன் ஒத்துழைத்துத் திருட்டுக்கூட்டம் முழுவதையும் பிடித்துவிட்டாராம். சமயம் அறிந்து பொன்மொழியார் சொன்ன வார்த்தைகளினால் தான் திருட்டுக் கூட்டம் சரியாக அகப்பட்டுக் கொண்டதாம்.

அருந்ததிக்குப் பெருமை தாங்கவில்லை.

'சாய்ந்தால் சாய்கிற பக்கம் சாயும் செம்மறி ஆடுகள்' என்று அருந்ததி கேள்விப்பட்டிருக்கிறாள்.

அதிர்ஷ்டமும் அப்படித்தானோ?

எதுவாக இருந்தால் என்ன? பொன்மொழியார் தம்பதிகளை மாலை, மரியாதையோடு ஏராளமானவர்கள் வந்து வாழ்த்திச் சென்றார்கள்; செல்கிறார்கள்!

'' உச்சியிலிருந்து விழுபவனை ஒவ்வொருவனும் கீழே தள்ளிவிடுவான். ஏறுபவனையும் ஆகா, ஓகோ என்று ஏற்றியும் விடுவார்கள். ஆகவே, பொன்மொழியார் தம்பதிகளுக்குப் புகழுக்குப் பஞ்சமா?

பின் எதற்குப் பஞ்சம்?

அறுவைக்குப் பஞ்சம்.

திருவாளர் பொன்மொழியார் சரிதம் தற்காலிகமாக முடிந்ததால்!

க்ரோமோர் உரங்கள்

விவசாயப் பெருமக்களுக்கு !

## கோரமாண்டல் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்,

## செகந்தராபாத்

சிறப்பாகச் சேவை செய்திடும் வகையில்

**க்ரோமோர்**

*உற்பத்திகள் விற்பனையாகும் எல்லா மாநிலங்களிலும்*

அவர்களின் முக்கிய விற்பனை ஏஜண்டுகளாக

## இ. ஐ. டி. பாரி லிமிடெட்

*மற்றும்*

மகாராஷ்டிரா, குஜராத், பீகார், உத்திரப் பிரதேசம், ஹரியானா,

மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, மைசூர், ராஜஸ்தான்,

கேரளா ஆகிய மாநிலங்களில் அவர்களின்

விற்பனை ஏஜண்டுகளாக

## ராலீஸ் இந்தியா லிமிடெட்

இப்போது செயலாற்றி வருகின்றனர்



# அண்ணா மொழி கேளீர்

கிணற்றை ஓர் ஆணியைக் கொண்டு தோண்டி விட முடியாது. கடப்பாறை இருந்தால் கொஞ்சம் கஷ்டப்பட்டுத் தோண்டி முடிக்கலாம். ஆணியை உபயோகித்தால் கையில் தான் காயம் உண்டாகும். மிக விரைவில் தோண்ட வேண்டுமானுல் நமக்கு விஞ்ஞான சாதனங்கள் தேவை. விஞ்ஞான சாதனங்களைப் பற்றி மக்கள் அறிந்து கொள்வதற்கு முன்னர் மக்களுக்கு விஞ்ஞானத்திலே நம்பிக்கை ஏற்படும்படிச் செய்ய வேண்டும். அப்போது தான் உற்பத்தி பெருக வழியுண்டு.

* * *

எல்லாப் புத்தகங்களையும் விடச் சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம் தான். உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.

* * *

உள்ளத்தில் கொதிப்பு ஏற்பட்டால் பேசாமலிருந்து விடக் கூடாது. பேசிப் பேசி ஆத்திரம் வெளியேற வார்த்தைகளைக் கொட்டிவிட்டால்தான் கொதிப்பு அடங்கும். பேசாமலிருந்தால் அந்தக் கொதிப்பு வளரும். ஆசாமி கருகி விடக் கூடும். விளைவு என்ன என்பது பற்றிக் கவலையின்றி விபரீதமான காரியங்கள் செய்யக் கூடும்.

கோபுரங்களிலே அந்தக்காலத்தில் அகல் விளக்கு— இந்தக் காலத்திலே மின்சார விளக்கு ; ஏன் ? காலத்திற்கேற்ற மாறுதல் ஏற்படத்தான் செய்யும்.

கோபுரத்தைப் போல ஓரளவுக்கு இக் காலத்தில் புகைக் கூண்டை அமைக்கிறேம். ஒரு விதத்தில் பழமைக்கும் புதுமைக்கும் போராட்டம் நடக்கிறது.

* * *

அரசியல் என்பது அடுத்துள்ள ஒருவனின் பிரச்சினை என்று அலட்சியப் படுத்தக் கூடாது. அது ஒரு நாட்டைச் சேர்ந்த ஒவ்வொருவரின் பிரச்சினையுமாகும்.

* * *

மனித நீதி அரச நீதியை விடப் பெரியது ; அது தான் அரச நீதிகளை அவ்வப்போது மாற்றியும் திருத்தியும் வருவது.

* * *

இந்த நாட்டின் நிலை உயர்ந்திருந்தும் நினைப்பு உயரவில்லை காரணம் மூட நம்பிக்கைதான்.

* * *

தமிழார்வம் வளர்கிற நேரத்தில் அதற்குச் சுவையும் பயனும் ஊட்டி அதை வழிகாட்டி அழைத்துச் செல்ல வேண்டும் தமிழ்ப் புலவர்கள். அத்தகைய வழிகாட்டும் திறன் அவர்களுக்கு உண்டு ; ஆனுல், நாட்டு மக்களை எங்கே, எப்படி அழைத்துச் செல்வது என்பதைப் புலவர்கள் முதலில் தெரிந்துகொள்வது நல்லது.

* * *

நீதி, நீதி என்று சொல்லுகின்றுர்களே, நீதி என்றும் நிலையுடையதா ? நிகண்டுகளுக்குக் கட்டுப்பட்டு நிற்கக் கூடியதா ? அல்லவே அல்ல. ஒரு காலத்திய நீதி மற்றெருரு காலத்தையும் கருத்தையும் கொண்டு நீதி என்று அறுதியிட்டுக் கூற எவராலும் முடியாது.

* * *

துணிக் கடைக்குச் சென்றுல் பல புடவைகள் கண்ணுக்குக் கவர்ச்சியாக இருக்கும். ஆனுல் அதில் சிலவற்றையே நாம் எடுத்து வருகிறேம். அது போல நம்முடைய வாழ்வில் மனம் நாடுவது பல. கிடைப்பதோ ஒன்றிரண்டு.

* * *

கோழி வளர்ப்பார்கள் ; குரங்கை வளர்ப்பார்கள்; இன்னும் ஏதேதோ செய்வார்கள். ஆனுல் உலகத்தில் பிறந்த மனிதர்களை வளர்க்கும் வழி மட்டும் அறிந்து வைத்திருக்க மாட்டார்கள்.

கேட்டால்,—"மரத்தை வைத்தவன் தண்ணீர் விடமாட்டானு" என்று கூறிவிடுவார்கள்.

* * *

தாய்ப்பால் குடிக்கிறது குழந்தை ! எது வரையில் ? வேறு உணவுகளை உண்டு, ஜீரணித்துக்கொள்ளும் பக்குவம் பெறுகிற வரையில்.

தொழில் துறைக்கு அரசு அளிக்கும் உதவியும் அதைப் பெறும் தொழிலமைப்பு, வளரும் பக்குவத்தைப் பெறுவதற்காகத்தான்.

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரியில் படிக்கும் பொழுது பாடங்களையோ குறிப்புகளையோ அப்படியே உருப்போட்டு, தேர்வில் பதில் எழுதும் வழக்கத்தை மேற்கொள்ளவில்லை. அவர் பாடங்களையும், அத்துடன் மேற்கோள் காட்டும் மற்ற நூல்களையும் விரிவாகப் படித்து, அவற்றின் கருத்துக்களை நன்கு மனத்தில் கொண்டுவிடுவார். பின் அவற்றை வைத்துத் தேர்வில் தமது நடையிலேயே எழுதி விடுவது வழக்கம்.

அண்ணா அவர்கள் கல்லூரி இரண்டாவது வகுப்பில் படிக்கும் பொழுது, ஆங்கில வகுப்பை நடத்திய பேராசிரியர் ஒருவர், பாடஞ் சொல்லிக்கொடுப்பதில் சிறந்தவர் என்றும் கருதப்பட்டவர்.—அவர் வகுப்பில் கொடுக்கும் கேள்வி—பதில்களையும், குறிப்புகளையும் மாணவர்கள் உருப்போட்டு வைத்து விட்டால் போதும், தேர்வில் 'வெற்றி' பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையிருந்தது. அண்ணா மட்டும், வகுப்பில் குறிப்புகள் எடுத்துக் கொள்வதில்லை. மற்ற மாணவர்களெல்லாம் தான் சொல்வதை ஒன்று விடாமல் எழுதித் தள்ளிக் கொண்டிருக்கும் பொழுது, அண்ணா மாத்திரம் பேசாமல் உட்கார்ந்திருப்பதைப் பேராசிரியர் பார்த்து விட்டார்.

''அண்ணாதுரை! நீ ஏன் சும்மா உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று ஆசிரியர் கேட்டார்.

''நான் குறிப்பு எடுக்கவில்லை!'' என்று அண்ணா பதிலளித்தார்.

''ஏன்?''

''அவற்றை உருப்போட்டு அப்படியே ஒப்பிக்க வேண்டாமென்று நான் நினைத்தேன்.''

''கர்வம் பிடித்தவன்! உட்கார்!'' என்று ஆசிரியர் சொல்லி உட்கார வைத்தார். அண்ணாவும் குறிப்புகளை எழுதவில்லை.

கடைசியாகப் பல்கலைக் கழக இண்டர் தேர்வு நடந்து, தேர்வு முடிவுகள் வெளிவந்ததும், அறிஞர் அண்ணா அவர்கள் ஆங்கிலப் பாடத்தில் முதலாவதாகத் தேறியிருந்தார். அதற்காக அவருக்கு ஒரு பரிசும் வழங்கப்பட்டது. பரிசு வழங்கும் விழாவில், பரிசுப் புத்தகங்களை வாங்கிக் கொண்டு அறிஞர் அண்ணா அவர்கள் வந்ததும், அவருடைய ஆங்கில ஆசிரியர் எதிர்ப்பட்டு வாழ்த்தினார்.

நன்றியைத் தெரிவித்துவிட்டு, ''சார்! உங்களுடைய குறிப்பை நான் உருப்போட்டு ஒப்பித்திருந்தால், தேர்ச்சி பெற்றிருப்பது நிச்சயம்: ஆனால் இந்தப் பரிசைப் பெற்றிருக்க முடியாது'' என்று வேடிக்கையாக, அண்ணா சொன்னார்.




ஆசிரியர் சிரித்தபடி, 'நீ கெட்டிக்காரன் என்று எனக்குத் தெரியுமே!'' என்று சமாளித்துக் கொண்டார்.

* * *

1933-ஆம் ஆண்டு!

பி. ஏ. ஆனர்ஸ் தேர்வில் அண்ணா கலந்து கொண்டார். ஐந்து கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். ஆனால், இரண்டே கேள்விகளுக்கு மட்டும் தான் விடையளித்திருந்தார். அந்த இரண்டு கேள்விகளுக்குரிய விடைகளுக்கே முதல் மதிப்பெண் கிடைத்துவிட்டது. முழுதும் எழுதியிருந்தால் ஆயிரக் கணக்கில் மதிப்பெண்கள் வாங்கியிருப்பார் போலும்! அவரது விடைத்தாளைத் திருத்திய மாநிலக் கல்லூரிப் பேராசிரியர், தமது மற்றொரு மாணவரிடம் சொல்லிப் பாராட்டிய வாசகங்கள் இவை;

''பச்சையப்பன் கல்லூரி மாணவர் ஒருவர், கட்டுரைப் பேப்பரில் இரு கேள்விகளுக்கு மட்டுமே பதில் எழுதியிருந்தார். அவ்விரு பதில்களும் என்றும் காணாத அளவு உயர்ந்த தரத்தில் இருந்தன. ஆகவே அவர் மற்றக் கேள்விகளுக்குப் பதில் எழுதாததையும் பொருட்படுத்தாமல் அவரது விடைத்தாளுக்கு முதல் மார்க் கொடுத்தேன்.

''அந்தப் பதில்களில் எத்தனை விரிவான படிப்பு, நுட்பமான தெளிவு, அழுத்தமான உரை, மொழிச் சிறப்பு ஆகியவற்றைக் கண்டேன் தெரியுமா? படித்தால் அவரைப் போல் படிக்க வேண்டும்.''

—இவ்வாறு ஒரு பேராசிரியரே புகழும் அளவுக்குக் கல்வியில் சிறந்து விளங்கியவர் அண்ணா.

* * *

1948-ஆம் ஆண்டு!

ஜனவரி 31-ஆம் நாள்!

அண்ணா தனது வீட்டிலே, சோர்வுற்ற நிலையில், கலங்கிய கண்களுடன் அமர்ந்திருந்தார். அவரது அன்னையாரும், தொத்தா என்றழைக்கப்பட்ட அவரது சிறிய அன்னையாரும், அவரது அருகில் அமர்ந்திருந்தார்கள்.

அன்று அண்ணாவின் வீட்டிலே சமையல் கிடையாது! அனைவரும் பட்டினி கிடந்தார்கள். முதல் நாள் மாலையிலிருந்தே அந்தப் 'பட்டினி' தொடங்கியிருக்கிறது. ஏறக்குறைய மூன்று நாட்கள் அண்ணாவும், அவரது குடும்பத்தாரும் பட்டினி கிடந்திருக்கிறார்கள்! காரணம் என்ன தெரியுமா?

ஜனவரி 30-ஆம் தேதி மாலை காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியைக் கேள்விப்

பட்டதிலிருந்து, அண்ணாவின் உள்ளம் துன்பத் தீயில் விழுந்து, தவித்துக்கொண்டிருந்தது; அதன் விளைவால்தான் அண்ணா தமது குடும்பத்துடன் உண்ணா நோன்பு பூண்டிருந்தார். காந்தியடிகளிடம் மிகுந்த பற்று வைத்திருந்தவர் அண்ணா என்பதற்கு இந்த நிகழ்ச்சி சான்றாகத் திகழ்கிறது.

* * *

பல வருடங்களுக்கு முன்பு!

கரூரிலே ஒரு முக்கிய பிரமுகருக்குத் திருமணம். அண்ணாவின் தலைமையிலே அந்தத் திருமணம் நடைபெற்றது. அன்று மாலை கரூரில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. அதில் கலந்து சொற்பொழிவாற்றினார் அண்ணா. சொற்பொழிவை முடித்துவிட்டு, தான் தங்கியிருக்கும் இடத்துக்கு வந்தார். தனது நண்பர்களுடன் உரையாடத் தொடங்கினார். இரவு இரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது. அண்ணா சளைக்காமல் உரையாடினார். ஆனால், பாவம் நண்பர்களால் முடியவில்லை. தூக்கம் அவர்களைத் தள்ளாட வைத்தது. அவர்களது நிலையை உணர்ந்தார் அண்ணா.

"எல்லாரும் தூங்கச் செல்லுங்கள்" என்று கூறினார். அண்ணாவைவிட்டுவிட்டுச் செல்ல எவருக்கும் மனம் இல்லை. அவர் விழித்துக் கொண்டிருக்கிறாரே, நாம் உறங்குவது நியாயமா என்றெல்லாம் அவர்கள் நினைத்துக் கொண்டதனால், தூங்கச் செல்வதற்கு மறுத்துவிட்டார்கள்.

உடனே அண்ணா,

"எனக்குத் தூக்கம் வருகிறது" என்று சொல்லியபடி, படுத்துவிட்டார்.

அண்ணா படுத்த உடனே மற்ற நண்பர்களும் படுத்துவிட்டார்கள். ஏற்கெனவே தூக்கத்தின் பிடியில் அகப்பட்டுத் தத்தளித்த நண்பர்கள், சில நிமிடங்களில் உறங்கிவிட்டார்கள்.

ஆனால்........கால் மணி நேரத்தில் அண்ணா எழுந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு, ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கி விட்டார்.

திருமண வீட்டைச் சேர்ந்த ஒருவர், இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்தவர், மெதுவாக அண்ணாவிடம் வந்தார்.

"என்ன அண்ணா, தூக்கம் வருகிறது என்று சொன்னீர்கள்; இப்போது புத்தகம் படிக்க ஆரம்பித்து விட்டீர்களே" என்றார்.

"அவர்கள் எல்லாரும் தூங்கி வழிந்தார்கள். தூங்கச் சொன்னால் மாட்டோம் என்று சொன்னார்கள். என்னால் எல்லாருக்கும் தொல்லை நேரக் கூடாது என்பதற்காகச் சிறிது நேரம் கண்ணை மூடிக்கொண்டு இருந்தேன்"—அண்ணா பதில் சொன்னார்.

அவரது அன்பு உள்ளம், பண்பு உள்ளம் கண்டு அந்த நண்பர் வியந்து போனார்.

* * *

1968-ஆம் ஆண்டு!

அண்ணா அவர்கள் ஆந்திர மாநிலத்தில் சுற்றுப் பயணம் செய்தார்கள். குண்டூர், தெனாலி ஆகிய ஊர்களில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். ஆந்திரத்தில் அண்ணாவுக்கு ஏராளமான வரவேற்பு. மக்கள் வெள்ளம் திரள் திரளாகக் கூடியது அவரைக் காண—அவரது பேச்சைக் கேட்க!

அண்ணா ஆங்கிலத்தில் பேசினார் அந்தப் பேச்சு தெலுங்கில் மொழி பெயர்க்கப்பட்டது.

குண்டூர் நகராட்சி, அண்ணாவுக்கு மாபெரும் வரவேற்புத் தந்தது. வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க அளவுக்கு, சிறப்புமிக்க நிகழ்ச்சியாக அது திகழ்ந்தது.

நகராட்சித் தலைவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு பெரிய வணிகர்: மிளகாய் வியாபாரம் செய்பவர். அவர் வரவேற்பு மடலில் அண்ணாவைப் புகழ்ந்து கூறியிருந்தார்.

வரவேற்புக்குப் பதில் சொல்லத் தொடங்கினார் அண்ணா.

"ஒரு மிளகாய் வியாபாரி இவ்வளவு இனிமையாகப் பேசுவார் என்று நான் கருதவே இல்லை. (I never thought a chilly merchant could speak so sweet)" என்று சுவை ததும்பக் குறிப்பிட்டார். மக்கள் மன்றம் நீண்ட நேரம் சிரிப்பைச் சிந்திக்கொண்டிருந்தது.

**தொகுப்பு: எஸ். எஸ். சுந்தரம்**


## வெண்பாப் போட்டி—19

ஈற்றடி: **வெல்லும் உலகை விரைந்து**

முடிவுத் தேதி 1—10—1971

பரிசு: ஓராண்டு **'தமிழரசு'** அன்பளிப்பு.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.




ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு, அச்சிடுபவர் : அச்சக